# வ.உ.சி.150

## பிறந்த ஆண்டு சிறப்பு மலர்



சுதந்திரம் நம் பிறப்புரிமை

வ.உ.சிதம்பரம்





# வ.உ.சி.
# 150
## பிறந்த ஆண்டு
## சிறப்பு மலர்

மு.க.ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

வாய்மையே வெல்லும்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

01.10.2022

**வ.உ.சி. உயிர்ப்பிக்கப்படுகிறார்!**

தியாகத்தின் திருவுரு என்று போற்றத்தக்கவர் – கப்பலோட்டிய தமிழன் – செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் அவர்கள். தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் பல்வேறு முன்னெடுப்புகளுக்கு முக்கியமான பங்கினை ஆற்றிய ஆற்றலாளர் வ.உ.சி. அவர்கள்.

தேசிய இயக்கத்தில் சுதந்திரப் போராட்டத்தையும், பொதுவுடைமை இயக்கத்துக்கான தொழிற்சங்கச் செயல்பாடுகளையும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே முன்னெடுத்து வழிகாட்டியவர் வ.உ.சி.அவர்கள். அரசியலைப் போலவே அவர் ஆற்றிய தமிழ்த்தொண்டும் இன்றும் நிலைபெற்றுள்ளது.

அத்தகைய சிறப்புக்குரிய சிதம்பரனாரின் 150–ஆவது பிறந்தநாளைச் சிறப்பிக்கும் வகையில் 14 முக்கிய அறிவிப்புகளை தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிவித்தேன். முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும் ஆற்றிய முதல் விடுதலை நாள் உரையிலேயே வ.உ.சி.யின் 150–ஆவது பிறந்தநாள் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என அறிவித்தேன். இந்த ஆண்டு முழுமையாக வ.உ.சி.அவர்களது புகழ் போற்றும் விழாக்களை செய்தி மக்கள் தொடர்புத் துறை சிறப்பாக நடத்தி உள்ளது.

இதற்கு மகுடம் வைப்பது போல 'தமிழரசு' இதழின் சார்பில் 'வ.உ.சி. – 150' என்ற சிறப்பு மலர் வெளி வருகிறது. சிதம்பரனாரின் பன்முக ஆற்றலை முழுமையாக அறியும் வகையில் இம்மலர் தயாரித்துத் தரப்பட்டுள்ளது.

தமிழகத்தின் சிறப்புமிகு ஆய்வாளர்களான ஆ.சிவசுப்பிரமணியன், வீ.அரசு, மா.ரா.அரசு, ஆ.இரா.வேங்கடாசலபதி ஆகியோர் வ.உ.சி.யின் வரலாறுகளை மீட்டெடுத்து வருகிறார்கள். அவர்களது படைப்புகளுடன் ஆய்வாளர்கள் ப.திருமாவேலன், ரெங்கையா முருகன், குருசாமி மயில்வாகனன், ஆ.அறிவழகன் ஆகியோரின் படைப்புகளும் இதில் இடம்பெற்றுள்ளன.

படைப்புகள், ஆவணங்கள், தகவல்கள் மூலமாக மீண்டும் வ.உ.சி.யை உயிர்ப்புக்கும் பணியை 'தமிழரசு' செய்துள்ளது. இதன் ஆசிரியர் குழுவுக்கு எனது பாராட்டுகள்.

அன்புடன்,

**(மு.க.ஸ்டாலின்)**

**மு.பெ. சாமிநாதன்**
செய்தித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009

நாள்: 07/09/2022

## அணிந்துரை

இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்துக்கொண்டு, நமது நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட தியாகத் தலைவர்களுக்கு சிறப்பு செய்வதிலும், அன்னார்களின் பெருமையையும், தியாக வரலாறுகளையும், உலகறியச் செய்வதிலும், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின்** அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு முனைப்புடன் செயல்படுவதை நாம் அனைவரும் அறிவோம்.

அந்த வகையில், தியாகத் திருவுருவானவரும், நமது நாட்டின் விடுதலைக்காகச் சொத்து சுகங்களையெல்லாம் இழந்து, தன்னை அர்ப்பணித்து இன்னுயிர் ஈந்த தியாகச் செம்மல் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள், வீரம் செறிந்த சொற்பொழிவுகளாலும் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தை வணிக ரீதியாகவும் வீழ்த்திட கப்பல் கம்பெனியைத் தொடங்கி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை வீழ்த்திட்ட வ.உ.சிதம்பரனார் அவர்களின்150ஆவது பிறந்த நாள் நினைவைப் போற்றும் வகையில் 03.09.2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் **வ.உ.சிதம்பரனார்** அவர்களின் நினைவு தினமான நவம்பர் 18ஆம் தேதியை **"தியாகத் திருநாளாக"** அறிவித்தார்கள்.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 150ஆவது பிறந்தநாள் நினைவினை போற்றும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறை **"வ.உ.சி. 150ஆவது பிறந்தநாள் சிறப்பு மலர்"** ஒன்றினை வெளியிட்டுள்ளது.

இச்சிறப்பு மலரில் இடம்பெற்றுள்ள வரலாற்று பதிவுகளை அனைவரும் படித்து பயன்பெற வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்.

அன்புடன்,

(மு.பெ.சாமிநாதன்)

வெ. இறையன்பு
தலைமைச் செயலாளர்

தலைமைச் செயலகம்
சென்னை–600 009

## தியாகத்தின் அடையாளம்

தமிழர்கள் கடலைக் கட்டாந்தரையாகக் கருதி பயணித்தவர்கள். தமிழில் கணக்கற்ற பெயர்கள் கடலுக்கு உண்டு. கரிகால் வளவன் காலத்திலேயே நனியிரு முந்நீர் நாவாய் ஓட்டிய அனுபவம் உள்ளவர்கள் தமிழர்கள். உலகத்தில் ஒப்பற்ற கப்பற்படைகளை ராஜராஜ சோழனும், ராஜேந்திர சோழனும் உருவாக்கி கடல் மீது மச்சங்களாகக் கலங்களை உலவ விட்டார்கள்.

அந்நியக் கப்பல்கள் ஆதிக்கத்திற்கெதிராக சுதேசிக் கப்பல் தொடங்கி, அதனால் பழி வாங்கப்பட்டு, சிறைவாசம் அனுபவித்து 'கப்பலோட்டிய தமிழர்' என்று அழைக்கப்படும்போதெல்லாம் கண்கள் கலங்கும் தியாக வாழ்க்கைக்கு சொந்தக்காரர் வ.உ. சிதம்பரம்.

கப்பலோட்டிய தமிழர் பிறந்து 150 ஆண்டுகள் நிறைவுற்றதைக் கொண்டாடும் வகையில் எண்ணற்ற அறிவிப்புகளைச் செய்து நடைமுறைப்படுத்தியது தமிழ்நாடு அரசு.

மகத்தான மனிதர்களை நினைவுகொள்ளும்போது நறுமணம் மிக்க மலர்களைத் தொட்டதும் சிறிது நேரம் நம் கைகளும் வாசம் வீசுவதைப்போல நம் மனத்திலும் உன்னதமான செயல்களைச் செய்ய வேண்டும் என்கிற உத்வேகம் பிறக்கும். அந்த அடிப்படையில்தான் மாமனிதர்களை அவ்வப்போது நினைவில்கொண்டு நம்முடைய நோக்கங்களை நாம் புதிப்பித்துக் கொள்கிறோம்.

வாசிக்கும்போதே ஈரத்தையும், வீரத்தையும் ஒருசேர வரவழைக்கின்ற வாழ்க்கை வரலாற்றிற்குச் சொந்தக்காரர் செக்கிழுத்த செம்மல். நாட்டுக்காக அவர் அடைந்த இன்னல்கள் சொல்லில் அடங்காதவை.

இன்று வரலாற்றை வாசிப்பவர்கள் குறைவு. மின்னணுச் சாதனங்களின் புழக்கத்தின் காரணமாக துணுக்குகளே இப்போது நம் நேரத்தை ஆக்கிரமித்துக் கொள்கின்றன. வரலாற்றை வாசிப்பது நம் வாழ்க்கையை இன்னும் செம்மையாக்கிக் கொள்வதற்காக. கப்பலோட்டிய தமிழரின் பரந்துபட்ட அறிவையும், ஆற்றலையும், அவர் ஆற்றிய பணிகளையும் எளிதில் வாசிக்குமாறு தொகுத்து சிறப்பு மலர் ஒன்றைச் செய்தித் துறை செவ்வனே செய்திருக்கிறது.

இந்த நூல் காலப் பெட்டகத்தின் கண்களில் கருமணியாய் ஒளிரும் உன்னத முயற்சி. இதை வடிவமைத்தவர்களுக்கும், பங்களித்தவர்களுக்கும், பரிமாறியவர்களுக்கும் பாராட்டுகள்.

தொலைபேசி: 044–25671555 நிகரி: 044–25672304 மின்அஞ்சல்: cs@tn.gov.in

மகேசன் காசிராஜன், இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்

தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

'வ. உ. சி 150ஆம் பிறந்த ஆண்டு' சிறப்பு மலர்

## வாழ்த்துரை

செக்கிழுத்தச் செம்மல் எனப் போற்றப்பட்ட வ. உ. சிதம்பரனார் இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் தனிப்பெரும் இடம் பெற்றவராவார்.

சிறந்த தமிழிலக்கிய ஆய்வாளராகவும், படைப்பாளராகவும் விளங்கியதோடு தமிழக வரலாற்றில் பன்னெடுங்காலத்திற்குப் பிறகு 'கப்பல் போக்குவரத்துத் துறை'யில் வெள்ளையருக்கு எதிராக வியக்கத்தக்க சாதனைகளை செய்து வெள்ளையர்களே அஞ்சுகிற வகையில் செயலாற்றிய செம்மலாவார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனாரின் 150ஆவது பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டது. இதனையொட்டித் தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் 'வ. உ. சி. 150ஆம் பிறந்த ஆண்டு சிறப்பு மலர்' ஒன்றைச் சீரும் சிறப்பாக வெளியிடுவது வரவேற்கத் தக்கதுடன் பாராட்டத்தக்கப் பெரும் பணியாகும்.

சிறப்பு மலர் உருவாக்கத்திற்கு அனைத்துப் பணிகளிலும் ஈடுபட்ட அனைவருக்கும் என் இனிய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை.

தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–600 009. மின்னஞ்சல்: tdinfosec@tn.gov.in
தொலைபேசி (அலுவலகம்) : 044-25672887, நிகரி : 044-25672021

முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்

தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-600 009.

## ஆசிரியர் உரை

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் பல்வேறு தலைவர்கள், பல்வேறு போராட்ட வடிவங்களைக் காலத்திற்கேற்ப உருவாக்கிப் போராடினார்கள். யானை பலம் பொருந்திய ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் பொருளாதார மாளிகையில் கல்லெறியும் புதிய போராட்ட வடிவத்தை சிந்திக்கத் துணிந்தவர் வ.உ.சி. அவர்கள். ஆளுமையும், துணிவும், அறிவும் பெற்ற மகத்தான தலைவனாய், மானுட நேயமிக்க மனிதனாய், ஆளுமைமிக்க அறிஞனாய் தியாகத்தின் சின்னமாய் விளங்கியவர்தான் வ. உ. சிதம்பரனார் அவர்கள்.

"சுதேசி நேவிகேஷன் கம்பெனி" என்ற கப்பல் கம்பெனியைத் தொடங்கி கப்பலோட்டிய தமிழன் என்று இன்றளவும் போற்றப்படுபவர் வ.உ.சி.

ஓயாத விடுதலைப் போராட்ட பணிகளுக்கு நடுவிலும், தீராத தமிழ்த் தாகத்தோடுத் தொண்டாற்றி வந்த வ.உ.சிதம்பரனார் அவர்கள் எழுதிய நூல்கள், இலக்கியம், தத்துவம் போன்ற துறைகளில் போற்றத்தக்கவை. செல்வாக்கும் செல்வமும் மிக்க குடும்பத்தில் பிறந்து, இவ்வுலக வாழ்வின் இன்பங்களை எல்லாம் ஆண்டு அனுபவித்து வாழும் வாழ்க்கை அவருக்கு எளிதாகக் கைக்கிடைத்திருக்கும், ஆனால், வ.உ.சிதம்பரனார் அவர்கள் விரும்பி ஏற்றுக்கொண்ட வாழ்க்கை என்பது நாட்டுக்குப் போராடி, இந்திய விடுதலைக்குச் சிறை சென்று, செக்கிழுத்து, துன்பங்களை மட்டுமே அனுபவித்து, வறுமையில் மறைந்த மகத்தான தியாக வாழ்வைத்தான்.

அத்தகைய பெருமைக்குரிய கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 150ஆவது ஆண்டு பிறந்தநாளினை கொண்டாடும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2021ஆம் ஆண்டு செப்டம்பர் 3ஆம் நாள் 14 சிறப்பு அறிவிப்புகளை அறிவித்தார். அதனை செவ்வனே நிறைவேற்றி வருகிறது செய்தித்துறை.


தியாகச் செம்மல் வ.உ.சிதம்பரனார் அவர்களின் நினைவுநாளின் நிறைவாகவும், அவர்தம் விடுதலைப் போராட்டத் தியாகங்களை மக்களுக்குப் பறைசாற்றும் வண்ணமும், தமிழ்நாடு அரசின், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் "வ.உ.சி. 150ஆவது பிறந்தநாள் சிறப்பு மலரினை" வெளியிடுவதில் செய்தித்துறை பெருமை அடைகிறது.

அன்புடன்

(வீ.ப. ஜெயசீலன்)

தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009. மின்னஞ்சல்: dipr@tn.gov.in
தொலைபேசி (அலுவலகம்) : 044-25671300, நிகரி : 044-25677777

# பொருளடக்கம்





வ.உ.சி.யை பெருமைப்படுத்துவோம்! ........................................10

**மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்**

வ.உ.சி. நூற்றாண்டு விழா 1872-1972 .................................. 20

வ.உ.சி. வரலாற்றுக் குறிப்புகள் ........................................ 22

**- ஆ.சிவசுப்பிரமணியன்**

சிதம்பரனார் சிந்தனைகள்.................................................. 34

வ.உ.சி. எனும் பெருந்தலைவர்............................................. 56

கண்டோம் வ.உ.சி.யை....................................................... 78

**கட்டுரைகள்:**


வ.உ.சி.யின் தமிழ் அறவுணர்வு வாழ்க்கை!................................ 94
- பேராசிரியர் வீ.அரசு

வ.உ.சி.யின் பொருளாதார தேசியம்........................................ 100
- ஆ.சிவசுப்பிரமணியன்

வ.உ.சி.யும் திருநெல்வேலி எழுச்சியும்...................................... 108
- ஆ.இரா.வேங்கடாசலபதி

இதழாளர் வ.உ.சி......................................................................116
- மா.ரா.அரசு

வ.உ.சி.யின் தமிழ் ஆளுமைத்திறன். .......................................122
- ரெங்கையா முருகன்

கப்பலோட்டிய கதை. ........................................................... 130
- குருசாமி மயில்வாகனன்

வ.உ.சி.யின் பெருஞ்சொல். ................................................... 136
- ஆ.அறிவழகன்

சுயமரியாதைச் சுடரொளி வ.உ.சி. ..........................................142
- ப.திருமாவேலன்

ஆவணங்கள் .........................................................................154

# வ.உ.சி.யை பெருமைப்படுத்துவோம்!

**வ.உ.சிதம்பரனார் அவர்களுடைய 150ஆவது பிறந்தநாள் விழாவினையொட்டி அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 14 அறிவிப்புகளை வெளியிட்டார்!**

**மாண்புமிகு முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசியிருக்கக்கூடிய பல்வேறு கட்சியினுடைய தலைவர்கள், அயோத்தியதாசர் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டப்படும் என்ற அறிவிப்புக்கு வாழ்த்து சொல்லியிருக்கிறார்கள்; நன்றியும் தெரிவித்திருக்கிறீர்கள்; பாராட்டும் தெரிவித்திருக்கிறீர்கள்.

அதே நேரத்தில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு.ஈஸ்வரன் அவர்கள், வ.உ.சி. அவர்களுடைய 150ஆவது பிறந்தநாள் வருகின்றது. எனவே, அதனை அரசு விழாவாக, அவரைப் பெருமைப்படுத்தக்கூடிய வகையில் நாம் செயலாற்ற வேண்டுமென்று ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள்.

என்னுடைய முதல் சுதந்திர தின உரை – நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, என்னுடைய முதல் சுதந்திர தின உரையிலேயே நான் குறிப்பிட்டிருக்கிறேன். வ.உ.சி. அவர்களுடைய 150ஆவது பிறந்தநாள் விழா அரசு விழாவாகக் கொண்டாடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) என்று நான் அறிவித்திருக்கிறேன்.

அதனைத் தொடர்ந்து இந்த ஆண்டு அவரது 150ஆவது ஆண்டாக வருகிற காரணத்தால், 14 அறிவிப்புகளை நான் இப்போது அறிவிக்க விரும்புகிறேன்.

➢ சென்னை காந்தி மண்டபத்தில் உள்ள வ.உ.சிதம்பரனார் அவர்கள் சிறையில் இழுத்த செக்கு வைக்கப்பட்டிருக்கக்கூடிய மண்டபம் பொலிவூட்டப்பட்டு, அங்கு அன்னாரது மார்பளவு சிலை திறந்து வைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

➢ தூத்துக்குடி மாநகரில், முதன்மைச் சாலையான மேல பெரிய காட்டன் சாலை, இனி 'வ.உ.சிதம்பரனார் சாலை' என அழைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

➢ தனது வாழ்நாளில் முக்கிய நாட்களை கோவைச் சிறையிலே கழித்த வ.உ.சிதம்பரனார் அவர்களுடைய முழு உருவச் சிலையானது, கோயம்புத்தூர் வ.உ.சிதம்பரனார் பூங்காவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



இந்து தமிழ் திசை

வ.உ.சி.யின் 150-வது பிறந்தநாளையொட்டி 14 முக்கிய அறிவிப்புகள்

## அயோத்திதாச பண்டிதருக்கு வடசென்னையில் மணிமண்டபம்

சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு




தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

ரூ.5 லட்சத்துடன் பாராட்டு சான்றிதழ் வழங்கப்படும்

வ.உ.சிதம்பரனாரின் 150-வது பிறந்த நாளை முன்னிட்டு

## 'கப்பலோட்டிய தமிழன்' விருது

சட்டசபையில் 14 அறிவிப்புகளை மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்



தினகரன் ஒரு புதிய அனுபவம் www.dinakaran.com


வ.உ.சிதம்பரனாருக்கு பெருமை சேர்க்கும் வகையில்

## கப்பலோட்டிய தமிழன் பெயரில் விருது

பேரவையில் 14 அறிவிப்புகளை வெளியிட்டார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, கோவையில் சிலை





தினமணி

## வ.உ.சி. 150–ஆவது பிறந்த தினம்: சென்னை, கோவையில் சிலை

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு



சென்னை, செப். 3: சுதந்திரப் போராட்டத்தில் தீரத்துடன் ஈடுபட்டு 'செக்கிழுத்த செம்மல்' என மக்களால் புகழப்படும் வ.உ.சிதம்பரனாரின் 150–ஆவது பிறந்த தினத்தை (5-9-1872) முன்னிட்டு 14 புதிய அறிவிப்புகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.

இந்த அறிவிப்பின்படி, வ.உ.சி.க்கு சென்னை, கோவை என இரண்டு இடங்களில் புதிதாக சிலை வைக்கப்பட உள்ளது. இதுகுறித்து, சட்டப்பேரவை விதி 110-ன் கீழ் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட 14 அறிவிப்புகள்:

வ.உ.சி.யின் 150–ஆவது பிறந்த தினம் வரும் 5–ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி, அரசு விழாவாக, அவரைப் பெருமைப்படுத்தும் வகையில் செயலாற்ற வேண்டுமென சட்டப் பேரவை உறுப்பினர் ஈஸ்வரன் கோரிக்கை விடுத்தார். வ.உ.சி.யின் 150–ஆவது பிறந்த தினம் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என எனது சுதந்திர தின உரையிலேயே கூறப்பட்டுள்ளது. இந்த ஆண்டு அவரது 150–ஆவது ஆண்டு பிறந்த தினம் வருவதால், 14 புதிய அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன.

சென்னை காந்தி மண்டபத்தில் வ.உ.சிதம்பரனார், சிறையில் இழுத்த செக்கு வைக்கப்பட்டுள்ள மண்டபம் பொலிவூட்டப்பட்டு அவரது மார்பளவு சிலை நிறுத்து வைக்கப்படும். தூத்துக்குடி மாநகரில் முதன்மைச் சாலையான மேலபெரிய காட்டன் சாலை இனி வ.உ.சிதம்பரனார் சாலை என அழைக்கப்படும்.

**கோவை வ.உ.சி. பூங்கா:** தனது வாழ்நாளின் முக்கிய நாள்களைக் கோவைச் சிறையிலேயே கழித்த வ.உ.சிதம்பரனாரின் முழு உருவச் சிலையானது, கோவை வ.உ.சி. பூங்காவில் அமைக்கப்படும். செய்தித் துறையின் பராமரிப்பிலுள்ள ஓட்டப்பிடாரம் வ.உ.சிதம்பரனார் வாழ்ந்த நினைவு இல்லமும், திருநெல்வேலியில் உள்ள அவரது மணிமண்டபமும் புனரமைக்கப்பட்டு அவ்விடங்களில் அவரது வாழ்க்கை வரலாற்றை அனைவரும் அறிந்து பயன் பெறும் வகையில் ஒலி-ஒளி காட்சி அமைக்கப்படும்.

வ.உ.சிதம்பரனார் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் திரைப்படத்தை இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில், நவீன டிஜிட்டல் முறையில் வெளியிடப்படும். நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் வ.உ.சிதம்பரனார் பெயரில் புதிய ஆய்விருக்கை அமைக்கப்படும். வ.உ.சி. எழுதியுள்ள அனைத்துப் புத்தகங்களும் புதுப்பொலிவுடன் புதுப்பிக்கப்பட்டு, தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் மூலம் குறைந்த விலையில் மக்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

திருநெல்வேலியில் வ.உ.சிதம்பரனார், மகாகவி பாரதியார் படித்த பள்ளிகளுக்குத் தேவையான கூடுதல் வகுப்பறைகள், கலை அரங்கம் மற்றும் நினைவு நுழைவு வாயில் ரூ.1.05 கோடி மதிப்பில் அமைக்கப்படும்.

### ஆண்டுதோறும் 'கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. விருது'

கப்பல் கட்டுமானம், தொழில்நுட்பம், போக்குவரத்து ஆகிய கப்பல் தொடர்பான துறைகளில் ஈடுபட்டு, சிறந்த பங்காற்றி வரும் தமிழர் ஒருவருக்கு 'கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. விருது' ஆண்டுதோறும் அளிக்கப்படும். இந்த விருது ரூ.5 லட்சமும், பாராட்டுச் சான்றும் உள்ளடக்கியது.

வ.உ.சிதம்பரனார் 1936, நவம்பர் 18-இல் மறைந்தார். இந்தத் தினம் தியாகத் திருநாளாக கடைப்பிடிக்கப்படும்.

**அரசுக் கட்டடங்களுக்கு பெயர்:** இந்த ஆண்டு செப்டம்பர் 5–ஆம் தேதி முதல் அடுத்த ஆண்டு செப்டம்பர் 5–ஆம் தேதி வரை ஓராண்டில் தூத்துக்குடி, திருநெல்வேலியில் உருவாகும் அரசுக் கட்டடங்களுக்கு கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் பெயர் சூட்டப்படும். அவரது தியாகத்தை பள்ளி, கல்லூரி மாணவர்கள் பயனடையும் வகையில், போக்குவரத்துத் துறை சார்பில் பேருந்து ஒன்றில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.யின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் குறித்து புகைப்படக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்படும். நடமாடும் வ.உ.சி. வாழ்க்கை வரலாற்று கண்காட்சி கூடமானது, மாணவர்களின் பார்வைக்காகப் பயணிக்கும்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக வ.உ.சிதம்பரனார் குறித்த இணைய வழிக் கருத்தரங்கு நடைபெறும். தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் வாயிலாகக் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் எழுதிய நூல்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் ஆகியன இணையத்தில் மின்மயப்படுத்தி வெளியிடப்படும் என்று தனது அறிவிப்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## தினமலர்

உண்மையின் உரைகல்

# வ.உ.சி.,யின் 150வது பிறந்த நாள்: முதல்வர் வெளியிட்ட 14 அறிவிப்புகள்



வ.உ.சி.

## THE TIMES OF INDIA

LET TRUTH PREVAIL

# Govt to set up univ chair, award for 150th birth anniv of VOC

Times News Network

**Chennai:** Chief minister M K Stalin on Friday made a slew of announcements to celebrate freedom fighter V O Chidambaram's 150th birth anniversary. Chidambaram's death anniversary on November 18 will be observed as 'day of sacrifice.'

The chief minister said the government would install a bust-size statue of the leader in Gandhi Mandapum in Guindy and renovate the structure that showcased the oil extractor (chekku) used by him in prison. Arterial road Mela Periya Cotton Salai in Tuticorin would be renamed VOC Road and a life-size statue of the leader would be installed in V O C Chidambaram park in Coimbatore, since he was imprisoned in Coimbatore prison during the freedom struggle. The house of Chidambaram in Ottapidaram, and his memorial in Tirunelveli under the control of the information department will be renovated and an audio-visual show will be an added feature. A film on the life of the freedom fighter would be released for the benefit of the youth.

A Chair would be set up in Manonmaniam Sundaranar University in Tirunelveli in the name of Chidambaram. Additional classrooms, auditorium and memorial arch will be built at ₹1.05 crore in the school in Tirunelveli where Chidambaram and poet Subramania Bharati studied. "The state will give the Kappalottiya Tamilan V O C award to a Tamil who has made significant contributions in the field of ship-building, technology and transport," the CM said. The award carries a cash prize of ₹5 lakh and citation.

## THE HINDU

INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

# Celebrations for V.O.C.'s birth anniversary

### Bust to be unveiled at Gandhi Mandapam; annual award proposed in his name

SPECIAL CORRESPONDENT
CHENNAI

Chief Minister M.K. Stalin on Friday made 14 announcements in the Assembly in line with his Independence Day speech that the 150th birth anniversary of freedom fighter V.O. Chidambaranar would be celebrated as a government function.

Responding to Tiruchengodu MLA E.R. Eswaran's question whether the government would celebrate the freedom fighter's 150th birth anniversary, Mr. Stalin said a bust of V.O.C. would be unveiled at the Gandhi Mandapam in Chennai. Mela Periya Cotton Salai, an arterial road in Thoothukudi, would be renamed V.O.C. Road, he said.

An annual *Kappalottiya Thamizhan* V.O.C. Award would be given to a Tamil who has excelled in shipbuilding and related technology. A cash prize of ₹5 lakh and a citation would be part of it, Mr. Stalin said. The freedom fighter's death anniversary on November 18 would be observed as a 'Day of Sacrifice.'



The freedom fighter's death anniversary will be observed as a 'Day of Sacrifice'.

All government buildings that were to be constructed in Thoothukudi and Tirunelveli between September 5 this year and September 5 next year would be named after V.O.C., he said. A bus with a photo exhibition on the life of V.O.C. would be run for students to learn about the life of the freedom fighter.

A full-size statue of V.O.C. would be installed at V.O. Chidambaranar Park, Coimbatore, where he spent several days in prison, Mr. Stalin said. An audio-visual display would be arranged at V.O.C.'s house at Ottapidaram, and his 'manimandapam' would be renovated.

A research chair would be set up at Manonmaniam Sundaranar University in Tirunelveli, he said. All books of the late freedom fighter would be published by the Tamil Nadu Textbook and Educational Services Corporation and sold at a nominal cost. A virtual seminar would be organised by Tamil University on V.O.C.

Books and pamphlets by V.O.C. would be digitised by the Tamil Nadu Teachers' Education University and made available in the public domain.

Additional classrooms, an auditorium and a memorial arch would be constructed at the school in Tirunelveli that was attended by V.O.C. and freedom fighter C. Subramania Bharathi at a cost of ₹1.05 crore.

# CM ANNOUNCES 14 PROJECTS IN MEMORY OF VOC

DC CORRESPONDENT
CHENNAI, SEPT. 3

A research chair would be set up in the name of V.O. Chidambaranar (VOC) in the Manonmaniam Sundaranar University in Tirunelveli to mark the 150th birth anniversary of the freedom fighter from the state, Chief Minister M.K. Stalin told the assembly on Friday.

A total of 14 announcements were made by Mr Stalin, who had already declared in his independence day address that VOC's birth anniversary would be celebrated as a government function, in

## DAILY THANTHI dtNEXT

# CM announces 14 new projects to mark 150th birth anniv of VOC



VCK MLAs thank Chief Minister MK Stalin for announcing a memorial for Iyothee Thasar in Chennai on Friday

CHENNAI: To celebrate the 150th birth anniversary of renowned freedom fighter VO Chidambaram Pillai, Chief Minister MK Stalin on Friday announced 14 new projects to commemorate the acclaimed freedom fighter memory who was born on September 5, 1872.

"In my first Independence Day address, I have announced that the birth anniversary of VOC would be celebrated as a government function. Based on the announcement, I will make 14 further announcements to honour VOC on his 150th birth anniversary," said Stalin, in the Assembly.

### Memorial for Iyothee Thasar

The Chief Minister, under Rule 110, announced a memorial for renowned social activist Iyothee Thasa Pandithar in North Chennai. While making the announcement, Stalin said, "Iyothee Thasar was a multifaceted personality. He was a writer, researcher, history teacher, social thinker, publisher, journalist, doctor, orator, language expert and an untiring protester. Even Periyar has told that Thasar was the forerunner for his radical propaganda and reformative thoughts." Stalin also added that grandfather of Iyothee Thasar, Kandappan, handed over the palm leaf manuscripts of Tirukkural to Fracis Whyte Ellis.

### HONOURING THE FREEDOM FIGHTER

- Setting up of a bust of VOC in the hall inside Gandhi memorial in Chennai where the oil press pulled by VOC is placed and renovation of the hall
- Renaming Great Cotton Road in Thoothukudi after VOC.
- Setting up a life size statue of VOC in VOC Park in Coimbatore
- Renovation of VOC's house in Ottapidaram in Thoothukudi district and memorial in Tirunelveli and to set up audio-visual show to showcase the history of VOC in both the places
- Setting up of a research chair in the name of VOC in Manonmaniam Sundaranar University in Tirunelveli
- To name all the government buildings to be constructed in Thoothukudi and Tirunelveli districts, from September 5 this year to September 5, next year, after VOC.
- To republish all the books of VOC and to sell them at cheaper prices through Tamil Nadu Textbook Corporation.
- To allot Rs 1.05 crore to construct additional classes, an art gallery and a memorial arch in the school in Tirunelveli in which VOC and Bharathiyar studied
- To institute an award in the name of VOC for those who excel in the ship industry. The awardee will be given Rs 5 lakh cash price and a certificate of appreciation
- November 8, the day VOC passed away, will be observed as Martyrs Day
- The film showcasing the biography of VOC will be digitised and will be released to help the current generation know about him
- A bus will be designed in which a photo exhibition of VOC will be set up and the bus will be sent to all educational institutions
- An online conference on VOC would be arranged through Tamil University
- The books and articles written by VOC would be republished and would be published online too

## DECCAN Chronicle

# STALIN: VOC's HOUSE IN OTTAPIDARAM WILL BE RENOVATED, VISITORS WILL HAVE AV PRESENTATION

Turn P1

In recognition of VOC's contribution to the maritime history of the state - he launched a national shipping company to break the British monopoly in 1906 earning the sobriquet 'Kappalotia Tamilar' (The Tamil helmsman) - an award has been instituted.

The 'Kappalotia Tamilar VOC Award', carrying a purse of ₹5 lakh and a citation, will be given away to a Tamilian who excelled in ship-building and related crafts every year, Mr Stalin said.

Among the other announcements was one to declare VOC's death anniversary, November 18, as the 'Day of Sacrifice,' another one to refurbish his memorial situated inside the Gandhi Mandapam premises in Chennai and install his bust there.

A full length statue of VOC would be put up in the park, already named after him in Coimbatore, the place where he was imprisoned for a long time.

Apart from naming the arterial Melaperiya Cotton Road in Thoothukudi after VOC, Mr Stalin announced that all government buildings coming up between September 5 this year and September 5 in 2022 in Tirunelveli and Thoothukudi district would be named after VOC.

His house in Ottapidaram would be renovated and visitors would be treated to an audio-visual presentation on his life and times and his memorial in Tirunelveli would be renovated, the announcements said.

All his books would be published by the Tamil Nadu Textbook and Educational Services Corporation, a virtual seminar on his life would be arranged by the Tamil University and his books and pamphlets would be digitised and made available in the public domain.

The school that VOC attended would have a memorial arch at a cost of ₹1.05 crore, more classrooms and an auditorium and a documentary film on his life will be made in digital format for screening it to the younger generation.

The transport department would set up a photography exhibition on the life and times of VOC and send it to schools and colleges to educate the students.

➢ செய்தித்துறையின் பராமரிப்பிலுள்ள ஒட்டப்பிடாரம் வ.உ.சிதம்பரனார் அவர்கள் வாழ்ந்த நினைவு இல்லமும், திருநெல்வேலியில் உள்ள வ.உ.சிதம்பரனார் அவர்களுடைய மணிமண்டபமும் புனரமைக்கப்பட்டு, அவ்விடங்களில் அன்னாரின் வாழ்க்கை வரலாற்றை அனைவரும் அறிந்து பயனடையும் வகையில், ஒலி – ஒளி காட்சி அமைக்கப்படும்.

➢ வ.உ.சிதம்பரனார் அவர்கள் வாழ்க்கை வரலாற்றினைச் சித்தரிக்கும் திரைப்படத்தினை இன்றைய இளைய தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையில், நவீன டிஜிட்டல் முறையிலே அது வெளியிடப்படும்.

➢ திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் வ.உ.சிதம்பரனார் அவர்கள் பெயரில் புதிய ஆய்விருக்கை ஒன்று அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

➢ வ.உ.சிதம்பரனார் அவர்கள் எழுதியுள்ள அனைத்துப் புத்தகங்களும் புதுப்பொலிவுடன் புதுப்பிக்கப்பட்டு, தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் மூலம் குறைந்த விலையில் மக்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

➢ திருநெல்வேலியில் வ.உ.சிதம்பரனார் மற்றும் மகாகவி பாரதியார் படித்த பள்ளிக்குத் தேவையான கூடுதல் வகுப்பறைகள், கலை அரங்கம் மற்றும் நினைவு நுழைவு வாயில் 1.05 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

➢ கப்பல் கட்டுமானம், தொழில்நுட்பம், போக்குவரத்து ஆகிய கப்பல் தொடர்பான துறைகளில் ஈடுபட்டு, சிறந்த பங்காற்றிவரும் தமிழர் ஒருவருக்கு 'கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. விருது' ஆண்டுதோறும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) விருதுத் தொகையாக 5 இலட்சம் ரூபாய் மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும்.

➢ கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள் மறைந்த நவம்பர் 18ஆம் தேதி, தியாகத் திருநாளாக அறிவித்துக் கொண்டாடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

➢ இந்த ஆண்டு செப்டம்பர் 5, 2021 முதல் செப்டம்பர் 5, 2022 வரை, தூத்துக்குடியிலும், திருநெல்வேலியிலும் உருவாகும் அரசுக் கட்டடங்களுக்கு கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள் பெயர் சூட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

➢ பள்ளி, கல்லூரி மாணவர்கள் அறிந்து பயனடையும் வகையில், போக்குவரத்துத் துறையின் சார்பில் பேருந்து ஒன்றில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களுடைய வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து புகைப்படக் கண்காட்சி ஏற்பாடு செய்து பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் அனுப்பப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)




**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,
சென்னை இராஜாஜி சாலை, துறைமுகம் வளாகத்தில் அமைந்துள்ள
வ.உ.சி. திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள
திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்திய காட்சி.**

➢ தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக வ.உ.சிதம்பரனார் அவர்கள் குறித்த இணையவழிக் கருத்தரங்கம் நடைபெறும்.

➢ தமிழ் நிகர்நிலைக் கல்வி கழகத்தின் வாயிலாகக் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள் எழுதிய நூல்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் ஆகியவை முழுவதும் இணையத்திலே மின்மயப்படுத்தி வெளியிடப்படும்.

**நன்றி, வணக்கம்.**




தமிழ்நாடு அரசு
GOVERNMENT OF TAMIL NAD










**கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. அவர்களின் 150ஆவது பிறந்த ஆண்டினை முன்னிட்டு அவரது வாழ்க்கை வரலாறு குறித்த நகரும் புகைப்பட கண்காட்சி பேருந்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டு கொடியசைத்து தொடங்கி வைத்த நிகழ்ச்சி**






# கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி. - சில குறிப்புகள்

**முனைவர் சங்கர சரவணன்.**
இணைய இயக்குநர், தமிழ்நாடு பாடநூல் கழகம்



கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி.யின் 150ஆவது ஆண்டை கொண்டாடும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட பல்வேறு அறிவிப்புகளில் ஒன்று வ.உ.சி.யின் நூல்களைப் பதிப்பித்து குறைந்த விலையில் மக்களுக்கு கிடைக்க செய்வது என்பதாகும்.

அதன்படி தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் பேராசிரியர் வீ.அரசு அவர்களைப் பொதுப் பதிப்பாசிரியராகக் கொண்டு வ.உ.சி. எழுதிய பத்துக்கும் மேற்பட்ட நூல்களை வ.உ.சி. பன்னூல் திரட்டு என்ற ஒரு நூலாகக் கொண்டு வந்தது.

வ.உ.சி. திருக்குறளுக்கு எழுதிய இனிய உரை பலரும் அறியாதது. அந்த நூல் பாடநூல் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இவ்விரண்டு நூல்களையும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வ.உ.சி.யின் நினைவு நாளான 18.11.2021 அன்று வெளியிட்டார்கள்.

இவை தவிர, வ.உ.சி.யின் தொல்காப்பியத்தின் இளம்பூரணர் உரைக்கு எழுதிய எளிய உரை இரண்டு தொகுதிகளாக இந்த ஆண்டு வெளிவரவுள்ளது. இளம்பூரணர் தொல்காப்பியத்தின் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களுக்கும் உரை எழுதிய போதிலும், வ.உ.சி. எழுத்து மற்றும் சொல் அதிகாரத்திற்கு மட்டுமே உரை எழுதியுள்ளார். இந்த நூல்கள் இவ்வாண்டில் வெளிவரவுள்ளன.

வ.உ.சி.யை கப்பலோட்டிய தமிழர், செக்கிழுத்த செம்மல் என்று மட்டுமே அறிந்துள்ள தமிழ்ச் சமூகம் அதையும் கூட சரிவர அறியாத இந்திய சமூகம் இரண்டையும் எண்ணிப் பார்த்தால் கொஞ்சம் வேடிக்கையாகத் தான் இருக்கிறது.

வ.உ.சி.யின் பன்னூல் திரட்டை படிப்பவர்கள் வ.உ.சி. எழுதிய நான் கண்ட பாரதி, என்ற நூலில் பாரதியை வ.உ.சி. படம்பிடிக்கும் விதத்தை நன்றாக உள்வாங்கிக் கொள்ளமுடியும்.

ஜேம்ஸ் ஆலன் எழுதிய பல தன்னம்பிக்கை நூல்களை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தவர் வ.உ.சி. இதுமட்டுமன்றி மெய்யறம், மெய்யறிவு போன்ற நீதிநூல்களை எழுதியதோடு சிவஞானபோதத்திற்கு உரையும் எழுதியுள்ளார் வ.உ.சி.




# வ.உ.சி. நூற்றாண்டு விழா 1872-1972








வ.உ.சி.யின் நூற்றாண்டு
பிறந்தநாளில் தூத்துக்குடியில்
அவரது சிலை திறப்பு விழா
நடைபெற்றது.
அதில் அன்றைய பிரதமர்
இந்திராகாந்தி அம்மையாரும்,
தமிழக முதல்வர்
முத்தமிழறிஞர் கலைஞர்
அவர்களும் கலந்து கொண்ட
நிகழ்வின் காட்சிகள்.












பொது நூலகம்
கப்பலோட்டிய தமிழன்
வ.உ. சிதம்பரம் பிறந்த இல்லம்
ஓட்டப்பிடாரம் - தூத்துக்குடி மாவட்டம்
செய்தி-மக்கள் தொடர்புத் துறை


KAPPALOTTIA THAMIZHAN
HIDAMBARAM'S BIRTH PLACE
OTT APIDARAM - THOOTHUKUDI DISTRICT
INFORMATION & PUBLIC RELATIONS DEPARTMENT

வ.உ.சி.

# வ.உ.சி. வரலாற்றுக் குறிப்புகள்

– ஆ.சிவசுப்பிரமணியன்




**1806** ஆம் ஆண்டில் வேலூரில் நிகழ்ந்த சிப்பாய் எழுச்சிக்குப் பின்னர் ஒரு நூற்றாண்டு காலம் தமிழகம் அடிமைத் துயிலில் ஆழ்ந்திருந்தது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்நாட்டின் தென்பகுதியிலுள்ள கரிசல் கிராமங்கள் இரண்டில் உதித்த இருவர் அடிமைத் துயிலில் ஆழ்ந்திருந்த தமிழர் கதவைத் தட்டி எழுப்பினர். ஒருவர் “பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வந்த பாரதி”. மற்றொருவர் தம் வீர உரைகளால் சுதேசிக் கனலைக் கொழுந்துவிட்டெரியச் செய்த வ.உ.சி. (வள்ளியப்பன், உலகநாதன், சிதம்பரம்)

## பிறப்பும் கல்வியும் இளமையும்:

வெள்ளையரை எதிர்த்துப் போரிட்டு வீரமரணம் எய்திய கட்டபொம்மனின் பாஞ்சாலங்குறிச்சிக்கு அருகிலுள்ள ஊர் ஒட்டப்பிடாரம். ஒரு வட்டத்தின் தலைநகரான இவ்வூரில் ஆங்கில ஆட்சியின்போது நீதிமன்றங்கள் செயல்பட்டு வந்தன. இந்நீதிமன்றங்களில் இரண்டாம் நிலை வழக்கறிஞராகப் பணியாற்றி வந்தவர் உலகநாதர். இவரது மனைவி பரமாயி. இவர்களது மூத்த மகனாக 1872 செப்டம்பர் 5ஆம் நாள் வ.உ.சி. பிறந்தார்.

ஒட்டப்பிடாரம் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் தொடக்கக் கல்வியைப் பயின்றார். தமது பதினான்காவது வயதில் ஒட்டப்பிடாரத்திற்கு அருகிலுள்ள தூத்துக்குடி சென்று அங்குள்ள புனித சேவியர் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். இடையில் அதே ஊரிலுள்ள கால்டுவெல் பள்ளியில் பயின்று, மீண்டும் சேவியர் உயர்நிலைப் பள்ளிக்குத் திரும்பினார். பின்னர் திருநெல்வேலி சென்று அங்குள்ள இந்துக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். அங்கிருந்து மீண்டும் தூத்துக்குடி சென்று கால்டுவெல் உயர்நிலைப் பள்ளியில் பயின்று மெட்ரிகுலேசன் தேர்வில் தேர்ச்சி பெற்றார்.



ஒட்டப்பிடாரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் சிறிது காலம் எழுத்தராகப் பணியாற்றினார். பின்னர் திருச்சி சென்று சட்டம் பயின்று இரண்டாவது கிரேடு வழக்கறிஞராகத் தேர்ச்சி பெற்றுத் திரும்பினார்.

## வழக்கறிஞர் பணி:

ஒட்டப்பிடாரத்தில் வழக்கறிஞர் பணியைத் தொடங்கிய வ.உ.சி. குற்றவியல் (கிரிமினல்) துறையில் சிறந்த வழக்கறிஞர் என்ற பெயரை விரைவில் பெற்றார். காவல் துறையினர் தொடுக்கும் தவறான வழக்குகளால் பாதிக்கப்படும் ஏழைகளுக்குக் கட்டணமின்றி வாதாடினார். கையூட்டு வாங்கிய ஏகாம்பர ஐயர் என்ற துணைக் குற்றவியல் நீதிபதியின் மீது வழக்குத் தொடுத்து, அவருக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தார். கையூட்டு வாங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்த வாசுதேவராவ் என்பவர் ஊதியம் குறைக்கப்பட்டு எழுத்தராகப் பணியிறக்கம் செய்யப்படுவதற்கும், பஞ்சாப கேசய்யர் என்பவர் பணிநீக்கம் செய்யப்படுவதற்கும் வ.உ.சி. காரணமாயிருந்தார். ஏற்கெனவே தலைமைக் காவலர் ஒருவர் பணிநீக்கம் செய்யப்படவும், காவலர் ஒருவர் பணிநீக்கம் செய்யப்படவும் வ.உ.சி. காரணமாயிருந்தார். காவல் துறை, நீதித்துறை அதிகாரிகளைப் பகைத்துக்கொண்டு அவர் ஒட்டப்பிடாரத்தில் வழக்கறிஞர் தொழில் புரிவதை அவரது தந்தை விரும்பவில்லை. எனவே, தூத்துக்குடி சென்று வழக்கறிஞர் தொழில் புரியும்படி அவரது தந்தை கூறினார். எனவே, 1900ஆம் ஆண்டில் வ.உசி. தூத்துக்குடி சென்றார். அப்போதே அவர் இந்திய தேசிய காங்கிரசில் உறுப்பினராகவும் இருந்தார்.

## தூத்துக்குடி வாழ்க்கை [1900 - 1908]

சுதேசி இயக்கத்தின் உச்சக்கட்டமாக 1907 – 1908ஆம் ஆண்டுகள் அமைந்தன. சுதேச இயக்கத் தலைவர்களின் மறைமுகமான ஆதரவுடன் செயல்பட்ட இந்தியத் தேசியப் பயங்கரவாதப் புரட்சி இயக்கங்களின் செயல்பாடும் இக்காலத்தில் அதிகரித்தது. இத்தகைய சூழலில்தான் வ.உ.சி.யின் தூத்துக்குடி வாழ்க்கை தொடங்கியது.

கர்சான் அறிவித்த வங்கப் பிரிவினையை எதிர்த்து வங்காளத்தில் உருவான கிளர்ச்சி






வ.உ.சி. தனது முதல் மனைவி
வள்ளியம்மையாருடன்

இந்தியாவெங்கும் பரவியது. இதனையொட்டி சுதேசி இயக்கம் உருவானது. சுயராஜ்யம், சுதேசியத் தொழில் முயற்சி, அந்நியப் பொருள் புறக்கணிப்பு, தேசியக் கல்வி ஆகியன இவ்வியக்கத்தின் முக்கியக் குறிக்கோள்களாக அமைந்தன. '**சுயராஜ்யம் எனது பிறப்புரிமை**' என்ற திலகரின் முழக்கம் மக்களிடையே செல்வாக்குப் பெற்றது. ஏற்கெனவே, காங்கிரஸ் இயக்கத்துடன் இணைந்திருந்த வ.உ.சி. சுதேசி இயக்கத்தால் ஈர்க்கப்பட்டார். இந்தியர்களால் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பொருள்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் '**சுதேசிப் பண்டகசாலை**' என்ற அமைப்பை நிறுவினார். '**தரும நெசவு சாலை**' என்ற பெயரில் நூற்பாலை ஒன்று கட்டவும் முயற்சி செய்தார். போதிய நிதி கிட்டாததனால் இம்முயற்சி வெற்றி பெறவில்லை.

இவை தவிர '**சென்னை ஜனசங்கம்**' என்ற அமைப்பின் கிளை ஒன்றைத் '**தூத்துக்குடி ஜனசங்கம்**' என்ற பெயரில் வ.உ.சி. உருவாக்கினார். நீதிமன்றப் புறக்கணிப்பு, சுதேசிக் கல்வி, சுதேசியத் தொழில் முயற்சி ஆகியன இவ்வமைப்பின் முக்கியக் குறிக்கோள்களாக இருந்தன. வ.உ.சி.யின் தேசிய முயற்சிகளின் விளைவாக அன்றைய சென்னை மாநிலத்தில் வெள்ளையர் எதிர்ப்புணர்ச்சி நிலவும் ஒரே இடமாகத் தூத்துக்குடி விளங்கியது. இக்குறிக்கோள்களை நிறைவேற்றும் வழிமுறைகளுள் ஒன்றாக வ.உ.சி.யின் சுதேசிக் கப்பல் நிறுவனம் உருப்பெற்றது.

## சுதேசிக் கப்பல் நிறுவனம்

துறைமுக நகரமான தூத்துக்குடியில் பி.ஐ.எஸ்.என். (British Indian Steam Naigation Company Ltd.,) என்ற வெள்ளையர்களின் நிறுவனம் தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையில் பயணிகள் போக்குவரத்தையும் சரக்குகள் போக்குவரத்தையும் தனது கப்பல்களின் வாயிலாக நடத்தி வந்தது. இரு நகரங்களும் ஒரே காலனி ஆட்சியில் இருந்தமையால், பெரிய அளவிலான கட்டுப்பாடு எவையுமின்றிக் கப்பல் போக்குவரத்து மிகவும் லாபகரமாக நடந்தது. அதே நேரத்தில் வெள்ளை நிறுவனங்களுக்கே சரக்குகளை ஏற்றுவதில் கப்பல் நிறுவனம் முன்னுரிமை வழங்கி வந்தது. இதனால் பாதிப்புற்ற தூத்துக்குடி நகர் இந்திய வியாபாரிகள்



சிலர் 1906ஆம் ஆண்டில் தூத்துக்குடிக்கும் கொழும்பிற்கும் இடையே கப்பல் விட முயன்றனர். சி.வ.நல்லபெருமாள் பிள்ளை என்பவர் சி.வ.கம்பெனி என்ற பெயரில் கப்பல் நிறுவனம் ஒன்றைத் தொடங்கினார். மும்பையிலுள்ள டாஜ் பாயி என்ற கப்பல் முதலாளியுடன் குத்தகை அடிப்படையில் கப்பல்கள் வாங்க ஒப்பந்தமும் செய்துகொண்டார். ஆனால் பி.ஐ.எஸ்.என். கம்பெனியாரும் வெள்ளை அதிகாரிகளும் சூழ்ச்சி செய்து குத்தகைக் காலம் முடிவதற்கு முன்னரே கப்பல்களைத் திரும்பப் பெறச் செய்துவிட்டனர். இவ்வாறு தூத்துக்குடியில் உருவான இந்தியக் கப்பல் நிறுவனம் செயல்படாது முடக்கப்பட்டுவிட்டது.

இந்நிலையில் சுதேசியம் என்ற கோட்பாட்டைச் செயல்படுத்தும் முறையில் வ.உ.சி. சுதேசிக் கப்பல் நிறுவனம் ஒன்றை உருவாக்கினார். சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி (Swadeshi Steam Navigation Company) என்ற பெயரைத் தாங்கிய இந்நிறுவனம் 1882ஆம் ஆண்டு இந்தியக் கம்பெனிச் சட்டப்படி 1906ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16ஆம் நாள் பதிவு செய்யப்பட்டது. இக்கம்பெனியின் மூலதனம் பத்து இலட்சம் என்று நிர்ணயிக்கப்பட்டது. பங்கு ஒன்றுக்கு ரூபாய் 25 வீதம் 40,000 பங்குகளை விற்பனை செய்வதன் மூலம் இம்மூலதனத்தைத் திரட்ட முடிவு செய்யப்பட்டது. இந்தியா – இலங்கை முதலிய ஆசியாக் கண்டத்துத் தேசத்தார்களிடமிருந்து மட்டுமே இது சேர்க்கப்படும்.



**இரண்டாவது மனைவி**
**மீனாட்சி அம்மையாருடன் வ.உ.சி.**

இதன் இயக்குநர் குழுவில் பதினைந்து பேர் இடம் பெற்றனர். பிரபல வழக்கறிஞர் சேலம் சி.விஜயராகவாசாரியார் இயக்குநர் குழுவில் இடம் பெற்றிருந்தார். நிறுவனத்தின் தலைவராக பாலவநத்தம் ஜமீன்தாரும் மதுரை நான்காவது தமிழ்ச் சங்கத்தின் நிறுவனருமான வள்ளல் பாண்டித்துரை நியமிக்கப்பட்டார். உதவிச் செயலாளராக வ.உ.சி. விளங்கினார்.

இந்நிறுவனத்திற்குப் பங்குதாரர்களைச் சேர்க்க வ.உ.சி. தமிழகத்தில் மட்டுமின்றி இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் சென்றார். இவ்வாறு அவர் மும்பை சென்றிருந்தபோது நோய்வாய்ப்பட்டிருந்த அவரது மூத்த மகன் உலகநாதன் இறந்துபோனான். ஆயினும் வ.உ.சி. தன் பணியைக் கைவிட்டுவிட்டு வரவில்லை.



ram, Steamer,1949



கப்பல்களை விலைக்கும் வாங்கும்வரை வ.உ.சி காத்திருக்க விரும்பவில்லை. எனவே **"மாங்கு சீட்டன்"** என்ற கப்பலை வாடகைக்கு அமர்த்தினார்.

1907 மே மாதத்தில் எஸ்.எஸ். காலியோ, எஸ்.எஸ். லாவோ எனற பெயர்களில் இரண்டு கப்பல்கள் தூத்துக்குடிக்கு வந்தன. இவை ஒவ்வொன்றிலும் 42 முதல் வகுப்புப் பயணிகளும் 24 இரண்டாம் வகுப்புப் பயணிகளும் பயணம் செய்ய இடமிருந்தது. அத்துடன் 4,000 மூட்டை சரக்குகளையும் ஏற்ற முடியும்.

பி.ஐ.எஸ்.என். நிறுவனமும் வெள்ளை அரசும் இணைந்து சுதேசிக் கப்பல் நிறுவனத்திற்கு எதிராகப் பல சூழ்ச்சிகளை மேற்கொண்டன. தனது கப்பல் கட்டணத்தை பி.ஐ.எஸ்.என். நிறுவனம் குறைத்தது.

ஆயினும் மக்களிடையே நிலவிய சுதேசி உணர்வின் காரணமாக 1907ஆம் ஆண்டின் இறுதியிலும் 1908இன் தொடக்கத்திலும் மாதம் ஒன்றிற்கு முப்பதினாயிரம் முதல் நாற்பதினா யிரம் வரை பி.ஐ.எஸ்.என். கம்பெனிக்கு இழப்பு நேரிட்டது. சுதேசிக் கப்பல் நிறுவனத்தின் கப்பல்களில் பயணம் செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வந்தது.

## சிறை வாழ்க்கை:

விபின் சந்திரபால் என்ற சுதேசி இயக்கத் தலைவர் கைது செய்யப்பட்டு 1908 மார்ச் 9ஆம் நாள் விடுதலையானார். அவர் விடுதலை நாளைச் சுதேசி இயக்கத்தினர் சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிட்டனர். இதனடிப்படையில் வ.உ.சி.யும், சுப்பிரமணிய சிவாவும், விபின் சந்திரபாலின் விடுதலை நாளை தூத்துக்குடியில் 09.03.1908இல் கொண்டாட ஏற்பாடுகள் செய்தனர்.

ஏற்கெனவே வ.உ.சி.யின் செயல்பாடுகளால் எரிச்சலுற்றிருந்த மாவட்ட நிர்வாகம் இதைத் தடுக்க முனைந்தது. பொதுக்கூட்டங்களில் பேசுவதற்கு இருவருக்கும் தடை விதித்தது. இவர்கள் மீது இந்தியக் குற்றவியல் சட்டத்தின் 108ஆம் பிரிவின் கீழ் ஜாமீன் வழக்குத் தொடர்ந்தது. இது தொடர்பாக திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த விஞ்சி என்பவரைச் சந்திக்கச் சென்ற வ.உ.சி., சுப்பிரமணிய சிவா இருவரும் இந்தியக் குற்றவியல் சட்டத்தின் 107ஆவது பிரிவில் கைது செய்யப்பட்டார்கள்.

1908 மார்ச் 12ஆம் நாள் வ.உ.சி., சிவம், பத்மநாபன் ஆகிய மூவரும் பாளையங்கோட்டைச்



விபின் சந்திரபால்




சிறைக்கு அழைத்து வரப்பட்டனர். இதைத் தொடர்ந்து தேசநிந்தனை வழக்கும் அவர்கள் மீது போடப்பட்டது. கூடுதல் மாவட்ட நீதிபதியான ஈ.எச்.வாலஸ் என்ற ஆங்கிலேயர் இவ்வழக்கின் தொடக்க விசாரணையை நடத்தி செஷன்ஸ் விசாரணைக்கு அனுப்பி வைத்தார்.

வ.உ.சி.யின் மீது தொடரப்பட்ட 'அரச நிந்தனை' வழக்கில், 1908 ஜுலை 7ஆம் நாள் தீர்ப்பு வழங்கப்பட்டது. சிவத்திற்கு இருப்பிடம் தந்து உதவியமைக்காக ஆயுள் நாடு கடத்தல் தண்டனையையும் திருநெல்வேலியில் மார்ச் 9இல் ஆற்றிய சொற்பொழிவுக்காக ஆயுள் நாடு கடத்தல் தண்டனையும் விதித்து இரு தண்டனைகளையும் ஒன்றாக அனுபவிக்கும்படி ஏ.எஃப் பின்ஹே என்ற நீதிபதி தீர்ப்பளித்தார்.

பின்ஹே விதித்த தண்டனைப்படி வ.உ.சி. அந்தமானுக்கு நாடு கடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அந்தமான் தீவில் கைதிகளின் எண்ணிக்கை அளவு கடந்திருந்ததால் 03.03.1906இல் கைதிகளை மேலும் அங்கு அனுப்ப வேண்டாமென்று இந்திய அரசு ஆணை ஒன்றினைப் பிறப்பித்தது. இதன் காரணமாகவே வ.உ.சி. கோவைக்கு அனுப்பப்பட்டார்.


சுப்பிரமணிய சிவா


பாலகங்காதர திலகர்

அனைத்து துன்பங்களும் அவருக்கு சிறையில் இழைக்கப்பட்டது. அதைப்பற்றிக் கவலைப்பட வில்லை வ.உ.சி. இந்தக் காலத்தில்தான் ஆலன் எழுதிய As a man Thinketh என்ற ஆங்கில நூலை 'மனம் போல வாழ்வு' என்ற தலைப்பில் வ.உ.சி மொழிபெயர்த்தார். திருக்குறள் அறத்துப்பாலை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் பணியினையும் செய்து முடித்தார்.

1908 நவம்பரில் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ஆர்னால்டு ஒய்ட்டும், நீதிபதி மில்லரும் வ.உ.சி.யின் முறையீட்டை விசாரித்துத் தீர்ப்பு வழங்கினர். நாடு கடத்தி பின்ஹே வழங்கிய இரட்டை ஆயுள் தண்டனையை ஆறு ஆண்டுகள் நாடு கடத்தல் தீர்ப்பாகவும், நான்காண்டுகள் நாடு கடத்தல் தீர்ப்பாகவும் குறைத்து இரண்டு தண்டனைகளையும் ஒரே நேரத்தில் அனுபவிக்கும்படி நீதிபதிகள் மாற்றியமைத்தனர். இத்தீர்ப்பின் விளைவாக மீண்டும் கடின உழைப்புக்கு வ.உ.சி. ஆட்பட்டார். அவருக்குக் கல்லுடைக்கும் பணி வழங்கப்பட்டது.

ஆங்கில ஆட்சியின்போது சென்னை மாகாணம் (Madras Presidency) என்ற நிர்வாகப் பகுதியானது இன்றைய கேரளத்தின்

மலபார் பகுதிகளையும் தன்னகத்தே கொண்டிருந்தது. மலபார் மாவட்டத்திலுள்ள தாலுகாக்களில் ஒன்றாகவும் அத்தாலுகாவின் தலைநகராகவும் கண்ணனூர் அமைந்திருந்தது. இச்சிறைச்சாலைக்கே வ.உ.சி. கோவையிலிருந்து 1910 டிசம்பர் முதல் வாரத்தில் அழைத்து வரப்பட்டார். இச்சிறையில் கோரன்டைன் பிளாக் (Quarantine Block) ஓரமாக ஓர் அரங்கு அவருக்கு அளிக்கப்பட்டது. ஆனால், அவர் கண்டு மகிழ்ந்த அழகான சூழலுக்கு நேர்முரணான கொடிய அடக்குமுறை அங்கு நிலவுவதைப் பின்னர் வ.உ.சி. உணர நேரிட்டது.


1857இல் நிகழ்ந்த சிப்பாய் எழுச்சியின் விளைவாக கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி ஒழிக்கப்பட்டது. 1858 நவம்பர் முதல் நாளன்று இங்கிலாந்தையாண்ட விக்டோரியா மகாராணியால் இது தொடர்பாக ஓர் அறிக்கை வெளியிடப்பட்டது. இவ்வறிக்கை வெளியிடப்பட்டு 50 ஆண்டுகள் ஆன பின்னர் 1908 நவம்பர் 2இல் ஏழாம் எட்வர்ட் இந்த அறிக்கையை மீண்டும் புதுப்பித்தான். இதனையொட்டி இந்தியக் கைதிகளுக்கு ஓர் ஆண்டுக்கு ஒரு மாதம் என்ற விகிதத்தில் தண்டனைக் குறைப்பு வழங்கப்பட்டது. ஆறாண்டுக் கடுங்காவல் தண்டனை பெற்ற வ.உ.சி.க்கு இதனடிப்படையில் ஆறுமாத தண்டனைக் குறைப்பு வழங்கப்பட்டது.


ஏழாம் எட்வர்ட் இறந்த பிறகு ஐந்தாம் ஜார்ஜ் 1910இல் மன்னனானான். இதற்காக இந்தியக் கைதிகளுக்கு ஆண்டுக்கு 15 நாட்கள் தண்டனைக் குறைப்பு வழங்கப்பட்டது. இத்தண்டனைக் குறைப்பால் மூன்று மாதங்கள் வ.உசி.யின் தண்டனைக் காலத்தில் குறைந்தன.

இத்தண்டனைக் குறைப்புகள் தவிர 1912 ஜனவரி 24 வரை சிறைக் கைதிகளின் உழைப்புக்காகச் சிறைக் கண்காணிப்பாளர் வழங்கும் தண்டனைக் குறைப்பாக 92 நாட்கள் வ.உ.சி. பெற்றிருந்தார். என்றாலும், சிறையில் அவர் செய்ததாகக் கருதப்பட்ட குற்றங்களுக்காக அவ்வப்போது வழங்கப்பட்ட தண்டனைகளாக 37 நாட்கள் கழிக்கப்பெற்றிருந்தன. எனவே, 55 நாட்கள்தான் சிறை விதிகளின்படி பெற்ற தண்டனைக் குறைப்புக் காலமாக இருந்தது.

### விடுதலை:

1911 டிசம்பரில் ஐந்தாம் ஜார்ஜ் டில்லியில் இந்திய மன்னனாக மூடிசூட்டிக் கொள்ளும் விழா நடைபெற்றது. இதற்காக இந்தியக் கைதிகளுக்கு ஆண்டுக்கு ஒரு திங்கள் என்ற அளவில் தண்டனைக் கழிவு வழங்கலாம் என்று





முடிவானது. இத்தண்டனைக் குறைப்பினை அரசு நிந்தனைக் குற்றவாளிகளுக்கும் வழங்கலாமா என்பது குறித்து 1911 அக்டோபரில் ஆராயப்பட்டது.

இது தொடர்பாக இந்திய அரசின் உளவுத் துறையிலிருந்து, 1911 ஜூலை 15இல் சென்னை மாநிலத் தலைமைச் செயலாளரான ஸ்டுவர்ட் என்ற வெள்ளையனுக்குக் கடிதமொன்று அனுப்பப்பட்டது. இக்கடிதத்திற்கு 07.09.1911இல் தயாரிக்கப்பட்ட அலுவலகக் குறிப்பில் வ.உ.சி.யின் விடுதலையினால் பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படுமென்று குறிப்பிடப்பட்டது. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்தும், காவல் துறைக் கண்காணிப்பாளரிடமிருந்தும் இத்தகைய கருத்தமைந்த கடிதங்கள் மாநிலத் தலைமைச் செயலாளருக்கு வந்துள்ளதாக அக்குறிப்பில் கூறப்பட்டது.

என்றாலும், முடிசூட்டு விழாவினையொட்டி வழங்கப்பட்ட சிறப்புத் தண்டனைக் கழிவாக ஆறு திங்கள் வ.உ.சி.க்கும் அளிக்கப்பட்டது. இதனடிப்படையில் 1912 டிசம்பர் 24இல் அவரது விடுதலை எதிர்பார்க்கப்பட்டது.

இதனையொட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திருநெல்வேலி மாவட்டத்தில் விடுதலை இயக்கம் எந்த நிலையில் உள்ளது என்பதையும் வ.உசி.யின் சொத்துக்கள் குறித்தும் விடுதலையான பின்னர் அவர் எங்குத் தங்குவார் என்பது குறித்தும் வெள்ளையரசு ஆராய்ந்தது. அவர் விடுதலையான பின்னர் ஆட்சிக்கு எதிரான செயல்களை மீண்டும் செய்தால் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது குறித்தும் அவருடன் நெருங்கிய தொடர்புகொள்வோரை எவ்வாறு எச்சரிப்பது என்பது குறித்தும் சில வழிமுறைகளை வெள்ளையரசு வகுத்தது.

மாநிலத் தலைமைச் செயலாளரான ஸ்டுவர்ட் என்ற வெள்ளியன் வ.உ.சி.யின் விடுதலை குறித்துப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளான்:

''வ.உ. சிதம்பரம் பிள்ளை 1912ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ஆம் நாள் விடுதலை செய்யப்பட இருக்கிறார். அவர் உடனே கண்காணிப்பில் வைக்கப்பட வேண்டும். அவர் போய்ச் சேருமிடம் எனக்கு உடனே தந்தி மூலம் தெரிவிக்கப்பட வேண்டும். அவர் இந்த மாவட்டத்திற்கு வருவதாக இருந்தால், இரயில் நிற்கும் எல்லா முக்கியமான நிலையங்களுக்கும் ஆட்களை அனுப்பி,



திரு.வி.க.

அவரைப் பார்க்க வருபவர்களின் பெயர்களைக் குறித்துக் கொள்ளப் பரிந்துரைக்கிறேன். இந்தச் செய்தி இது சம்பந்தப்பட்ட எல்லா போலீஸ் நிலையங்களிலுள்ள பொது நாள்குறிப்பேட்டிலும் இரயில்வே போலீஸ் நிலையங்களிலும் பதியப்பட வேண்டும்'' என்றெல்லாம் எழுதப்பட்டது. இவ்வாறு பல தடைகளையும் மீறி 1912 டிசம்பர் 24இல் கண்ணனூர்ச் சிறையிலிருந்து வ.உ.சி. விடுதலையானார்.

பாளையங்கோட்டைச் சிறையிலிருந்து கோவைச் சிறைக்கு வ.உ.சி.யை அழைத்துச் சென்றபோது திருநெல்வேலி இரயில் நிலையத்திலும் மணியாச்சி இரயில் சந்திப்பிலும் மக்கள் கூட்டம் திரண்டு நின்று வழியனுப்பியது. திருச்சி சந்திப்பில் மாணவர்கள் அவரைச் சந்தித்துப் பேசினர். கோயம்புத்தூர் சென்றடைந்தபோது அவரை வரவேற்கும் வகையில் பலர் கூடி நின்றனர். ஆனால், அவர் சிறையிலிருந்து விடுதலையானபொழுது அவரை வாழ்த்தி வரவேற்க யாருமில்லை. அவரது மனைவியும் நெருங்கிய உறவினர்களும் சேலம் சிறையிலிருந்து விடுதலையாகி யிருந்த சுப்பிரமணிய சிவாவும்தான் வரவேற்க வந்திருந்தார்கள்.









அவர் சிறை சென்ற காலத்தில் கொழுந்துவிட்டெரிந்த சுதேசி இயக்கம் எங்கு போனதென்றேத் தெரியவில்லை. இருண்ட சூழலில் வ.உ.சி.யின் விடுதலை எவ்விதச் சலனத்தையும் மக்களிடையே தோற்றுவிக்காததில் வியப்பில்லை.அரசியல் நெருக்கடியை விட பொருளாதார நெருக்கடி வ.உ.சி.க்கு அதிகமாக இருந்தது. குற்றவியல் (கிரிமினல்) குற்றச்சாட்டின் கீழ் தண்டிக்கப்பட்டதால் வழக்கறிஞர் பணியினைத் தொடரும் உரிமையினை அவர் இழந்திருந்தார்.

வாழ்க்கை நடத்துவதற்குப் பொருளைத் தேட அவர் மிகுந்த சிரமப்பட வேண்டியிருந்தது.

சிறையிலிருந்து விடுதலையான வ.உ.சி. கண்ணனூரில் தன் நண்பர் கணபதிப் பிள்ளையின் வீட்டில் சில நாள் தங்கியிருந்து, பின் கோவை சென்றார். கோவைச் சிறையிலிருந்தபோது தமக்கு உதவிபுரிந்த சிவகவிமணி சி.கே.சுப்பிரமணிய முதலியாருக்கு நன்றி தெரிவித்துவிட்டு கோவை அருகேயுள்ள திருப்பேரூரில் சிறிது காலம் தங்கி யிருந்தார். அப்போது அங்கிருந்த வங்கியில் அலுவலராகப் பணிபுரிந்தார். பின் அதே ஆண்டில் (1913) சென்னை சென்றார்.


## சென்னை வாழ்க்கை (1913 - 1920)


சென்னை சென்ற வ.உ.சி. அரிசி, நெய் வியாபாரம் செய்தார். ஆனால், இவையெல்லாம் அவருக்குப் போதிய வருவாயைத் தரவில்லை. சுயராஜ்ய நிதியிலிருந்து மாதம் ஐம்பது ரூபாய் திலகர் கொடுத்துதவினார். இத்தகைய வறுமை நிலையிலும் பொதுப் பணியை வ.உ.சி. நிறுத்தவில்லை.

திரு.வி.க.வுடன் இணைந்து பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம், டிராம்வே தொழிலாளர் சங்கம் ஆகிய தொழிலாளர் சங்கங்களில் பணியாற்றினார். பழமையான தொழிற்சங்கங்களில் பணியாற்றினார். பழமையான தொழிற்சங்கங்களுள் ஒன்றான தபால் ஊழியர் சங்கம் வ.உ.சி.யின் சென்னை வாழ்க்கையில் உருவானது.

1918லிருந்து சென்னை நகரில் பல்வேறு தொழிற்சங்கங்கள் தோன்றி வளர்ந்தன. திரு.வி.க., சக்கரைச் செட்டியார், சிங்காரவேலர், செல்வபதி செட்டியார், எம்.சி. ராஜா போன்றோர் தொழிலாளர் இயக்கத்தில் முன் நின்றனர். வ.உ.சி.யும் இவர்களோடு இணைந்து பணியாற்றினார்.

தென் இந்திய இரயில்வேத் தொழிலாளர் யூனியனின் சார்பில் விழுப்புரம், மதுரை, நாகப்பட்டினம் ஆகிய ஊர்களுக்குச் சென்று இரயில்வேத் தொழிலாளர்களுக்கான தொழிற்சங்கங்கள் அமைக்கும் முயற்சியில் அவர் ஈடுபட்டார்.





பின்னாட்களில் வ.உ.சி.யின் தோற்றம்

## மீண்டும் வழக்கறிஞராக:

1920ஆம் ஆண்டில் சென்னையிலிருந்து கோயம்புத்தூருக்கு வ.உ.சி. இடம் பெயர்ந்தார். இடையில் சில காலம் ஒட்டப்பிடாரம் சென்று வேளாண்மை செய்ததாகவும் தெரிகிறது. கோயம்புத்தூரிலும் தொழிற்சங்க இயக்கத்தில் பணியாற்றினார்.

1921இல் மலபார் மாப்பிள்ளை முஸ்லீம்களின் எழுச்சியை ஆதரித்து அவர் ஆற்றிய உரைக்காக அவர் மீது வழக்குத் தொடுக்கப்பட்டது. இதனால் சொந்த ஜாமீன் கொடுக்க வேண்டியதாயிற்று.

வ.உ.சி. தூத்துக்குடியில் வழக்கறிஞராகப் பணியாற்றியபொழுது வாலஸ் என்ற வெள்ளையர் நீதிபதியாகப் பணியாற்றினார். வ.உ.சி.யின் நேர்மையும் அவரது சட்ட அறிவும் விவாதத்திறனும் வாலஸை மிகவும் கவர்ந்தன. பின்னர் வாலஸ் பதவி உயர்வு பெற்று சென்னை உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்தார்.

நண்பர்களின் தூண்டுதலின்பேரில் மீண்டும் வழக்கறிஞர் தொழில் புரிய சென்னை உயர்நீதிமன்றத்தின் அனுமதி வேண்டி வ.உ.சி. விண்ணப்பித்தார்.

உயர்நீதிமன்ற நீதிபதியாயிருந்த வாலஸ் வ.உ.சி.யின் மீது கொண்டிருந்த ஈடுபாட்டினால் அவருக்கு மீண்டும் வழக்கறிஞர் தொழில் புரிய அனுமதி வழங்கினார்.

1924ஆம் ஆண்டு கோவில்பட்டியில் வழக்கறிஞர் பணியைத் தொடங்கினார். 1920ஆம் ஆண்டில் காங்கிரஸிலிருந்து வ.உ.சி. விலகினார். ஆயினும் கோவில்பட்டியில் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டிருந்தபோது காங்கிரஸ் தொண்டர்களுக்காகவும் ஏழைகளுக்காகவும் கட்டணமின்றி வாதாடினார்.

## இறுதிக் காலம்:

1932ஆம் ஆண்டில் கோவில்பட்டியிலிருந்து தூத்துக்குடிக்கு வந்தார். அதே ஆண்டில் பழம்பெரும் தொழிற்சங்கவாதியான டாக்டர் வரதராஜுலு நாயுடு, வ.உ.சி.யின் மணிவிழாவைக் கொண்டாடி அவருக்கு நிதி வழங்கத் திட்டமிட்டார். ஆனால் எதிர்பார்த்த அளவுக்கு நிதி கிடைக்கவில்லை. சிறை வாழ்க்கை வறுமை, முதுமை ஆகியனவற்றின் காரணமாக வ.உ.சி.யின் உடல் நலம் குன்றத் தொடங்கியது. எனவே, வழக்கறிஞர் தொழிலை முழுமையாக மேற்கொள்ள முடியவில்லை. வீட்டிலிருந்தவாறு தமிழ்ப் பணியில் ஈடுபட்டிருந்தார்.

1936 செப்டம்பர் முதல் நோய்வாய்ப்பட்டு கட்டிலிலேயே வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. 1936 நவம்பர் 18ஆம் நாள் புதன்கிழமையன்று வ.உ.சி. இயற்கை எய்தினார்.

❖❖❖



# சிதம்பரனார் சிந்தனைகள்

## நான் யார்?

**யா**ன் ஒரு இந்தியன். இது சிறந்த தேசாபிமானிகள் கூடியுள்ள மகாநாடு. யானும் தேசாபிமானி என்று சொல்லிப் பெருமை பாராட்டுகின்றவன். இம்மகாநாட்டிற் குழுமியுள்ளாரிற் பெரும்பாலார் பிராமணரல்லாதார். யானும் ஒரு பிராமணரல்லாதான். இந்த ஜில்லா சிறந்த ஒரு தமிழ்நாடு. யானும் சிறந்த ஓர்தமிழன். இம்மகாநாட்டில் முதன்மையாக நிற்போர் வருடக்கணக்கில் சிறைத் தீர்ப்புப் பெற்று வருடக்கணக்கில் சிறையில் வசித்தவர். யானும் ஏககாலத்தில் நடைபெறும் இரண்டு இருபது வருடங்கள் சிறைத் தீர்ப்புப் பெற்று ஒரு நாலரை வருடம் சிறையில் வசித்தவன். இம்மகாநாடு உங்கள் எல்லோராலும் மிக நேசிக்கப்பெற்றது. யானும் உங்களால் மிக நேசிக்கப்பெற்றவன். உங்களிற் பலர் உழவும், உபகாரமும் செய்கின்ற உண்மை வேளாளர். யானும் ஜாதிமாத்திரையில் ஒரு வேளாளன். உங்களிற் பலர் பலமில்லாத பிற ஜாதியாரைத் தாழ்த்துதலை இயற்கையாக கொண்டுள்ள ஜாதியாரென்று உண்மைத் தேசாபிமானிகளால் பழிக்கப்படுகின்றவர். யானும் அத்தன்மையான ஜாதியானென்று உண்மைத் தேசாபிமானிகளால் பழிக்கப்படுகின்றவன்.

## மூன்று கொள்கைகள்

கடவுள் ஞானத்திலும், தேசபக்தியிலும், மொழிப் பற்றிலும் நானும் யாருக்கும் குறைந்தவனல்லவே!

## குன்றேன்

என்மனமும் என்னுடலும் என்சுகமும் என்னறமும்
என்மனையும் என்மகவும் என்பொருளும் என்மனமும்
குன்றிடினும் யான்குன்றேன் கூற்றுவனே வந்தாலும்
வென்றிடுவேன் காலால் மிதித்து.



## அடிமை வாழ்வு

அன்னியர்க்கு அடிமையாக வாழ்வதைவிட, ஆளத்தெரியாததால் அழிந்துவிடுவதே மேல்.

## வேல் பிடிக்கக் கூடாதா?

பொதுமக்கள் யாரும் ஆயுதங்களோ தடிக்கம்புகளோ எடுத்துக்கொண்டு வெளியில் செல்லக்கூடாது என்று உத்தரவு போட்டுள்ளது பிரிட்டிஷ் அரசு. வேல் பிடித்தாண்ட வீரத்தமிழர்கள், வெறும் கோல் பிடிக்கவும் உரிமையற்றுப் போனார்களே!

இந்தியர்களே! தடிக்கம்புகளை விட்டுவிட வேண்டாம். இதையும் விட்டுவிட்டால் உங்களுடைய சந்ததிகள், பரங்கியரின் உள்ளங்கால்களை நக்க வேண்டிய நிலைமைக்கு வந்துவிடுவார்கள்.

## அவமானம்

ஆளப்பிறந்த மக்கள் அடிமையாக வாழ்வதா? பண்டம் விற்க வந்த வணிகக் கூட்டம் பாரதத்தை ஆளவதென்றால் அதை நாம் பார்த்திருப்பதா?

முப்பது கோடி மக்களை ஆறாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து வந்த ஐந்து இலட்சம் வெள்ளையர்கள் ஆள்வதென்றால் இதைவிட அவமானம் வேறு என்ன இருக்க முடியும்?

## இரண்டு கொள்கைகள்

சுதேசியத்தை வலியுறுத்துங்கள், ஆனால் அன்னியப் பொருள்களை விலக்குமாறு பேசாதீர்கள் என்று சிலர் சொல்கிறார்கள். இது சுத்தப் பிதற்றல். அன்னியப் பொருள்களை விலக்காமல் சொந்தப் பொருள்களை எவ்வாறு விருத்தி செய்வது? மெய் பேச வேண்டுமென்றால் பொய்யை விலக்க வேண்டும். நல்லொழுக்கத்தைக்

கைப்பற்ற வேண்டுமென்றால் தீயொழுக்கத்தைக் கைவிட வேண்டும். அதுபோலவே சுதேசிப் பொருள்களை வளர்க்க வேண்டுமாயின் அன்னியப் பொருள்களை பகிஷ்கரிக்கத்தான் வேண்டும்.

## சுதேசியம்

சுதேசியம் என்பது வெறும் பொருளோடு நிற்பதன்று. வாலிபத்தில் சுதேசியம், கல்வியில் சுதேசியம், ஆட்சியில் சுதேசியம். இப்படி நமது வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் சுதேசிய மணம் கமழ வேண்டுமென்பதே எனது உள்ளக்கிடக்கை.

## இரண்டு கண்கள்

மனிதனுக்கு இரண்டு கண்கள் உள. அவற்றுள் ஒன்று புறத்தும், மற்றொன்று அகத்தும் உள்ளனவாம். புறக்கண் ஏறக்குறைய எல்லா மாந்தரிடத்துமுள்ளது. அக்கண்ணோ யாவரிடத்து மிருப்பினும் அநேகரிடத்தும் திறக்கப்படாது உறங்குகிறது.

## தமிழ்ப் பல்கலைக்கழகம்

நம் தமிழ்நாடு மிகப்பரந்த நாடு. சேரன், சோழன், பாண்டியன் என்னும் மூன்று பேரரசர்களும் பல சிற்றரசர்களும் கூடி ஆண்டு வந்த பெரிய நாடு. தமிழ்நாட்டில் ஏறக்குறைய நான்கு கோடி ஜனங்கள் இருக்கிறார்கள். தமிழ்மொழி (பாஷை) மிகத்தொன்மையானது. அது மலையாளம், கன்னடம், துளுவம், தெலுங்கு முதலிய பல பாஷைகளுக்குத் தாய்ப்பாஷையாய் விளங்குவது. ஒப்புயர்வற்ற தொன்னூல் எண்ணிறந்தவற்றை உடையது. பேசுவதற்கும், எழுதுவதற்கும், பாடுவதற்கும் மிகப்பொருத்தானது. இந்நாட்டில் பாஷையும் தொழிலும் கற்கத்தக்க ஆண்மக்கள் பெண்மக்கள் சுமார் ஒரு கோடி (நூறு லெக்ஷம்) பேர்கள் இருக்கிறார்கள். இவ்வாறிருந்தும், இந்நாட்டில் இதுவரையில் தமிழ்சர்வகலா சாலை ஒன்றும் ஏற்படுத்தவில்லை.

## எனது இறை

**‘குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்**
**மடிதற்றுத் தான்முந் துறும்’**

என்றபடி எளிமை யுற்றிருக்கா நின்ற எனது நாட்டினை வலிமைப்படுத்துவேன் என்று ஊக்கும் எனக்கு எல்லாம் வல்ல இறைவன் தனது உடையை இறுக உடுத்துக்கொண்டு எனது வழிகாட்டியாக என் முன் செல்வானாக.

## தேசாபிமான ஒளி

‘தேச அரசாட்சியை மீட்பதற்காக தேச ஜனங்கள் சாத்வீக எதிர்ப்பைக் கைக்கொண்டு போராடும் காலத்தில் தேசாபிமானம்


சுதந்திரம் நம் பிறப்புரிமை வ.உ.சி
செய்தி மக்கள் தொடர்புத் துறை
பொது நூலகம்
மறைவு
18.11.1936

இல்லாது புறங்காட்டி ஓடுகின்றீரே' என்று என்னிடம் கேட்ட ஒரு பாரிஸ்டர் புன்மொழியும் 'இராஜாங்கத்தாரிடம் கைக்கூலி பெற்று தேசத் துரோகம் செய்துகொண்டிருக்கிறான் சிதம்பரம்பிள்ளை' என்று பொருள்படும்படி எழுதிய ஒரு பத்திரிகையாசிரியர் புன்மொழியும் இன்றும் என்னால் மறக்கமுடியவில்லை. தேசாபிமான ஒளி நாளுக்கு நாள் வளர்வதேயன்றிக் குறைவதும் அவிவதும் இல்லை.

## சுய அரசாட்சி

ஒருவனுக்கு நல்ல ஆண்மை என்பது, தான் பிறந்த தேசத்தின் ஆள்கையைத் தன்னது ஆக்கிக்கொள்ளுதல். சுய அரசாட்சி அடைதலே நமது நோக்கம். சுய அரசாட்சி நான்கு வகைப்படும்.

1. ஒரு தேசம், தனது மகாஜனங்களால் (தங்கள் குடியுரிமைகளைக் காக்கத்தக்கவர்களென்று) தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகளின் ஆலோசனை முடிவுப்படி அம்மகாஜனங்களால், அல்லது அப்பிரதிநிதிகளால், (தேச அரசாட்சியை நடாத்துவதற்குத் தகுதி வாய்ந்தவன் என்று) தேர்ந்தெடுக்கப்பெற்ற தலைவன் ஒருவனால் ஆளப்படுதல். ('மகாஜனங்களால்' என்பது அவர்களிற் 'பெரும்பாலார்களால்' எனவும், 'பிரதிநிதிகளின்' என்பது அவர்களிற் 'பெரும்பாலார்களின்' எனவும் பெண்பாலையும் குறிக்கும்). இவ்வரசு தன் தேசத்து அகக்காப்பு, பொருள்படும். புறக்காப்பு, முதலிய காரியங்களிலும் பிறதேசங்களை நட்பு, பகை, நொதுமல் என்னும் மூன்றில் ஒன்றாகக்கொள்ளுதல், முதலிய காரியங்களிலும் ஆண்பால் பூரண சுதந்திரமும் சுவாதீனமுமுடையது. இவ்வரசாட்சி பிரான்ஸ் தேசத்திலும், அமெரிக்கா தேசத்திலும், தற்காலம் நடைபெறுகின்ற அரசாட்சி போன்றது.

இதனைக் 'குடியாட்சி' (Republic Government) என்று கூறுவர் அறிஞர்.

2. ஒரு தேசம், தனது மகாஜனங்களால் (தங்கள் குடியுரிமைகளைக் காக்கத்தக்கவர்களென்று) தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் ஆலோசனை முடிவுப்படி தன்னை நெடுங்காலம் ஆண்டுவந்த, அல்லது ஆளவந்த, அரசன் ஒருவனால் ஆளப்படுதல். இவ்வரசும் தன் தேசத்து அகக்காப்பு, புறக்காப்பு, முதலிய காரியங்களிலும், பிறதேசங்களை நட்பு, பகை, நொதுமல் என்னும் மூன்றில் ஒன்றாகக் கொள்ளுதல், முதலிய காரியங்களிலும் பூரண சுதந்திரமும், சுவாதீனமுமுடையது. இவ்வரசாட்சி இங்கிலாந்து தேசத்திலும், ஜப்பான் தேசத்திலும் தற்காலம் நடைபெறும் அரசாட்சி போன்றது. இதனை 'கோனாட்சி' (Monarchical Government) என்பர் அறிஞர்.

3. ஒரு தேசம், தனது மகா ஜனங்களால் (தங்கள் குடியுரிமைகளைக் காக்கத் தக்கவர்களென்று) தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகள் ஆலோசனை முடிவுப்படி அம்மகாஜனங்களால், அல்லது அப்பிரதிநிதிகளால், (தேச அரசாட்சி நடத்துவதற்குத் தகுதி வாய்ந்தவனென்று) தேர்ந்தெடுக்கப்பெற்ற தலைவன் ஒருனால் ஆளப்படுதல். ஆனால் இவ்வரசு தன் தேசத்து அகக்காப்பு, புறக்காப்பு முதலிய காரியங்களில் மாத்திரம் பூரண சுதந்திரமும் சுவாதீனமும் உடையது. பிறதேசங்களை நட்பாகவோ, பகையாகவோ, நொதுமலாகவோ கொள்ளுதல், முதலிய காரியங்களில் மேற்கூறிய அரசுகளின் முதலாவது வகை அரசைச்சார்ந்து, அதன் ஆணைப்படி நடக்கக் கட்டுப்பட்டது. இவ்வகையான அரசாட்சி தற்காலம்

எந்த தேசத்திலாவது நடைபெறுவதாகத் தெரியவில்லை. இதனைச் ‘சார்ந்த குடியாட்சி’ (Dependent Republican Government) என்பர் அறிஞர்.

4. ஒரு தேசம், தனது மகாஜனங்களால் (தங்கள் குடியுரிமைகளைக் காக்கத் தக்கவர்களென்று) தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகளின் ஆலோசனை முடிவுப்படி அத்தேசத்தை நெடுங்காலம் ஆண்டுவந்த, அல்லது ஆளவந்த, அரசன் ஒருவனால் ஆளப்படுதல். ஆனால் இவ்வரசு தன் தேசத்து அகக்காப்பு, புறக்காப்பு முதலிய காரியங்களில் மாத்திரம் பூரண சுதந்திரமும், சுவாதீனமுடையது. பிற தேசங்களை நட்பாகவோ, பகையாகவோ, நொதுமலாகவோ கொள்ளுதல், முதலிய காரியங்களில் மேற்கூறிய மூவகை அரசுகளில் இரண்டாவது வகை அரசைச் சார்ந்து அதன் ஆணைப்படி நடக்கக் கட்டுப்பட்டது. இவ்வரசாட்சி ஆஸ்திரேலியா தேசத்திலும், கனடா தேசத்திலும், தென் ஆப்பிரிக்கத் தேசத்திலும் தற்காலம் நடைபெறும் அரசாட்சி போன்றது. இதனைச் ‘சார்ந்த கோனாட்சி’ (Dependent Monarchical Government) என்பர் அறிஞர். முந்திய அரசு இரண்டும் ‘பேரரசு’ எனவும், பிந்திய அரசு இரண்டும் ‘சிற்றரசு’ எனவும் வழங்கப்படும்.

நாம் அடைய விரும்பும் சுய அரசாட்சி மேலே நான்காவது வகையாகக் கூறப்பட்ட சுய அரசாட்சியே.

## ஒத்துழைத்து ஒத்துழையாமை

நமது கிழவர்கள் ‘ஒத்துழைத்தல்’ (Co-Operation) என்கின்றனர். நமது தற்காலத் தலைவர்கள் ‘ஒத்துழையாமை’ (Non-Co-Operation) என்கின்றனர். நாம் மூன்றாகத் ‘ஒத்துழைத்தலும் ஒத்துழையாமையும்’ (Responsive Co-Operation) என்கின்றோம். இவை சொல் மாத்திரையில் தோன்றுகின்றனவேயல்லாமல், உண்மையில் ஒன்றேயாம். இம்மூன்றும் இரப்புத்தான்; ஆனால் சொல்லாலும் செயலாலும் வேறாகத் தோன்றுகின்ற இரப்பு, ‘ஒத்துழைத்தல்’ என்பது நாம் அடைய விரும்பும் நமது உரிமைகளில் எதையேனும் நம் இராஜங்கத்தார் நமக்குத் தந்தாலும், தர மறுத்தாலும் நாம் அவர்க்கு வந்தனம் (Thanks) கூறி நமது தேச நிர்வாக விஷயத்தில் அவரோடு உடம்பட்டு உழைத்தல்.

‘ஒத்துழையாமை என்பது நாம் அடைய விரும்பும் நமது உரிமைகள் அனைத்தையும் ஒருங்கு நம் இராஜாங்கத்தார் நமக்குத் தரும் வரையில் நாம் அவரோடு நமது தேச நிர்வாக விஷயத்தில் உடம்படாது மாறுபட்டு இருத்தல். ‘ஒத்துழைத்தலும் ஒத்துழையாமையும்’ என்பது, நாம் அடைய விரும்பும் நமது உரிமைகளில் எதையேனும் நம் இராஜாங்கத்தார் நமக்குத் தருவதாயிருந்தால், அதற்காக நாம் அவர்க்கு வந்தனம் (Thanks) கூறி அவரோடு உடம்பட்டு உழைத்தலும், எதையேனும் அவர் நமக்குத் தர மறுப்பாராயின் அது விஷயத்தில் நாம் அவரோடு உடம்படாது மாறுபட்டிருத்தலுமாம்.

## மதத்தவர் ஒற்றுமை

நம் தேசத்தார்களில் ஒவ்வொருவரும்தத்தம் மதக்கோட்பாடுகளும் ஜாதிக் கோட்பாடுகளும் பிறர் மதக் கோட்பாடுகளையும் ஜாதிக் கோட்பாடுகளையும், பாதிக்காதவாறு திருத்திக்கொள்ளுதல் வேண்டும். ஹிந்து மதமும் முகம்மதிய மதமும் முரண்படுகிற கோட்பாடுகளில் முக்கியமானவை இரண்டு. அவையாவன: (1) முகம்மதியர் பக்ரீத் முதலிய பண்டிகைகளில் ஹிந்துக்கள் பார்த்து மனம் வருந்தும்படியாகப் பசுக்களைக் கொல்லுதல். (2) பள்ளி வாசல்களில் தொழுது கொண்டிருக்கிற முகம்மதியருடைய மனம் கலையும்படியான விதத்தில் ஹிந்துக்களுடைய ஊர்கோலங்களை மேளவாத்தியங்களுடன் பள்ளிவாசல்களில் பக்கத்து வீதிவழியாகக் கொண்டுபோதல், பூரண தேசாபிமானமுடைய இரு மதத்தலைவர்களும் ஒன்றுகூடி ‘கொடுத்து வாங்கல்’ (Give and take) என்னும் கொள்கையை உபயோகப்படுத்தி இம்முரண்பாட்டுக் கோட்பாடுகளைத் திருத்திக்கொள்ளுதல் நமது ஒற்றுமைக்கு முதல் வழியாகும்.



## ஜாதியார் ஒற்றுமை

ஹிந்துக்களுள் ‘உயர்ந்த ஜாதியார்’ என்னப்படுவோரும் ‘தாழ்ந்த ஜாதியார்’ என்னப்படுவோரும் முரண்படுகிற கோட்பாடுகளில் முக்கியமானவை இரண்டு. அவையாவன: (1) ‘உயர்ந்த ஜாதியார்’ என்னப்படுவோர் தம்மைப் பன்றி முதலிய அசுத்தப் பிராணிகள் நெருங்கும் அளவுகூடத் ‘தாழ்ந்த ஜாதியார்’ என்னப்படுவோர் நெருங்கவிடாமை.

(2) தாழ்ந்த ஜாதியார் என்னப்படுவோர் உயர்ந்த ஜாதியார் என்னப்படுவோருடன் சமபந்தி போஜனம் செய்ய விரும்புதல். பூரண மனித அறிவையுடைய இவ்விருவகை ஜாதித் தலைவர்கள் சிலர் ஒன்றுகூடிக் ‘கொடுத்து வாங்கல்’ என்னும் கொள்கையை உபயோகப்படுத்தி இம்முரண்பாட்டுக் கோட்பாடுகளைத் திருத்திக்கொள்ளுதல் நமது ஒற்றுமைக்கு இரண்டாவது வழியாகும். ‘உயர்ந்த ஜாதியார்’ என்னப்படுவோர் ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’, ‘நல்ல குலமென்றும் தீய குலமென்றும் சொல்லளவல்லாற் பொருளில்லை’ என்னும் முன்னோர் மொழிகளையும், ‘தாழ்ந்த ஜாதியார்’ என்னப்படுவோர் ‘மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்; கீழிருந்தும் கீழல்லார் கீழல்லவர்’ என்னும் முன்னோர் மொழியையும் உட்கொண்டு சமாதானம் ஆவதற்கு முயற்சிப்பார்களாக.

## பொதுவுடைமையும் தனியுடைமையும்

இந்தியர்களுக்கெல்லாம் ‘பொதுஉடைமைகள்’ இன்னின்னவை என்றும், இந்தியன் ஒவ்வொருவனுக்கும் ‘தனியுடைமைகள்’

இன்னின்னவை என்றும், நாம் எல்லோரும் அறிந்துகொள்ளுதல் வேண்டும். பொது உடைமைகளில் இந்தியர்கள் எல்லார்க்கும் சமவுரிமை உண்டு. தனியுடைமைகளில் அவற்றின் சொந்தக்காரருக்கு மாத்திரம் தனியுரிமை உண்டு. கல்வி, ஒழுக்கம், கடவுள் வழிபாடு, ஆற்றுநீர், ஏரிநீர், பெரும்பாட்டை, பொதுக் கூட்டுறவு, காட்டில் வாழும் உயிர்கள், இராஜாங்க உத்தியோகங்கள் முதலியன பொது உடைமைகள். ஒருவனுடைய செல்வம், குளத்து நீர், கிணற்று நீர், நடைபாதை, வீடு, வீட்டில் வாழும் உயிர்கள், சொந்த வேலைகள் முதலியன தனி உடைமைகள். பொது உடைமைகளில் யாவர்க்கும் சம உரிமையுண்டா தலால், அவற்றை ஒருவன் அனுபவித்தலை மற்றொருவன் தடுக்கலாகாது. தனியுடைமைகளில் அவற்றின் சொந்தக்காரருக்கு மாத்திரம் தனியுரிமை யுண்டாதலால், அவற்றை அவர் தவிர வேறொருவன் அநுபவிக்க முற்படலாகாது.



## பிறப்பால் வேற்றுமை

இப்பொழுது நமது தேசத்தில் பிறப்பை ஆதாரமாகக்கொண்டு நிலவும் அநீதியான ஜாதி வேற்றுமை ஒழிக்கப்பட வேண்டுவது அவசியம்தான். அது விரைவில் ஒழியுமா? என்பது ஒரு வினா. அது ஒழிந்தபின் அதற்குப் பதிலாக வேறொன்றை ஆதாரமாகக்கொண்டு ஜாதி வேற்றுமைகள் உண்டாகவா? என்பது மற்றொரு வினா.

நம் தேசத்தின் சில ஜாதியார்களுள் உண்டாயிருக்கிற ஒற்றுமையின்மைக்கும் பகைமைக்கும் முக்கிய காரணம் பிறப்பை ஆதாரமாகக்கொண்டுள்ள அநீதியான ஜாதி வேற்றுமையும் உயர்வு தாழ்வும் மாத்திரம் அல்ல; பொதுவுடைமைகளில் சிலர் மற்றவர்களுக்குரிய சமவுரிமையைக் கொடுக்க மறுத்தலும், தனியுடைமைகளில் அவற்றின் சொந்தக்காரர் அல்லாத சிலர் சமஉரிமை கொண்டாட முற்படுதலுமாம் என்பது தெளிவாக விளங்கும்.

## நீதிக்கட்சி

'தென்இந்தியா நலவுரிமை சங்கத்தார்' சென்ற பல வருஷங்களாக வேண்டுகின்ற வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் நமது பொதுவுடைமைகளில் முக்கியமான சிலவற்றை விளக்கிக்காட்டி நமக்குள் ஏற்பட்டுள்ள ஒற்றுமையின்மையையும் பகைமையையும் குறைக்க வல்லது.

## வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்

இராஜாங்க உத்தியோகங்களையும், சட்டசபை, ஜில்லா நிர்வாக சபை (District Board) முதலிய ஸ்தலஸ்தாபன உத்தியோகங்களையும் காங்கிரஸ் மகாசபை அதன் கிளைச்சபை முதலிய பொதுஸ்தாபன

உத்தியோகங்களையும் நம் தேசத்திலுள்ள ஒவ்வொரு ஜாதியாரும் அவரவர் ஜாதியாரின் எண்ணிக்கை விகிதப்படி பகிர்ந்து பற்றிக்கொள்ளுதலே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்.

## உயர்வு தாழ்வு இருக்கும்

உலகத்திலும் அதன் ஒருபாகமாகிய நம் தேசத்திலும், சரியான ஒன்றையோ, தப்பான ஒன்றையோ ஆதாரமாகக்கொண்டு ஜாதி வேற்றுமைகளும், அவற்றைப் பற்றிய உயர்வு தாழ்வுகளும், எக்காலத்திலும் நிகழ்ந்துகொண்டுதானிருக்கும். அவற்றை ஒழிக்க வேண்டுமென்று சொல்லுதலும், அவற்றை ஒழிப்பதற்கு 'வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம்' தடையென்று சொல்லுதலும் ஆழ்ந்து ஆலோசியாமல் மேலெழுந்த வாரியாகச் சொல்லுதலாம்.

## ஒற்றுமை ஏற்பட

நம் தேசத்தாருள் ஒற்றுமை ஏற்படுவதற்கு நமது இராஜாங்க உத்தியோகங்களிலும், ஸ்தல ஸ்தாபன உத்தியோகங்களிலும், பொது ஸ்தாபன உத்தியோகங்களிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் நிலவும்படி செய்தலே உண்மைத் தேசாபிமானி ஒவ்வொவருடைய கடமையுமாகும்.

## திலகர் வழி

கல்வி, அறிவு, தேசாபிமானம், இராஜீய ஞானம் முதலியவை நிறைந்துவிளங்கிய ஸ்ரீதிலகர், நம் தேச அரசாட்சி சம்பந்தமான சகல உத்தியோகங்களையும் நம் தேசத்தார்கள். அடைதலே நாம் சுய அரசாட்சி அடைதலாகுமென்று அவர் ஆயுள்காலமெல்லாம் கூறிவந்தார். இராஜீய விஷயங்களில் அவரைப் பின்பற்றுகிற யானும் அதனையே கூறுகின்றேன்.

## பிராமணரல்லாதார்

'பிராமணரல்லாதார்' என்னும்போது முகமதியர்கள், இந்தியக் கிறிஸ்தவர்கள், தாழ்த்தப்பட்ட ஹிந்துக்கள், தாழ்த்துக்கின்ற ஹிந்துக்கள் என்னும் நான்கு வகுப்பினர்களையும்தான் நான் குறிக்கின்றேன்.

பிராமணர்களுக்கும் பிராமணரல்லாதார்களுக்கும் ஏற்பட்டுள்ள ஒற்றுமையின்மையும், பகைமையும் வளர்ந்து இப்போது துண்டுபட்டுப் போகும்படியான நிலைமை (Breaking point) க்கு வந்துவிட்டது. உண்மைத் தேசாபிமானிகள் இப்போது விரைந்து முன்வத்து பிராமணர்களுக்கும் பிராமணரல்லாதார்களுக்கும் ஏற்பட்டுள்ள, ஒற்றுமையின்மைக்கும் பகைமைக்குமுரிய உண்மைக் காரணங்களைக் கண்டுபிடித்து ஒழிக்காத விஷயத்தில், நாம் சுய அரசாட்சி என்ற பேச்சையும் கூட விட்டுவிடும்படியான நிலைமை வெகுவிரைவில் ஏற்பட்டுவிடுமென்று யான் அஞ்சுகிறேன்.

## அனைவருக்கும் சமமான இடங்கள்

இராஜாங்க உத்தியோகங்களும், ஸ்தலஸ்தாபன உத்தியோகங்களும், பொதுஸ்தாபன உத்தியோகங்களும், தம் தேசத்திலுள்ள ஒவ்வொரு ஜாதியாருக்கும் அந்தந்த ஜாதியாரின் எண்ணிக்கை விகிதப்படி பகிர்ந்து கொடுக்கப்பட்டாலன்றி, நம் தேசத்தாருள் ஒற்றுமை உண்டாகப்போவதேயில்லையென்பதும், உண்டாகாமல் நாம் சுய அரசாட்சி நமக்குள் அடையம் ஒற்றுமை போவதே இல்லையென்பதும் மனித அறிவுடைய எவர்க்கும் தெளிவாக விளங்கத்தக்கவை.

இவ்வுண்மையை மாறாக பேசுகின்றவர் யாவராயினும் மனித அறிவில்லாதவர், அல்லது 'பகலை இரவென்று கூறும் பாதகர்' என்று நாம் கொள்ளக் கடவோம்.

## எண்ணிக்கைக்கு ஏற்றவாறு

இராஜாங்க உத்தியோகங்கள் முதலியவற்றில், தாழ்த்தப்பட்டிருக்கிற ஜாதியார்களின் எண்ணிக்கைவிகிதப்படி அவர்கள் அடைய வேண்டிய உத்தியோகங்களை அவர்களும், தாழ்த்துகின்ற ஜாதியார்களின் எண்ணிக்கை விகிதப்படி அவர்கள் அடைய வேண்டிய உத்தியோகங்களை அவர்களும், இந்தியக் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை விகிதப்படி அவர்கள் அடைய வேண்டிய உத்தியோகங்களை அவர்களும், முகமதியர்களின் எண்ணிக்கை விகிதப்படி அவர்கள் அடைய வேண்டிய உத்தியோகங்களை அவர்களும் அடையும்படி நாம் ஏற்பாடு செய்யவேண்டும்.

## இரண்டு காரணங்கள்

இந்தியர் தமது தேசத்துக்குச் சுயஅரசாட்சி வேண்டுமென்று விரும்பியதற்கு முக்கிய காரணங்கள் இரண்டு. ஒன்று தேசத்தார்களிற் பெரும்பாலார் வறுமையால் வாடுதல். மற்றொன்று தேச நீதிபதிகளிற் சிலர் செய்யும் கொடுஞ் செயல்கள்.

## தமிழ் மருத்துவம்

தமிழ்நாட்டிலுள்ள சில நகரங்களிலும், பல கிராமங்களிலும் வேண்டிய அளவு வைத்திய உதவிகள் கிடையாமல் ஜனங்கள் படும்பாடு பெரும்பாடாயிருக்கிறது. எனது நீண்ட கால அனுபவத்தில் தமிழ்நாட்டின் சீதோஷ்ண நிலைக்கும், தமிழ் நாட்டினரின் சரீர இயற்கைக்கும் பொருத்தமான வைத்தியம் தமிழ்ச்சித்த வைத்தியமே என்று யான் கண்டுள்ளேன்.

## பக்தி

பக்தி என்பதற்கு அன்பு, விசுவாசம் என்று பொருள்படும்.

## மனம்

மனமே மற்றக் காரணங்களுக்கெல்லாம் பிரதானமாயிருக்கின்றது.

## ஈதல்

ஈதலினால் மனமானது விரிந்து சுயநலம் பாராட்டுந்தன்மை இழக்கப்படுமென்றன்றோ? சுயநலம் எம் மட்டுப்பட்டிருக்கின்றதோ அம் மட்டும் 'நான்', 'எனது' என்னும் பேய்விட்டொழிதலின்று.

## கடவுள் ஒருவரே



கடவுள் சர்வஞ்ஞரென்றும், சர்வவியாபகரென்றும், நித்தியரென்றும், ஏகரென்றும் சர்வமதநூல்களும் ஒரேதன்மையாகச் சொல்லுகின்றன. கிறிஸ்தவனை அல்லது ஒரு மகமதியனை, ஒரு பார்ஸியனை அல்லது ஒரு ஹிந்துவை அல்லது வேறெந்த மதத்தையாவது அனுசரிக்குமொருவனைப்பார்த்து அவனுடைய கடவுள் எத்தன்மையரெனக் கேட்போமாயின் ஒவ்வொருவனும், மேற்சொல்லிய குணங்களையுடையவரென்றே தன்தன் மதநூல்களின் வாக்கியங்களை எடுத்துக் காட்டுவன்.

ஏசுவினுடைய விக்கிரகத்தின்முன் தூபதீபங்களையேற்றி அவரை வணங்கும் கத்தோலிக் சுவாமியாரும் கடவுள். இந்தத் தன்மைகளையுடையவரென்றே சொல்லுவர், விக்கிரகத்திற் கடவுளில்லையெனச் சொல்லும் பிராட்டஸ்டண்டு பாதிரியாரும் கடவுள் இந்தக் குணங்களை யுடையவரென்றே சொல்லுவர்.

இவ்வாறு சகல மதஸ்தரின் கடவுளும் ஒரே தன்மைகளையுடையவராய் அதாவது ஒருவராகவே இருக்க, அவரெல்லோரும் அறியாமையினாலும், உபக்தியினாலும், பிடிவாதத்தினாலும், மதோன்மத்தத்தனாலும் தமது கண்கள் மறைக்கப்பட்டிருத்தலின், ஒருவருக்கொருவர் 'எமது கடவுள்' 'நுமது கடவுள்' எனச் சண்டையிட்டலறுகின்றனர். ஒவ்வொரு மதஸ்தரும் ஒரே கடவுளைத்தான் வணங்குகிறாரென அவர் அறிகின்றிலர்.



## சுதேசாபிமானம்

சுதேசாபிமானம் என்னும் தொடர்மொழியானது சொந்த தேசத்தின் மீது அன்புடைமை எனப் பொருள்படும். சுதேசாபிமானமில்லாத மாந்தர் உலகினில் ஒருவருமேயிலர். இது ஒவ்வொருவருடைய மனத்திலும் உண்டென்பது உண்மையாயினும் சமயம் வாய்ந்துழி அதனை வெளிப்படுத்தி அதற்குரிய செயலைச் செய்ய வேண்டும்.



## இந்தியத் தடைகள்

சுதேசத்தார் ஒன்று சேர்வதற்கும் ஒற்றுமையாக விருப்பதற்கும் முக்கிய தடைகள் ஜாதியபிமானம் மதாபி வனங்களே. உலகத்தில் தாழ்ந்த நிலைமையையடைந்த ஒவ்வொரு தேசத்தின் சரித்திரத்தையும் கவனிப்போமாயின் சுதேசத்தாருக்குள் ஜாதிபேதம் மதபேதம் ஏற்பட்டுச் சுதேச ஒற்றுமையையும் பேதப்படுத்தி சுதேச நிலைமையையும் பேதப்படுத்தினதாகத் தெரியவரும். தேசத்தாரெல்லோர்க்கும் பொதுவாயதோர் நன்மையைப் பயக்கும் செயல்களைச் செய்யவேண்டுங்கால் சுதேசத்தார் ஒவ்வொருவரும் அவரவர்க்குள் நிகழாநிற்கும் சொந்த வேற்றுமைகளைப் பாராட்டல் கூடாது.

## ஜாதி, மதம் உருவானது எப்படி?

ஜாதி என்பது தொழில் பற்றியே ஏற்படுத்தப்பட்டதென நூல்களெல்லாம் கூறுகின்றன. ஒவ்வொரு ஜாதிப் பெயரின் பொருளை உற்று நோக்குவோமாயின் ஜாதிகளெல்லாம் தொழில் பற்றியே உண்டானவையென்பது நன்கு விளங்கும். இனி ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு காலத்தில் தோன்றிய ஒவ்வொரு பெரியவருடைய அறிவு விளக்கமேயன்றி வேறன்று.

## நாமே நடத்த வேண்டும்

நம் சுதேசம் க்ஷேமத்தையடைந்து முன்னாளின் மேலான நிலைமைக்கு வருவதற்கு சகல தொழில்களிலும் வியாபாரங்களிலும், மிக்க லாபத்தைக் கொடுப்பதான கப்பல்கள் நடத்தும் தொழிலை நாம் கைக் கொள்வதே முக்கிய சாதனம் ஆகும்.

## அந்நியர் கைப்பற்ற என்ன காரணம்?

நமது சுதேசத்தை அந்நிய நாட்டார் கைப்பற்றிக்கொண்டதற் கேதுவாயிருந்ததும் நம் சுதேசத்துப் பொருள்களையெல்லாம், அந்நிய நாட்டார் கொண்டுபோவதற்கேதுவாயிருந்ததும் நமக்கு மிக்க லாபத்தைத் தரக்கூடியத் தொழிலில் வியாபாரங்களையெல்லாம்

அந்நிய நாடுளுக்குக் கொண்டுபோவதற்கே துவாயிருந்ததும் அந்நிய நாட்டர் நம்தேசத்தின் மீது பிரவேசித்து நாம் கைக்கொண்டிருந்த கப்பல் தொழிலை நம்மிடத்து கைப்பற்றிக்கொண்ட தொன்றே.

## மனிதன்

மனிதனே அனைத்திலும் சிறந்தவன். அத்தகைய மனிதனுக்கு முதலில் தேவையானது தன்னை அறியும் அறிவே.

## தமிழ்

தமிழ் என்பது நாவிற்கும் செவிக்கும் உள்ளத்திற்கும் இனிமை பயக்கும் ஒரு மொழி.

## திருக்குறளில் இடைச்செருகல்

இக்காலத்து வழங்கும் திருவள்ளுவர் திருக்குறட் சுவடிகளிலெல்லாம் 'கடவுள் வாழ்த்து', 'வான்சிறப்பு', 'நீத்தார் பெருமை', 'அறன் வலியுறுத்தல்' என்னும் நான்கு அதிகாரங்களும் பாயிரமாகக் காணப்படுகின்றன. 'கடவுள் வாழ்த்து' முதலிய மூன்று அதிகாரங்களும் 'உரைகோளாளன்' முதலியோர்களால் கூறப்பெற்ற சிறப்புப் பாயிரம். அறன் வலியுறுத்தல் என்னும் அதிகாரம் ஒன்றே வள்ளுவரால் கூறப்பெற்ற பொதுப் பாயிரம்.

சென்னை அரசாங்கக் கீழ்நாட்டுப் (Oriental) புத்தகசாலையிலுள்ள மிக மிகப் பழையதான திருக்குறள் கையெழுத்துப் பிரதியொன்றில் இப்பொழுது பாயிரத்தின் முதல் அதிகாரமாக நிற்பதும், பலரால் ஒப்புயர்வற்ற பாக்களையுடையதெனப் போற்றப்படுவதுமான 'கடவுள் வாழ்த்து' என்னும் அதிகாரத்தின் முடிவில் சிறப்புப் பாயிரம் முற்றிற்று' என்பது எழுதப்பட்டுள்ளது. அச்சொற்கள் 'கடவுள் வாழ்த்து' என்னும் அதிகாரம் வள்ளுவர் கூறிய பாயிரத்தில் சேர்ந்தது என்பதைக் காட்டுகின்றன.

## பொய்க்கதை

ஆதியென்னும் புலைச்சிக்கும் பகவன் என்னும் அந்தணனுக்கும் பிறந்தவர் திருவள்ளுவர் என்பது பொய்க்கதையே.

## சிவஞானபோதம்

சைவ சித்தாந்தத்திற்குத் தலையாய நூல் சிவஞானபோதம் என்பது, சைவ சித்தாதிகளுக்கெல்லாம் ஒப்பமுடிந்ததொன்று.

## திருக்குறள்

சீரெல்லாம் நிறைந்து விளங்கும் செந்தமிழ் நூல்களில் சிறந்தது திருக்குறள் என்று வழங்கும் வள்ளுவர் நூல்.

## சிறந்த நூல்கள்

திருவள்ளுவர் திருக்குறள், சிவஞான போதம், கைவல்லிய நவநீதம் என்னும் நூல்கள் முறையே நீதி நூல்களிலும், சித்தாந்த நூல்களிலும் வேதாந்த நூல்களிலும் ஒப்புயர்வற்றவையென்பது எனது அபிப்பிராயம்.

## வேற்றுமை கோட்பாடுகள் வேண்டா:

சிவஞான போத இவ்வுரையில் ஏனைய உரைகளிற் காணப்படும் பல மதக்கோட்பாடுகளும், அவற்றின் கண்டனங்களும் காணப்படா. அவை காணப்படாமைக்குக் காரணம் மக்கள் பலவேறு பெயர்களோடும், வடிவுகளோடும் காணப்படினும் அவர்களெல்லாம் மக்கட் சாதியினரேயாவது போல, மதங்கள் பலவேறு பெயர்களோடும் கொள்கைகளோடும் காணப்படினும் அவைகளெல்லாம் ஒப்புயர்வற்ற ஒரே இறைவனைப் பற்றியே பேசுகின்றன என்று யான் கருதுகின்றமையும், மத வேற்றுமையைக் காண்பவர்களும், பேசுபவர்களும் என்னும் மத வெறிபிடித்த மாக்களேயென்றும், நமது நாடு தற்காலம் இருக்கிற ஒற்றுமையற்ற நிலைமையில் மத வேற்றுமைகளையோ, சாதி வேற்றுமைகளையோ, வேறு வேற்றுமைகளையோ காண்பவர்களும், பேசுபவர்களும் தேசத்திற்குத் தீங்கிழைப்பவர்களேயென்றும் யான் கருதுகின்றேன். அதனாலும், இவ்வுரையில் யான் பல மதக் கோட்பாடுகளையும், அவற்றின் பொய்யான உயர்வு தாழ்வுகளையும் பற்றி ஒன்றும் பேசவில்லை.

## சிலச்சில

பூவுலகின் கண் தோன்றி நிலவுகின்ற மொழிகள் பல. அவற்றுள் நம் தமிழ் மொழியில் ஆக்கப்பட்ட நூல்கள் எண்ணில. அவற்றில் அழிந்து போனவை பல. அழியாது நிற்பவை சில. அச்சிலவற்றில் சிறந்தவை மிகச்சில. சாலச்சிறந்தவை மிகமிகச் சில.

## அது போதும்

மக்கள் ஒன்று சேர்ந்தால் வெள்ளையரை விரட்டிவிடலாம். நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்துவிட்டோம் என்று தெரிந்தால் போதும் அவர்களே போய்விடுவார்கள்.

## பயம் வேண்டாம்

இந்தியாவில் 50 ஆயிரம் பிரிட்டிஷார் தான் இருக்கிறார்கள். கட்டாயத்தின் பேரில் அவர்களை வெளியேற்றுவது எளிது தான். ஆனால் இந்தியர்கள் பலாத்காரம் செய்ய வேண்டாம். அதேநேரத்தில் பயப்படவும் வேண்டாம்.

## தானாக போய்விடுவார்கள்

இந்தியர்கள் தாங்கள் தீர்மானித்தபடி அன்னிய நாட்டுத்துணி, சர்க்கரை, எனாமல் பாத்திரம் முதலிய பொருள்களை வாங்காமல் புறக்கணித்தால் ஆங்கிலேயர்கள் தாங்களாகவே இந்தியாவை விட்டுப் போய்விடுவார்கள்.



## தொழில்கல்வி

நமது கலாசாலையில் தொழில் கல்வி கற்பிக்க வேண்டும். பொருளில்லாமல் ஒரு வேலையும் செய்ய முடியாது. அதற்கு தொழிற்கல்வியும் விவசாயமும் கற்பிக்க வேண்டியது அவசியமாகும்.

## பெண்கள் நிலை

நம் நாட்டில் பெண்மக்களைச் சமைக்கும் இயந்திரமாகச் செய்துவிட்டனர். பிள்ளை பெறும் இயந்திரமாகச் செய்துவிட்டோம். நம்மைப்போல் பெண்கட்கும் சம உரிமை இருத்தல் வேண்டும். எல்லா விஷயங்களிலும் அவர்களை ஆலோசித்துச் செய்தல் அவசியமாகும். ஆனால் அவர்கள் அதற்குத் தகுதியுடையவர்களா என்று பார்க்கின் இல்லை. ஏன்? அவர்களுக்கு கல்வி இல்லாமையே. எனவே பெண்களுக்குக் கல்வி கற்பிக்க வேண்டியது அவசியமாகும்.

## எச்சில் இலை

கணவன் சாப்பிட்ட எச்சில் இலையில் மனைவி சாப்பிடும் பழக்கம் இருக்கிறது. எனக்குக் கல்யாணம் ஆனது முதல் எச்சில் இலையில் உண்ணக்கூடாது என்று என் மனைவிக்கு உத்தரவு போட்டுவிட்டேன்.

## தனித்தமிழ்

யான் தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஒரு சிலவே கற்றுள்ளேன். அவ்வாறிருந்தும் யான் அறிந்துள்ள எந்த மொழியையும் நம் தமிழ் மக்களில் எவரும் எளிதில் அறியுமாறு (சமஸ்கிருத சொற்களின் கலப்பேயில்லாத) தனித்தமிழில் மொழிபெயர்த்துக் கொடுக்கத்தக்க திறமையையுடையேனென்றால், எனும் அதிகமாகத் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுள்ளவர்கள் அவ்வாறு செய்யத்தக்க திறமையையுடையவர்களாயிருப்பார்களென்பதை நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

## கடவுள்

திருவள்ளுவர் ஓர் கவி. ஒப்பற்ற அறிஞர். நானும் அவரைக் கடவுள் என்றே போற்றுகிறேன்.

## குறளின் பொருளறிக

தமிழர்களெல்லோரும் வள்ளுவர் குறளை உரையுடன் அறிந்து பாராயணம் செய்தல் வேண்டும். 1330 குறளையும் பொருளுடன் உணர்ந்திலாத தமிழர் முற்றுந்துறந்த முனிவரேயாயினும், என்னைப் பெற்ற தந்தையேயாயினும் யான் பெற்ற மக்களேயாயினும் யான் அவரைப் பூர்த்தியாக மதிப்பதுமில்லை, நேசிப்பதுமில்லை.

## என் குரு

லோகமானிய பால கங்காதர திலகர் என் அரசியல் குரு ஆவார். எனது 21ஆம் வயதிலிருந்து, அதாவது 1893இலிருந்து, அரசியலைப் பற்றிய அவருடைய பேச்சுக்களையும் எழுத்துக்களையும் நான் உன்னிப்பாகக் கவனித்து வந்தேன். இந்தியா எனது நாடு, அநியாயமான வகையில் பிரிட்டிஷார் தம் வசம் நம் நாட்டை வைத்துள்ளனர், நம் நாட்டை அவர்களிடமிருந்து திரும்பப் பெற வேண்டும் என்று அவை எனக்கு உணர்த்தின.



**தெய்வப் பேரவையினருடன் கை கூப்பி அமர்ந்திருப்பவர் வ.உ.சி.**

## ஆங்கிலக் கல்வி

ஆங்கிலம் கல்வியானது, கால அளவில், ஆங்கிலேயரின் நடை உடை பாவனைகளைக் கொண்ட இந்தியர்களாகிய ஒரு பெரிய வகுப்பினரை உண்டுபண்ணிவிட்டது. மேல்நாட்டுக் கல்வியை உட்கொண்டும், மேல்நாட்டு சமுதாய இராஜீய ஞானிகளுடைய பிதற்றல்களெல்லாம் உலகம் முழுவதற்கும் பொருந்தத்தக்க உண்மைகளென்று நம்பியும், அவர்கள் மேல்நாட்டுப் பழக்கவழக்கங்களைக் கைக்கொள்ளவும், மேல்நாட்டார் கொள்கைகளை இந்தியர் வாழ்க்கையில் புகுத்தவும் தொடங்கினர். இந்தியர் சமூகம் தீமைகளடங்கிய ஒரு நரகத்தில் அமிழ்ந்திருக்கிறதென்றும், அடியோடு கெட்டு அழுகிப்போயிருக்கிறதென்றும், நாகரீகத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அச்சமூகக் கட்டை அழித்து மாற்றிக் கட்ட வேண்டுமென்றும் அவர்கள் கூச்சலிட்டார்கள். ஜாதியென்னும் பெரும் பலதலைப் பாம்பைக் கொன்றுவிடவேண்டுமென்றும், பாலிய விவாகங்களை ஒழித்துச் சிகைஷக்குட்படுத்த வேண்டுமென்றும், ருதுபின் விவாகங்களையும், விதவா விவாகங்களையும், கலப்புவிவாகங்களையும் அனுமதிப்பதுடன் நடத்திக்காட்ட வேண்டுமென்றும், பெண்களை எல்லா விஷயங்களிலும் முக்கியமாகக் கல்வி விஷயத்தில் – ஆண்களோடு சமமாக வைத்து நடத்த வேண்டுமென்றும் அவர்கள் சொன்னார்கள். இந்தச் சுயமக்கப் பித்தலாட்டக்காரர்களின் இரவல் சுவிசேஷங்கள் திலகருக்குப் பிடிக்கவில்லை.

## மடிவேன்

நான் பம்பாயிலிருந்து தமிழகம் திரும்பும்போது கப்பலுடன் திரும்புவேன். இல்லையென்றால், அங்கேயே வங்கக் கடலில் விழுந்து மடிவேன்.

## இறுதி ஏக்கம்

நான் மரணத்தைக் கண்டு சற்றும் அஞ்சவில்லை. ஆனால் சாவதற்கு முன்னர் சுதந்திரத்தைக் காண கொடுத்துவைக்கவில்லையே என்பதுதான் எனது வருத்தம்.

## குற்றமா?

தாய்நாடு வாழ்க என்று கோஷிப்பது குற்றமா? எங்கள் வாணிபம் வளர, வளம் பெருக கப்பல் ஓட்டுவது குற்றமா?

## மாறாது


சதையைத் துண்டு துண்டாக வெட்டி எடுத்து வேதனைப்படுத்தினாலும் எங்கள் முடிவு மாறாது. இதயத்தே வளரும் சுதந்திரப்பற்றும் குறையாது. இது திண்ணம்.

## வந்தே மாதரம்

வந்தே மாதரம் என்று உயிர்போகும் வரை தாய்நாட்டை வாழ்த்துவேன்.

## தொழிலாளர் உறுதி

சவரத் தொழிலாளர்கள், அன்னியத் துணி அணிந்தவர்களுக்கும், அந்நிய ஆதரவாளர்களுக்கும் தாங்கள் இனிமேல் சவரம் செய்வதில்லை என்று உறுதி எடுத்து சத்தியம் செய்திருக்கிறார்கள். அந்நியத் துணி அணிந்தவர்கள் வந்தால் அவர்களுடைய தலையைக் கத்தியால் தொட்டுவிட்டு சும்மா அனுப்பிவிடுவோம் என்றும் கூறியிருக்கிறார்கள். இந்த உணர்வு மற்ற தொழிலாளர்களுக்கும் வந்தால் பிரிட்டிஷ்காரர்களால் நம் நாட்டில் நான்கு நாட்கள் தாக்குப்பிடிக்க முடியுமா?



## கட்டாயப்படுத்த மாட்டேன்

இன்னும் பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிக்குச் சிலர் உதவி செய்கிறார்கள். இனிமேல் நாம் இவர்களைக் கேட்கப் போவதில்லை.

## மீண்டும் வழக்கறிஞர் தொழில்

நான் சிறையிலிருந்தபோது மீண்டும் வக்கீல் தொழில் புரியக் கூடாதென்று கருதியிருந்தேன். வறுமையும் இவ்வுலகத்து அறிவில்லாருடைய இகழ்ச்சியையும் நீக்குவதற்காகவே நான் மீண்டும் அத்தொழிலைத் தழுவிக்கொண்டேன். மீண்டும் அத்தொழிலைக் கைக்கொள்ளாவிடின் நானும் என் குடும்பத்தாரும் வறுமையால் நசுக்கும் நிலைமையை





விரைவில் அடைந்து விடுவோம் என்று தோன்றிற்று. அதன்பின்னரே அதனை மேற்கொண்டேன்.

## பிறமொழிச் சொற்கள்

பிறமொழிச் சொற்கள் நாளாவட்டத்தில் தமிழ்ப் பதங்களாய் விடுமாறு நாம் இடங்கொடுத்தல் நன்றன்று. ஏனெனில் அவை தமிழ்ப்பதங்களானபின் அவற்றை நம் தமிழ் அகராதியிலும் இலக்கணத்திலும் சேர்த்துப் பொருள் உரைக்கவும் இலக்கணம் கூறவும் நேரிடும்.

ஒவ்வொரு மொழிக்காரர்களும் தத்தம் மொழியில் பிறமொழிச் சொற்களை வரையறையின்றி சேர்த்துக் கொண்டே போவாராயின் நாளடைவில் உலகத்தின் கண் நிலவும் எல்லா மொழிச் சொற்களும் ஒவ்வொரு மொழியகராதியிலும் இலக்கணத்திலும் நுழைந்து அவற்றைக் கற்பது அசாத்தியமாக முடியும்.

## சமஸ்கிருத சொல் களைதல்

சமஸ்கிருத சொற்களை உபயோகிக்க நேரும் இடங்களில் அவற்றின் தமிழ் மொழிபெயர்ப்புச் சொற்களையும் அவற்றின் பக்கங்களில் அவற்றிற்குரிய சமஸ்கிருதச் சொற்களையும் உபயோகித்து, தற்காலம் நம் தமிழ்நாட்டில் வழங்கிவரும் சமஸ்கிருத சொற்களுக்கெல்லாம் சரியான தமிழ்ச் சொற்களை நம் தமிழ் மக்களுக்குக் கற்பித்து நாளடைவில் சமஸ்கிருதச் சொற்களைத் தமிழிலிருந்து வேரோடு களைந்து விடலாம்.

## உயர்ந்தது, தாழ்ந்தது


கடவுள் ஒருவராயிருக்கும் பொழுது உயர்ந்த கடவுள், தாழ்ந்த கடவுளென்பதுண்டா? அவ்விதம் நினைப்போமாயின் அது நமது அறியாமையே!

## தாய் நாடு

ஒருவர் பிறப்பதற்கு ஆதாரமாயிருந்தவள் அவருக்குத் தாயென்றால், அவரும் அவருடைய முன்னோரும் பிறப்பதற்கு ஆதாரமாயிருந்த தேசம் அவரைப் பெற்ற தாயினும் மேலென்பதற்குத் தடையென்ன?

## எது கொடியது?

வறுமையினும் வியாதியினும் சகிக்கொணாக் கொடியது அடிமைத் தனமே!



திருவள்ளுவர்

திருக்குறள்

மணக்குடவருரை.

அறத்துப்பால்.

வ. உ. சிதம்பரம்பிள்ளை,
பிரம்பூர், சென்னை.



## உயிர்

உயிர் என்பது யான் என்ற நினைப்போடு கூடிய அறிவு.
கடவுள் என்பது யான் என்ற நினைப்பற்ற அறிவு.

## அன்பு

உயிரும் அன்பும் வேறன்று. அதாவது, உயிரே அன்பின் வடிவமாக இருக்கிறது.

## மனம்

அறிவு தான் விரும்பிய அறத்தைச் செய்து முடிக்கும் முன்னர் கவனமின்றி மனத்தை ஆளுந் தொழிலைச் சற்று நழுவவிடுமாயின் மனம் தன் போக்கில் ஓடித் தீநெறிகளில் பட்டுத் தானும் கெட்டு உடம்பையும் அறத்தையும் கெடுத்துவிடும்.

## அறிவு

அறிவு அறங்களைக் காட்டும். அறிவு காட்டும் அறங்களையே மனம் நினைக்கும்படி அதனை ஆள வேண்டும். இவ்வாறு அறிவு காட்டும் அறங்களையே மனம் நினைத்தும், உடம்பு செய்தும் வருமாயின் மனிதரெல்லாம் இன்பத்தையே அடைவாரென்பது திண்ணம்.

❖❖❖

# வ.உ.சி. எனும் பெருந்தலைவர்





## மகாகவி
## சி.சுப்பிரமணிய பாரதியார்

# வ.உ.சி.க்கு
# வாழ்த்து

**வே**ளாளன் சிறைபுகுந்தான் தமிழகத்தார்
மன்னனென மீண்டான் என்றே
கேளாத கதைவிரைவிற் கேட்பாய்நீ
வருந்தலைஎன் கேண்மைக் கோவே!
தாளாண்மை சிறிதுகொலோ யாம்புரி வோம்
நீஇறைக்குத் தவங்கள் ஆற்றி,
வாளாண்மை நின்துணைவர் பெறுகனவே
வாழ்த்துதிநீ வாழ்தி! வாழ்தி!

# வெள்ளைக்கார விஞ்ச்துரை கூற்று

1. நாட்டி லெங்கும் சுதந்திர வாஞ்சையை
நாட்டினாய்; கனல் மூட்டினாய்;
வாட்டி யுன்னை மடக்கிச் சிறைக்குள்ளே
மாட்டுவேன்; வலி காட்டுவேன்
2. கூட்டங்கூடி வந்தே மாதர மென்று
கோஷித்தாய்; எமைத் தூர்ஷித்தாய்;
ஓட்டம் நாங்க எடுக்க வென்றே கப்பல்
ஓட்டினாய்; பொருள் ஈட்டினாய்
3. கோழைப் பட்ட ஜனங்களுக் குண்மைகள்
கூறினாய்; சட்டம் மீறினாய்;
ஏழைப்பட் டிங்கு இறத்தல் இழிவென்றே
ஏசினாய்; வீரம் பேசினாய்
4. அடிமைப் பேடிகள் தம்மை மனிதர்கள்
ஆக்கினாய்; புன்மை போக்கினாய்
மிடிமை போதும் நமக்கென் றிருந்தோரை
மீட்டினாய்; ஆசை ஊட்டினாய்
5. தொண்டொன் றேதொழிலா கக்கொண்டிருந்
தோரைத் தூண்டினாய்; புகழ் வேண்டினாய்;
கண்டகண்ட தொழில் கற்க மார்க்கங்கள்
காட்டினாய்; சோர்வை ஓட்டினாய்
6. எங்கும் இந்த சுயராஜ்ய விருப்பத்தை
ஏவினாய்; விதை தூவினாய்;
சிங்கம் செய்யும் தொழிலைச் சிறு முயல்
செய்யவோ? நீங்கள் உய்யவோ?
7. சுட்டு வீழ்த்தியே புத்தி வருத்திடச்
சொல்லுவேன்; குத்திக் கொல்லுவேன்;
தட்டிப் பேசுவோ ருண்டோ? சிறைக்குள்ளே
தள்ளுவேன்; பழி கொள்ளுவேன்

# தேசபக்தர் சிதம்பரம்பிள்ளை மறுமொழி

**சொ**ந்த நாட்டிற் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம் இனி அஞ்சிடோம்;
எந்த நாட்டினும் இந்த அநீதிகள்
ஏற்குமோ? தெய்வம் பார்க்குமோ?
வந்தேமாதரம் என்றுயிர் போம்வரை
வாழ்த்துவோம்; முடி தாழ்த்துவோம்;
எந்தம் ஆருயி ரன்னையைப் போற்றுதல்
ஈனமோ? அவ மானமோ?
பொழுதெல்லாம் எங்கள் செல்வங்
கொள்ளைகொண்டு
போகவோ? நாங்கள் சாகவோ?
அழுதுகொண்டிருப் போமோ? ஆண்பிள்ளைகள்
அல்லமோ? உயிர் வெல்லமோ?
நாங்கள் முப்பது கோடி ஜனங்களும்
நாய்களோ? பன்றிச் சேய்களோ?
நீங்கள் மட்டும் மனிதர்களோ இது
நீதமோ பிடி வாதமோ?
பார தத்திடை அன்பு செலுத்துதல்
பாபமோ? மனஸ் தாபமோ?
கூறும் எங்கள் மிடிமையைத் தீர்ப்பது
குற்றமோ? இதிற் செற்றமோ?
ஒற்று மைவழி யொன்றே வழியென்பது
ஓர்ந்திட்டோம்; நன்கு தேர்ந்திட்டோம்;
மற்றும் நீங்கள் செய்யுங்கொடு மைக்கெல்லாம்
மலைவுறோம்; சித்தம் கலைவுறோம்
சதையைத் துண்டு துண்டாக்கினால்
உன்னெண்ணம்
சாயுமோ? ஜீவன் ஓயுமோ?
இதயத் துள்ளே இலங்கு மஹா பக்தி
ஏகுமோ? நெஞ்சம் வேகுமோ?

# தென்னிந்திய உரிமைப் போர் மறவர்



**நாவலர்**
**ச.சோமசுந்தர பாரதியார்**

'**தெ**ன்னாட்டுத் திலகர்' எனப் புகழ்ப் பேர் பூண்ட காலஞ்சென்ற திரு. வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்களைப் புதிய இந்தியா முழுவதும் அறியும். குடிமையறமும் உரிமையும் துறந்து மக்கள் 'அடிமை மோகத்தில்' ஆழ்ந்து மடிந்திருந்த காலத்தில், தாய்நாடு முற்றுரிமை பெற்றுயர முதலில் முயன்ற பெருந்தலைவருள் ஒருவர் இப்பெரியார். தென்னிந்திய உரிமைப் போர் மறவருள் முதல்வர்.

இவர் தமிழகத்தில் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராய், பொதுநலம் பேணப் பிறந்த பெரியார். இளம் பருவ முதல் அஞ் சாநெஞ்சராய் பெருமையும் உரனும் பிறங்க வளர்ந்தவர். ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி ஊர்களில் குற்றநீதிமன்றங்களில் திறம்பட வாதுபுரிந்து பொருளும் புகழும் செல்வாக்கும் பெருக வாழ்ந்த தமிழ்வாணர்.

காளைப் பருவத்தில், "தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்து" வாழ்ந்தார். கூர்த்த மதியும் சீர்த்த நடுநிலை உணர்வும் வாய்த்த வழக்கறிஞர்.

வள்ளுவர் குறளும் கைவல்ய நூலும் பல்காற் பயின்று சொல்வன்மையும், நல்லியல்பும் நிரம்பி, கற்றோர் களிக்க, மற்றோரும் மகிழச் சல்லாபிக்க வல்லவர்.

நேர்மை நிறைந்த அதிகாரிகளை நட்டு, அறம், திறம் புலவர் அஞ்சமறத்தோடெதிர்த்து, எளியாரை ஆதரிக்கும் தறுகணாளர், அறிவோடு முரணும் குருட்டுக் கொள்கைகளை அறவாதத்தாலடர்த்து, சமுதாயச் சீர்திருத்தங்களில் முனைந்து நின்றவர்.

தென்னாட்டுத் தேசத் தொண்டர் முன்னணியில் முதலிடம் கொள்ளும் பெருமை பெற்றவர். ஆசுகவி அரசரான கந்தசாமிக் கவிராயர், மதிநுட்பம் நூலோடு சிறக்க வாழ்ந்த அரசஞ் சண்முகனார் போன்ற புலவருக்கும், நிதிக் கிழவரான செல்வருக்கும் நண்பர். சூரத்துக் காங்கிரசில் திலகரோடு சேர்ந்து தேர்தலுரிமையைப் பேராது காத்த வீரர்.

இந்திய நாட்டில் பெருங்கடலோடும் கப்பல்களை அந்நியர் ஆதிக்கமின்றி நம்மவர் முதலால் ஓட்ட நினைத்து, முதன்முதலில் பொருள் திரட்டி, 'சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனி' கூட்டிய தனிப்பெருமை இவருடைமை.

வாணிப யாத்திரை மரக்கலக் கம்பெனிகளெல்லாம் உலகத்திலேயே பெரிதான பிரிட்டிஷ் இந்தியன் நீராவிக் கப்பல் கம்பெனியாரோடு போட்டி செய்து, தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையே, ஆங்கிலர் கலங்களில் ஆளும், சரக்கும் ஏறாதபடி வெற்றி கண்டார்.

தலைக்கு 3 ரூபாய்க் கட்டணத்தை 4 அணா ஆக்கியும், சரக்கு ஏற்றுமதிக் கூலியை நாலிலொன்றாய்க் குறைத்தும், அதிகாரிகளின் உதவி ஆதரவு முற்றும் பெற்றும் ஏறாமல், பிள்ளையவர்கள் கம்பெனிக் கப்பலில் முழுக் கட்டணதாரணை கொடுத்து நம்மவர் எல்லாரும் போக்குவரவு செய்ய வைத்த அரிய வினைத்திறம் – பிள்ளையவர்களின் மதிவலியும், முயற்சித் திறமும் மக்கள் மதிப்பும் காட்டும் நல்ல சான்றாகும்.

ஒற்றுமையில்லாத நம்மவரை ஒருமனத்தராய் ஒழுகவைத்த இவர்களின் தேசத் தொண்டை

வியவாத வெள்ளையர்களில்லை என்றால், இவர்களின் பெருமைக்குப் பிற சான்று தேடுவானேன்?

நட்டமும் தோல்வியும் நாள்தோறும் பெருகக் கண்டு புழுங்கிக் கொதித்து பிள்ளையவர்களைப் புகழ்ச் சிறைப்படுத்தி, கப்பல் கம்பெனியையும் உலையச் செய்த அதிகாரிகளின் சதியாலோசனை, கொடுமைகள் முனிவரையும் முனியச் செய்யும்.

பிள்ளையவர்களுக்கு ஜன்மச் சிறை விதித்த ஆங்கில நீதிபதியின் கொடுமைக்கும், இழிவுணர்ச்சிக்கும் அக்காலத்தில் இந்திய மந்திரியான மார்லிப் பிரபு வெட்கப்பட்டு உயர்நீதிமன்ற அதிபர் வேலைக்கு உத்தரவு பெற்றிருந்த ஆங்கிலேயரை அவ்வுத்திரவை மாற்றி அவர் ஆயுள்வரை நீதிபதி வேலைக்கே அருகரில்லை என விலக்கின செய்தி உலகறிந்த உண்மை.


இப்பெருங்குணச் செல்வர் சிறையிற்பட்ட அல்லல்களுக்கு எல்லையில்லை. கொசுவலைக் கட்டிலோடு வேண்டுணவுகொண்டு சுகவாழ்வு கொள்ளும் தற்காலத் தேச அன்பர்மேல் வகுப்புச் சிறைவாசம் அக்காலமறியாதது.

கொலை, வழிப்பறிக் குற்றவாளிகளுக்கிடையே அவர்களுக்கொப்ப, கல்லுடைப்பு - செக்காட்டல் - மண்வெட்டு முதலிய கடுமையான வேலைகளைச் செய்து, சவுக்கடிபட்டு, கேப்பைக்கூழ் கறயின்றிச் சட்டியில் வாங்கியுண்ணும் கொடுங் குற்றவாளிகளின் வாழ்வு பிள்ளையவர்களின் சிறைவாசம். அது போதாமல், தண்டனை அவதி கடந்த பின்னும் முன்னைய வக்கீல் தொழில் செய்யவொட்டாமல் வறுமையும், கவலையும் வழங்கப்பட்டன. உடல்நலிவும், உளத்தளர்வும், இடையறாத் துணையாக, எஞ்சிய கால முழுதும் இருந்து இறைவனடி சேர்ந்த வள்ளல் இவர்.

தமிழர் புத்துணர்வும் நல்வாழ்வும் எய்த வழிவகுத்து வாழ்ந்த இப்பெரியாரை வழுத்தாத நாளெல்லாம் தமிழருக்கு வீணாளாகும்.

* * *

# தென்னாட்டில் அரசனை எதிர்த்த முதன்மை வீரர்



## தந்தை பெரியார்


**தோ**ழர் வி.ஓ.சிதம்பரம் பிள்ளை அவர்கள் முடிவெய்திவிட்டார். தனக்கு இயங்கும் சக்தி இருந்து ஓடி ஆடி உலாவித் திரியும் காலமெல்லாம் தனக்கு சரியென்று தோன்றிய வழிகளில் உழைத்துவிட்டு, ஒடுக்கம் ஏற்பட்டவுடன் அடக்கமாகிவிட்டார். இது மக்கள் வாழ்க்கையின் நியாயமான நிலையே ஆகும்.

மிக்க மந்தமான காலத்தில் அதாவது மனிதன் பொது நலமென்றால் மத சம்பந்தமான காரியம் தவிர வேறு ஒன்றும் இல்லை என்றும், அரசியல் என்றால் அது தெய்வீக சம்பந்தமானது என்றும் எப்படி எனில், கூனோ குருடோ, அயோக்கியனோ, கொள்ளைக்காரனோ, ஒருவன் புருஷனாய் அமைந்துவிட்டால் பெய்யெனப் பெய்யும் மழை என்பதற்கு இலக்காகவும், பின் தூங்கி முன் எழுபவள் போலவும் இருப்பதுதான் பெண்ணின் கற்புக்கு குறியென்றும், அக்கூட்டு தெய்வீக சம்பந்தமாய் ஏற்பட்டதென்றும் சொல்வதுபோல் அரசன் எப்படிப்பட்டவனாய் இருந்தாலும், ஆட்சி எப்படிப்பட்டதாய் இருந்தாலும் அரசனை

விஷ்ணுவாய்க் கருதி, ஆட்சியை வேதக் கோட்பாடாகக் கருதி வாழ வேண்டும் என்று இருந்த பார்ப்பனிய ஆதிக்க காலத்தில் மற்றும் தண்டனை, சிறை என்பவைகள் மகா அவமானகரமாகவும், மகா இழிவாகவும், மகா கொடுமையாகவும், துன்பமாகவும் இருந்த காலத்தில் தென்னாட்டில் முதல் முதல் வெளிவந்து அரசனை எதிர்த்து, அரசியலை இகழ்ந்து துச்சமாய்க் கருதி தண்டனையை அடைந்து சிறைக் கொடுமையை இன்பமாய் ஏற்று, கலங்காமல் மனம் மாறாமல் வெளிவந்த வீரர்களில் முதன்மை வரிசையில், முதன்மை லக்கத்தில் இருந்தவராவார் நமது சிதம்பரம்.

***

# ஸ்ரீ சிதம்பரம் ஒரு வீர புருஷர்



## மூதறிஞர் இராஜாஜி

நண்பர்களே!

சுமார் நானூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னால்தான் நவீன காலத்து ஐரோப்பியர்கள் கடற்பிரயாணம் செய்து இந்தியாவுக்கும் வந்தார்கள். அதற்கு முன் பல்லாயிரம், வருஷங்களாக இந்திய வர்த்தகர்கள் கப்பல் ஏறிக் கடல் கடந்து சென்று வெளிநாடுகளுடன் வியாபாரம் செய்துவந்தார்கள். இந்துமகா சமுத்திரத்தையும் அரபிக் கடலையும் கடந்து மேற்கே ஆப்பிரிக்கா வரையிலும் கிழக்கே சீனம் வரையிலும் சென்று இந்திய வியாபாரிகள் தொழில் நடத்தி வந்தார்கள்.

இதையெல்லாம் கவனித்தால் இந்திய மக்களுக்குக் கடற்பிரயாணம் புதிய விஷயமல்ல என்பதை அறியலாம். இந்தக் காலத்திலேகூட நமது செம்படவர்களின் வாழ்க்கையைக் கவனித்துப் பாருங்கள். எவ்வளவு சகஜமாக அவர்கள் கடலில் பாய்கிறார்கள். நம் நாட்டு இளைஞர்கள் இந்த விஷயத்தில் மேனாட்டு இளைஞர்களுக்குப் பின்வாங்க மாட்டார்கள் என்பது நிச்சயம்.

சமுத்திர ராஜனிடத்தில் மற்ற தேசத்தாருக்குள்ள உறவும் பாத்தியதையும் நமக்கும் நிச்சயமாக உண்டு. விஞ்ஞானக் கருவிகளை உபயோகித்துக் கப்பல் ஓட்டுவதிலும் நம் இளைஞர்கள் மிக்க திறமையுடன் விளங்குகிறார்கள் என்று இப்போது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே, நமது அன்பிற்குரிய சிதம்பரம் பிள்ளை, ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் இவர்களின் கனவும் நம்முடைய காலத்தில் நிறைவேறும் என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீ சிதம்பரம்பிள்ளை அவர்களுடன் நெருங்கிப் பழகும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருந்தது. இன்று நாம் தொடங்கும் காரியத்துக்கு அந்த ஆன்மாவின் ஆசியைப் பெறுவோமாக. கப்பல் அவருடைய திருப்பெயர் பூண்டு விளங்குகிறது. ஸ்ரீசிதம்பரம் பிள்ளை ஆனந்தக் கண்ணீர் ததும்பும் தம் பெரிய கண்களை அகல விரித்து இந்த விழாவையும் என்னையும் பார்த்துக் கொண்டிருப்பதுபோல் எனக்குத் தோன்றுகிறது. இந்தக் காட்சி அவருக்குக் கொஞ்சம் தமாஷாகவும் இருக்கும். ஹார்வி கம்பெனி, பி.ஐ.எஸ்.என். கம்பெனி இவற்றின் ஒத்துழைப்புடனும் இந்தியாவிலுள்ள சகல அரசாங்க ஸ்தாபனங்களின் ஆதரவுடனும் தூத்துக்குடிக்கும் கொழும்புவுக்கும் இந்தக் கப்பல் போக்குவரவை இன்று நான் ஆரம்பித்து வைக்கிறேன்.

ஹார்வி கம்பெனியைச் சேர்ந்தவர்களும், பி.ஐ.எஸ்.என்.கம்பெனியை நடத்தியவர்களும் அந்த நாளில் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையை ஒரு எதிரியாகக் கருதினார்கள். ராஜத்துவேஷக் குற்றம் சாட்டினார்கள்.

பின்ஹே துரையைக் கொண்டு விசாரணை நடத்தி, ஆயுள் பரியந்தம் இரட்டிப்பு தீவாந்திர தண்டனை விதிக்கச் செய்தார்கள். அந்தத் தீர்ப்பைக் கண்டு இந்தியா முழுதும் கதி கலங்கியது. தேசமெங்கும் ஆத்திரம் பொங்கியது. ஹைகோர்ட்டார் ஆயுள் தண்டனையை ஆறு வருவு சிறைத் தண்டனையாகக் குறைத்தார்கள். பெரும் அநீதிக்குச் சிறிது பரிகாரம் ஏற்பட்டது. தூத்துக்குடி மகா ஜனங்களை ‘வந்தே மாதரம்’ என்று கோஷமிடும்படி செய்தது ஸ்ரீசிதம்பரம் பிள்ளை செய்த பெரிய குற்றம்.

ஸ்ரீ சுப்பிரமணிய சிவம் பேசிய கூட்டங்களில் பிரசன்னமாகியிருந்து, ‘இந்தியா சுயராஜ்யம் பெற வேண்டும்’ என்று சிவம் கூறியதைப் பூரணமாக ஒப்புக்கொண்டது இன்னொரு பெரிய குற்றம். இந்தக் குற்றங்களுக்காகத்தான் ஸ்ரீ சிதம்பரம்பிள்ளை தண்டனை அடைந்தார். இது நாற்பது ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தது. ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையும் ஸ்ரீ சுப்பிரமணிய சிவமும் ஆறு வருஷம் சிறையில் கஷ்டப்பட்டு வீட்டு வெளியே வந்தார்கள்.

அவர்களைத் தண்டித்த பின்ஹேயை ஹைகோர்ட் நீதிபதியாக உயர்த்த வேண்டுமென்ற ஒரு யோசனை ஏற்பட்டது. அதை அங்கீகரிக்க அப்போது இந்தியா மந்திரியாயிருந்து வந்த லார்டு மார்லி மறுத்துவிட்டார். மார்லி தம்முடைய “ஞாபகங்கள்” என்ற புத்தகத்தில் இது விஷயமாக எழுதியிருப்பது நமக்கு இப்போது ரசமாக இருக்கும்.

நாற்பது வருஷங்களில் சக்கரம் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டது. ஸ்ரீ சிதம்பரம்பிள்ளை எதற்காகச் சிறை சென்று கஷ்டப்பட்டாரோ அந்த நோக்கம் நிறைவேறிவிட்டது. நாம் பூர்ண சுதந்திரம் பெற்றுவிட்டோம். ஹார்வி கூட்டத்தைச் சேர்ந்த ஒருவரின் விருந்தாளியாக இன்று நான் தங்கியிருக்கிறேன். பி.ஐ.எஸ்.என். கம்பெனியார் தங்களுடைய கப்பலை நிறுத்திக்கொண்டு ஸ்ரீ சிதம்பரம்பிள்ளையின் பெயர் பூண்ட இந்தக்கப்பல் செல்வதற்கு இடமளித்திருக்கின்றனர்.

தூத்துக்குடிக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு இப்போது பரிகாரம் ஏற்பட்டுவிட்டது. மிகுந்த மகிழ்ச்சியுடன் இந்தக் கப்பல் போக்குவரவை ஆரம்பித்து வைக்கிறேன். வீரபுருஷரான ஸ்ரீசிதம்பரம் பிள்ளையின் திருப்பெயரை இந்தக் கப்பலுக்குச் சூட்டும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறது. இந்தக் கப்பல் பாரதக் கொடியைப் பறக்கவிட்டுக்கொண்டு கடலில் செல்லும். இந்தியக் கப்பல் தொழிலைப் புனர் நிர்மாணம் செய்யத் திறமையும் சிறந்த நிர்வாக அனுபவமுமுள்ள ஹிந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியார் ஏற்கெனவே எவ்வளவோ செய்திருக்கிறார்கள். இன்னும் செய்து வருகிறார்கள்.

இந்தியா ஒரே நாடு. இந்தியாவின் பெருமையைப் பிரித்துப் பங்கிட முடியாது. எனினும், இந்தியக் கப்பல் போக்குவரவை மீண்டும் ஆரம்பிக்கும் கைங்கரியம் இந்தத் தூத்துக்குடியில் ஆரம்பிக்கிறது. இந்த ஆரம்ப வைபவத்துக்குச் சிவா அவர்களின் பலி தானமே ஆரம்ப வேள்வியாக அமைந்தது. இதை எண்ணித் தென்னிந்தியர்கள் பெருமிதம் கொள்ளலாம்.

சென்றுபோன காலத்திய மாத்சரியமும், அறியாமையும், துவேஷமும் ஒழிந்து போகட்டும். சுதந்திர இந்தியா மகோன்னதாக விளங்கட்டும்.

இந்தக் கப்பலின் நாயகனுக்கும், மாலுமிகளுக்கும் இதை நடத்தும் நிர்வாகிக்கும் மனப்பூர்வமாக வாழ்த்துக் கூறுகிறேன். திறமையுடன் இடைவிடாது தொழில் முறையில் உழைப்பதே தேச பக்தி. தங்கள் செயலால் இவர்கள் நிரூபித்துக் காட்டுவார்களாக!

(9.2.1949இல் இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் ஜெனரலாயிருந்த இராஜாஜி, தூத்துக்குடி துறைமுகத்தில் வ.உ.சி. கப்பலை மிதக்க விட்டு, அதற்கு வீரர் வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்களின் திருப்பெயரை இட்ட விழாவின்போது, நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்)

***

# சுயராஜ்ஜியத்தின் வெற்றிக்கு சிதம்பரனாரே அஸ்திவாரம்



வ.ரா.

**வெ**ற்றி அதிர்ஷ்டம் சிலருக்குத்தான் கிட்டும். பல போர் வீரர்களை மாண்டதன் பின்னரே, போர்க்களத்தில், ஒரு கட்சிக்கு வெற்றி கிடைக்கிறது. இறந்தவன் முட்டாள் என்றும் மிஞ்சினவர்கள் புத்திசாலிகள் என்றும் சொல்லக்கூடுமா? விடுதலைப் போராட்டப் பருவக்காலங்களில் முதன்முதலாக விடுதலையில் தாகம் ஏற்பட்டு உழைப்பவர்கள், கடைசிக்கால வெற்றியைக் கண்ணிலே காணுவதில்லை. ஆனால் இறுதி வெற்றிக்கு, இவர்களுடைய முதல் முயற்சியே அஸ்திவாரமாகும். தமிழ்நாட்டில், சுயராஜ்யம் ஏற்பட்டதற்கு, பல காரணங்களில் சிதம்பரம் பிள்ளை அவர்கள் ஒருவர்.

அக்காலத்தில் ‘வந்தே மாதரம்’ என்று உரக்க சத்தம் போட்டுச் சொல்ல முடியாது. அவ்வளவு பயம்; போலீசாரின் கிலி, வீடுகளில் கிழவர்களின் தொந்திரவு. ஜெயில் என்றால் ஆறு மாதம், ஒரு வருஷமல்ல. ஐந்து வருஷங்களுக்குக் குறையாது. கடின காவல், தீவாந்திர சிட்சையும் ஏற்படும். ஜெயிலில் இப்பொழுது இருக்கிற வசதிகள்கூட அப்பொழுது கிடையாது. ஜெயிலில், இப்பொழுது காங்கிரஸ் கைதிகள் ‘ஜே’ சத்தம் போடுகிறார்களே, அப்பொழுது போட முடியுமா? போட்டால், எலும்புகள் நொறுங்கிப் போனாலும் போகும். சுயராஜ்யத்தின் அவசியத்தைச் சிறிதும் உணராத காலம். சுயராஜ்யம் என்னவென்று கற்பனை செய்துகூடப் பார்க்க இயலாத மனிதக் கூட்டம். இத்தனை நிர்பந்தங்களுக்கிடையே, ஒருவன் சுயராஜ்யத்தைப் பற்றி பேசுவதாயிருந்தால், அவனுக்கு எவ்வளவு தன்னம்பிக்கையும் துணிவும் வேண்டும்?

சுயராஜ்யப் பித்துப் பிடித்தாலொழிய, அத்தகைய நம்பிக்கையும் துணிவும் உண்டாவது அருமை. சிதம்பரம் பிள்ளை அவர்கள் அக்காலத்தில் சுயராஜ்யப் பித்துக் கொண்டவர். தேசத்தின் வறுமையையும் அடிமை நிலைமையையும் பற்றி நினைத்து, உள்ளம் பதறினார்.

வந்தே மாதரத்தையும், சுயராஜ்ய கோஷத்தையும் கடல் அலை கொண்டு வந்ததை, தூத்துக்குடியில் சிதம்பரம் பிள்ளை அவர்கள் காது கொடுத்துக் கேட்ட காலையில், அவர் வக்கீல் தொழிலில் அமர்ந்திருந்தார். அவருக்கு அப்பொழுது நல்ல வருமானம், நல்ல செல்வாக்கு. இவையிரண்டும் அவருக்குப் பெரிதாகப்படவில்லை. பாரதத்தாயின் அழைப்பையே, உயிர்பொருளாக மதித்தார். லாப நஷ்டக் கணக்குப் பார்க்கவில்லை. லாபநஷ்டக் கணக்குக்கு, அவரது இயற்கையும் இடங்கொடுக்காது. சுயராஜ்ய இயக்கத்தில், திரும்பிப் பார்க்காமல், ஒரே குதி குதித்தார்.

தூத்துக்குடியின் பெயர் நாடெங்கும் முழங்கிற்று. சிதம்பரம் பிள்ளை அவர்களின் சிம்ம கர்ஜனைப் பிரசங்கத்தைக் கேட்டபின், தூத்துக்குடி மகாஜனங்களுக்கு உறக்கம் கிடையாது. அதிகார வர்க்கத்தினர் நடுக்கங்கொண்டனர்.

தமிழ்நாட்டிலே எங்கும் சுதேசிப் பேச்சு. “கப்பலோட்ட வேண்டும். சுதேசி சாமான்களை உற்பத்தி செய்ய வேண்டும். துணி, காகிதம், சோப்பு முதலியவெல்லாம் சுதேசியாகத்தானிருக்க வேண்டும்.” தமிழ்நாட்டிலே, எல்லோருக்கும் இப்படிப் பைத்தியம் பிடித்தது தூத்துக்குடி யிலே சிதம்பரம் பிள்ளை அவர்கள் முடிசூடா

மன்னனாய் விளங்கினார். அவர் சொன்னது சட்டம்.

இந்தச் சமயத்தில் சிதம்பரம் பிள்ளையவர்கள் ராஜநிந்தனைக் குற்றம் சாட்டப்பெற்று, தீவாந்தர சிட்டை பெற்று பின்னர் அப்பீலில், அது ஆறு வருஷக் கடின காவலாக மாறிற்று. சிறையில் பிள்ளையவர்களும் சிவமும் பட்ட அவஸ்தைகளைச் சொல்ல முடியாது. சிறை யிலே 'மனம்போல வாழ்வு' என்று நூலைப் பிள்ளையவர்கள் எழதி முடித்தார்.

சிறையிலிருந்து வெளிவந்த பின்னரும், பிள்ளையவர்கள் சிறிது காலம் வரையில் மனந்தளராமல் இருந்தார். வறுமை, குடும்பம், ஆதரிப்புக் குறைவு முதலியவைகளுக்கு நடுவே, அஞ்சா நெஞ்சனும் எவ்வளவு காலம் கலங்காமலிருக்க முடியும்?

பிள்ளையவர்கள் திலகர் கோஷ்டியைச் சேர்ந்த தேசபக்தர். ராஜதந்திரி காந்தியின் சாத்வீக ஒத்துழையாமையில் அவருக்குப் பற்று கிடையாது. நம்பிக்கையுமில்லை. பிள்ளையவர்கள் உணர்ச்சிக் களஞ்சியம். ரொம்ப யோக்கியவர். அற்பத்தனம் சிறிதும் இல்லாதவர்.

பொய் நடையையும் வஞ்சகப் பேச்சையும் அறவே ஒழித்தவர், வெறுத்தவர். அரசியல் உலகில் சாதாரணமாய்க் காணப்பெறும் உபாயங்களை, பிள்ளை அவர்கள் கைக்கொண்டு வாழ்ந்திருப்பாரானால், அவர் என்றைக்கும் தலைவர் என்று மதிக்கப்பட்டு, பிரசங்க முழக்கத்தில் ஈடுபட்டுக்கொண்டே வந்திருப்பர். வேஷம் போடத் தெரியாததனால் யோக்கியராய், அவர் அக்ஞாத வாழ்வு வாழ்ந்து வர நேர்ந்தது.

தமிழ்நாட்டில், அக்காலத்தில் அதிகார வர்க்கத்தினர் யாரைக் கண்டு நடுங்கியது என்று நினைக்கிறீர்கள்? சிதம்பரம் பிள்ளைதான்!

***

# உயிர் போகும்வரை ஒழுக்கத்தைக் கையாண்டு வந்த ஒரே தலைவர்



**கி.ஆ.பெ.விசுவநாதம்**

திருவாளர் வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்கள் தமிழ்நாட்டுத் தேச பக்தர்களுள் ஒருவர். தேசபக்தர் என்றாலே திரு. பிள்ளை அவர்களைத்தான் குறிக்கும். நாட்டின் மீது அவருக்கு உள்ளப்பற்று உற்றபடியே அளவைக் கடந்தது எனக் கூறலாம்.

பெரியார், காந்தியடிகளுக்கு முன்பே திரு. பிள்ளை இந்தியாவில் தேச பக்தராக விளங்கியவர். உலக மான்ய பாலகங்காதர திலகர் அவர்களின் அரசியல் மாணவர் ஆவர். காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் தொண்டு செய்திருந்த காலத்திலேயே திரு. பிள்ளை அவர்கள் இந்தியாவில் தேசத் தொண்டு செய்தவர்கள். பலமுறை சிறை சென்றவர்கள். செக்கும் இழுத்தார்கள்; களைப்பு மிகுதியினால் குடிக்கத் தண்ணீர் கேட்டுத் தண்ணீர் பெறாமல் சவுக்கடியையே பெற்றார்கள். சில நாட்கள் அல்ல; பல ஆண்டுகள். நாட்டுப் பற்றுக்காரணமாக உயிர் போகும் வேதனையைப் பெற்று வாடி



வதங்கி வருந்த உழைத்தவர் திரு. பிள்ளை அவர்கள் ஆவர்.

படிப்பு இல்லாமல் தேசத் தொண்டு செய்யப் போனவரல்ல அவர்; அக்காலத்திலேயே கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றவர்கள்; தொழிலில்லாமல் தேசத் தொண்டு செய்யப் புறப்பட்டவர் அல்ல அவர்; வக்கீல் தொழில் செய்துகொண்டிருந்தவர்.

வருமானமில்லாமையால் தேச பக்தி காட்டப் புறப்பட்ட வக்கீல்களைச் சேர்ந்தவர் அல்ல அவர்; தொழிலில் நல்ல வருமானத்தைப் பெற்று வந்தவர். புகழுக்கும் பெருமைக்கும் ஆசைப்பட்டுப் பொதுத் தொண்டு செய்யப் புறப்பட்டவர் அல்ல அவர்.

எவ்வளவு கத்திப் பேசினாலும் இந்துவும், சுதேசமித்திரனும் ஏழு எட்டு வரிகூட எழுதாத காலம் அது. அப்படிப்பட்ட காலத்தில்தான் இப்படிப்பட்ட பிள்ளை அவர்கள், தேசத் தொண்டு செய்து வந்தார்கள்.

திரு. பிள்ளை அவர்களின் பேச்சு, இரத்தத் துடிப்பை அல்ல. எலும்புகளையும் துடிக்கச் செய்யும். அவர் ஒரு தொழிலாளர் தலைவர். தொழிலாளர் போக்கைத் தொடர்ந்து போகும் தலைவராயில்லாமல், தொழிலாளரைத் தன் போக்கில் நடத்திச் செல்லும் தலைவராயிருந்தவர்.

அவர் ஒருமுறை சிறை சென்றபோது தூத்துக்குடி இரயில்வே நிலையமும், சர்க்கார் கட்டடங்களும் தூள் தூளாக்கப்பட்டன. நெருப்புப் பொறிகளும் பறந்தன. அரசாங்கமே நடுங்கி, அஞ்சுகின்ற அளவுக்கு அவர் ஓர் ஆபத்தான மனிதராகக் கருதப்பட்டார்.

திரு. பிள்ளை சிறையிலிருப்பார். வீட்டிலிருந்து செய்தி வரும். வருகின்ற செய்தி, "குழந்தைக்குத் துணியில்லை; உணவுக்கு வழியில்லை" என்றிருக்கும். கண்கள் கலங்கும். மனம் கலங்காது. இத்தகைய செய்திகள் பலவற்றை அரசியல் உத்தியோகஸ்தர்களே அவரிடம் அனுப்பி வைப்பார்கள். காரணம், எந்த வகையிலாயினும் மன்னிப்பைப் பெற்று விடுதலை பெற்று வெளியேற வேண்டுமென்பதுதான். இருமுறை ஆயுட்காலத் தண்டனை, அந்தமான் தீவுக்கு நாடு கடத்தும் தண்டனைகளைப் பெற்று, செக்கிழுத்து, வாடி வதங்கி அடைத்துப் போன காதுகளுக்கு இச்செய்திகள் எட்டும். மடிவதில் மனம் கொண்டாரேயன்றி மன்னிப்பதில் மனம் கொள்ளவில்லை.

எனது தலை சிலருடைய திருவடிகளில் மட்டுமே விழுந்திருக்கிறது. திரு. பிள்ளை அவர்கள் திருவடிகளும் அதில் சேர்ந்ததுதான். காரணம் பொய் பேசுவதில்லை என்பதை வாழ்நாள் முழுவதும் ஒரு கொள்கையாகக் கொண்டு உண்மையையே பேசி வந்தார்கள். அது மட்டுமல்ல; உயிர் போகும்வரை ஒழுக்கத்தைக் கையாண்டு வந்த ஒரே தலைவர் அவர் என்பதினாலுமேயாம்!

★★★

# சிதம்பரத்தைச் சிந்தையில் கொள்வோம்



**க**ப்பலை ஓட்டிக் கடுங்காவற் காளாகி
உப்பிலாக் கூழுன் டுடல்மலிந்தோன் – ஒப்பிலாத்
தென்னாட்டு வீரர் திலகன் சிதம்பரத்தின்
நன்னாமம் போற்றுக என் நா.

கண்ணருவி யாயொழுகக் கல்லுடைத்தும் செக்கிழுத்தும்
உண்ண உண வின்றி உடல் மெலிந்த – அண்ணல்
சிதம்பரம் கண்ட சிறைவாசம் இன்று
சுதந்தரம் தந்ததெனச் சொல்.

அஞ்சுவனோ வெள்ளையரின் ஆட்சியொழிப் பேனென்று
வஞ்சினம் கூறிநின்ற மாவீரன் – விஞ்சுபுகழ்
செந்தமிழ் நாட்டுத திலகன் சிதம்பரத்தைச்
சிந்தையில் கொள்வோம் தினம்.



**கவிமணி**
**தேசிக விநாயகம் பிள்ளை**




# ஞாலம் உள்ளளவும் வாழி!




**பரலி சு.நெல்லையப்பர்**

இதம் பெற நாட்டா ரெல்லாம்
எண்ணரும் தியாகம் செய்தாய்
விதம் பெறும் இன்னல் நீங்கி,
விடுதலை எய்தி நாட்டார்
பதம் பெறப் பெரிதும் நாடிப்
பல்விதத் துழைத்தல் செய்தாய்
சிதம்பரப் பெரியோய் உன்றன்
சீரினைப் போற்றுகின்றோம்
நாட்டினில் வணிகம் ஓங்கி
நல்வாழ்வ பெருகு மாறே
ஓட்டினாய் நாவாய் அந்நாள்
உறுதியும் திறனும் கொண்டே
போட்டியில் எதிர்த்து நின்றாய்
புன்மையோர் சூழ்ச்சி யாலே
வாட்டியே சிறையில் இட்டும்
மனம் தளராது நின்றாய்
தமிழ்மொழி ஓங்கி யென்றும்
தரணியில் சிறக்கு மாறு
தமிழ் நூல்கள் இயற்றித் தந்தாய்
தமிழ்க் குறள் போற்றி நின்றாய்
தமிழர்க் புதுவாழ் வெய்தித்
தரணியில் ஓங்கு மாறு
தமிழர்கள் தலைவா, நாளும்
தளர்விலா துழைத்தல் செய்தாய்
ஊக்கமும் வலியும் குன்றி
ஒளியிழந் துலகில் நீண்ட
தூக்கத்தில் வீழ்ந்த நாட்டைத்
துயில் எழச் செய்தாய், ஐய,
பாக்கியம் பெருகி நாட்டார்
பாரினில் ஓங்கு மாறு
தூக்கிய வினைகள் செய்தாய்
துணிவுமிக் குடைய கோவே.
பொற்சிலை வைத்திங் குன்னைப்
போற்றிட விரும்புகின் றேன்
கற்சிலை வைத்தும் இன்னும்
காண்கிலேம்! கலைவ லோனே
நற்செயல் பெரிதும் செய்தாய்,
நாட்டினை அகத்தில் கொண்டுன்
நற்பெயர் நிலவி நிற்கும்
ஞாலம்உள் ளளவும் வாழி!



# சுதந்திரம் என்றால் சிதம்பரம்



**சிலம்புச் செல்வர்**
**ம.பொ.சிவஞானம்**

'**சு**தந்திரம்' என்று கேட்ட உடனேயே 'சிதம்பரம்' என்ற பெயரும் ஒவ்வொரு தமிழ்த்தேச பக்தனுக்கும் நினைவுக்கு வருகின்றது.

1908ஆம் ஆண்டில் தூத்துக்குடி மக்களது அறிவைக் கவர்ந்து, ஆவேசத்தை மூட்டி, ஆங்கிலேயரை எதிர்க்கத் தூண்டியவை இரண்டே சொற்கள். ஒன்று சுதந்திரம்; இன்னொன்று சிதம்பரம். சுருங்கச் சொன்னால், சுதந்திரம் என்ற சக்தி சிதம்பரம் என்ற உருவத்தில் இயங்கி, தமிழ்நாட்டையே ஒரு கலக்குக் கலக்கியது எனலாம்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவில் மூன்று துறைகளில் ஆதிக்கம் கொண்டது. அவை அரசியல், வாணிபம், தொழில் ஆகியவையாகும். இந்த மூன்று முனைகளிலும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வெற்றி கண்டாலொழிய நாடு விடுதலை பெற முடியாது என்பதை உணர்ந்த பெரிய அரசியல் ஞானியாவார் வ.உ.சிதம்பரம்.

எனவே, தென்பாண்டி நாட்டில், தூத்துக்குடியில் மேற்சொன்ன மூன்று துறைகளிலும் ஏகாதிபத்தியத்தின் மீது போர் தொடுத்தார். தமிழ் வணிகர்களைப் படை திரட்டி ஆங்கில வணிகர் கூட்டத்தின் மீது மோதினார். சுதேசிக் கப்பல் கம்பெனியால் ஆங்கிலேயக் கும்பலின் கம்பெனி தாக்குண்டது. இதுதான் ஏகாதிபத்தியத்தின் மீது தமிழ் நிலத்தில் தமிழ் இனத்தின் சார்பாக, தலைவர் சிதம்பரனார் மேற்கொண்ட முதல் நேரடி நடவடிக்கை.

பின்னர் தொழில்துறையிலும், ஆங்கிலேயரின் மூலதனத்தில் 'வேலை நிறுத்தம்' என்னும் வெடிகுண்டை வீசினார் வீரர் சிதம்பரனார். தூத்துக்குடி ஆர்.வி.மில் ஆங்கிலேயருடையது. அதில் பாடுபடும் பாட்டாளி மக்களைப் படை திரட்டி ஆங்கில பாணி வர்க்கத்தின் மூச்சுக்கு முடிவு கட்ட முனைந்தார்.

அரசியல் துறையிலும் ஆங்கில ஆதிக்கத்தைப் பலமாக தாக்கினார் தளபதி சிதம்பரனார். தூத்துக்குடியில் நாள்தோறும் கூட்டம்; வீதி தோறும் கூட்டம். சவரத் தொழிலாளர் வீதி, சலவைத் தொழிலாளி வீதி என்று தொழிலாளர்கள் வாழும் வீதிகளெல்லாம் சிதம்பரனார் சுதந்திர மந்திரத்தை முழங்கினார். ஆத்திரத்துடன் பேசி மக்களுக்கு ஆண்மையூட்டினார். இதன் விளைவு என்ன? மக்கள் உணர்ச்சி கொண்டு உறுத்தெழுந்தனர். ஒழிப்போம் ஏகாதிபத்தியத்தை என்று உலகறியக் கூவினார். திருநெல்வேலி ஜில்லாவில் அரசாங்கக் கட்டடங்களெல்லாம் செந்தழல் விட்டு எரிந்தன. வீத் ஓரத்தில் விண்ணோக்கி நின்ற விளக்குக் கம்பங்களெல்லாம் மண்ணோக்கிச் சாய்ந்தன. ஆம், வாணிகம், ஆலைத்தொழில், அரசியல் ஆகிய மூன்று துறைகளிலும் தளபதி சிதம்பரனாரின் தலைமையில் தமிழ் மக்கள் ஆங்கிலக் கூட்டத்தைத் தாக்கினார். உயிர்க்கஞ்சிய அவ்வெள்ளையர் கூட்டம் இரவுக் காலங்களில் நகரை விட்டு வெளியேறி கடலில் மிதக்கும் கப்பலின் காலங்கழித்தன.

1907-1908இல் இரண்டாண்டுகள் திருநெல்வேலியில் சிதம்பரனார் செய்த புரட்சி சொல்லும் தரமன்று. அக்காலத்தில் வடஇந்தியா முழுவதும் நடந்த அரசியல் கிளர்ச்சி அத்தனையும் சேர்த்துப் பார்த்தால்கூடத் தூத்துக்குடிப் புரட்சிக்கு ஈடாகாது.

ஆனால், வீரர் சிதம்பரனார் தனித்து நின்று போராடினார். தூத்துக்குடி மக்களைத் தவிர அவருக்குத் துணை செய்வார் யாருமில்லை. சென்னையிலிருந்த பத்திரிகாசிரியர்கள், காங்கிரஸ் தலைவர்கள்கூட அவரைக்

கைவிட்டுவிட்டனர். எனவே வெள்ளையர் கூட்டம் சிதம்பரனார் மீது பழி தீர்த்துக் கொண்டது. ஆம், தேசபக்திக்கு இரண்டு ஜென்ம தண்டனை என்றான் நீதி பின்ஹே. சிறையில் அதிகார வர்க்கம் அவரது கைக்கும் காலுக்கும் விலங்கிட்டது: மொட்டை அடித்தது; செக்கிழுக்க வைத்தது. அன்று சிதம்பரனார் தமிழ் நிலத்தில் இட்ட சுதந்திர வித்து நாளடைவில் கன்றாகி, மா, மரத்தின் காயாகி, கனிந்தது. ஆகஸ்ட் 15 நன்னாளில் அந்தக் கனியை நாம் கையில் பெற்றுக் களிப்படைகிறோம். தமிழர்களே! வித்தூன்றிய வீரனை மறவாதீர்கள்.

# வீரர் சிதம்பரனார்



## அறிஞர் அண்ணா

மறைந்த மாவீரர் வ. உ. சி. அவர்களையும் அவர் நாட்டின் விடுதலைக்காக ஆற்றிய அரும்பெரும் தொண்டுகளையும் மக்கள் மறக்க முடியாது. பேரும், புகழும் பெற்று சொந்த வாழ்க்கைக்குத் தங்களுடைய உழைப்பும் தேசபக்தியும் பயன்பட வேண்டுமென்ற சுயநல நோக்கம் கொண்டவர்களைப் போலன்றி, உண்மையாகவே நாட்டுக்கு விடுதலையும், மக்களுக்கு நல்வாழ்க்கையும் ஏற்பட வேண்டுமென்ற பொதுநல நோக்குடன் பேரையும், புகழையும் விரும்பாமல் ஆடம்பரமற்ற வாழ்க்கையை நடத்தி நாட்டுப்பணியாற்றியவர்.

### முதற்பெருமை

வெள்ளையன் இந்நாட்டை விட்டு விரட்டப்படவேண்டுமானால், அவனுடைய ஆதிக்கத்தின் ஆணிவேரான வியாபாரத் துறையைத்தான் முதலில் கைப்பற்று வேண்டுமென்ற சிறந்த திட்டத்தை ஒரு முதலில் வகுத்த பெருமை சிதம்பரனாருக்கே உரியதாகும். 1906 அவரால், ஆரம்பிக்கப்பட்ட ‘சுதேசிக் கப்பல் கம்பெனி’ இந்த சிறந்த நோக்கத்துடனேயே தொடங்கப்பட்டதாகும். என்றாலும் அவருடைய திட்டம் வெற்றி பெற முடியாதபடி அரசாங்கம் அவரை நாட்டைவிட்டே துரத்தி விட்டது தீவாந்திரத் தண்டனை கொடுக்கப்பட்டது. கடலில் கப்பலோட்ட முயன்ற ஒரு தமிழன் கடல் நடுவே கப்பல் போல மிதந்து கொண்டு இருக்கும்! ஒரு தீவில் சிறை வைக்கப்பட்டார்.

### போர் -வறுமையோடு

ஆறு ஆண்டுகள் பொறுத்து வீரர் சிதம்பரனார், சிறையில் இருந்து வெளியே வந்தபோது வறுமை என்ற கொடிய பகைவனே அவரை வரவேற்றான். வறுமை அவரை ஆற்றிப்படைத்தது. அன்றாட வாழ்க்கையை நடத்துவது கூட முடியாது போயிற்று.. அவரை ஆதரித்த அன்பர்கள் அனைவரும் கைவிட்டுவிட்டனர். நாட்டின் விடுதலைக்காக ஒரு பெரிய அரசாங்கத்தோடு போராடிய சிதம்பரனார், கடைசியாக வறுமையோடு போராடி, அதில் வெற்றிபெற முடியாமல் 1936இல் உயிர் நீர்த்தார்.

### கப்பல் ஓடுகிறது

எந்தக் காரியத்தை அவர் செய்ய வேண்டும் என பாடுபட்டாரோ, அந்தக் காரியம் இன்று வெற்றிபெற்றுவிட்டது. 43 ஆண்டுகளுக்கு முன், அவர் ஓட்ட வேண்டும் என்று நினைத்தக் கப்பல் இன்று ஓடுகிறது. இது அவரது கனவை நினைவாக்கும் ஒரு நற்செய்தி ஆகும். தமிழ் மக்களுக்கு அவர் உண்டாக்கித் தந்த பெருமையாகும். பண்டையக் காலத்தில் கப்பல் ஓட்டி புகழ்பெற்ற தமிழர்களின் சிறந்த பண்பை, வ.உ.சிதம்பரம் என்ற கப்பல் நிலைநாட்டிவிட்டது.

### குடும்பக் கப்பல்

வீரர் சிதம்பரனாரின் கனவை நினைவாக்கி விட்டோம் என்ற மகிழ்ச்சி, ஒவ்வொரு



இரண்டாவது மனைவி
மீனாட்சி அம்மையாருடன் வ.உ.சி.



V.O.C'S son Arumugham with
Swami Vallinayagam

தமிழனுக்கும் உண்டாகும். இந்தச் சமயத்தில் சிதம்பரனார் பெயரில் கடலில் கப்பல் ஓடுகிறது. ஆனால் அவரது குடும்பமாகிய கப்பல், கரைகாண முடியாமல் தத்தளித்துக் கொண்டு இருக்கிறது என்பதை நாம் மறந்துவிட முடியாது.

சிதம்பரனாரின் துணைவியார் குடியிருக்கக்கூட வீடு இன்றி, துயரக் கடலில் மிதந்து கொண்டு இருக்கிறார். இது மிகமிக முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விஷயம் ஆகும் என்பதை நான் வலியுறுத்துவதோடு, இதுபற்றி லோகோபகாரி ஆசிரியர் தோழர் பரலி. சு.நெல்லையப்பர் அவர்கள் விடுத்துள்ள வேண்டுகோளையும் இங்கு வெளியிடுகிறோம்.

## மட்டற்ற மகிழ்ச்சி

"தூத்துக்குடியில் இருந்து கொழும்புக்கு செல்லும் வ.உ.சிதம்பரம் என்ற கப்பலில் முதல் யாத்திரை, சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் கனம் பொருந்திய இராஜாஜி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது சரித்திரத்தில் இடம்பெற வேண்டிய விஷயம் ஆகும். தமிழ் மக்கள் இதுபற்றி மகிழ்ச்சி அடைய வேண்டும். சிதம்பரனார் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் சுதேசிக் கப்பல் கம்பெனியை தொடங்கி நடத்தியபோது அவருடன் தொண்டு செய்யும் பாக்கியம்பெற்ற என் போன்றவர்களுக்கு இந்த நிகழ்ச்சி மட்டற்ற மகிழ்ச்சி அளிப்பதாகும்.

## பரதேசி கப்பல்

காலஞ்சென்ற சிதம்பரனார் பரதேசி கப்பல் கம்பெனியுடன் போராடி, சுதேசி கப்பல் கம்பெனியை தொடங்கினார். அதுகாரணமாக எண்ணிறந்த இன்னல்களை அடைந்து சிறைவாசமும் செய்தார். அவர் கனவு நினைவாவது பற்றி, அவர் ஆன்மா இன்று சாந்திபெறும். அவரது சுதேசி கப்பல் முயற்சிக்கு அந்நாளில் இடையூறு விளைவித்த பரதேசி கப்பல் கம்பெனி, இன்று தூத்துக்குடியை விட்டு மறைந்துவிட்டதும், அதற்குப் பிறகு சுதேசி கப்பல் கம்பெனி தோன்றி இருப்பதும் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாகும்.

சிதம்பரனார் பெயரால் ஒருகப்பல் ஓடுவது போதாது. அவர் பெயரால் நூற்றுக்கணக்கான வர்த்தக கப்பல்களும் பிரயாணிக்கப்பல்களும் நமது நெடுங்கடல்களில் ஓட வேண்டும்.

## வீடு கூட இல்லை

மேலும் சிதம்பரனார் நினைவைப் போற்றுமாறு அவர் பெயரால் கப்பல் விடும் நமது நாட்டார், அவர் குடும்பத்தை கவனியாதிருப்பது அறம் இல்லை. அவரது மனைவி, மக்கள் வாழ்ந்திருப்பதற்கு அவர்களுக்கென்று ஒரு வீடுகூட இல்லை. இன்னும் முற்றுப்பெறாமல் இருக்கும் சிதம்பரனார் நிதியில் இருந்து அவர்



V.O.C and Mr. Ayyachami Pillai
(father of Mr. Uthandaraman IAS)



One of the last potraits of V.O.C
taken in 1935

மனைவியாருக்கு மாதம் 30 ரூபாய் கொடுத்து வருவதே நாட்டுமக்கள் அவர் குடும்பத்தாரிடம் காட்டும் நன்றியாக இருக்கிறது. சிதம்பரனார் நிதியில் நாட்டு மக்கள் அவரது குடும்பத்தாருக்கு தாராளமாக உதவி செய்ய வேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

## அதிக வருவாய் இல்லை

சிதம்பரனாரின் மூத்த புதல்வர் வ.உ.சி. ஆறுமுகம் சென்ற 20 ஆண்டுகளாக அரசாங்க சேவையில் இருந்து வருகிறார். இரண்டாவது புதல்வர் வ.உ.சி. சுப்பிரமணியம் சென்ற 3 ஆண்டுகளாக தினமணி பத்திரிகையில் உதவி ஆசிரியராக சேவை செய்து வருகிறார். கடைசிப் புதல்வர் வ.உ.சி. வாலீஸ்வரன், ராமநாதபுரம் ஜில்லாவில் அரசாங்க ஊழியம் செய்து வருகிறார். இவர்களில் ஒருவரும் அதிக வருவாய் உள்ள பெரிய உத்யோகங்களில் இல்லை. எனவே தேசம் முழுமையும் சிதம்பரனாரைப் பற்றி சிந்திக்கின்ற இந்நாளில், அவரது குடும்ப நிலையைப் பற்றி சிந்திக்க வேண்டியது கடமை என்று தோன்றியதால் இதை எழுதலானேன்''

## வறுமையின் இருப்பிடம்

இவ்வறிக்கை சிதம்பரனாரின் குடும்பம் இன்று என்ன நிலையில் இருக்கிறது என்பதை விளக்கியும், அதனை ஆவனஞ்செய்ய வேண்டும் என வலியுறுத்தியும் வெளியிடப்பட்டது ஆகும். சிதம்பரனாரின் பெயரால் கப்பலோட்டும் நிலையைப் பெற்ற இந்தச் சமயத்தில் அதற்காகவே தங்களுடைய வாழ்க்கையை வறுமையின் இருப்பிடமாக்கிக் கொண்டவரின் குடும்பத்தைப் பற்றி எண்ணவும் அதற்கான ஒரு நல்ல ஏற்பாட்டை உதவியை செய்யவும் பொதுமக்களும், அரசாங்கமும் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

## நன்றி - கடமை

ஒப்பற்ற சேவை புரிந்த சிதம்பரனாருக்கு நாடு காட்டவேண்டிய நன்றியறிதலையும் செய்ய வேண்டிய கடமையையும் இதுவரை மறந்து இருந்ததுபோல இனியும் இருக்கக்கூடாது என்பதையும் இந்த சமயத்தில் நினைவூட்டுவதோடு செய்நன்றி சொல்லாத தமிழர் பண்பாட்டினை நிலைநாட்டவும், சிதம்பரனார் புகழ் என்றும் நிலைக்கவும், அவரது குடும்பம் மனவேதனையால் நொந்து போகாதபடி பார்த்துக் கொள்ளவும் இப்போதாவது தமிழ்மக்கள் முன்வந்து ஆவனஞ்செய்ய வேண்டும் என்பதே எனது வேண்டுகோளும் விருப்பமும் ஆகும்.

(13.02.49 "திராவிட நாடு" இதழ்.)




# இது சிதம்பரனார் உலவிய திருத்தலம்




முத்தமிழ் அறிஞர்
கலைஞர்

நாட்டுக்குப் பணியாற்றி, நாட்டு விடுதலைக்காக விழுப் புண்களை ஏற்றுக் கொண்ட வீரமறவன் வ.உ.சிதம்பரனாருடைய நூற்றாண்டு விழா, இன்று தமிழ்நாடெங்கும் தனிச் சிறப்போடு கொண்டாடப்படுகின்ற உணர்ச்சி மிகுந்த திருநாளாகும்.

இந்தத் திருநாளில் இந்தியாவினுடைய தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் நம்முடைய வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு தமிழகத்திற்கு வருகை தந்து அந்தத் திருமகன் பிறந்த தரணியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருப்பது தமிழ்நாட்டுத் தியாக வரலாற்றை – இந்தியாவினுடைய பிரதமர் எந்த அளவுக்கு மதிக்கிறார் பெருமைப்படுத்துகிறார் என்பதற்குச் சரியானதோர் அடையாளமாகும்.

அப்படிப்பட்ட பெருவிழாவில் இன்றைக்கு ஒரு தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் உள்ள உணர்வோடு – பொங்கி எழும் ஆர்வத்தோடு கலந்து கொண்டிருக்கிறார்கள்.

தூத்துக்குடி நகரத்திலே – கடற்கரை ஓரத்திலே நாமெல்லாம் கூடியிருப்பது போலத் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் சென்னை மாநகரத்திலும் வேறு பல மாவட்டத்



வ.உ.சி. நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 05.09.1972 அன்று வ.உ.சி. அவர்களின் சிலையை திருமதி. இந்திராகாந்தி அவர்கள் தூத்துக்குடியில் திறந்து வைத்தார்கள்.

தலைநகர்களிலும் கிராமப்புறங்களிலும் வீதி தோறும் இன்றைக்குச் சிதம்பரனாருடைய நூற்றாண்டு விழாவினை எழுச்சியோடு கொண்டாடிக் கொண்டிருப்பார்கள்.

இந்த நாளில் அந்தப் பெரியவருக்கு, அவரது தியாகத்திற்கு மரியாதை காட்ட அல்ல. அனைவருக்கும் வழிகாட்டியாக அமைய வேண்டும் என்கின்ற அவரது தியாகம் நமக்கெல்லாம் உருவாக வேண்டும் என்பதற்காகக் கூடச் சொல்லலாம் – அதற்காக, இந்தத் திருநகரிலே அந்தப் பெருமகனின் சிலையைத்திறந்து வைக்கின்ற பெரியதோர் நிகழ்ச்சியை நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

தமிழ்நாடு அரசின் சார்பில் முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலே விழாக்குழு அமைக்கப்பட்டு – அவர்களுடைய சீரிய பணியின் காரணமாகச் சிதம்பரனாரின் சிலை இங்கு அமைக்கப்பட்டுள்ளது. அந்தச் சிலையினை நம்முடைய பிரதமர் அவர்கள் திறந்து லைக்கிறார்கள்.

இந்தியாவின் விடுதலைக்குப் பாடுபட்டவர்கள் – கன்னியாகுமரி முனையிலிருந்து காஷ்மீர் வரை பல்லாயிரக்கணக்கான – பல இலட்சக்கணக்கான தியாகத் தொண்டர்கள் – அப்படிப்பட்டவர்களுக்குத் தலைமை தாங்கிய வீரர்கள் – வித்தகர்கள் – மறவர்குல மாணிக்கங்கள் சிதம்பரனாரைப் போல ஆயிரமாயிரம் பேர் இந்தியத் திருமண்ணிலே பிறந்தார்கள்; அவர்கள் இன்றைக்கு நம்மைவிட்டு மறைந்தார்கள் என்று சொன்னாலும் நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கிறார்கள் என்று சொல்லத்தக்க அளவுக்கு அவர்கள் நம் உணர்வுகளோடு ஒன்றிப்போய் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் திருத்தலம் சிதம்பரனார் உலவிய இடம்: இந்தத் திருத்தலத்தினுடைய ஓரத்திலே இருக்கிற கடலிலேதான் வெள்ளையனை எதிர்த்து முதல் முதலாக ஒரு தமிழ்ப் பெருமகன் கப்பலோட்டிக் காட்ட முடியுமென்று நெஞ்சுயர்த்தி அதற்கென ஒரு நிறுவனத்தை அமைத்து – கப்பலோட்டிக் காட்டி அதன் தொடர்பாக எழுச்சி மிகுந்த தியாக வரலாற்றின் சின்னமாக மாறி பேசினால் புயல் – எழுதினால் புயல் – தான் திலகரைப் பின்பற்றுகிறவன் என்கின்ற அளவுக்குத் தீவிரவாதத்திலே இறங்கி வெள்ளையனை விரட்டுதற்கு

வீரமிக்க போராட்டம் ஒன்று தேவை என்று முரசொலித்தார். அப்படி முரசொலித்ததன் காரணமாக நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு 20 ஆண்டுக்காலம் ஆயுள் தண்டனை ஒருமுறை அனுபவித்தால் போதாது; இருமுறை அனுபவிக்க வேண்டும் என நாற்பதாண்டுக் காலம் தண்டனை விதிக்கப்பட்டார். அதற்குப் பிறகு அப்பீலில் அது ஆறாண்டுக் காலமாகக் குறைக்கப்பட்டு அந்தப் பெருமகனார் சித்திரவதைக்கு ஆளானார். பல்வேறு சிறைச் சாலைகளிலே தனிமையிலே அடைக்கப்பட்டார்.

கோவைச் சிறைச்சாலையிலே செக்கிழுத்து கல்லுடைத்த முத்திரக் கலயத்திலே கஞ்சி வாங்கிச் சாப்பிட வற்புறுத்தப்பட்டு இந்த நாட்டினுடைய விடுதலைக்காகப் போராடிய மாவீரன் மறவர்குலத் தளபதி மறைந்த சிதம்பரனார் ஆவார்.




அந்தச் சிதம்பரனாருக்கு இங்கே நாம் சிலை எழுப்புகின்றோம். சிலை எழுப்புகின்ற இடம் தூத்துக்குடி நகரம் என்பது மாத்திரமல்ல மத்திய அரசுக்குச் சொந்தமான பகுதியில் துறைமுகப் பகுதியில் சிலை எழுப்பப்படுகிறது.

இன்னும் ஐந்தாறு ஆண்டுக் காலத்திற்குள்ளாக இந்தப் பகுதியிலே வானைத் தொடுகின்ற கட்டடங்கள் பல உயர்ந்து எழக்கூடும். பல தொழிற்சாலைகளுடைய புகைக் கூண்டுகளிலிருந்து கிளம்புகின்ற புகை ஆகாயத்திலே உலவிக் கொண்டிருக்கிற மேக மண்டலங்களோடு உறவாடக்கூடும்.

அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் எல்லாம் அமைய இருக்கின்ற இந்தப் பகுதியிலே எப்பொழுதும் மக்கள் புழங்கிக் கொண்டிருக்கின்ற இந்தப் பகுதியிலே கப்பலோட்டிய தமிழன் சிதம்பரனாருக்கு இன்றைக்கு நாம் சிலை எடுக்கின்றோம்.

சிலை எடுக்கின்ற இந்த நேரத்திலே தமிழகத்தின் சார்பில் இந்தத் திறப்பு விழாவிற்கு வருகை தந்து நம்மையெல்லாம் மகிழ்வித்திருக்கின்ற இந்தியாவின் பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்களுக்கு என்னுடைய நன்றியை, வணக்கத்தை மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வந்தவர்களிடத்திலே கோரிக்கைகளை எழுப்புவது நியாயமல்ல என்றாலும் ஒகோ! இதற்காகத்தான் நம்மை அழைத்தான் போலும், என்று அவர்கள் எண்ணிக் கொள்வார்களோ என்ற எண்ணம் தோன்றாமலில்லை. என்றாலும், ‘பல்வேறு மாநிலங்களில் அந்த மாநிலங்கள் எல்லாம் வளம் சேர்க்க நான் பாடுபட வேண்டாமா’ என்கின்ற கேள்விக் கணைகளை பிரதமர் அவர்கள் என்னைப் பார்த்துத் தொடுப்பார்கள் என்று எனக்குத் தெரிந்தாலும் நம்முடைய தேவைகளையும், நாம் சொல்லி வைத்தால் அது நடக்க வேண்டிய நேரத்தில் அம்மையார் அவர்களுடைய காலத்தில் நடக்க வேண்டிய நேரம் என்பது வேகமாக நடைபெறுகின்ற நேரம் – அந்த நேரத்திலே நடைபெறும் என்கின்ற காரணத்தினால் அவர்களிடத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

நீண்ட காலமாக நம்முடைய சுவனத்திலே இருந்து வருவதும் தமிழகத்தினுடைய தொழில் வளத்தைப் பெருக்கக் கூடியதும் தமிழ்நாட்டு மக்களுடைய வாணிபத்தைப் பெருக்கக் கூடியதும் – இந்தியாவினுடைய வாணிபத்தைப் பெருக்கக் கூடியதும், நமது மதிப்பிற்குரிய சுப்ரமணியம் போன்றவர்களுக்கெல்லாம் நீண்ட காலமாக உள்ளத்திலே உதித்தெழுந்த திட்டமாகுமென்கின்ற ஆசைக் கனவுகளை எழுப்பிக் கொண்டிருப்பதுமான சேது சமுத்திரத் திட்டத்தை விரைவிலே அளிக்க வேண்டுமென்று சிதம்பரனாருடைய சிலையைத் திறந்து வைக்கிற நேரத்திலே இந்தியாவினுடைய பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் பிரதமர் அவர்களுடைய முன்னிலையில் ஓர் அறிவிப்பைச் செய்கிறேன். இந்த அறிவிப்பு சென்னை மாநகரத்திலே




05.09.1972 வ.உ.சி. நூற்றாண்டு விழாவையொட்டி தூத்துக்குடியில் நடைபெற்ற வ.உ.சி. சிலை திறப்புவிழாவில் பாரதப்பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அவர்கள் வ.உ.சி. நினைவுத்தபால்தலை ஆல்பத்தை வ.உ.சி.யின் மூத்த புதல்வர் திரு. ஆறுமுகம் அவர்களிடம் வழங்கி வெளியிட்டார்கள்.

ஒரு பகுதி நீண்ட அடுங்காலமாக 'ஜார்ஜ் டவுன்' என்று அழைக்கப்பட்டு வருகிறது. அந்த ஜார்ஜ் டவுன் என்று அழைக்கப்படும் பகுதியை 'சிதம்பரனார் நகர்' என்று மாற்ற வேண்டுமென்று, 1947இல் இருந்து ஒரு கோரிக்கை இருந்து வருகிறது.

அந்தக் கோரிக்கையும் வெகு விரைவிலே நிறைவேற்றப்பட்டு சென்னையிலே உள்ள ஜார்ஜ் டவுன் சிதம்பரனார் நகராகும் என்கிற அந்த அறிவிப்பை நம்முடைய பிரதமர் அவர்களுடைய முன்னிலையில் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பெயர் மாற்றுவதா? இது ஒரு பெரிய அறிவிப்பா? என்று கேட்கக்கூடும். இலட்சியங்களுக்காகப் பெயர் மாற்றுவது முக்கியமானது என்பது அண்மையிலே பிரதமர் அவர்கள் சிம்லா மாநாட்டிற்குச் சென்றபோது – அங்கே ஒரு கட்டடத்திற்கு வைக்கப்பட்ட பெயரை – இலட்சிய நோக்கத்தோடு மாற்றச் சொன்னார்கள் என்கின்ற காரணத்தினாலேதான் அவர்களுடைய முன்னிலையிலே இந்தப் பெயர் மாற்றத்தை நான் இங்கே தெரிவிக்கின்றேன்.

வ.உ.சி.சிதம்பரனாருடைய பெயர் என்றும் நின்று நிலவக்கூடிய பெயர்.

வ.உ.சி.என்றால், வழக்கறிஞர்.

'உ' உரிமைக்காகப் போராடிய வாதாடிய வழக்கறிஞர். உரிமைக்காக வாதாடிச் சிறை புகுந்த வழக்கறிஞர்.

வ.உ.சி. என்பது வ.உ.சிதம்பரனார் என்பதை மாத்திரம் குறிப்பதல்ல உரிமைக்காக அவர்கள் வாதாடிச் சிறை செல்லவும் தயாராக இருந்த வ.உ.சி. அவர்களுடைய சிலையை நம் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் திறந்து வைக்க இருக்கிறார்கள் என்று கூறி சிதம்பரனார் அவர்களுடைய திருநாமம் வாழ்க: வாழ்க: இனிது நிலை பெறுக என்று எடுத்துரைத்து, நம் பிரதமர் அவர்கள் வ.உ.சி. அவர்களுடைய சிலையை இங்கே உங்கள் அனைவருடைய அன்பான வாழ்த்துகளோடும் திறந்து வைப்பார்கள் என்று கூறி அமர்கிறேன்.


(1972ஆம் ஆண்டு செப்டம்பர் 5ஆம் நாள் தூத்துக்குடியில் வ.உ.சி. சிலை திறப்பு விழாவில் ஆற்றிய உரை).

# கண்டோம் வ.உ.சி.யை





# ஆழ்ந்த தமிழ் ஆராய்ச்சி அறிஞர்



## நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கனார்

**சி**தம்பரம் பிள்ளை மிகவும் இனிமையான சல்லாபி. புதியதாக யாரைச் சந்தித்தாலும் அவர்களுடைய ஊர், பேர், தொழில், குடும்பநிலை முதலான க்ஷேமலாபங்களைப் பற்றிக் கொஞ்சமாவது பேசிவிட்டுத்தான் பிறகு வந்த காரியத்தை வாதிப்பார். வாதிப்பதில் மிக்க வல்லவர். பலமான எதிர்வாதம் ஏற்பட்டுக் கடுமையான பதங்களைப் பிரயோகித்து விட்டாலும் கோபங்கொள்ளாமல் முறை தவறிப் பேசாமல் நிதானமாக நியாயங்களை விளக்குவார். 1919ஆம் ஆண்டு கல்கத்தா காங்கிரசுக்கு நாங்கள் சென்றிருந்தபோது நாமக்கல் பிரதிநிதிகளாகிய எங்களுடன் பேச வந்தார். ஒரு நண்பர் எங்களை வ.உ.சி.க்கு அறிமுகம் செய்துவைத்தார். என்னைப் பற்றிச் சொல்லும்போது நான் கவிபாடத் தெரிந்தவன் என்றும் சொல்லப்பட்டது.

நான் திலகர் இறந்து போனதைப் பற்றிப் பாடியிருந்த இரங்கற்பாட்டுக்களின் அச்சடித்த பிரதிகள் எங்களிடம் இருந்தன. திலகரைப் பற்றிய புகழுரை என்றால் சிதம்பரனாருக்குத் தேவாமிர்தம் போன்றது என்பதை அறிந்த ஒரு நண்பர் "நீங்கள் திலகரைப் பற்றிப் பாடிய சரம கவிகளின் பிரதி இருக்கிறதா?" என்று என்னைக் கேட்டார். நான் பதில் சொல்லி முடிவதற்குள் எங்களுடன் வந்திருந்த வரத ராஜ முதலியார் என்ற நாமக்கல் அச்சுக்கூடச் சொந்தக்காரர் (அவர்தான் அந்தப் பாட்டுக்களை அச்சிட்டவர்) எங்கள் மூட்டைகளில் இருந்த

அந்த திலகர் சரமகவிகளின் பிரதி ஒன்றைச் சிதம்பரம் பிள்ளையவர்களிடம் கொடுத்தார். அதை வாங்கிய பிள்ளையவர்கள் அதிலிருந்து

**இடியது விழுந்ததோதான் இரும்பினைப் பழுக்கக் காய்ச்சி**
**இருசெவி நுழைந்ததோதான்**

**................**

**................**

**திடமுள தீரவீரன் திலகனார் மாண்டாரென்ற**
**தீய சொல் கேட்டபோது**

என்ற முதற் பாட்டை மட்டும் படித்துவிட்டு, "ஆம், ஆம், உண்மை, உண்மை, இடிதான் விழுந்துவிட்டது. இடி விழுந்துதான் நாம் இப்படிக் கதிகலங்கித் தடுமாறுகின்றோம்" என்று ஆரம்பித்து ஒரு நீண்ட பிரசங்கமே செய்துவிட்டார். "இந்தப் பாட்டுக்களை நிதானமாக படித்துப் பார்க்கிறேன்" என்று அதை மடித்துச் சட்டைப் பையிற் போட்டுக்கொண்டு சென்று விட்டார்.

பின்பு என்னை அழைத்துவிட்டார். என்னைக் கண்டவுடன் சிதம்பரம் பிள்ளையவர்கள் மிகவும் இனிய முகத்துடன் வெகு பரிவோடு வரவேற்றுப் பக்கத்தில் இடந்தந்து இருக்கச் செய்தார். தாம் ஒரு தலைவன், படிப்பில் பட்டம் பெற்றவன், தேசத்திற்காகக் கடுமையான சிறைவாசம் செய்த அரிய பெரிய தியாகங்களைச் செய்தவன். மற்ற மனிதர்களிடத்தில் இல்லாத பல சிறப்புக்கள் தம்மிடம் உண்டு என்பதான அகந்தை எண்ணங்கள் ஒரு சிறிதும் இல்லாத ஒருவர் சிதம்பரம் பிள்ளை, குழந்தையைப் போலக் குழைந்து பேசி என்னுடன் குலவினார்.

**"ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை**
**இருநிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே."**

என்றதன் உண்மையை அவரிடத்தில் அப்போது கண்டேன். நெடுநாள் பழகினவர் போல சிதம்பரம் பிள்ளை என்னுடன் பேசுவதைக் கண்ட ஆச்சாரியார் அதிசயம் அடைந்தவர் போல, 'இராமலிங்கம் பிள்ளையை உங்களுக்குத் தெரியுமா?' என்று சிதம்பரம் பிள்ளையைக் கேட்டார். உடனே பிள்ளையவர்கள் "நன்றாகத் தெரியும். இதோ பாருங்கள்" என்று தம் கையில் இன்னும் விரித்தபடியே வைத்துக் கொண்டிருந்த நான் பாடிய திலகர் சரம கவிகளின் அச்சுத்தாளை ஆச்சாரியாரிடம் நீட்டினார். அதை வாங்கிப் பார்த்துவிட்டு ஆச்சரியார் "ஓ! இதுவா? இது உங்களுக்கு மிகவும் பிடிக்கும்" என்றார்.

சிதம்பரம் பிள்ளை குலுங்கச் சிரித்துக் குதூகலம் மிஞ்சத் தம்முடைய இயல்பான கலகலத்தப் பேச்சில் கணீர் கணீரென்று சொற்களைக் கொட்டி என் கவிகளைப் புகழ்ந்தார். ஆச்சாரியார் பக்கம் திரும்பி "நானும் திலகரைப் பற்றி இரங்கற் பாட்டுகளைப் பாடினேன். இப்படி அமையவில்லை. உண்மையான கவித்திறம் எல்லோருக்கும் வருவதில்லை" என்று சொன்னார்.

சிதம்பரம் பிள்ளையைப் போன்ற ஒரு சிறந்த தேசபக்தர், தியாகமூர்த்தி, திலகர் பிரானுடைய பிரதம சிஷ்யர்களும் சிறப்புற்ற ஒருவர், அன்னை பாரததேவியின் விடுதலைக்காக மிகவும் கொடுமைகள் நிறைந்த சிறைவாசம் செய்து அருந்தவமாற்றிய அண்ணல், ஆழ்ந்த தமிழ் ஆராய்ச்சியுள்ள அறிஞர் அப்படி என்னைப் புகழ்ந்து தம் கவிகளைக் காட்டிலும் என் கவிகளில் உண்மைக் கவித்திறமிருப்பதாகச் சொன்னபோது நான் ஆனந்த பரவசம் அடைந்துவிட்டது அதிசயம் அல்ல. அப்போது என் வயது முப்பத்து மூன்று. பிள்ளையவர்களுடைய வயது நாற்பத்தெட்டு. வயதிலும், கல்வியறிவிலும் அனுபவத்திலும் தேச பக்தியிலும் தியாகத்திலும் என்னைக் காட்டிலும் என்னுடைய கவி உண்மைக் கவித்திறம் உள்ளது என்று சொன்னது அவருடைய சான்றாண்மைக்கு அறிகுறி என்று இன்றளவும் நான் எண்ணியெண்ணி இன்புற்று வருகிறேன்.

❖❖❖

# காந்தியும் வ.உ.சி.யும்

## என்.தண்டபாணிப் பிள்ளை
## (1882 - 1981)

**க**ப்பல் ஓட்டிய தமிழர் வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்களை 1905 ஆம் வருடம் நான் சிதம்பரம் ஸ்ரீ ஆறுமுக நாவலர் பள்ளியில் இறுதி வகுப்பில் படிக்கும்போது பத்திரிகை வாயிலாகவும், அன்பர்கள் வாயிலாகவும் பார்த்தும் கேட்டும் அறிந்தவன்.

நான் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் 10ஆம் வகுப்பில் படிக்கும்போது வ.உ.சி.யின் கப்பலோட்டுங் கிளர்ச்சியும், எழுச்சியும், அரசினரின் அடக்குமுறையும் பற்றிப் பத்திரிகைகளின் வாயிலாக அறிய வந்தேன்.

1915-1916ஆம் வருடங்களில், அன்னிபெசண்ட் அம்மையாரின் ஹோம்ரூல் கிளர்ச்சியில் ஈடுபட்டு எனது பெரிய இரயில் ஆடிட் உத்தியோகத்தை விட்டு அன்னிபெசண்ட் பத்திரிக்கையான நியூ இந்தியா ஆபீசுக்கு மேலாளராகி அவ்வமையாருடன் வேலை செய்தேன். இச்சமயம்தான் பெரம்பூரில் தங்கியிருந்த திரு. வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்களை நேரில் சந்தித்தேன். அவர்களுடன் திரு. வி.கல்யாணசுந்தர முதலியார் வீட்டிற்குச் சென்று அவரையும் வெஸ்லி கல்லூரி வேலையை விடும்படி செய்து, தேச ஊழியத்தில் இறங்கினோம். பெரம்பூர் பக்கிங்காம் ஆலை தொழிற்சங்க தொழிலாளர் உரிமைக்காக போராடினோம். வ.உ.சி.யும் திரு.வி.க.வும் அடிக்கடி அங்கு வந்து சங்கத்தில் தங்கி இருப்பார்கள்.

1919ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 6ஆம் தேதி பஞ்சாப் படுகொலை நடந்தபோது ஏப்ரல் 13ஆம் தேதி வரை ஒரு வாரம் மேற்படி வாரம் என வைத்துக் கிளர்ச்சி செய்தோம். ஊர்வலம் நடத்தினோம். கடற்கரையில் எனது தலைமையில் கூட்டம் நடந்தது. அக்கூட்டத்தில் வ.உ.சிதம்பரம் பிள்ளை வந்து ஒலி பெருக்கியில்லாக் காலத்தில் சிம்ம கர்ச்சனை செய்து மேல்நாட்டு வெள்ளாடுகள் கதறித் துடிக்கும்படியான சொற்பொழிவாற்றினார்.

அன்னிபெசண்ட், கல்கத்தா அகில இந்திய காங்கிரசிற்குத் தலைவியாகவும் - சரோஜினி தேவி, சென்னை மாநிலக் காங்கிரஸ்

காஞ்சிபுரம் மாநாட்டுத் தலைவியாகவும் இருந்து நடத்திய மிதவாதப் போக்கைக் கண்டித்து இந்திய தேசியச் சங்கம் என்ற தீவிரப் பொதுச்சங்கத்தைத் தோற்றுவித்து வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்கள் கிளர்ச்சி ஆரம்பித்தார்.

இத்துடன் பிராமணர்களுக்கு விரோதமான போராட்டம், குருகுலப் போராட்டமென்னும் பெயரால் தமிழ்நாட்டில் டாக்டர் பி.வரதராஜுலு நாயுடு, திரு.வி.க., ஈ.வெ.ரா. முதலிய பிராமணரல்லாதார் ஆகியோர் சேர்த்து ஆரம்பிக்கப்பட்டது. இதற்காக ஈரோட்டில் நடந்த பெரிய மாநாட்டில் சென்னை லாட் கோவிந்ததாஸ் தலைமை வகித்தார். ஈ.வெ.ராமசாமி வரவேற்பளித்தார். வ.உ.சி. முதலானவர்கள் தீவிரமாய் ஒத்துழைத்துப் பிராமணர்களிடமிருந்து காங்கிரசைக் கைப்பற்றி இராமசாமி நாயக்கரிடம் ஒப்படைத்தனர். பின்னர் இம்முறையே டாக்டர் நாயுடுவுக்கும், பின் திரு.வி.க.வுக்கும் கைமாறி காஞ்சிபுரம் மாநாட்டுக்குப் பின் திரு. கு.காமராஜ் வசமாகியது.

1919ஆம் ஆண்டு டிசம்பர் மாதக் கடைசியில் மகாத்மா காந்தியின் தலைமைக்கு மாறிய, அமிர்தசரசில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் மகாசபைக்கு மோதிலால் நேரு தலைமை வகித்தார். படுகொலைக்குச் சவாலாய் நடக்கும் இந்த மாநாட்டிற்குச் சென்னையிலிருந்து சுமார் 300 பேர் கொண்ட ஒரு தனி இரயில் புறப்பட்டது. அதில் அக்காலம் சென்னையில் உள்ள எல்லாப் பத்திரிகை ஆசிரியர்களும், கட்சித் தலைவர்களும், பாமர மக்கள் தலைவர்களும், தொழிலாளர் தோழர்களும் புறப்பட்டார்கள்.

நானும் நான்கு ஆலைத் தொழிலாளர் தலைவர்களையும் அழைத்துக்கொண்டு அதே இரயிலில் புறப்பட்டேன். வ.உ.சி.க்கும் வர விருப்பம். கையில் பணம் இல்லை. ஈ.வெ.ரா. தனக்கு ஒரு முதல் வகுப்புச் சீட்டு வாங்கித் தரும்படி எனக்குப் பணம் கொடுத்தார். நான் அதற்கு இரண்டு மூன்றாவது வகுப்பு அமிர்தசரசுக்குப் பெற்று, பாக்கிப் பணத்தை வ.உ.சி. திரும்பி வருவதற்காகச் செலவுக்குக் கொடுத்துவிட்டேன். நாயக்கர் என்னைக் கேட்டதற்கு, மாணிக்கவாசகர் குதிரைக்குக் கொடுத்த பணத்தைக் கொண்டு கோயில் கட்டிய கதையைச் சொல்லி சமாதானப்படுத்தினேன்.



இரயில் சென்னை மாகாணம் தாண்டிப் பூனா சென்றடைந்தது. ஒரு மாபெருங்கூட்டம் மாலை மரியாதைகளுடன் ஜே கோஷத்துடன் இரயிலை அடைந்ததும் ஒவ்வொரு முதல் வகுப்பு இரண்டாவது வகுப்பில் உள்ள தலைவர்களும், தங்களுக்குத்தான் மாலையென்று தலைகளை வெளியே நீட்டிக்கொண்டிருந்தனர். வந்தவர்கள், திலகர் சகாவான தீவிரவாதி கப்பலோட்டிய தமிழன் எங்கே என்று தேடிக் கடைசியில் மூன்றாம் வகுப்பில் உட்கார்ந்திருந்த வ.உ.சி.க்கு மாலையிட்டுத் தின்பண்டம் முதலியன தந்து வரவேற்புக் கொடுத்து வாயார வாழ்த்திச் சென்றனர். இதையறிந்த முதல் வகுப்பு மக்களில் ஒருவர் தம் முதல் வகுப்புச் சீட்டை வ.உ.சி.க்குக் கொடுத்து உதவினார். பஞ்சாப் போகும்வரை இதே உபசரிப்பு வ.உ.சி.க்குத்தான்.

1917–1918 வாக்கில் ஒரு பஞ்சம் வந்தது. ரூபாய்க்கு இரண்டு படி அரிசி விற்றது. சர்க்கார் ரூபாய்க்கு நான்குபடி விற்கச் சொல்லி நாள்தோறும் 5,000 பேர்களுக்குத் தலைக்கு ஒரு ரூபாய்க்கு மட்டும் விற்கச் சொல்லி என் பங்களாவையே கடையாக மாற்றி அதற்குரிய அரிசியை வழங்கி வந்தனர். நானும் அப்படியே செய்து வருங்காலை ஒருநாள் வ.உ.சி.யும், வந்து தனக்கு வரும்படி இன்மையால் எனக்கு உதவி செய்வதாக கூறினார். நானும் சம்மதித்து அவரை அரிசி கொண்டு வரவும் விற்பனை செய்யவும் அதிகாரம் கொடுத்து மாதம் 100 ரூபாய் ஊதியமாக கொடுத்து வந்தேன். அவர் போகும்போது தன் வீட்டுக்கும் ரூபாய்க்கு 4 படி அரிசி வீதம் பெற்றுப் போவது வழக்கம்.

வ.உ.சி. சிறையில் இருந்த காலத்தில் அவர் குடும்பத்திற்கு உதவி செய்ய, டர்பன் நகரிலிருந்து தில்லையாடி வேதியப்பிள்ளை என்பவர் 5,000 ரூபாய் வசூலித்து அங்கிருந்து இந்தியா திரும்பிய காந்தியடிகளிடம் கொடுத்தனுப்பினார். அதைக் காந்தியடிகள் இந்தியா வந்ததும் அரசியலுக்காக செலவழித்து, மறந்துவிட்டார். பிறகு வ.உ.சி. விடுதலையாகி வேதியப் பிள்ளையும், இந்தியா வந்த பின் (வேதியப் பிள்ளை என் முதல் மனைவியின் சகோதரியைத் திருமணம் செய்துகொண்டார்.) என்னிடம் சொல்ல, நானும் வ.உ.சி.யிடம் சொன்னேன். வ.உ.சி. தன்னிடமோ, தன் குடும்பத்தாரிடமோ இது தொடர்பாக யாதொரு தொகையும் கொடுக்கப்படவில்லை என்பதை உணர்த்தினார்.

உடனே 1920ஆம் வருடம் என நினைக்கிறேன். நானும் வ.உ.சி.யும் சபர்மதி சென்று காந்தியடிகளைக் கண்டு கேட்டதில் பணம் வேதியப்பிள்ளை கொடுத்தது உண்மையென்றும், அதை மறதியாய் வேறொரு வகையில் செலவிட்டதைக் கூறி வருந்தினார். திலகரைக் கண்டு இதுபற்றிச் சொல்லிவிட்டு பம்பாய் கோபாளி என்ற முஸ்லீம் பிரமுகரிடம் மேற்படியாரிடம் தன் கணக்கில் மேற்படி பணத்தை வட்டியுடன் பெற்றுக் கொள்ளும்படிக் கூறினார். நாங்களிருவரும் பூனா சென்று திலகரைக் கண்டோம். அவரும் உண்மை உணர்ந்து கோபாளிக்கொரு கடிதம் கொடுத்து, பணத்தை வட்டியுடன் பெறும்படியும், தவறினால் தானே வருவதாயும் கூறியுனுப்பினார். இருவரும் பம்பாய் சென்று கோபாளியைக் கண்டு கேட்டோம். உடனே வட்டியுடன் அவர் பணத்தை முழுவதையும் கொடுத்துவிட்டார். மகாத்மா மறதியால் செய்த தவறுக்கு வட்டியும் வாங்குவதா? என்று சிந்தித்து வட்டியைத் தள்ளிக் கொடுத்து 5,000 ரூபாய் மட்டும் வ.உ.சி. பெற்றுக்கொண்டார். பின்னர் இருவரும் எம்மூர் வந்து சேர்ந்தோம்.

வ.உ.சி. வழக்குரைஞர் சன்னதைப் புதுப்பிக்க தலைமை நீதிபதி அப்துல் ரஹீமிடம் அப்போதிருந்த சங்கரன் நாயருடன் வ.உ.சி.யும் நானும் சென்று மனுச் செய்துகொண்டோம். இது நடவாது என்று இராஜாஜி இதில் தலையிட மறுத்துவிட்டார். சங்கரன் நாயரும் பின் வாங்கிவிட்டார். முஸ்லீமாயிருந்தாலும் அஞ்சாநெஞ்சன் அப்துல்ரஹீம் வ.உ.சி.யை வழக்குரைஞர் வேலைக்குப் பரிந்துரை செய்து, தானும் மரியாதையாக வங்காளத்துக்கு மாற்றிக்கொண்டு போய்விட்டார்.

❖❖❖

# வ.உ.சி. சிறந்த தமிழ்ப் பெரியார்




**எஸ்.வையாபுரியார்**

**1907**ஆம் ஆண்டு, ஒருநாள் நான் கற்றுவந்த இந்து கலாசாலையில் மாணக்கரிடையே ஒரு பரபரப்பு உண்டாகி இருந்தது. அன்று மாலை சுமார் ஐந்தரை மணிக்குத் தூத்துக்குடியிலிருந்து தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை திருநெல்வேலிக்கு வந்து கீழரத வீதியில் அம்மன் சன்னதிக்கு எதிரே பேசப் போகிறார் என்று ஒரு வதந்தி.


குட்டையான சரீரம்; திரண்டு உருண்ட கை கால்கள்; உருண்ட முகம். நிறம் சற்றுக் கறுப்புத்தான்; மேலே கோட்டும் அங்கவஸ்திரமும்; தலையில் தலைப்பாகை. அவரைப் பார்த்தவுடன் முதலாவது இவர் என்ன பேச முடியும் என்றுதான் நினைத்தேன். ஆனால் பேசத் தொடங்கியச் சிறிது நேரத்திற்கெல்லாம் விஷயங்களைத் தெளிவாக எடுத்துச் சொன்னமுறை என்னை வசீகரித்தது. அன்னிய அரசாங்கத்தினர் நாம் சிறிதும் முன்னேற வொட்டாதபடி வாணிகம் முதலியன புரிந்து, நம் நாட்டுச் செல்வத்தைச் சுரண்டிக்கொண்டு போவதைக் குறித்து விஸ்தாரமாகப் பேசினார். ஒவ்வொருவனும் தேசாபிமானமுடையவனாக இருத்தல் வேண்டும் என்று வற்புறுத்தினார். இதைப் பற்றிப் பேசும்பொழுது அவர் தம்மையே மறந்து பரவசமாய் நின்று கேட்போர் உள்ளத்தை நேரடியாகத் தாக்கினார் என்று சொல்ல வேண்டும். சுமார் ஒரு மணி நேரம் பேசியிருப்பார். கேட்ட மக்கள் அனைவரும் மிக்கக் குதூகலமுற்றனர். நான் வ.உ.சி.யைக் கண்ட முதற்காட்சி இதுதான்.

சிறைத் தண்டனை பெற்று விடுதலையான பின் அவர் ஒரு புது மனிதராக மாறிவிட்டார் என்றே சொல்ல வேண்டும். இதுவரையும் தேசீய விஷயங்களில் உழைத்து வந்தவர் இப்பொழுது தமது தாய்மொழியாகிய தமிழின் பொருட்டு உழைக்க முன்வந்து சென்னையிலேயே சில ஆண்டுகள் தங்கினர். அப்பொழுது தொல்காப்பியத்தை இவர் கற்றுக் கொண்டிருந்த சமயம். என்னிடம் இளம்பூரணர் உரைப் பிரதி இருப்பதாகத் தெரிந்து எனக்கு வ.உ.சி. 1913இல் ஒரு கடிதம் எழுதினார். இக்காலம் முதல் வ.உ.சி.யும் நானும் நெருங்கிய இலக்கியத் தோழர்களாகிவிட்டோம். தொல்காப்பியம் பற்றி எனக்குப் பல விஷயங்களை எழுதி வந்தார்கள். நானும் இவர்களுக்குப் பல கடிதங்கள் எழுதியுள்ளேன். தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இவர்களால் வெளியிடப் பெற்றது.




நெடுங்காலத்திற்குப் பின், 1926ஆம் ஆண்டு இறுதியில் நான் சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியனாக வந்து சேர்ந்தேன். அப்போது வ.உ.சி. அவர்கள் வக்கீலாகத் தொழில் புரியத் தூத்துக்குடிக்குச் சென்று விட்டார்கள். ஒருமுறை சென்னை மயிலாப்பூரில் இந்து மத பரிபாலன சபையின் கமிஷனராக இருந்த டி.கே. சிதம்பரநாத முதலியாவரவர்கள் வீட்டிற்கு நானும் எனது நண்பர் பி.ஸ்ரீ.ஆச்சாரியாவும் சென்றிருந்தோம். அப்பொழுது அங்கே வ.உ.சி. இருந்தார்கள். இவர்களோடு வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தோம்.

எங்கள் பேச்சு முக்கியமாகத் திருக்குறளின் உரையைப் பற்றியதாக இருந்தது. பரிமேலழகர் உரை பல இடங்களில் பிழையாயுள்ளது எனவும், முதல் மூன்று அதிகாரங்கள் வள்ளுவர் இயற்றியன அல்ல எனவும் பிள்ளையவர்கள், தங்களுக்கு இயற்கையாயுள்ள ஆவேசத்தோடு பேசினார்கள். நான் இவர் பேச்சினிடையில் புகுந்து சிறிதும் உணர்ச்சிக்கு இடங்கொடாதபடி பரிமேலழகர் உரையின போக்கைப் பற்றியும் பொதுப்பட அதன் சிறப்புக்களைப் பற்றியும் முதல் நான்கு அதிகாரங்களின் அமைப்பைப் பற்றியும் சில வார்த்தைகள் பேசினேன். பல்வேறு வகையான எனது இலக்கிய முயற்சிகளைத் தெரிந்து பெரிதும் ஆதரவு காட்டினார்கள். எனக்கு வேண்டும் ஏட்டுப் பிரதிகளை வரவழைத்துக் கொடுப்பதாக வாக்களித்தார்கள். அவ்வாறே இவர்கள் மறையும்வரை உதவி புரிந்தும் வந்தார்கள். மேற்குறித்த நிகழ்ச்சிக்குப் பிற்பாடு அவர்கள் சென்னைக்கு வரும்பொழுதெல்லாம் என்னைக் காணாது திரும்புவதில்லை. என்னோடு சிலபொழுது தங்கியிருத்தலும் வழக்கம்.




1936இல் சென்னை சர்வ கலாசாலையில் தமிழாராய்ச்சித் துறைத் தலைவரது நியமனம் நடைபெற இருந்தது. அதற்கு நான் முயன்று வந்தேன். எனது உற்ற நண்பர்கள்போல் பாவித்து ஒழுகி, யாதொரு தகுதியுமற்ற தமக்கு அந்த வேலை கிடைக்க வேண்டும் என்று சிலர் முயற்சி செய்ததும் உண்டு. அச்சமயம் வ.உ.சி. அவர்கள் சென்னைக்கு வர நேர்ந்தது. பிறர் செய்யும் முயற்சிகளையெல்லாம் ஒருவாறு தெரிந்துகொண்டு, தாமே என்னிடம் வந்து, இம்முயற்சியில் நான் வெற்றி பெற வேண்டும் என்று எடுத்துக் கூறினார்கள். நாங்கள் இருவரும் பதிப்பித்த தொல்காப்பியப் பிரதிகள் சில தந்து, அவற்றை நியமனக் கமிட்டி அங்கத்தினர்களுக்கு அனுப்ப வேண்டும் என்று வற்புறுத்திச் சொன்னார்கள். உள்ளத் தூய்மையோடு கூறிய இந்த மொழிகள் எனக்குப் பெரியதோர் ஊக்கத்தைக் கொடுத்தன. இம்முயற்சியில் நான் வெற்றியும் பெற்றேன். இந்நிகழ்ச்சிக்குப் பின்பு விடுமுறைக் காலத்தில் நான் திருநெல்வேலியிலிருந்து தூத்துக்குடிக்கு வந்து வ.உ.சி. அவர்களைச் சந்தித்தேன். நாங்கள் இருவரும் ஒருநாள் முழுவதும் கலந்து பேசிக் கொண்டிருந்தோம். இதுவே வ.உ.சி. அவர்கள் எனக்கு அளித்த கடைசிக் காட்சி.

நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் நெருங்கிய சம்பந்தமுடையன. மொழிப் பற்றிலே தொடங்கி அதிலேயே நான் வாழ்ந்து வருகிறேன். தேசப்பற்று மொழிப்பற்றின் அடுத்தபடியாகத்தான் என் உள்ளத்தில் நிலவுகிறது. நாட்டுப் பற்றில் வ.உ.சி. அவர்கள் முனைந்து நின்று, பிற்காலத்தில் மொழிப் பற்றில் அமைந்துவிட்டார்கள்.

வ.உ.சி. அவர்களை நான் மறக்க முடியாது. அவரது சீரிய குணங்களை நினைக்கும்தோறும் எத்தனை சிறந்த தமிழ்ப் பெரியாரை நாம் இழந்துவிட்டோம் என்ற உணர்ச்சி வேலிட்டெழுகின்றது. அவர்களது உள்ளம் அன்பினால் எப்பொழுதும் குழைந்து நின்றது. கொழுந்து விட்டெரியும் அனல்போல, தேசபக்தியும் தாய்மொழிப்பற்றும் அவரது ஆன்மாவில் எப்பொழுதும் கனன்று ஜொலித்துக் கொண்டிருந்தன. இப் பெருமகனாரிடத்து அமைந்து கிடந்த பிள்ளைமையுள்ளம் தனிப்பட்ட வசீகர சக்தி வாய்ந்தது.

வ.உ.சி.யின் சரீரம் மறைந்துவிட்டது. ஆனால் அவரது பெரும்புகழ் தமிழ் மக்கள் உள்ளத்தில் என்றும் ஒளிர்ந்துகொண்டிருக்கும்.

❖❖❖

# தேசீய உணர்ச்சியை மிஞ்சிய இலக்கிய உணர்ச்சி



**பி.ஸ்ரீ.**

**மா**ணக்கனாக இருந்த காலத்திலே, வீரத்தமிழர் சிதம்பரம் பிள்ளையின் ஆவேச அரசியல் கிளர்ச்சியை நன்கறிந்திருந்தேன்.

திருநெல்வேலி ஹிந்து கலாசாலையில் பேசும் கலையையும் வாதமுறையையும் (ஆங்கில மொழியில்தான்) நாங்கள் கற்று வந்ததுடன், எங்களில் சிலர் பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்ளவும் ஆவல் கொண்டிருந்தனர். அதனால் அந்த காலத்தில் பொதுக்கூட்டம் கூட்டிப் பேசும் முறையைப் பிரசித்தமாக்கி, அரசியல் – பணியை இன்றியமையாத சமுதாயப் பணியாகக் காட்டிய சிதம்பரனார். என்னைப் போன்ற மாணாக்கர்களுக்கு ஒரு இலட்சிய புருஷராகத் திகழ்ந்ததில் அதிசயமில்லை.

1905ஆம் ஆண்டில் – அதாவது வங்காளப் பிரிவினை நடந்து அரசியல் கிளர்ச்சி ஓங்கியிருந்த அந்த ஆண்டிலே, சிறுவனாக இருந்த நான் வக்கீல் சாது கணபதியின் அலுவலகத்தில் சிதம்பரம் பிள்ளையை முதல் முதல் பார்த்தேன். சிந்தையின் துணிவும், செம்மையும் முகத்திலும் கண்களிலும் குடிகொண்டன. அப்போது அங்கே நடந்து கொண்டிருந்த சம்பாஷனணயின் பயனாக, தேச பக்தியைக் காட்டிலும், வேதாந்த பக்தியே இவருள்ளத்தைக் கவர்ந்திருப்பதாய் ஊகித்துக் கொண்டேன்.

ஆனால், இவரது வேதாந்தம் அந்த நாளில் நம்மவர் பேசிக் கொண்டிருந்த போலி வேதாந்தம் அன்று. விவேகானந்தர் சுட்டிக்




**அன்றைய குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேன் அவர்களும்**
**தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா அவர்களும்**
**உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலத்தைக் காண்கின்றனர்.**

காட்டிய வீரவேதாந்த நெறியிலே சமுதாயப் பணியும் நாட்டுப் பணியும் புரிவதுதான் நல்லதென்று எங்களுக்கும் இவர் புத்தி சொன்னார்.

விரைவில் இந்த 'வேதாந்தி'யின் பகீரத முயற்சிகளால், வங்க நாட்டிலே அரவிந்தரும், விபின்சந்திரரும் நடத்தி வந்த தேசீயக் கிளர்ச்சியும், புனாவில் திலகர் தலைமையில் நடந்த அரசியல் கிளர்ச்சியும், தமிழ்நாட்டின் தென்கோடியிலுள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் மற்றத் தமிழ் ஜில்லாக்களைக் காட்டிலும் அதிகமாய்ப் பரவிவிட்டன. பிள்ளையின் தேச பக்தி விவேகானந்த வேதாந்தத்தில் வேரூன்றி, திலகரின் அரசியல் ஞானம் என்ற நீர் பாய்ச்சப் பெற்று, ஒரு மதாவேசம்போல வளர்ந்துவிட்டன. அந்தத் தேசீய வெறியினால், தூத்துக்குடியும் திருநெல்வேலியும் கடல் கொந்தளிப்பதுபோல் கொந்தளிக்கத் தொடங்கிவிட்டன. அந்தக் கொந்தளிப்பிலே சுக்கான் இழந்த கப்பல் போல் திரிந்தது மாணாக்கர்களின் உள்ளம்.

அத்தகைய காலத்திலே, 'ஒட்டை உடைசல்' இல்லாத இராஜாங்க விசுவாசம் ஓங்கி, வெள்ளை அதிகாரிகள் என்றால் சிம்ம சொப்பனமாக இருந்த நாளிலே – வெள்ளையருக்குச் சிம்மசொப்பனமாகிவிட்டார் வீர சிதம்பரனார்! 'வெள்ளைப்



பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே!' என்ற பாரதி பாட்டைப் பாடிக்கொண்டே சிதம்பரம் பிள்ளை பேசும் கூட்டங்களுக்கு நாங்கள் போவதுண்டு.

திரு. சிதம்பரம் பிள்ளை 1908ஆம் ஆண்டு ஜூலை மாதம் இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப் பெற்றதும், மேலே சொன்ன பாடல்களைப் பகிரங்கமாய்ப் பாடுவதற்கு எங்களுக்குப் பயந்தான். எனினும், இந்தப் பாடல்களே பாடப் புத்தகங்களிலுள்ள பாடல்களைக் காட்டிலும் எங்களுக்குச் சுவையுள்ளனவாகத் தோன்றின. இப்பாடல்களைப் பாடிப்பாடி வ.உ.சி.யின் வீரப் பேச்சுக்களையும், அந்த வீரத் திருமுகப் பொலிவையும், அந்தப் பேரன்பு ததும்பிய பார்வையையும், நாகவாசம் போன்ற அந்தக் கொடிய சிறைவாசத்தையும் நினைந்து நினைந்து கண்ணீர் வடித்திருக்கிறேன்.

சிதம்பரம்பிள்ளை ஜஸ்டிஸ் கட்சியை அபிமானித்து, அந்தச் சொல்வாக்கினால் கோவில்பட்டியில் வழக்கறிஞராக இருக்கிறார் என்று கேள்விப்பட்டுப் பார்க்கப் போனேன். பாரதியார் இறந்துபோன மறுவருஷம் என்று ஞாபகம். மாணாக்கனாக இருந்த காலத்தில் நான் இவரைத் தூத்துக்குடியின் பிரபல வழக்கறிஞராகவும் தேசப் பெருந் தலைவராகவும் பார்த்திருந்த கண்களால் கோவில்பட்டியில் சாதாரண வழக்கறிஞராக உழைத்து வந்ததையும் பார்த்தேன். என் பிள்ளைப் பிராயத்தில் அரசியல் குருவாக என்னால் மதிக்கப்பட்டிருந்த பெரியார் சற்றும் கூச்சமின்றி என்னை ஒரு தோழனாக மதித்துப் பழகத் தொடங்கிவிட்டார். நாங்கள் இருவரும் நெருங்கிய நண்பர்களானோம்.

இந்த நிலைமையிலும், பிள்ளை அவருக்கு வகுப்புப் பகைமையாவது வகுப்புவாத உணர்ச்சியாவது சிறிதும் கிடையாது. தேசீய உணர்ச்சியைக் காட்டிலும் இலக்கிய உணர்ச்சி அதிகமாக இருந்தது என்று சொல்லலாம். நான் பார்த்தபோதெல்லாம் திருக்குறளும் கையுமா யிருப்பார். கம்பராமாயணத்திலும் விசேஷ விருப்பம் உண்டு.

அப்போது நான் கோயில்பட்டியில் கம்பராமாயணச் சொற்பொழிவுகள் செய்தேன். திரு. சிதம்பரம்பிள்ளை தவறாது வருகை புரிந்து சிறப்பித்தார். தலைமை தாங்கிச் சிறப்பித்ததும் உண்டு. வள்ளுவரையும் கம்பனையும் தமிழர் அனைவரும் கற்க வேண்டுமென்று இவர் அந்த நாளில் அடிக்கடி நண்பர்களிடம் கூறுவதுண்டு. 'அது தர்ம சாஸ்திரம்; இது சகோதர தர்ம சாஸ்திரம்; அதன் விளக்கம் இது' என்று கூறுவார்.

ஒரு சமயம் இராவணனுடைய கிங்கரர்கள் அனுமனால் வதம் செய்யப்பட்டதை வருணிக்கும் பகுதியைப் பிரசங்கத்தினிடையே குறிப்பிட நேர்ந்தது. 'அவர்கள் கூட்டங் கூட்டமாக அவிந்து போனார்கள்' என்பதற்குக் கவிஞன் உபமானம் காட்டுகிறான். ஒரு நீதிமன்றம் அங்கே சாட்சிக் கூட்டில் நிற்கிறான் ஒருவன். அஞ்சாமல் நெஞ்சறியப் பொய் சொல்லுகிறான், ஏதோ, லாபம் கிடைத்துவிடும் என்று. ஆனால் கிடைப்பதென்ன? 'ஐயோ வம்ச நாசமாகப் போகிறானே!' என்று ஒரு காட்சியை அகக்கண்முன் காட்டி, அப்படிக் கூட்டங் கூட்டமாக அவிந்து போகிறார்கள். போர்களத்திலே கிங்கரர்கள் என்பதை உணர்த்துகிறான் கவிஞன். இப்படிப் பாட்டை நான் விளக்க முயன்றதும் திரு. சிதம்பரம் பிள்ளை மாலைமாலையாகக் கண்ணீர் வடித்தார்.

நானும் மற்றவர்களும் அதிசயமாய் இவரை உற்று நோக்கினோம். தழதழத்த குரலில் இவர் எங்களை நோக்கி "சாட்சிகள் மட்டுமா? வக்கீல்களாகிய நாங்களும் அப்படித்தானே சில சமயங்களில் நெஞ்சாரப் பொய் சொல்லவும் துணிகிறோம். நீதிக் கோயிலிலே?" என்று சொன்னார். 'என்ன தங்கமான இதயம்! என்று நான் திகைத்து, 'இன்று இவரைப் புதிதாக அறிந்துகொண்டோம்' என்று எண்ணமிடலானேன்.

பிரசங்கம் முடிந்ததும் திரு பிள்ளை அவர்கள் என்னைத் தம் இல்லத்திற்கு அழைத்துக்கொண்டு போனார். "நீங்கள் சொன்ன அந்தப் பாட்டைக் கேட்ட பிறகு இந்த வக்கீல் தொழிலும் பாவமானதுதான், விட்டுவிடலாமா என்றே தோன்றுகிறது" என்றார். திருக்குறளை ஓதி ஓதிப் பண்பட்டிருந்த உள்ளத்தை அந்தக் கம்பன் பாட்டு அந்தப் பாடுபடுத்தியதில் அதிசயம் இல்லை என்று எண்ணினேன்.

சில ஆண்டுகளுக்குப் பின்பும் நான் இவரைச் சந்தித்தது உண்டு. மறுபடியும் சுதந்திர உணர்ச்சியும் அதிகரித்திருக்கக் கண்டேன். நாடோ அந்தக் கடைசிக் காலத்திலும் இவரை உள்ளபடி உணர்ந்து கௌரவிக்கத் தவறிவிட்டது என்றே நினைக்கிறேன்.

1936 ஆம் ஆண்டின் இறுதியில் திரு. சிதம்பரம் பிள்ளை இறந்ததைக் கேள்வியுற்றதும் இளமைப் பருவத்திலிருந்து நான் இவரால் அடைந்திருந்த நன்மைகளை நினைந்து நினைந்து வருந்தினேன். தமிழ்க்காதலிலும், தேசக் காதலிலும் எத்தனையோ பெரியோர்களுக்குக் கடன் பட்டிருக்கிறேன். பாரதியாருக்குப் பெரிதும் கடன்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டிலே தேசீய இயக்கம் நிலைபெறுவதற்கு ஒரு பெருங்காரணமாகவிருந்த திரு. சிதம்பரம் பிள்ளைக்கு என் வாழ்க்கையை உருவாக்கியதிலும் ஒரு முக்கியமான பங்கு உண்டு.


❖❖❖

# கட்டுரைகள்




வந்தேமாதரம்
வ.உ.சிதம்பரம் கல்லூரி

# வ.உ.சி.யின் தமிழ் அறவுணர்வு வாழ்க்கை!



பேராசிரியர்
**வீ.அரசு**

**தமிழ்ச் சமூகத்தில், ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பதுக்கு முன் உருவான அரசியல் தலைவர்கள் நால்வரை அடையாளப்படுத்தலாம். அவர்கள் வள்ளியப்பன் உலகநாதன் சிதம்பரம் எனும் வ.உசி. (1872–1936), மயிலாப்பூர் சிங்காரவேலர் எனும் ம.சிங்காரவேலர் (1860–1946), ஈரோடு வெங்கடாசலம் இராமசாமி எனும் ஈ.வெ.ரா. (1879–1973) மற்றும் பச்சைமுத்து ஜீவானந்தம் எனும் ப.ஜீவானந்தம் (1907–1964) ஆவர். இவர்கள், தமிழ்ச் சமூகத்திற்கெனத் தங்களை ஒப்படைத்துக் கொண்டவர்கள். இவர்களைக் கொண்டாட வேண்டிய தேவை தமிழ்ச் சமூகத்திற்குண்டு.**

இதில் முதலாமவராக வரும் வ.உ.சி. அவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலங்களில், ஐரோப்பியர் ஆதிக்கத்தில் இருந்த இன்றைய இந்தியா என அழைக்கப்படும் நிலப்பகுதியில் உருவான அரசியல் இயக்கங்களில் உள்வாங்கப்பட்டு இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரை (1898 – 1936) சுமார் நாற்பது ஆண்டுகள் சமூகப் பொதுவெளியில், அரசியல் செயல்பாட்டாளராக இயங்கினார்.

வ.உ.சி. தன்னைச் சுற்றியுள்ள உலகச் செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வைத் தமது பதின்பருவத்திலேயே பெற்றார். 1898இல் ஒட்டப்பிடாரம் ஊரில் நடந்த காங்கிரஸ் மகாசபை எனும் அமைப்பின் கூட்டத்தில் பங்கேற்றார். அப்போது இளம் வழக்கறிஞர். இந்தச் சூழலில் ஐரோப்பியர்களுக்கு அடிமைப்பட்டிருந்த இந்தியச் சூழலைப் புரிந்து செயல்படத் தொடங்கினார்.

சமூக அவலங்கள் குறித்த புரிதலும் அதனை எவ்வாறு அகற்றுவது என்பது குறித்த செயல்பாடும் இயல்பாகவே அவரது இளம்வயதுப் புரிதலாக வடிவம் பெற்றது. தமது இருபதாவது வயதுமுதல் பொதுவெளியில் செயல்படத் தொடங்கினார். அன்றையச் சூழலில் உருவாகி வந்த காங்கிரஸ் என்ற அமைப்பு அவரது ஊரிலேயே செயல்படத் தொடங்கிய போது, அதில் தன்னை இணைத்துக் கொண்டார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதிக் காலங்களில், வங்காளத்தில் ஐரோப்பியர்களின் ஆதிக்கத்துக்கெதிரான இயக்கங்கள் உருப்பெற்றன. சமய மறுமலர்ச்சிக்கென இயக்கங்களும், இந்திய அடிமைக்கெதிரான செயல்பாடுகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டன. இராமகிருஷ்ணர் இயக்கமும் இந்த வகையில் செயல்படத் தொடங்கியது. இவ்வியக்கத்தின் தொடர்பு கிடைக்கப்பெற்ற வ.உசி. அந்த இயக்கம் முன்னிறுத்திய சுதேச கட்சி, சுயராஜ்ஜியம் எனும் கருத்துநிலைகளை உள்வாங்கினார். இவற்றை நடைமுறைப்படுத்தும் நோக்கில் தூத்துக்குடியில் அமைப்புகளை உருவாக்கினார்.

இந்தக் கட்டத்தில் இதனை வெளிப்படுத்த விவேக பாநு எனும் இதழை 1905இல் வெளிக்கொண்டு வந்தார். அதில் அவர் எழுதிய முதல் கட்டுரை, அவர் எவ்வித மனிதராகத் தம்மை வெளிப்படுத்திக் கொண்டார் என்பதை அறிய வாய்ப்பாக உள்ளது. சமூகப் பொதுவெளியில் பேசுபொருளாக இருந்த சமய மரபுகள்; அதற்கு மூலமாக அமையும் கடவுள் கோட்பாடு ஆகியவை முக்கியமாகும். இதில் கடவுள் பற்றிய வ.உ.சி.யின் 1901ஆம் ஆண்டின் பதிவு, அவரது சிந்தனை மரபைப் புரிந்துகொள்ள உதவும். இந்த மரபின் வளர்ச்சி சார்ந்த தொடர்ச்சியாகவே அவரது வாழ்க்கைப் பயணம் நிகழ்ந்தது. இதன்மூலம் மனிதனின் சுயசிந்தனை மரபுக்கு, அவர் கொடுத்த இடத்தை அறிந்துகொள்ள முடிகிறது.

சுயம் என்பதைத் தனிமனித வாழ்க்கையில் முதன்மைப்படுத்திய அவர், சமூக வாழ்விலும் சுதேசியம் என்பதைத் தேர்ந்து கொண்டார் என்பதே அவரது. வாழ்க்கையாக அமைகிறது. அடிமையிலிருந்து விடுதலை என்பது, சுதேசியத்தைக் கட்டியமைப்பதுதான் என்று அவர் உறுதியாக நம்பினார். அதன் வெளிப்பாடாகத்தான், சுதேசாபிமானம் எனும் கருத்துநிலையை முன்னெடுக்கத் தொடங்கினார்.

சுதேசம் பற்றிய அவரது நிலைப்பாடுதான், சுதேசி கப்பல் கம்பெனியை உருவாக்குவதற்கும் அடிப்படையாக அமைந்தது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இவ்வகையில் அவர் செயல்படப் பின்வரும் இரண்டு செயல்களே அவரது முதன்மையான அரசியல் செயல்பாடுகளாக அமைந்தன. அதுவே அவரது வாழ்க்கைப் போக்கின் அடையாளங்களாகவும் வடிவம் பெற்றன.

- சுதேசிக் கப்பல் நிறுவனம் உருவாக்கி, அதனை நடைமுறைப்படுத்திய செயல்.
- கோரல் மில் எனப்படும் ஆலையில் தொழிலாளர்களைத் திரட்டி நடத்திய போராட்டம், அதன் பல பரிமாணங்கள்.



**வ.உ.சி. தனது முதல் மனைவி வள்ளியம்மையாருடன்**

பிரிட்டிஷாரின் அதிகார ஆதிக்கத்தை எதிர்கொள்ள பொருளாதார அடிப்படையிலும் செயல்பட வேண்டும் என்று



வ.உ.சி. கருதினார். எனவே, அவர் பிரித்தானியர்கள் நடத்திய கப்பல் நிறுவனங்களுக்கு மாற்றாக இந்தியர்களும் கப்பல் நிறுவனத்தை உருவாக்கிச் செயல்படத் திட்டமிட்டார். ஆட்சி அதிகாரத்திற்கு எதிரான போராட்ட வடிவமாகவே, வ.உ.சி. சுதேசிய நாவாய்ச் சங்கத்தை உருவாக்கினார் என்று கருத முடியும். இந்திய விடுதலைப் போராட்டத்தில் பொருளாதாரக் கண்ணோட்டத்தோடு செயல்பட்ட வ.உ.சி.யைப் புரிந்துகொள்ள முடிகிறது.

வ.உசி. மக்கள் நலச் செயல்பாட்டில் வழக்கறிஞராகச் செயல்பட்டதோடு, பல்வேறு மக்கள் நல அமைப்புக்களை உருவாக்குவதில் அக்கறை செலுத்தினார். தூத்துக்குடியில் கூட்டுறவுத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு, உழவர்கள், வெகுமக்கள், தொழிலாளர்கள் ஆகிய அனைத்துப் பிரிவு மக்களுக்கும் அமைப்புகளைக் கட்டுவதில் மும்முரமாக இருந்தார். சென்னையில் செயல்பட்ட ஜனசங்கம் என்ற அமைப்போடு தொடர்புகொண்டு, அதன் கிளை அமைப்பைத் தூத்துக்குடியில் உருவாக்கினார். இவ்வகையில்தான் தொழிலாளர் சங்க உருவாக்கத்தையும் அவர் கையில் எடுத்துக்கொண்டார்.

தூத்துக்குடி பகுதியில் செயல்பட்ட கோரல் மில் எனும் தொழிற்சாலையில், தொழிலாளர்கள் கொடுமையாகச் சுரண்டப்படுவதை அறிந்தார். மிகக் குறைந்த கூலிக்குப் பன்னிரண்டு மணி நேரத்துக்குமேல் தொழிலாளர்கள் உழைக்கும்படி மில் நிர்வாகம் கட்டாயப்படுத்தியது. அவர்களுக்காக போராடினார். தொழிலாளர் வேலைநிறுத்தம் வெற்றி பெற்றது. ஆலை நிர்வாகம்



சம்பளத்தை உயர்த்தியது. வேலை நேரத்தைக் குறைத்தனர். விடுமுறை நாள்களை அறிவித்தனர். இந்தப் போராட்டம், இந்தியாவில் வெற்றிபெற்ற முதல் தொழிற்சங்கப் போராட்டமாக அமைந்தது.

வெள்ளைக்கார முதலாளிகள் வ.உ.சி.யின் இவ்வகையான செயல்பாடுகளால், மிகுந்தகோபம் கொண்டனர்.

வங்கத்தின் விபின் சந்திரபால் சிறைப்படுத்தப்பட்டு விடுதலை பெற்றார். அதனை வ.உ.சி.யும் சுப்பிரமணிய சிவாவும் பொதுக்கூட்டங்களை நடத்திக் கொண்டாடினார்கள். இதனைக் காரணமாகக் கொண்டு அவர்களைச் சிறைப்படுத்தியது வெள்ளை அரசு. வ.உ.சி., சுப்பிரமணிய சிவா, பத்மநாபன் ஆகியோரைச் சிறையில் அடைத்தனர். இதில் வ.உ.சி. கொடுமையான சிறைத்தண்டனைகளை அனுபவித்தார்.

இந்தப் பின்புலத்தில் அவரை 1908ஆம் ஆண்டு மார்ச் 13ஆம் தேதி சிறைப்படுத்தினார். 1912ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ஆம் தேதி சிறையிலிருந்து அவர் வெளியே வந்தார். இளமைக் காலம் தொடங்கி, பெரும் போராட்ட வாழ்வை முன்னெடுத்து, சிறைப்பட்ட வ.உ.சி.யின் (1898–1912) ஒரு கட்ட வாழ்க்கையே, தமிழ்ச் சமூகத்தின் பொதுவெளியில், காலம் தாழ்ந்து, ஊடகங்களின் வழி அறியப்பட்டது. அதுவே அவருக்குக் கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல் எனும் வீரார்ந்த படிமங்களாக உருப்பெற்றன.



லாலா லஜபதிராய், பால கஙகாதர திலகர், விபின் சந்திரபால்

1898–1912 ஆண்டுகள் அவரது வாழ்க்கையின் ஒரு பரிமாணம் எனில் 1913–1936 ஆண்டுகள், அவரது வாழ்க்கையின் இன்னொரு பரிமாணமாக அமைந்தது. அவரது இருப்பு என்பது இருவேறு காலங்களில் இருவேறு தன்மைகளாகச் செயல்பட்டதைப் பார்க்க முடிகிறது. சுமார் நாற்பது ஆண்டுகள் சமூகப் பொதுவெளியில் செயல்பட்ட வ.உ.சி. அவர்களின் முதல் இரண்டு தசாப்தங்கள் வேறாகவும் இறுதிக்கால இரு தசாப்தங்கள் வேறாகவும் அமைந்தது.

வ.உ.சி. சிறையிலிருந்து வெளிவந்த காலத்தில், அவருடைய குருவாகக் கருதப்பட்ட திலகரின் அரசியல் நிலைப்பாடுகளில் மாற்றங்கள் உருப்பெற்றிருந்தன. அச்சூழலில் காந்தியார் இந்திய அரசியலில் செயல்படத் தொடங்கியிருந்தார். திலகரின் தீவிரவாத அரசியலில் ஈடுபாடு கொண்ட வ.உ.சி. நான்கரை ஆண்டுகள் சிறைப்படுத்தப்பட்டு இருந்தபோது, காங்கிரஸ் அமைப்பின் செ யல்பாடுகளில் புதிய மாற்றங்கள் உருப்பெற்றிருந்தன.

காந்தி, ஒத்துழையாமை இயக்கம் போன்ற அரசியல் இயக்கங்களை உருவாக்கியிருந்தார். இவ்வகை இயக்கங்களுக்குத் திலகர் ஆதரவு தரும் மனநிலையில் இருந்தார். ஆனால் வ.உ.சி.யால் அதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தை மனதளவில் ஏற்க முடியாதவராக இருந்தார். இந்த மனநிலையோடு, தமது இறுதிக் காலம் வரை காங்கிரஸ் அமைப்பில் தொடர்ந்தார்.

திலகர் 1920இல் மறைந்தார். வ.உ.சி. தனது தலைமையை இழந்த மனநிலைக்கு ஆளானார். திலகர் அலை என்பது காந்தியார் அலையாகக் காங்கிரஸில் வடிவம் பெற்றது. இது வ.உ.சி.க்கு உடன்பாடு இல்லை.

திலகர் உள்ளாட்சி இயக்கம் (1915) ஒன்றை உருவாக்கியிருந்தார், இதன் தொடர்ச்சியாகவே பிரித்தானியர்கள் இரட்டை ஆட்சி முறை என்ற கருத்து நிலையைப் பின்னர் உருவாக்கினர். ஹோம்ரூல் இயக்கம் (1916) எனும் பெயரில் அன்னிபெசன்ட் அம்மையார் செயல்படத் தொடங்கினார். இதனைத் திலகர் ஏற்றுக் கொண்டவராகவே இருந்தார்.

தமிழகத்திலிருந்து செயல்பட்ட அன்னிபெசன்ட் அம்மையாரின் அரசியல் செயல்பாடுகளை வ.உசி. முழுமனதாக ஏற்றுக்கொள்ளவில்லை. 1917இல் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் அன்னிபெசன்ட் தலைமையேற்றார். அம்மாநாட்டில் பங்கேற்று, தமிழ்நாட்டுக்குத் திரும்பியபின், தான்

காங்கிரஸ் அமைப்பிலிருந்து வெளியேறுவதாகவும் வ.உ.சி. அறிவித்தார். இவ்வகையில் தனது குருவாகக் கருதிய திலகர் கருத்துநிலை, அன்னிபெசன்ட் அம்மையார் கருத்துநிலை, காந்தியாரின் கருத்துநிலை ஆகியவற்றில் முரண்பட்டவராக 1913–1917 காலங்களில் வ.உ.சி. இருந்தார்.

இக்காலங்களில் இவர் பொருளாதார நிலைமையில் பெரும் துன்பத்தைச் சுமந்து வாழ்ந்து கொண்டிருந்தார். எனவே 1918ஆம் ஆண்டு முதல் தனது செயல்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டார். சென்னை, கோவை, நாகப்பட்டினம் ஆகிய பகுதிகளில் உருவான தொழிற்சங்க உருவாக்கத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். 1918 முதல் 1928 வரை இவ்வகையில் அவரது பல்வேறு தொழிற்சங்கப் பணிகள் குறித்து அறிய முடிகிறது. சென்னை பின்னி ஆலை தொழிற்சங்கப் பணிகளில் நேரடியாகப் பங்குகொண்டார்.

இக்காலக்கட்டத்தில் 'சென்னை மாகாண சங்கத்தில்' இயங்கினார் வ.உ.சி. காங்கிரஸ் அமைப்பில் இருந்த பிராமணரல்லாதோர் உருவாக்கிய அமைப்பு இது. இதில் வ.உ.சி. தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார். இதன்மூலம், அன்றைய சூழலில் பெரியார் ஈ.வெ.ரா. அவர்களால் முன்னெடுக்கப்பட்ட வகுப்புரிமைப் போரின் ஆதரவாளராகவும் தம்மை வெளிப்படுத்திக் கொண்டார்.

இதன்மூலம் பெரியாரோடு அவருக்கு நெருக்கமான உறவு உருப்பெற்றது. தமிழ்ச் சமூகத்தில் பேசுபொருளாக இருந்த சமூகநீதி என்பது அன்றைய சுயமரியாதை இயக்கம் முன்னெடுத்த வகுப்புரிமை. இதில் வ.உசி. தம்மை இணைத்துக் கொண்டார். காங்கிரஸ் அமைப்பினரால் வ.உசி. புறந்தள்ளப்படுவதற்கும் இக்கருத்துநிலை காரணமாயிற்று.

மேற்குறித்தவாறு அரசியல்போராளியாக வாழ்ந்த வ.உ.சி. அவர்களின் இதழியல், மொழியாக்கம், அரிய தமிழ்ச் செய்யுட்கள் உருவாக்கம், அறநூல் உருவாக்கம், பதிப்புத்துறை ஈடுபாடு, உரை எழுதுதல், தன்னைப்பற்றியும் பாரதி பற்றியும் உருவாக்கிய தன் வரலாற்று ஆக்கங்கள், திலகர் வரலாறு எழுதியமை ஆகியவை சார்ந்த கருத்துநிலை பங்களிப்புகளாக அமைந்துள்ளன.

சைவக் குடும்பப் பின்புலத்தில் பிறந்து வளர்ந்த வ.உ.சி., சைவ மரபுகள் குறித்த ஈடுபாடுகள் உடையவராக வாழ்ந்தார். வேதாந்தமும் சித்தாந்தமும் வேறுவேறல்ல. இரண்டும் அடிப்படையில் ஒன்றுதான் என்ற கருத்தை, தாம் உரை எழுதிய சிவஞான போதம் நூலில் பதிவு செய்துள்ளார்.


சைவ மரபினர் என்றாலும் அம்மரபில் சீர்திருத்தங்களை முன்னெடுத்தவர். பிற சமய மரபுகள் மீது முரண்பட்ட கருத்துநிலை அவருக்கு என்றும் உருவானதில்லை. சமயம் என்பது மனித வாழ்க்கையின் அடிப்படைகளைப் போதிக்கும் சமூக நிறுவனம் என்று அவர் கருதினார்.

மனித மனம் என்பது எவ்வாறு அற மரபு சார்த்து செயல்பட வேண்டும் என்ற புரிதலும் தமிழ்ச் சூழலில் உருவான அற மரபுகள் குறித்த தேடலும் வ.உ.சி.யிடம் இருந்தது. தமிழ் அறமரபு குறித்த ஈடுபாடு மிக்கவராக வ.உ.சி. இருந்தார். இதுவே அவரை இயக்கியது.

**(வ.உ.சி. பன்னூல் திரட்டு – நூலுக்கு**
**பேராசிரியர் வீ.அரசு எழுதிய முன்னுரையின் சில பகுதிகள்)**

❖❖❖

# வ.உ.சி.யின் பொருளாதார தேசியம்




ஆ.சிவசுப்பிரமணியன்

**இந்திய விடுதலை இயக்க வரலாறானது நெடிய பாரம்பரியம் கொண்ட ஒன்று. பதினெட்டாவது நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தொடங்கி, பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியின் இறுதியில் இந்தியா என்ற நாடாக உருப்பெற்று விடுதலை அடையும் வரை பல்வேறு வரலாற்று நிகழ்வுகளை எதிர்கொண்டு அது வளர்ந்து வந்துள்ளது. இவ் வரலாற்று வளர்ச்சிப் போக்கில் இந்தியாவின் விடுதலை இயக்கமானது ஒன்றுக்கொன்று மாறுபாடான அரசியல் சமூகச் சிந்தனைகளுக்கு ஆட்பட்டதுடன், பல்வேறு ஆளுமைகளின் தலைமையை ஏற்று வெகுமக்கள் திரளின் பங்களிப்பையும் பெற்று வெற்றிபெற்ற இயக்கமாகும். இவற்றை எல்லாம் முழுமையாக இணைத்து ஆராய்ந்தால்தான் இந்திய நாட்டின் விடுதலை இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியைக் கண்டறிய முடியும்.**

**இந்திய விடுதலை இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியைப் பின்வரும் ஐந்து கட்டங்களாகப் பகுத்துக்கொள்ள இடமுண்டு. அவை வருமாறு:**

1. குறுநிலமன்னர்கள், வட்டார ஆட்சியாளர்கள் (பாளையக்காரர்கள், சமின்தார்கள்) பழங்குடிகள் ஆகியோரின் எழுச்சி
2. ஆங்கிலேயர்கள் உருவாக்கிய படைப்பிரிவினரின் எழுச்சி (1806 வேலூர் எழுச்சி, 1857 சிப்பாய் எழுச்சி)
3. இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தின் தோற்றம்
4. சுதேசி இயக்கம் – தீவிரவாதப் புரட்சி இயக்கம்
5. காந்தியத் தலைமையை ஏற்றுக்கொண்ட இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கம்

ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டு கால அளவிற்குள் இவ்வியக்கங்கள் உருவாகி இந்திய விடுதலை இயக்கத்தில் சில தாக்கங்களை ஏற்படுத்தி மறைந்து போயின என்பது வரலாற்று உண்மை. இவை ஒவ்வொன்று குறித்தும் தனித்தனியாக ஆராய இடமுண்டு. எனினும், வ.உ.சி. இணைந்து செயல்பட்ட சுதேசி இயக்கம் குறித்த சில செய்திகளை மட்டும் இங்கு அறிமுகம் செய்துகொள்வது அவசியமான ஒன்றாகிறது.



## சுதேசி இயக்கம்

ஆங்கில அரசின் உயர் பதவிகளுக்கு மனுப்போடும் அமைப்பாக, காங்கிரஸ் இயக்கம் தொடக்கத்தில் இருந்த நிலையில், திலகரின் வருகையானது பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. 'சுயராச்சியம் என் பிறப்புரிமை' என்று அவர் முன்வைத்த முழக்கமானது உயர்கல்வி கற்றவர்கள், சொத்துரிமையாளர்கள் என்ற எல்லைகளையும் கடந்து சராசரி மனிதர்களையும் ஈர்த்தது. இதன் வளர்ச்சி நிலையாக உருப்பெற்ற ஒன்றுதான் சுதேசி இயக்கம். 1905இல் கர்சான் அறிவித்த வங்கப் பிரிவினைக்கு எதிரான மக்கள் எழுச்சி சுதேசி இயக்கத்தை வலுப்பெறச் செய்தது.

சுதேசி இயக்கத்தின் முக்கிய குறிக்கோள்களாக,

**(1) சுயராச்சியம்**
**(2) சுதேசித் தொழில்முயற்சி**
**(3) அந்நியப் பொருள் புறக்கணிப்பு**
**(4) தேசியக் கல்வி**

என்பன அமைந்தன. இக்குறிக்கோள்கள் 'பொருளாதார தேசியம்' என்ற அடையாளத்தை இவ்வியக்கத்துக்கு வழங்கின. இவ்வியக்கத்தின் செயல்பாட்டை இது மாற்றியமைத்தது. இதற்கு முன் காங்கிரஸ் இயக்கமானது நிலக்கிழார்கள், வழக்கறிஞர்கள் ஆகியோரின் கட்டுப்பாட்டிற்குள் இருந்தது. இவர்களுள் வழக்கறிஞர்களின் ஆதிக்கத்தைப் பொறுக்க இயலாத நிலையில், தமிழ்நாட்டின் மூத்த தேசிய இயக்கத் தலைவர்களில் ஒருவரான ஜி.சுப்பிரமணிய அய்யர் காங்கிரஸ் இயக்கத்தில் வழக்கறிஞர்களின் பங்களிப்பு குறித்துப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

முதலில் காங்கிரஸ் அபிமானிகளெனப் பெயர் பெற்ற வக்கீல்கள் பலருக்கு கவரன்மெண்டார் உத்தியோகம் கொடுக்கின்றதாய்க் கையை நீட்டியவுடன் அவர்கள் தங்கள் காங்கிரஸ் அபிமானத்தையும், தேசாபிமானத்தையும் மூட்டை கட்டிவைத்துவிட்டு உடனே சர்க்கார் ஊழியஞ் செய்யத் தலைப்பட்டார்களின்றித் தாங்கள் தேசத்துக்குச் செய்ய வேண்டிய கடமைகளுக்காக சொந்த லாபத்தை வெறுக்கக்கூடிய மன விசாலம் அவர்களிடமில்லாது போயிற்று. (குருமலை சுந்தரம் பிள்ளை 1907 : 43, 44).

இத்தகைய அரசியல் சூழலில் உருவான சுதேசி இயக்கம், புதிதாகத் துளிர்விட்டு வளரத் தொடங்கிய இந்தியத் தொழில் முதலாளிகளையும், தொழிலாளிகள், வணிகர்கள், மாணவர்கள் என ஆங்கில ஆட்சியில் உருப்பெற்ற புதிய மக்கள் பிரிவினரையும் தன்னுள் ஈர்த்துக் கொண்டது. இத்தகைய சூழலில்தான் வ.உ.சி.யின் அரசியல் நுழைவு தொடங்கியது.

### வ.உ.சி.யும் - சுதேசி இயக்கமும்

சட்டக்கல்வி பயின்ற வ.உ.சி தன் வழக்கறிஞர் பணியை தம் பூர்வீக ஊரான ஒட்டப்பிடாரத்திலேயே தொடங்கினார். அப்போது 1898ஆவது ஆண்டில் இந்திய தேசியக் காங்கிரசின் உறுப்பினராக அவர் இருந்துள்ளார். இச்செய்தி சுதேசமித்திரன் நாளேட்டில் வெளியாகியுள்ளது என்ற உண்மையை பெ.சு.மணி வெளிப்படுத்தியுள்ளார். மற்றபடி அவரது அரசியல் செயல்பாடுகள் எவையும் பெரிய அளவில் நிகழவில்லை.

ஒரு வழக்கறிஞர் என்ற முறையில் அவரது செயல்பாடுகள் கையூட்டுக்கு எதிராகவும், நீதித்துறை, காவல்துறை என்ற துறைகளின் ‘கருப்பு ஆடுகளுக்கு’ எதிராகவும் இருந்தன. ஒரே நேரத்தில் வலுவான இரு அரசுத் துறைகளின் பகைக்கு அவர் ஆளாவதை அவரது தந்தை விரும்பாத நிலையில், அவரை ஒட்டப்பிடாரத்துக்கு அருகில் உள்ள தூத்துக்குடிக்கு இடம் பெறச் செய்தார்.

துறைமுக நகரமாகவும், தொழில் நகரமாகவும் விளங்கிய தூத்துக்குடி நகருக்கு 1900 ஆம் ஆண்டில் வ.உ.சி இடம் பெயர்ந்து சென்ற பின்பே, அவரது அரசியல் செயல்பாடுகள் தீவீரமடைந்துள்ளன. அவை சுதேசி இயக்கம் சார்ந்தே அமைந்தன.

தொடக்கத்தில் சுதேசி இயக்கத்தின் குறிக்கோள்களில் ஒன்றான சுதேசித்தொழில் முயற்சி என்பதை மேற்கொள்ளும் வழிமுறைகளில் ஒன்றாக, ‘சுதேசிப் பண்டகசாலை’ என்ற அமைப்பை நிறுவினார். இது இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை மட்டுமே வாங்கி விற்கும் பணியை மேற்கொண்டது.

சுதேசி இயக்கத்தின் கருத்துக்களை மக்களிடம் பரப்பும் நோக்கில் சென்னை ஜனசங்கம் என்ற அமைப்பு சென்னையில் இயங்கி வந்தது. சுதேசி இயக்கத்தின் குறிக்கோள்களை மக்களிடம் பரப்புவதே இதன் குறிக்கோளாகும். இதன் கிளை ஒன்றையும் தூத்துக்குடியில் வ.உ.சி. உருவாக்கினார்.

### சுதேசிக் கப்பல் நிறுவனம்

இதன் அடுத்தகட்ட முயற்சியாக சுதேசி நாவாய்ச் சங்கம் ஒன்றையும் அவர் நிறுவினார். 1882ஆவது ஆண்டின் இந்தியக் கம்பெனிச் சட்டத்தின்படி, ஒரு கூட்டுத்தொழில் நிறுவனமாக 1906ஆவது ஆண்டு இது பதிவு செய்யப்பட்டது. இந்த நிறுவனத்தின் நோக்கங்களாக அது வெளியிட்டிருந்த விவர அறிக்கை சுதேசிய இயக்கத்தின் பொருளாதார தேசியச் சிந்தனைப் போக்கை உள்வாங்கி இருந்தது.

இரண்டு கப்பல்களை விலைக்கு வாங்கி கப்பல் நிறுவனம் செயல்படத் தொடங்கியது. 1907ஆவது ஆண்டின் இறுதியிலும், 1908இன் இறுதியிலும் தூத்துக்குடியில் ஏற்கெனவே செயல்பட்டுக்கொண்டிருந்த ‘பிரிட்டிஷ் இந்தியன் ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி’ (BISN Company) என்ற ஆங்கிலக் கப்பல் நிறுவனம் இழப்பை எதிர்கொண்டது. சுதேசிக் கப்பல்களில், பயணம் செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்தது (Rajendran.N.1994:93).

எனினும் ஆங்கில அரசின் அடக்குமுறையும், வ.உ.சி. சிறை சென்றமையும் சுதேசிக்கப்பல் நிறுவனம் தொடர்ந்து இயங்க முடியாத நிலையை ஏற்படுத்தி, அதை மூடிவிடும்படிச் செய்துவிட்டது. வ.உ.சி. சிறையில் இருக்கும்போது, சுதேசிக் கப்பல் கம்பெனியின் இயக்குநர்கள் அந்த நிறுவனத்தை, பி.ஐ.எஸ்.என். நிறுவனத்திற்கே மீண்டும் விற்றுவிட்டனர்.

### தொழிலாளர் போராட்டம்

தொழிற்சாலைகளை நிறுவும் செயலை ஆங்கிலேயர்கள் இந்தியாவில் மேற்கொண்ட பின்னர் இயந்திரத் தொழில் வளர்ச்சி இந்தியாவில் வளரலாயிற்று. 1850இல் இருந்து 1855 வரையில் பருத்தி, சணல் ஆலைகளும், நிலக்கரிச் சுரங்கங்களும் தோன்றின. இது படிப்படியாக வளர்ச்சி பெறலாயிற்று. 1879இல் 56ஆக இருந்த பருத்தி ஆலைகளின் எண்ணிக்கை 1894–1895இல் 144 ஆக உயர்ந்தது.

இதுபோன்றே சணல் ஆலைகளும், நிலக்கரிச் சுரங்கங்களும் எண்ணிக்கையில் அதிகரித்தன. இவ்வளர்ச்சியானது இதில் பணிபரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தது. ஆங்கிலக் காலனியவாதிகள் ஆலைகளை உருவாக்கிய பின்னரே, இந்தியாவின் சமூக வரலாற்றில் தொழிலாளர்கள் அறிமுகம் ஆனார்கள். இதற்கு முன் வேளாண்மை, கைத்தொழில்கள் சார்ந்தே உடல் உழைப்பு நிகழ்ந்தது. நவீன இயந்திரத் தொழில் அறிமுகமான பின்னரே தொழிலாளர்கள் என்ற புதிய பிரிவினர் தோன்றினார்கள்.

இப்புதிய பிரிவினரின் உழைப்பு நேரம் அதிகமாகவும், ஊதியம் குறைவாகவும் இருந்தது. Kஆய் (Lord Reoy) என்ற இந்திய அதிகாரி இலண்டனில் உள்ள ஆங்கில முதலாளிகளிடம் 1905இல் உரையாற்றும்போது இந்தியாவில் தொழில் தொடங்க வருமாறு அவர்களை அழைத்தான்.

அப்போது அவனது உரையில், இந்தியாவில் நிலவும் சாதகமான சூழ்நிலைகளாக, குறைந்த ஊதியத்தில் தொழிலாளர்கள் கிடைப்பது. தொழிற்சங்கங்கள் இல்லாதது என்ற இரண்டையும் குறிப்பிட்டுள்ளான். தொழிலாளர் நலனைக் காப்பதில் காலனிய அரசு அக்கறை காட்டவில்லை. அப்போதைய காங்கிரஸ் இயக்கமும் இவர்களைக் கண்டுகொள்ளவில்லை.

சுதேசி இயக்கம் இவர்களை மையப்படுத்தி தொழிற்சங்கங்களை உருவாக்கத் தொடங்கியது. ஒரு வகையில் இது தொழிலாளர்களை முன்னிலைப்படுத்திய அரசியல் இயக்கமாகும். ஆலை உரிமையாளர்களாகப் பெருமளவில் ஆங்கிலேயர்களே இருந்த நிலையில், அதில் பணிபுரிந்த தொழிலாளர்களை ஒன்று திரட்டுவதென்பது ஆங்கில எதிர்ப்பின் ஒரு வடிவம்தான் என்பதில் ஐயமில்லை.

கல்கத்தா, மும்பை ஆகிய நகரங்களில் சுதேசி இயக்கம் மேற்கொண்ட இச்செயலை அடிப்படையாகக்கொண்டு, தூத்துக்குடியில் இயங்கி வந்த கோரல் மில் என்ற ஆலையில் வேலைநிறுத்தம் ஒன்றை சுப்பிரமணிய சிவாவுடன் இணைந்து வ.உ.சி நடத்தினார்.

அது ஆங்கிலேயர்களுக்கு உரிமையான பஞ்சாலை. 1908 பிப்ரவரி 27இல் தொடங்கிய இவ்வேலை நிறுத்தம் 07மார்ச் 1908இல் வெற்றிகரமாக முடிவுற்றது. இது குறித்து அரவிந்தர் தமது வந்தேமாதரம் (Bande Mataram) இதழில் (13.03.1908) ‘தூத்துக்குடி வெற்றி’ என்ற தலைப்பில் நீண்ட தலையங்கம் எழுதியுள்ளார்.

அதில், “தூத்துக்குடித் தொழிலாளர் போராட்டம் மாறுபட்டது. தனித்தன்மையான ஒரு தொழிலாளர் போராட்டம் எவ்வாறு அமையவேண்டும் என்பதற்கு அது ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துவிட்டது. கோரல் மில் தொழிலாளர்களின் துயரங்களும், அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளும் பரந்துபட்ட இந்திய நாட்டின் துயரங்களே, இந்த நாட்டிற்கு இழைக்கப்பட்ட அநீதிகளே என்று இத்தலைவர்கள் உணர்த்தியுள்ளார்கள்” என்று பாராட்டி அவர் எழுதியுள்ளார்.

ருஷ்யாவை ஆண்டு வந்த ஜார் மன்னனின் இந்தியத் தூதராக மும்பையில் இருந்த செக்கின் (Chirkin) என்பவரும் ஜாருக்கு அனுப்பிய அறிக்கையில் “இது திறம்பட நடத்தப்படும் வேலைநிறுத்தம் ஆகும். வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு உணவு வழங்க வேலைநிறுத்தத்தை நடத்தும் தலைவர்கள் ஏற்பாடுகள் செய்துள்ளனர்” என்று குறிப்பிட்டிருக்கிறார் (Reisner:1966:157).

## பருத்தி ஆலை

சுதேசிக் கப்பல் நிறுவனத்தை அடுத்து வ.உ.சி. உருவாக்க நினைத்த ஒரு தொழில் நிறுவனம் பருத்தி ஆலையாகும். இது தொடர்பாக தூத்துக்குடி நகரில் வ.உ.சி. ஆற்றிய உரை ஆங்கில அரசின் காவல்துறையால் பதிவுசெய்யப்பட்டு, பின் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதன் தமிழ் வடிவம் வருமாறு:

“நம் நாட்டுப் பருத்தியை அந்நியர்கள் ஏன் கொள்முதல் செய்ய வேண்டும்? எதற்காக அவர்கள் அதிக இலாபத்திற்கு அதை ஏற்றுமதி செய்ய வேண்டும்? நம்முடைய பருத்தியை ஏன் நாமே கொள்முதல் செய்து, நாமே ஏற்றுமதி செய்யக்கூடாது? நம்முடைய உழைப்பின் மூலம் அந்நியர்கள் இலாபம் சம்பாதிக்க நாம் ஏன் அனுமதிக்க வேண்டும்?

சுதேசிக் கப்பல் நிறுவனத்தை ஏற்கனவே தொடங்கிவிட்டோம். ஆனால், பிரிட்டிஷ் கப்பல் நிறுவனத்திற்கு நட்டம் ஏற்படத் தொடங்கிவிட்டது. இனி ஆங்கிலேயர் நிறுவனம் நாளடைவில் நலிந்து மெலிந்து மறைந்துவிடும்.

அடுத்து பருத்தி வாணிகம். அதை நாம் காப்பற்றுவது மிக எளிது; இத்தொழிலை நடத்துவதற்குத் தேவையான மூலதனத்தில் கால்பகுதியையும், உழைப்பாளர்களையும் வழங்கத் தூத்துக்குடி மக்கள் முன்வருவார்களானால், மீதமுள்ள முக்கால் பகுதி மூலதனத்தை முதலீடு செய்வதற்குத் தாங்கள் தயாராக இருப்பதாக மதுரையிலிருந்தும், சேலத்திலிருந்தும் பலர் எனக்குக் கடிதம் எழுதி இருக்கிறார்கள்.

இந்நகரப் பெருமக்களாகிய நீங்கள் எனக்கு உதவி புரிவீர்களானால் நான் இங்கு ஒரு பெரிய பஞ்சாலையை நிறுவி, நூலையும் எல்லா வகைத் துணிகளையும் தயாரிக்க தொடங்கிவிடுவேன். சுதேசிக் கப்பல் நிறுவனம் உறுதியான அடிப்படையில் நிறுவப்பட்டிருப்பதைப்போல், ஒரு பஞ்சாலையையும் வெற்றிகரமாக உருவாக்கிவிடலாம்.” (சதாசிவன் 1985 : 149, 150)


## பிற்கால வாழ்க்கை

1912 திசம்பர் 24ஆவது நாளன்று வ.உ.சி. கண்ணனூர்ச் சிறையில் இருந்து விடுதலையானார். இதன் பின்னர் சென்னை நகரில் சிறிது காலம் வாழ்ந்தார் (1913–1920). அவரது குடும்பப் பொருளாதார நிலை மிகவும் சீர்கேடு அடைந்திருந்தது. குற்றவியல் சட்டத்தின்படி அவர் தண்டிக்கப்பட்டிருந்தமையால் வழக்கறிஞராகத் தொழில்புரியும் உரிமை அவரிடமிருந்து பறிக்கப்பட்டிருந்தது.

அரிசி, நெய், எண்ணெய் வாணிபத்தில் அவர் ஈடுபட்டார். அதில் அவர் வெற்றி பெறவில்லை. சுயராச்சிய நிதியில் இருந்து திங்கள் தோறும் திலகர் அனுப்பிய ஐம்பது ரூபாய் அவருக்கு ஓரளவுக்குக் கைகொடுத்தது.

தேசிய இயக்கவாதியாயும், தொழிற்சங்கவாதியுமான திரு.வி.கவுடன் இணைந்து பஞ்சாலை, டிராம்வே தொழிற்சங்கப் பணிகளில் ஈடுபட்டார். சென்னை மாநிலத்தின் பழமையான தொழிற்சங்கங்களில் ஒன்றான தபால் ஊழியர் சங்கத்தை உருவாக்கியதில் இவரது பங்களிப்பும் உண்டு.

சென்னை நகரில் வாழ்ந்து வந்த தொழிற்சங்கவாதிகளான திரு.வி.க. சக்கரைச் செட்டியார், சிங்காரவேலர், எம்.சி.ராஜா, செல்வபதிச் செட்டியார் ஆகியோருடன் இணைந்து தொழிலாளர் இயக்கத்தைக் கட்டி வளர்த்தார் வ.உ.சி. இரயில்வே தொழிலாளர்களுக்குத் தொழிற்சங்கங்கள் அமைக்கும் பணியிலும் அவர் ஈடுபட்டார். அப்போது இரயில் துறை ஆங்கில முதலாளிகளின் தனிச்சொத்தாக இருந்தது. தெற்கு மராத்தா இரயில்வே ஊழியர்களை எச்சரிக்கும் குறுநூல் ஒன்றை ஆங்கிலத்தில் எழுதி 1920இல் வெளியிட்டார்.




1922இல் கோயம்புத்தூரில் நிகழ்ந்த ஸ்டேன்ஸ் ஆலை வேலைநிறுத்தம் இவரது தூண்டுதலால் நடந்ததாக ஆங்கில அரசின் 1923ஆவது ஆண்டு ஆவணம் ஒன்று குறிப்பிடுகிறது. இவ்வாறு ஆலைத் தொழிலாளர் நலனுக்காக உழைத்த வ.உ.சி., வேளாண்மையில் ஈடுபட்டிருந்த விவசாயத் தொழிலாளர்களின் முன்னேற்றம் கருதி 11.10.1921 இல் ‘சென்னை விவசாயக் கைத்தொழில் சங்கம்’ என்ற சங்கத்தை உருவாக்கியுள்ளார் (கதிர்நம்பி 2021:33).

### பொருளாதார தேசியம்

அடிமைப்பட்டிருக்கும் நாடொன்று தன்னை விடுவித்துக்கொள்ளப் போராடுவது இயல்பான ஒன்று. இது பெரும்பாலும் அரசியல் போராட்டமாகவே வெளிப்படும். ஆனால் தனித்த அரசியல் போராட்டமென்பது முழுமையானதன்று. ஏனெனில், ஒரு முழுமையான போராட்டமென்பது அரசியலை மட்டுமே உள்ளடக்கியதல்ல. பொருளாதாரப் போராட்டம், பண்பாட்டுப் போராட்டம் என்ற இரண்டையும் உள்ளடக்கிய அரசியல் போராட்டமே முழுமையான போராட்டமாக அமைய முடியும்.

இந்திய விடுதலை இயக்கத்தில் அரசியல் போராட்டமே பெரும்பாலும் முன்னெடுக்கப்பட்ட நிலையில், பொருளாதார தேசியத்தை சுதேசி இயக்கம் முன்வைத்தது. சுதேசி இயக்கத்தை முன்னெடுத்த வ.உ.சி. சுதேசிப் பண்டகசாலை என்ற அமைப்பையும், சுதேசிக் கப்பல் நிறுவனத்தையும் நிறுவியதுடன், பருத்தி ஆலை ஒன்றைத் தூத்துக்குடியில் நிறுவப்போவதாக அறிவித்தும் சுதேசிப் பொருளாதாரத் தேவையை மக்கள் அறியும்படிச் செய்தார். ஆலைத் தொழிலாளரின் நலன் காக்க அவர் நடத்திய போராட்டமும் தொழிற்சங்கப் பணிகளை அவர் மேற்கொண்டமையும் பொருளாதாரப் போராட்டம் சார்ந்ததுதான்.

தீண்டாமை, சாதிப்பாகுபாடு என்பனவற்றை தமது ஒட்டப்பிடாரம் வாழ்க்கையிலேயே புறக்கணித்தவர் அவர். இவை எல்லாம் பண்பாடு சார்ந்தவை. ஆனால் தமது சுதேசி இயக்கத்தில் இவற்றை அவர் இணைத்துக் கொள்ளவில்லை. சிறை வாழ்க்கையிலும், விடுதலையான பின்னரும் அவரது உரைகளிலும், எழுத்துக்களிலும் இவை அழுத்தமாகப் பதிவாகியுள்ளன. அத்துடன் அவரது செயல்பாடுகளிலும் இவை வெளிப்பட்டுள்ளன. இத்துடன் பண்பாட்டின் ஒரு கூறான மொழியை மையமாகக் கொண்டு அவர் ஆற்றிய பணிகளையும் சேர்த்துக்கொள்ள இடமுண்டு.



இவ்வகையில் சுதேசி இயக்கம் என்ற அரசியல் போராட்டத்தில் ஆர்வம் காட்டிய வ.உ.சி. அத்துடன் நின்றுவிடாமல் பொருளாதாரப் போராட்டம், பண்பாட்டுப் போராட்டம் என்ற இரண்டையும் அத்துடன் இணைத்துப் போராடியுள்ளார். இது அவரது தொலை நோக்கான பார்வையை வெளிப்படுத்தி நிற்கிறது. இப்பார்வையே பரந்துபட்ட தளத்தில் அவரை நிற்கச் செய்துள்ளது.

அரசியல் போராட்டத்தில் மட்டுமே வெற்றி பெற்ற நாடுகள் மற்ற இரண்டு போராட்டங்களையும் புறந்தள்ளிவிடும்போது பல உள்நாட்டுக் குழப்பங்களை எதிர்கொள்ள நேரிடுகிறது. முழுமையான வெற்றியடையாத ஒரு வெற்றிடத்திற்குள் (vacuum) இயங்கும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுவிடுகிறார்கள். வ.உ.சி. இவ்வுண்மையை உணர்ந்திருந்தார்.

இவருக்குப் பின்னர் பரந்துபட்ட இந்தியாவின் தலைவராக விளங்கி, இந்திய விடுதலையின் போதும் தலைவராக விளங்கிய காந்தியடிகள் இவரைப் போன்றே மேலே குறிப்பிட்ட மூன்று கூறுகளையும் உள்வாங்கிக்கொண்டவர்தான். இருப்பினும் இவ்விருவருக்கும் இடையே அடிப்படையான வேறுபாடுகள் உண்டு.

எவ்வாறெனில் காந்தியின் பொருளியல் சிந்தனைகள் மரபு சார்ந்தவை. அவர் அறிமுகம் செய்த தக்களி, கைராட்டை (சர்கா), தறி என்பன மரபு சார்ந்த கருவிகள். அவரது கதர் ஆடை இவற்றின் துணையால் உருவானது. அவர் அறிமுகம் செய்த எண்ணெய்ச் செக்கும் மரபு சார்ந்ததுதான். மொத்தத்தில் அவரது பொருள் உற்பத்திமுறை என்பது மரபு சார்ந்த ஒன்றாக விளங்கியது. இவ்வகையில் அவர் இலண்டனில் வாழ்ந்து கல்வி பயின்றாலும், ஐரோப்பிய நாடுகளில் தோன்றி வளர்ந்த அறிவொளிக் காலத்திற்கு (Period of enlightenment) ஆட்படாதவராகவே இருந்துள்ளார்.

மரபுவழி சார்ந்த ஆடை உற்பத்தி முறையையே அவர் முன்மொழிந்தார். ஆனால் இலண்டன் செல்லாத வ.உ.சி தொழிற்புரட்சியின் தாக்கத்திற்கு ஆட்பட்டிருந்தார். இச்சிந்தனைப் போக்கு அவர் மிகவும் உயர்வான நூலாகப் போற்றிய திருக்குறள் குறித்த அணுகுமுறையிலும் வெளிப்பட்டது. 1928ஆவது ஆண்டில் காரைக்குடியில் ஆற்றிய சொற்பொழிவில் பின்வருமாறு அவர் குறிப்பிட்டுள்ளார்:

“திருவள்ளுவர் ஒரு கவி. ஒப்பற்ற அறிஞர். நானும் அவரைக் கடவுள் என்றே போற்றுகிறேன். அவர் நூலில் வாள் என்றும், வில் என்றும், வேல் என்றும் இருக்கிறதேயன்றித் துப்பாக்கியென்றாவது, பீரங்கியென்றாவது இல்லை. இப்பொழுது யுத்தத்திற்கு சாதனங்களாகத் துப்பாக்கியும், பீரங்கிகளுமே இருக்கின்றன. யுத்தத்திற்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படின் என்ன செய்வது.?

வள்ளுவர் துப்பாக்கியைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. எனவே அச்சாதனங்களைக் கொண்டு நான் போர்புரியமாட்டேன். வள்ளுவருக்கு என்ன புத்தியில்லையா? அவரைக் காட்டிலும் நாம் என்ன மேதாவிகளாகிவிட்டோமா என்று இப்பொழுது ஒருவன் கூறிக்கொண்டிருப்பானானால் அது எவ்வளவு மூடத்தனம் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்” (குமரன் 1928: பக்கம்2).

நூற்பாலையில் நூற்கப்பட்ட நூலால் கைத்தறியில் நெய்யப்பட்ட ஆடையையே அவர் ஆதரித்தார். இதன் வழி நவீன நூற்பாலைத் தொழிலையும், மரபு சார்ந்த நெசவுத் தொழிலையும் ஒருங்கிணைத்தார். ஏனெனில், ஆலைகள் பரவலாக உருவாகி அதில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணிபுரிய ஆரம்பித்துவிட்டார்கள். மற்றொரு பக்கம் மரபு சார்ந்த நெசவுத் தொழிலைப் பாரம்பரியத்

தொழிலாகக் கொண்டு பல்லாயிரக்கணக்கான நெசவாளிகளும் வாழ்ந்தனர். இவ்விரு பிரிவினரையும் இணைக்கும் கைத்தறி ஆடையையே அவர் ஆதரித்தார். தாமும் கைத்தறி ஆடையே அணிந்தார். இது அவர் சார்ந்திருந்த சுதேசி இயக்கத்துடன் இணைந்ததாய் அமைந்தது. இதனால் அவர் சுதேசி சிதம்பரம் என்று அழைக்கவும் பட்டார்.

சிறையில் இருந்து விடுதலையான பின்னர் அவர் பதிப்பித்து வெளியிட்ட திருக்குறள் மணக்குடவர் (அறத்துப்பால்) உரையில், 'இந்நூலின் தாள், அச்சு, மை, கட்டு எல்லாம் சுதேசியம்' என்ற வரிகளை அச்சிட்டிருந்தார். காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தில் அவருக்கு உடன்பாடில்லை. ஒத்துழையாமை குறித்த கருத்து வேறுபாட்டினால் சிறிது காலம் காங்கிரஸ் கட்சியில் இருந்து வ.உ.சி விலகியிருந்தார். இருப்பினும் தமது தூத்துக்குடி வாழ்க்கையில் காங்கிரஸ் நடத்தும் பொதுக் கூட்டங்களில் ஒரு பார்வையாளராக கலந்துகொள்வதை அவர் வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒரு முறை டாக்டர் வரதராஜுலு நாயடு உரையாற்றியபோது இவர் அதில் கலந்து கொண்டார். அப்போது நடந்த நிகழ்வு வருமாறு:

வரதராஜுலு நாயுடு உரையாற்றிய போது கைத்தறி ஆடை அணிந்து வ.உ.சி முன்வரிசையில் அமர்ந்திருந்தார். வரதராஜுலு நாயுடு உரையாற்றும் முன்னர் உள்ளூர் இளைஞர் ஒருவர் மேடையில் ஏறி "நாம் (காங்கிரஸ்காரர்கள்) கதர் அணிவதைக் கடமையாகக் கொண்டவர்கள். ஆனால் நம் தலைவர்களில் ஒருவர் பேசும் கூட்டத்திற்குக்கூட சிதம்பரம் பிள்ளை போன்ற பெரியவர்கள் கதர் அணியாது வந்திருப்பது விசனம் அளிக்கிறது" என்று பேசிவிட்டார்.

அப்போது வ.உ.சி. எழுந்து மேடைக்குச் சென்று இப்படிக் கூறினாராம்: 'இந்தக் கதர் எல்லாம் காந்தி சமாச்சாரம். நான் யார் தெரியுமா, சுதேசி சிதம்பரம். நான் போட்டிருக்கிற சட்டை, உடுத்தி இருக்கிற வேட்டி எல்லாம் கைத்தறி தெரியுமா? இது கூட்டத்தில் சலசலப்பை ஏற்படுத்தியது. பின்னர் அந்த இளைஞர் வருத்தம் தெரிவிக்க வ.உ.சி.யை அமைதிப்படுத்தி அமரச் செய்தார்கள் (நேர்காணல்: திரு. ஏ.பி.சி.வீரபாகு வ.உசி. கல்லூரி நிறுவனர்)

மற்றொரு நிகழ்ச்சி தோழர் இஸ்மத் பாட்சா எழுதிய தோழர் ப.ஜீவானந்தம் வாழ்க்கை வரலாறு நூலில் இடம்பெற்றுள்ளது. ஜீவானந்தம் காங்கிரஸ் கட்சியில் இருந்த போது காரைக்குடி அருகில் இருந்த சிறாவயல் என்ற ஊரில் ஆசிரமம் ஒன்றை நடத்தி வந்தார். தாம் நடத்தும் ஆசிரமத்தைப் பார்வையிட வருமாறு காரைக்குடிக்கு வந்திருந்த வ.உ.சி.யை ஜீவா அழைத்தார். அவரது அழைப்பை ஏற்று அவரும் அங்கு சென்றபோது நூல் நூற்கும் ராட்டைகள் அடுக்கி வைத்திருப்பதைக் கண்டார்.

உடனே ஜீவாவை நோக்கி இங்கு பெண்கள் மட்டும் நூற்கிறார்களா? ஆண்களும் நூற்கிறார்களா? என்று கேட்டார். ஆண்களும் நூற்கிறார்கள் என்று ஜீவா விடையளித்தவுடன் முட்டாள்தனமான அமைப்பு (stupid organization) என்ற சொல் வ.உ.சி.யிடம் இருந்து வந்தது. 'பெரியவர் நீங்கள் இப்படிக் கூறுவது வருத்தமாக உள்ளது' என்று ஜீவா கூறியதும், 'வாளேந்த வேண்டிய கைகளை ராட்டையைச் சுற்றச் செய்கிறாயே' என்று விடையளித்தாராம் வ.உ.சி. இச்செய்திகளின் அடிப்படையில் பாரக்கும்போது வ.உ.சி.யின் தேசியம் என்பது நவீனத்துவத்தை உள்வாங்கிய, பொருளியல் வளர்ச்சியை முன்நிறுத்திய தீவிரவாத தேசியம் என்பது புலனாகிறது.

**கட்டுரையாளர் குறிப்பு:**

**ஆ.சிவசுப்பிரமணியன்,**
**மறைந்த பேராசிரியர் வானமாமலையின் மாணவர்.**
**தமிழகத்தின் சமூக வரலாறு தொடர்பான**
**நூல்களும் கட்டுரைகளும் எழுதி வருபவர்.**
**தமிழ் பரப்பில் மானுடவியல் வரலாற்று ஆய்வுகளில்**
**இவரது எழுத்துக்கள் செல்வாக்குச் செலுத்துகிறது.**

❖❖❖

# வ.உ.சி.யும் திருநெல்வேலி எழுச்சியும்



ஆ.இரா.வேங்கடாசலபதி


**1908ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களிலே வ.உ.சிதம்பரனார் கைதானதைத் தொடர்ந்து திருநெல்வேலியில் நிகழ்ந்த பெரும் மக்கள் எழுச்சிக்குத் தமிழக வரலாற்றில் குறிப்பிடத்தக்கதோர் இடம் உண்டு.**

இவ்வெழுச்சி திகழ்ந்த சில திங்களுக்குப் பிறகு திலகர் தண்டனையடைந்ததை ஒட்டி பம்பாயில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளைப் பற்றி இலெனின் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"இந்தியாவிலும்கூட, தம்முடைய பத்திரிகை ஆசிரியர்களுக்காகவும் அரசியல் தலைவர்களுக்காகவும் மக்கள் தெருக்களில் கிளர்ந்தெழுந்துள்ளனர். இந்திய ஜனநாயகவாதியான திலகர்மீது பிரித்தானியக் குள்ள நரிகள் கேடுகெட்ட தண்டனையை விதித்துள்ளனர். ஒரு ஜனநாயகவாதியை பணமூட்டைகளின் கைக்கூலிகள் இவ்வாறு வஞ்சம் தீர்த்துக்கொண்டமை, பம்பாயில் தெருக் கிளர்ச்சிகளையும், தொழிலாளர் வேலை நிறுத்தம் ஒன்றினையும் தூண்டியுள்ளது" (Lenin, The National Liberation Movement in the East, p. 34).

இலெனினால் பாராட்டப்பட்ட இந்த எழுச்சி நிகழ்வதற்குச் சில திங்களுக்கு முன்னரே தமிழகத்தின் தெற்கு முனையிலும் இதனையொத்த எழுச்சி ஒன்று நிகழ்ந்தது. இதனையே, "ஐரோப்பாவிலும் பிற குடியேற்ற நாடுகளிலும் உள்ள சிறு தேசங்கள் கலகம் செய்யாமலும், தனக்கே உரிய விருப்பு வெறுப்புகளை உடைய குட்டி முதலாளி வர்க்கத்தின் ஒரு பகுதியினருடைய புரட்சி வெடிப்புகளும், நிலக்கிழார்களுக்கும் திருச்சபைக்கும் முடியாட்சிக்கும் தேசிய ஒடுக்குமுறைக்கும் எதிரான, அரசியல் ரீதியான விழிப்புணர்வற்ற பாட்டாளி, அரை பாட்டாளி மக்கள் திரள்களின் இயக்கமும் இல்லாமல் சமூகப் புரட்சி சாத்தியம் என்று எண்ணுவது சமூகப் புரட்சியையே மறுப்பதாகும்" (Lenin, op. cit., p.190) என்று இலெனின் குறிப்பிடுகிறார். இத்தகைய புரட்சிகரமான பங்குடைய திருநெல்வேலி எழுச்சி ஆகும்.

1908ஆம் ஆண்டு மார்ச்சு 12ஆம் நாள், வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா, பத்மநாப அய்யங்கார் ஆகியோர்



கைது செய்யப்பட்டனர். இதைத் தொடர்ந்து, 13ஆம் நாள் வெள்ளிக்கிழமையன்று திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும், 14ஆம் நாளன்று தச்சநல்லூரிலும் மக்களிடையே பெரும் எழுச்சி ஏற்பட்டது. இதுவே, அந்நாளைய அரசாங்க ஆவணங்களிலும் பத்திரிகைகளிலும் 'திருநெல்வேலிக் கலகம்' என்று குறிப்பிடப்படுகின்றது. இது பெரிய மக்கள் எழுச்சி என்றபோதும் வெள்ளையர் இதனைத் தமது ஆட்சி அதிகாரத்துக்கும் எதிரான கிளர்ச்சியாகவும், சட்ட ஒழுங்குப் பிரச்சினையாகவும் கண்டமையால், 'கலகம்' (riot) என்று வருணித்தனர். தன் பொருளைச் சீர்தூக்கிப் பார்க்காத வரலாற்றாசிரியர்களும் இந்தச் சொல்லையே வழங்கி வருகின்றனர். 'எழுச்சி' என்ற சொல்லே சரியானதும் பொருத்தமானதும் ஆகும்.

1905ஆம் ஆண்டில், வங்காளப் பிரிவினை, கல்கத்தா காங்கிரஸ் மாநாடு ஆகியவற்றைத் தொடர்ந்து எழுந்த சுதேசி இயக்கம், முதன்முறையாகப் பரந்துபட்ட மக்களைச் சென்று அடையும் வகையில் இயக்கமாக வளரத் தொடங்கியது. கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டில் எடுக்கப்பட்ட சுயராச்சியம், அந்நியப் பொருள் விலக்கு, தேசியக் கல்வி ஆகிய மூன்று முடிவுகளும் செயல்படுத்தப்படலாயின. நாடெங்கிலும் சுதேசிய முயற்சிகள் தொடங்கப்படலாயின. அயல்நாட்டு முதலீட்டை எதிர்த்துச் சுதேச முதலீடு முளைவிடலாயிற்று.

தமிழ்நாட்டில் முதல் சுதேசியக் கப்பல் முயற்சி 1906ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் மேற்கொள்ளப்பட்டது. தூத்துக்குடி, கொழும்பு துறைமுகங்களுக்கு இடையே வாடகைக் கப்பல் கொண்டு தூத்துக்குடி வணிகர்கள் போக்குவரத்தைத் தொடங்கினர். இதனைக் குறித்து முதன்



சோமசுந்தர பாரதி

முதலாக வந்த பத்திரிகைச் செய்தியில் வ.உ.சி.யின் பெயர் வெளியாகி உள்ளமையால் முதலிலிருந்தே சுதேசிக் கப்பல் கம்பெனியுடன் அவரது பங்கு தொடங்கிவிட்டமை தெளிவாகின்றது (சுமி. 11.4.1906).

இதனைப் பற்றிய அறிக்கையை அனுப்பிவைத்த அன்றைய மாவட்ட ஆட்சித் தலைவர், இதனால் ஒன்றும் சாதிக்க இயலாது என்று குறிப்பிட்டார் (NTR). ஆனால், இதற்குப் பிறகு நிகழ்ந்தவை இக்கூற்றைப் பொய்யாக்கின.

வாடகைக்குக் (charter) கப்பல் விடுவது ஆதாயம் தருவதாக இல்லாமையாலோ என்னவோ, சொந்தக் கப்பல் விடும் முயற்சியாக, 1906 அக்டோபர் 16ஆம் நாள் (அதற்கு முந்தைய ஆண்டின் அதே நாளில்தான் சுதேசி இயக்கத்தைத் தோற்றுவித்த வங்கப் பிரிவினை நிகழ்ந்தது. வியக்கத்தக்க ஒற்றுமை தான்!) ‘சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்’ பதிவு செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து, கம்பெனிக்குப் பங்குகள் சேர்க்கும் முகமாக சென்னை, தஞ்சை, மதுரை முதலான மாவட்டங்களில் பயணம் செய்த வ.உ.சி. பல சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்.

அக்காலத்தில், சென்னையின் முக்கிய சுதேசிப் பிரசாரகரான ஜி.சுப்பிரமணிய அய்யர், 1906 ஆகஸ்டிலும், 1907 சூலையிலும் நெல்லை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்து உரைகள் பலவற்றை ஆற்றினார்.

சுதேசிக் கம்பெனிக்கும், வலுமிக்க நிறுவனமான பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனிக்கும் இடை போட்டி ஏற்பட்டது. இந்தப் போட்டி சில சமயங்களில் கைகலப்பு வரையும் கூடச்சென்று விட்டது. மேலும் இந்தப் போட்டியில், வெள்ளையர் கம்பெனியை ஆதரிக்கும் வகையில் அரசாங்க அதிகாரம் தவறான முறையில் பயன்படுத்தப்பட்டது. தமிழகத்தின் இதழ்கள் பலவும், இந்தியாவின் முக்கிய இதழ்கள் சிலவும் இந்தச் செய்திகளைத் தொடர்ந்து வெளியிட்டன. இத்தகு இன்னல்களுக்கு இடையேயும் சுதேசிக் கம்பெனி செயல்பட்டு வந்தமை மக்களிடையே அதற்கு இருந்த ஆதரவைக் காட்டுவதோடு, அவர்களின் ஆதரவை இன்னும் மிகுதிப்படுத்தி இருக்கும் என்பதிலும் ஐயமில்லை.

மக்களிடையே நிலவிய சுதேசிய உணர்வைப் பின்வரும் பகுதி தெளிவாகப் புலப்படுத்துகின்றது. 1906 டிசம்பர் மாத இறுதியில் தத்தம் மாவட்டங்களில் சுதேசி இயக்கத்தின் சென்னை வளர்ச்சியைப் பற்றி அறிக்கை அனுப்புமாறு அனைத்து மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களையும் அரசாங்கம் பணித்தது. நெல்லை மாவட்டத்தின் ஆட்சித் தலைவரைத் தவிர மற்றவர் எல்லோரும் சுதேசி இயக்கம் மக்கள் மனத்தில் வேரூன்றவில்லை என்று குறிப்பிட்டனர். வெள்ளையர் எதிர்ப்புணர்வு நிலவுவதாக ஐயப்படக்கூடிய ஒரே மாவட்டம் திருநெல்வேலிதான், அதிலும் குறிப்பாக தூத்துக்குடி நகரில்தான் இது அதிகம் நிலவுகிறது என்று அவ்வறிக்கை குறிப்பிட்டது (NTR).

இவ்வாறு குறிப்பிடப்பட்ட தூத்துக்குடியைவிட நெல்லை நகரத்தில் நிகழ்ந்த எழுச்சியின் அளவு பெரிதாக இருந்தமை வியப்புக்குரியதே. இந்தச் சமயத்திலேயே தூத்துக்குடி நகரில் அயல்நாட்டுப் பொருள் விற்கப்படும் கடைகள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தகுந்தது.

1907ஆம் ஆண்டு டிசம்பர் முடிவில் சூரத் நகரில் நிகழ்ந்த காங்கிரசில், புதுக் கட்சியினர் என்று அழைக்கப்பட்ட திலகரின் தலைமையிலான தேசியக் கட்சித் தீவிரவாதிகளின் கை ஓங்கியது, இம்மாநாட்டுக்குப் பாரதியார், சக்கரைச்செட்டியார் – முதலானோருடன் சென்ற வ.உ.சி.யின் எண்ணங்களும் செயல்வன்மை பெற்றன. தேசியக் கட்சியின் தென்னாட்டுத் தலைமையினை வ.உ.சி. ஏற்றார்.



சுப்பிரமணிய சிவா

1908 சனவரியில் சுப்பிரமணிய சிவா நெல்லைக்கு வந்து சில சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். அதன் பிறகு, வ.உ.சி.யின் ஆதரவில் தூத்துக்குடியிலும் சொற்பொழிவுகட்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

பிப்ரவரி திங்கள் முழுவதும், ஏறத்தாழ எல்லா நாளிலும் தூத்துக்குடி கடற்கரையிலும் பிற இடங்களிலும் கூட்டங்கள் நடந்தன. வீறுமிக்க சொற்பொழிவுகளை இவற்றில் சிவா ஆற்றினார். இவற்றுள் பல, வ.உ.சி.யின் தலைமையில் நிகழ்ந்தன. இவ்விருவரைத் தவிர பத்மநாப அய்யங்காரும், சோமசுந்தர பாரதியாரும் பேசினர். இக்கூட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் ஆயிரத்துக்குக் குறையாது மக்கள் கூடினர்.

இவற்றின் நேரடிப் பின்விளைவாகத் தூத்துக்குடி கோரல் ஆலைத் தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்தனர். ஆலை மூடப்பட்டது. வேலைநிறுத்தம் நடந்துகொண்டிருக்கையில் அத்தொழிலாளரிடையே கூட்டங்கள் நடத்தப்பட்டன. போராட்டம் முடியும்வரை பொதுமக்களிடமிருந்து திரட்டிய பணத்தைக் கொண்டு தொழிலாளர்க்கு உணவு கொடுக்கப்பட்டது; தற்காலிக மாற்று வேலை ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

ஆலை நிர்வாகத்துடன் வ.உ.சி. நேரடியாகப் பேச்சுவார்த்தை நிகழ்த்திய பிறகு தொழிலாளரின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு மார்ச்சு 7ஆம் நாள் தொழிலாளர் வேலைக்குத் திரும்பினர்.

இந்தச் சமயத்தில் மக்களின் சுதேசிய உணர்வு உச்சத்தை அடைந்தது. வெள்ளையரும் அவர்களுக்கு ஆதரவு தருவோரும் புறக்கணிக்கப்பட்டனர். குதிரை வண்டிக்காரரும் நாவிதரும் வண்ணாரும் அவர்களுக்குப் பணிபுரிய மறுத்தனர். சுதேசியத்துக்கு எதிராகப் பேசியதால் ஒரு வக்கீலைப் பாதி சிரைத்துவிட்டு நாவிதரொருவர் எழுந்து வந்து விட்டார்.

இவற்றுக்கெல்லாம் மகுடமிட்டாற்போல் விபின் சந்திரபால் சிறையிலிருந்து வெளியாகும் 1908 மார்ச்சு 9ஆம் நாளை சுயராச்சிய நாளாகக் கொண்டாட முடிவு செய்யப்பட்டது. குற்றவியல் சட்டத்தின் (Cr. P. C.) 144ஆவது பிரிவின் கீழ் இக்கூட்டத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் தடை செய்தார். மேலும், அவர் முன் ஆஜராகுமாறு வ.உ.சி., சிவா, பத்மநாப அய்யங்கார் ஆகியோருக்கு அறிவிப்புத் தரப்பட்டது. மார்ச்சு 8ஆம் நாள் மாலை நடந்த கூட்டத்தில் 4,000 பேர் கலந்துகொண்டனர்.

மறுநாள், மூவரும் திருநெல்வேலி சென்று ஆட்சித் தலைவர்க்கு முன் நின்றனர். இவ்வழக்கை உயர் நீதிமன்றத்துக்கு மாற்றுமாறு கேட்டனர்; ஜாமீன் தொகை கொடுக்கவும் மறுத்தனர்.

அன்று மாலை தாமிரவருணி ஆற்றங்கரையில் விபின் சந்திர பாலின் விடுதலை கொண்டாடப்பட்டது. கூடியிருந்த மக்களிடையே பெரும் கூச்சலும் உற்சாகமும் நிலவியது. பாளையங்கோட்டை போலீஸ் ரிசர்வ் படையினர் வருமுன்னர் கூட்டம் கலைந்துவிட்டது.

10ஆம் நாள் மூவரும் தூத்துக்குடிக்குத் திரும்பி வந்த பின்னர் அதற்கு முன்நாள் தடைசெய்யப்பட்டிருந்த விபின் சந்திர பாலின் விடுதலை கொண்டாடப்பட்டது. மூவரும் இரயில் நிலையம் வந்ததும் பெருங்கூட்டம் கூடிக் கலவரம் நிகழும் வாய்ப்பு ஏற்பட்டது. ஆயினும் வ.உ.சி.யின் உதவியுடன் கூட்டம் கட்டுப்படுத்தப்பட்டது. முடிந்ததும் பிற்பகலுக்கு மேல் நெல்லைக்குத் திரும்பி ஆட்சித் தலைவர் முன் நின்றனர். குற்றவியல் சட்டத்தின் 107வது பிரிவின் கீழ் வழக்குத் தொடர்வதென ஆட்சித் தலைவர் முடிவு செய்தார். 12ஆம் நாள் பிற்பகல் மூவரும் கைது செய்யப்பட்டுப் பாளையங்கோட்டைச் சிறைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.




## எழுச்சி

காலை 10.30 மணியளவில், திருநெல்வேலிப் பாலம் என்றழைக்கப்பட்ட வீரராகவபுரம் என்ற இரயில் நிலையத்துக்கு அருகிலுள்ள பகுதியில் கடைகள் மூடப்பட்டன. மக்களின் நடமாட்டமும் வண்டிகளின் போக்குவரவும் தடைப்பட்டன. இதற்குள்ளாக மூவாயிரம் நாலாயிரம் பேர் கும்பலாகத் திரண்டு, இந்துக் கல்லூரிக்குள் நுழைந்தனர். கல்லூரி நிர்வாகிகள் எவ்வளவோ தடுத்தும்கூட மாணவர்களையும் தம்முடன் சேர்த்துக்கொண்டனர். கல்லூரி மூடப்பட்டது.

கும்பலிடமிருந்து தப்புவதற்காகக் கல்லூரியின் முதல்வர் எர்பாடு சாம்பியன் (Herbert Champion) பாரி கம்பெனியின் அலுவலகத்துக்குள் நுழைந்தார் (பெ.நா.அப்புஸ்வாமி 1961). அக்கட்டடத்துக்குள் பாரி கம்பெனியின் ஏஜெண்டான காமரூனும் (Cameroon) இருந்தார். இவர்களின் மீது சரமாரியாகக் கல்வீச்சு நடந்தது.

இதற்குள், சி.எம்.எஸ். கல்லூரி என்ற சர்ச்சு மிஷன் சொசைட்டி காலேஜுக்குக் கும்பல் சென்றது. முதல்வர் ஷாப்டரிடம் (Schaffter) கல்லூரியை மூடுமாறு கூறிற்று. இதை எதிர்த்த உதவிப் பேராசிரியரைக் கும்பல் அடித்தது. கல்லூரியின் பொருள்களும் சாளரங்களும் உடைக்கப்பட்டன. பின்னர், பட்டணத்துக்குள் கூட்டம் நுழைந்தது. நகர்மன்ற அலுவலகக் கட்டடத்துக்குள் சென்று சுவர் ஒன்றை இடித்தது. அலுவலக ஆவணங்கள் மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்தப்பட்டன. கட்டடம் பெரும் சேதத்துக்கு உள்ளானது.

அடுத்து, அஞ்சலகத்துக்குச் சென்று தீயிட்டனர். தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டன. பிறகு, நகர்மன்றத்துக்குச் சொந்தமான மண்ணெண்ணெய்க் கிடங்கு தீக்கிரையானது. தொடர்ந்து இரண்டு மூன்று நாளுக்கு அது எரிந்துகொண்டே இருந்தது.

காவல் நிலையம் அடுத்த இலக்காயிற்று. கூட்டம் அங்குச் சென்றபோது போலீஸ்காரர் ஒருவர் மட்டுமே இருந்தார். அவர் தாக்கப்பட்டார். அங்கிருந்த ஆவணங்களும் கத்திகளும் ஒரு பெட்டி குண்டுகளும் (catridge) அழிக்கப்பட்டன. காவல் நிலையத்தில் சிறைப்பட்டிருந்த மூன்று கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.




காவல் நிலையத்துக்கு எதிரிலிருந்த மருத்துவ நிலையத்துக்குத் தீயிட முயன்றபோது பலர் கைது செய்யப்பட்டனர். மாவட்ட துணை முன்சீபு நீதிமன்றத்தை நடத்திக் கொண்டிருந்தபோது அதுவும் தாக்கப்பட்டது.

நகரெங்குமிருந்த தெருவிளக்குகள் பலவும் உடைக்கப்பட்டன. இந்தச் செயல்கள் நெடுகவும் கல்வீச்சுடன் ‘வந்தே மாதரம்‘ முழக்கமும் தொடர்ந்து செய்யப்பட்டது. இந்தச் சமயத்தில்தான், ஆட்சித் தலைவர் விஞ்சும் (L.M. Wynch), போலீஸ் சூப்பரிண்டண்டும் இடத்துக்கு விரைந்தனர்.

கூட்டத்தின்மீது இரண்டுமுறை துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. பெரிய கோயிலுக்குச் செல்லும் சாலையில் ரிசர்வ் போலீசார் சுட்டனர். காவல் நிலையத்துக்கு எதிரிலிருந்த மருத்துவ நிலையத்தை எரிக்க முயற்சி நடந்துகொண்டிருந்தபோது, மாவட்ட ஆட்சித் தலைவர் சுடுவதற்கு ஆணையிட்டார். முதலில் வெற்று வேட்டுகள் (buck shot) சுடப்பட்டன; எச்சரிக்கையாக ஒரு முறை வானத்தில் சுட்ட பின்னரே கூட்டத்தின் மீது துப்பாக்கிச் சூடு நிகழ்ந்தது. நால்வர் இறந்தவர் என அரசு தரப்பில் சொல்லப்பட்டது (PJD 1908). ரிசர்வ் போலீசார் சுட்டபோது ஒரு முக்கிய நிகழ்ச்சி நடந்தது. கூட்டத்தை நோக்கிப் போலீசார் துப்பாக்கி நீட்டியபோது, கூட்டத்தில் சிலர், போலீசாரும் சுதேசிகள் என்ற முறையில் கூட்டத்தினருடன் சேர்ந்துகொண்டு வெள்ளையரைச் சுடுமாறு வேண்டினர். இதனைப் பற்றி, வ.உ.சி.யை விசாரித்த நீதிபதி தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார் (PJD 1911 b).

தூத்துக்குடியில் வ.உ.சி.யும் பிறரும் கைது செய்யப்பட்ட அன்று இரவே, மக்கள் பலர் தூங்காமல் தெருக்களில் வந்தே மாதரம் முழக்க மீட்டுக் கொண்டிருந்தனர். (சுமி. 17.03.1908)

மறுநாள் 13 அன்று காலை பெரும் குழப்பம் ஏற்பட்டது. சந்தையிலிருந்த கடைகள் மூடப்பட்டன. கோரல் ஆலைத் தொழிலாளரும் பெஸ்டு அண்டு கம்பெனியின் தொழிலாளரும் வேலை நிறுத்தம் செய்தனர். நகர்மன்றத் தோட்டித் தொழிலாளரும், பிற தோட்டித் தொழிலாளரும் வேலைக்குப் போகாமல் நின்றனர். கசாப்புக் கடைக்காரரும் குதிரை வண்டிக்காரர்களும்கூட வேலைநிறுத்தம் செய்தனர். தெருக்களில் கூடிய மக்கள் தெருவிளக்குகளையும் உடைத்தனர் (NTR).



ஆஷ் துரை

பொதுக்கூட்டங்கள் தடைசெய்யப்பட்டிருந்தபோதும் கூட, வண்டிப் பேட்டையில் அன்று மாலை கூட்டம் கூடியது. அடையாளம் கண்டுபிடிக்க முடியாத ஒருவர் பேசினார். இதனை அறிந்த உதவி ஆட்சித் தலைவர் ஆஷும் (R.W.D.E. Ashe), துணை போலீஸ் சூப்பிரிண்டண்டும், போலீசாரும் பேட்டைக்குள் நுழைந்தனர். இந்தப் பேட்டைக்கு ஒரு வழிதான் உண்டு என்பதால் குழப்பம் மிகுந்தது. வீடுகள் மேலிருந்தும்கூடக் கற்கள் வீசப்பட்டன. போலீசார் சுட்டனர். கூட்டத்துக்குள் சிக்கிய ஒரு சப்இன்ஸ்பெக்டர் படுகாயமடைந்தார். அவரிடமிருந்த சுழல் துப்பாக்கியும் ஐந்து சுற்று குண்டுகளும் பறிக்கப்பட்டன. மாலை ஐந்து மணிக்குமேல் தொடங்கிய அமளி முடிவதற்கு இரவு ஒன்பது மணி வரை ஆயிற்று (NTR).

தூத்துக்குடியில் எழுச்சி நிகழ்ந்த நாளன்று கோரல் ஆலைத் தொழிலாளர் செய்த வேலைநிறுத்தம் முக்கியமான தாகும். ஏனெனில் இதற்கு முன்புதான், 1908 பிப்ரவரி 24ஆம் நாள் தொடங்கி மார்ச்சு 7ஆம் நாள் வரை தமது பொருளியல் கோரிக்கைகட்காக வேலைநிறுத்தம் செய்திருந்தனர். வ.உ.சி.யின் இடையீட்டினால் ஆலை நிர்வாகத்துடன் உடன்பாடு ஏற்பட்டுப் போராட்டம் வெற்றிகரமாக முடிந்தது.

ஆனால், தமது தலைவர்கள் கைது செய்யப்பட்ட ஒரே காரணத்துக்காக எவ்விதப் பொருளியல் கோரிக்கையுமின்றி மார்ச்சு 13ஆம் நாள் மீண்டும் வேலைநிறுத்தம் செய்தனர். இந்தக் கோரல் ஆலைத் தொழிலாளர் போராட்டத்தைக் குறித்துத் தனி வரைவேடு எழுதிய பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன், இந்தியாவின் முதல் அரசியல் வேலைநிறுத்தம் என இதனை நிறுவுகிறார் (சிவசுப்பிரமணியன், 1986).

எழுச்சியன்று தூத்துக்குடியில் மூடப்பட்ட கடைகள் குறித்து வேறொரு செய்தி கிடைக்கின்றது. கோரல் ஆலைத் தொழிலாளர் போராட்டத்தினால் மக்களிடையே நிலவிய பதற்றநிலையைத் தொடர்ந்து சிவகாசிப் போலீஸ் ரிசர்விலிருந்து முப்பது காவலர் தூத்துக்குடிக்கு வரவழைக்கப்பட்டனர். எழுச்சி நிகழ்ந்த மார்ச்சு 13ஆம் நாள் கடைகளனைத்தும் மூடியிருந்தமையால் இந்தப் போலீசார்க்கும்கூட உணவு கிடைக்கவில்லை.

சப் மாஜிஸ்டிரேட் எவ்வளவோ கேட்டுக்கொண்ட பின்னும்கூடக் கடைக்காரர் ஒருவரும் கடையைத் திறக்கவில்லை. ஒரு கடைக்காரர் மட்டும் கடையைத் திறக்க ஒப்புக்கொண்டனர் என்றபோதும் அவர்களும் கூட்டத்துக்கு அஞ்சினர். கடையில், துப்பாக்கி ஏந்திய இரண்டு போலீசாருடன், போலீசார்க்கும் பிறர்க்கும் அரிசி கிடைக்கும்வரை சப் மாஜிஸ்டிரேட் அமர்ந்திருக்க வேண்டியதாயிற்று (Judgement in criminal appeals Nos. 481 and 503 of 1908 in High Court of Judicature Madras, PJD 1911 b).

திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் எழுச்சி நிகழ்ந்த மறுநாள், அதாவது வ.உ.சி.யும் சிவாவும் கைதுசெய்யப்பட்ட இரண்டாவது நாள், திருநெல்வேலியில் இருந்த தச்சநல்லூரிலும் மக்கள் எழுச்சி ஏற்பட்டது.

### எழுச்சி தொடங்கியது எப்படி?

எழுச்சி தொடங்கிய முறையைக் குறித்து முரண்படும் செய்திகள் கிடைக்கின்றன. தமது கடைகளை அடைத்துவிட்டு நெல்லைக்கு வந்த தூத்துக்குடி வணிகர்கள் நெல்லை வீரராகவபுரத்திலுள்ள கடைக்காரர்களைக் கடைகளை மூடிவிடுமாறு தூண்டினர்; “நம்முடைய தலைவர் மிஸ்டர் சிதம்பரம்பிள்ளை ஜெயிலிலிருக்கும்போது நீங்கள் உங்கள் கடைகளைக் கட்டாமல் வைத்திருக்க யாதொரு நியாயமுமில்லை யென்று இடித்துக் காண்பித்துத் தூண்டினார்கள்” என்று 16.03.1908 நாளிட்ட ‘சுதேசமித்திரன்’ கூறுகிறது.





ஏட்டு குருநாத அய்யர் வேண்டுமென்றே கடைக்காரர்களைக் கடைகளை அடைக்குமாறு கட்டாயப்படுத்தினார் என்றும், எழுச்சி நிகழ்வதற்கு முன் நாள் இரவே, சாது கணபதி பந்துலுவின் வீட்டில் சில 'கீழ்ச்சாதிப் பறைய'ருடன் அமர்ந்து சதியாலோசனை செய்தார் என்றும் அரசு தரப்பில் கூறப்பட்டது (PJD 1909a). ஆயின், ஏட்டு குருநாத அய்யரின் கூற்றாகவே பின்வரும் வரிகள் வ.உ.சி.யின் சுயசரிதையில் அமைந்துள்ளன (வ.உ.சி. 1979:85).

பள்ளிச் சிறுவர்கள் பலரும் கூடி வ.உ.சி.யும், சிவாவும் கைது செய்யப்பட்டதற்கு அறிகுறியாகக் கடைகளை அடைக்குமாறு வற்புறுத்தினர் என்பதும், இதற்குப் பிறகே குருநாத அய்யரும் அவர்களோடு சேர்ந்து குரல் கொடுத்தார் என்பதும் புலனாகின்றது.

மேலும் பல கடைகள் இருந்த வீரராகவபுரத்துக்கு அண்மையில்தான் இந்துக் கல்லூரி இருந்தது என்பதும், அந்தக் கல்லூரி மாணவர்கள் பலரும் எழுச்சியில் பங்கு கொண்டனர் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கன. எனவே, வ.உ.சி.வழியாக குருநாத அய்யர் குறிப்பிடும் ''பலத்தோடு கூடிய பள்ளிச் சிறுவர்'' இந்துக் கல்லூரி மாணவர்களாக இருக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது எனலாம்.

எழுச்சி நிகழ்ந்ததற்கு மறுநாள், ''மக்களின் மன நிலையைப் பொறுத்தமட்டில், மக்கள் இன்னும் பதற்றத்துடன் உள்ளனர்; 'வந்தே மாதர' முழக்கமிடுகின்றனர்; எரிச்சலுற்ற போலீசார்க்குச் சுடவேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது'' என்று 'இந்து' 16.03.1908 இதழ் எழுதுகின்றது (PJD 1908 c).

எழுச்சியன்று வந்த போலீஸ் படையினாலும், அவர்களின் துப்பாக்கிச் சூட்டினாலும், 13ஆம் நாளுக்குப் பிறகு பொதுச் சொத்துக்களை அழிக்க மக்களால் முடியவில்லை போதும், மனத்தில் கொந்தளிப்பு அடங்கவில்லை என்பதும், அதன் வெளிப்பாடாக அவர்கள் 'வந்தே மாதர முழக்கமிட்டதோடு, கடைகளும் தொடர்ந்து மூன்று நான்கு நாள் மூடப்பட்டே இருந்தனவென்றும் புலனாகின்றது.

எழுச்சியில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டில் நான்கு பேர் திருநெல்வேலியில் இறந்து போயினர். தூத்துக்குடியில் எவரும் இறந்ததாகத் தெரியவில்லை. திருநெல்வேலியில் 57 பேரும், தூத்துக்குடியில் 36 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று நெல்லை மாவட்டக் கையேட்டைத் தொகுத்த அதிகாரி பேட் குறிப்பிடுகின்றார். திருநெல்வேலி எழுச்சியானது பரந்துபட்ட மக்களின் வெளிப்பாடாகவே இருந்தது. பல்வேறு தொழில் புரிவோரும் எழுச்சியில் பங்குகொண்டு தண்டனையடைந்தமை பரந்துபட்ட மக்களிடையே எழுச்சி ஏற்பட்டிருந்ததைத் தெளிவாக்குகின்றது.


திருநெல்வேலி எழுச்சியின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்ற வகையில் பிரித்தானிய நாடாளுமன்றத்திலும் அதனைப் பற்றிக் கேள்வி எழுப்பப்பட்டது. சென்னை சட்டமன்றத்திலும் பி.நரசிம்மேசுர சர்மா என்பார் கேள்வி கேட்டார். இது தொடர்பான தூதுக்குழு மாகாண ஆளுநரை 1.4.1908 அன்று சந்தித்தது.

திருநெல்வேலி அமைதியான நகரம், அதன் மக்கள் பிரித்தானிய அரசுக்கு விசுவாசம் உடையோர், வ.உ.சி. முதலானோரின் சொற்பொழிவுகளே கலகத்துக்குக் காரணம், என்று அந்த குழுவினர் விளக்கினார்கள். அன்றைய சென்னை மாகாண இதழ்களும், பிற இதழ்களும் கலகம் உண்டானதற்கு வெள்ளை அதிகாரிகளின் அடக்குமுறைகளே காரணம் என குறிப்பிட்டன.

''திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் சென்ற மார்ச்சு மாதம் 13ஆம் தேதி நிகழ்ந்த கலகங்களுக்கு என் பேச்சு களேதும் ஆதரவாக மாட்டாது. சர்க்கார் அதிகாரிகள் மேற்படிக் கலகங்களை என் பேச்சுகளுக்கு சம்பந்தப் படுத்தியது என்னை விசாரிக்கும் ஜட்ஜின் மனசைக் கெடுப்பதற்கன்றியும் சட்ட சாக்கிலே சென்ற மார்ச் மாதம் 13ஆம் தேதி திருநெல்வேலி தூத்துக்குடிக் கலகங்களில் செய்துவிட்ட கொலை, துன்பம் முதலிய குற்றங்களினின்றும் தப்பித்து கொள்வதற்குமாகும்'' என்று (சுமி. 19.06.1908) வ.உ.சி. வாக்குமூலம் அளித்தார்.

**(வ.உ.சி.யும் திருநெல்வேலி எழுச்சியும் நூலின் சில பகுதிகள்)**

# இதழாளர் வ.உ.சி.



மா.ரா. அரசு

**விவேகபாநு, இந்துநேசன், தமிழ் நேஷனல் பத்திரிகை, சர்வஜன மித்திரன் ஆகிய இதழ்கள் வ.உ.சி.யோடு தொடர்புடையனவாகக் குறிக்கப் பெறுகின்றன.**

'விவேகபாநு' என்பது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளிவந்த ஒரு தமிழ்த் திங்கள் இதழ். வ.உ.சி., இதன் ஆசிரியராக இருந்தார் என்று பலர் குறித்துள்ளனர். இச்செய்தியின் உண்மையை அறிய வேண்டுமாயின் விவேகபாநுவின் தொடக்கக்கால வரலாற்றை அறிய வேண்டும்.


விவேகபாநு என்னும் சர்ச்சைக்குரிய இதழ் 1900 செப்டம்பரில் தொடங்கப்பட்டது. 1901 ஆகஸ்டு முடிய ஓர் ஆண்டு குற்றாலத்திலிருந்து வெளிவந்தது. அந்த ஓராண்டில் அது இரண்டு ஆசிரியர்களைக் கண்டது. ஒருவர் கணபதியானந்த சுவாமிகள். இன்னொருவர் சுவாமி வள்ளிநாயகம், கணபதியானந்த சுவாமிகள் முதல் ஆறு இதழ்களுக்கு ஆசிரியராகவும், சுவாமி வள்ளிநாயகம் பின் ஆறு இதழ்களுக்கு ஆசிரியராகவும் இருந்தனர். ஓராண்டுக்கு மேல் இதழை நடத்த அதன் 'போஷகர்க'ளால் இயலாததால், இரண்டாம் ஆண்டிலிருந்து அதன் ஆசிரியரும் உரிமையாளரும் மாறுகின்றனர்.

குற்றாலத்திலிருந்து வெளிவந்துகொண்டிருந்த விவேகபாநு, மதுரையிலிருந்து வெளிவரத் தொடங்குகிறது. ஆசிரியர்களில் ஒருவராகவும் உரிமையாளராகவும் மு.ரா.கந்தசாமிக் கவிராயர் பொறுப்பேற்கிறார். மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றிவந்த எஸ்.சாமிநாதையரை இன்னொரு ஆசிரியராகச் சேர்த்துக் கொள்கிறார். இருவருமே ஆசிரியர்களாக இருந்து இதழை நடத்தினர். குற்றாலம் விவேகபாநு, 1902 டிசம்பர் முதல் மதுரை விவேகபாநுவாக வெளிவரத் தொடங்கியது.

வ.உ.சி. நடத்தியதாகக் கூறப்படும் 'விவேகபாநு' இதழில் எந்த இடத்திலும் அதன் உரிமையாளர் என்ற வகையில் வ.உ.சி.யின் பெயர் இடம் பெறவில்லை.

ஏழாவது இதழிலிருந்து ஆசிரியர் பொறுப்பை ஏற்ற சுவாமி வள்ளிநாயகம் ஏப்பிரல், 1901 இதழில் 'நமது பத்திரிகை' என்ற தலைப்பில் குறித்துள்ள சில செய்திகள் ஈட்டு சுட்டத்தக்கன.

"நமது திருநெல்வேலி ஜில்லாவில் சிறிது காலமாக 'விவேகபாநு' என்னும் இப்பத்திரிகை தோன்றி, ஆங்காங்குள்ள அஞ்ஞானவிருளையோட்டி, மெஞ்ஞான ஒளியை வீசி, மயக்கமெனும் நித்திரையில் கிடப்பவரையெல்லாம் தனது விஷயமென்னும் கிரணங்களால் தட்டியெழுப்பி, அன்னோரை ஆத்மவுலகப் பிரவர்த்திக்குத் தூண்டிவருவதை யாவரும் அறிந்திருக்கலாம். இத்தகைய மேலான பரோபகாரத்தைச் செய்யக் கருதிய புண்ணியவான்களின் வேண்டுகோளின்படி..." என்று எழுதி இருக்கிறார்.




இதில், இத்தகைய மேலான பரோபகாரத்தைச் செய்யக் கருதிய புண்ணியவான்களின் என்னும் பகுதி நினைவிற் கொள்ளத்தக்கது. 'நமது பத்திரிகை' என்னும் அதே பகுதியில் இடம் பெற்றுள்ள பின்வரும் செய்தியும் ஆய்வுக்கு உரிய ஒன்றாகும்.

"இப்பத்திரிகையின் போஷகராயுள்ளார் அறிவில் சீறியேனாகிய என்னை அப்பெரியோர் இறக்கிய பாரத்தை வகிக்கச் சொல்ல..." என்கிறார்.




இப்பத்திரிகையின் போஷகராயுள்ளார் என்னும் பகுதி மனங்கொள்ளத்தக்கது. கணபதியானந்த சுவாமிகளும் சுவாமி வள்ளிநாயகமும் பயன்படுத்தும் கனவான்கள், புண்ணியவான்கள், போஷகராயுள்ளார் என்னும் சொற்கள் உணர்த்தும் செய்தி யாது?

விவேகபாநுவைத் தொடங்கியவர் ஒருவர் இல்லை என்பதையே மேலே காணும் பன்மைச் சொற்கள் குறிக்கின்றன என்று கருத இடமுண்டு.

18.08.1900த்தில் அறிக்கை வெளியிட்ட கனவான்களில் ஒருவராக, 'விவேகபாநு'வின் போஷகர்களில் ஒருவராக விளங்கியவர் வ.உ.சி.

'விவேகபாநுவை வெளி வரச் செய்தேன்' என்னும் வ.உ.சி.யின் கூற்றிலுள்ள, வெளிவரச் செய்தேன் என்பதற்குத் தூண்டினேன், ஊக்கினேன், (வெளிவரத்) துனண நின்றேன் என்று பொருள் கொள்வதே பொருத்தமாகத் தோன்றுகிறது. வ.உ.சி. தனிமனிதராக விவேகபாநுவைத் தொடங்கவில்லை என்பதும், ஆன்மிகத்தை மக்களுக்குக் கற்பிக்க வேண்டும் என்பதற்காக வ.உ.சி.யும் அவர் நண்பர்களும் சேர்ந்து தொடங்கியதே அவ்விதழ்.




"தூத்துக்குடி வக்கீலும் தமிழ் வித்துவான்கட்குத் தாய் போன்ற பரோபகாரியும் நூலாராய்ச்சியிலேயே நெடுநேரம் போக்கி மகிழ்பவரும் ஆகிய ஸ்ரீமான் வ.உசிதம்பரம் பிள்ளையவர்கள் வருஷந்தோறும் ரூ.12 நன்கொடையளித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்கள்" என்று குறிப்பிடுகின்றார் கந்தசாமிக் கவிராயர்.










இதழ் நடத்தும் ஆர்வம் வ.உ.சிக்கு எப்போதும் உண்டு. செல்வமும் செல்வாக்குமாக இருந்த காலம் தொடங்கி, ‘பிச்சைக்குப் பாரெல்லாம் ஓடிய’ (இறுதிக்) காலம்வரையில் அவருக்கு அந்த விருப்பமும் ஈடுபாடும் இருந்ததை அவர் வாழ்க்கை வரலாறு உணர்த்துகிறது. அந்த விருப்பத்தின் – ஈடுபாட்டின் தொடக்கமாக விவேகபாநுவை இவர் வெளிவரச் செய்த முயற்சியைக் கொள்ளலாம்.

விவேகபாநு இதழ் எந்த நோக்கத்தின் அடிப்படையில் அமைந்தது – எந்த நோக்கத்திற்காகத் தொடங்கப்பெற்றது என்பது அறியத்தக்கதொரு செய்தியாகும். இதைத் தெரிந்து கொள்ள இயலுமாயின், வ.உ.சி.யின் வரலாற்றில் ஓர் இன்றியமையாத கட்டத்தைப் பற்றிய உண்மை புலனாகும். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் (1900–1906) வ.உ.சி.யின் மனம் எதில் ஆழ்ந்திருந்தது – அரசியலிலா அன்றி ஆன்மிகத்திலா என்ற வரலாற்று உண்மையை அறிய விவேகபாநுவின் நோக்கம் எது என்பதை அறியும் முயற்சி பெரிதும் உதவும்.

அந்நாளில் புகழ்பெற்று விளங்கிய இந்த இதழில் வ.உ.சி.யின் படைப்புகள் இடம் பெற்றுள்ளன. பாரதியாரின் முதல் கவிதை இவ்விவேகபாநுவில்தான் வெளிவந்தது. இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்து ஆண்டுகளில் புகழோடு விளங்கிய தமிழறிஞர் பலரும் இவ்விதழில் எழுதியுள்ளனர். “படிக்கும்பொழுது இடையில் கீழே வைத்துவிட்டு வேறொன்றைப் பார்க்க மனம் வருவதில்லை” என்று உ.வே.சாமிநாதையரால் பாராட்டப்பெற்றது இந்த இதழ்.

வ.உ.சி.யின் பத்திரிகைத் தொடர்பு குற்றாலம் விவேகபாநுவோடு தொடங்கியது. அவ்விதழ் ஆன்மிகம் பற்றிய இதழ். அது தேசியம், தமிழ் இலக்கியம் இவற்றில் அதிக கவனம் செலுத்தவில்லை. வ.உ.சி.யின் ஆன்மிகப் பின்னணியை அறிய வேண்டுமாயின் குற்றாலம் விவேகபாநுவைத்தான் ஆய்வு செய்ய வேண்டும். வ.உ.சி.யின் இளமைக் கால ஆன்மிக ஈடுபாட்டையும் சிந்தனைகளையம் அறியக் குற்றாலம் விவேகபாநு ஒன்றே பயன்படக்கூடியது ஆகும்.

‘கடவுளும் பக்தியும்’ (செப்டம்பர் 1900), ‘விதி அல்லது ஊழ்’ (அக்டோபர், 1900), ‘கடவுள் ஒருவரே’ (பிப்ரவரி, 1901) ஆகிய தலைப்புகளிலமைந்த கட்டுரைகள் குற்றாலம் விவேகபாநுவிலும் – ‘ஈகை’ (சனவரி, 1904), ‘அன்பு’ (ஏப்பிரல், 1904), ‘உண்மை (மே, 1904) ஆகிய தலைப்புகளிலமைந்த பாடல்கள் மதுரை விவேகபாநுவிலும் வெளியாகியுள்ளன. ‘சுதேசபிமானம்’ ஒன்று மட்டுமே 1906இல் வெளிவந்த கட்டுரையாகும்.

விவேகபாநு – மதுரையிலிருந்து தென்னாப்பிரிக்காவிலுள்ள டர்பனுக்கு இடம் பெயர்ந்தது. வ.உ.சி.யின் பல நூல்களுக்கான மதிப்புரைகள் டர்பன் விவேகபாநுவில் வெளிவந்துள்ளன. வ.உ.சி. அவற்றைத் தம்முடைய நூல்களில் எடுத்தாண்டுள்ளார்.


1900ஆம் ஆண்டில் குற்றாலத்தில் தொடங்கிய தனது பயணத்தை மதுரையில் தொடர்ந்து ஏறக்குறைய 1924இல்

டர்பனில் நிறைவு செய்தது விவேகபாநு. குற்றாலத்தில் நடந்தபோதும் மதுரையிலிருந்து வெளிவந்த போதும் டர்பன் விவேகபாநுவாக மாறியபோதும் அவ்விதழோடு வ.உ.சி.க்குத் தொடர்பு இருந்தது. அந்த இதழின் தோற்றம் முதல் மறைவு வரையில் ஏதாவது ஒரு வகையில் வ.உ.சி. அதனோடு தொடர்பு கொண்டிருந்தார் என்று கூறலாம்.


விவேகபாநு உணர்த்தும் பேருண்மை ஒன்று உண்டு. அது வ.உ.சி.யின் தத்துவ ஈடுபாடு பற்றியதாகும். வ.உ.சி.யைப் பற்றிக் குறிப்பிடும்போது அவரது அரசியல் ஈடுபாடே பெரிதும் பேசப்பெறுவது வழக்கம். அரசியலில் முனைப்பாவதற்கு முன்பே தத்துத்தில் – ஆன்மிகத்தில் ஆழ்ந்தவர் வ.உ.சி. என்னும் உண்மையை விவேகபாநு உணர்த்துகிறது. ஆன்மிகத்தைப் பரப்ப வேண்டும் என்ற அவருடைய விழைவும் அதற்காக ஓர் இதழ் தொடங்க வேண்டும் என்று எண்ணியமையும் அவருடைய ஆன்மிக ஈடுபாட்டைப் புலப்படுத்தவல்லன. அரசியல் வாழ்விற்கு முன்னும் பின்னும் தத்துவம் அவரை ஆட்கொண்டது. வ.உ.சி.யின் வாழ்வில் அரசியலுக்கு என்ன இலக்கியத்திற்கு என்ன இடமுண்டோ அந்த இடம் – அதே அளவு இடம் ஆன்மிகத்திற்கும் கடவுள் சிந்தனைக்கும் உண்டு.

தம்முடைய இதழியல் சார்ந்த முயற்சிகளாகச் சிலவற்றை வ.உ.சி. தம் சுயசரிதையிலும் வேறு சில இடங்களிலும் கூறிச் சென்றுள்ளார். வ.உ.சி.யின் வாழ்க்கையில் 1905 முதல் 1912 வரை யிலான காலப்பகுதி வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததாகும். வங்கப் பிரிவினையை ஒட்டி எழுந்த சுதேசி இயக்கத்தில் அவர் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு, கப்பல் ஓட்டி, தொழிலாளர் போராட்டத்தில் ஈடுபட்டு, அந்நியப் பொருள்களைப் புறக்கணித்துச் சிறை சென்ற காலம் அது. அந்தக் காலகட்டத்திலும் அதற்க முன்னும் பின்னுமான காலப் பகுதிகளிலும் வ.உ.சி. இதழ்கள் தொடங்குவது பற்றியும் நடத்துவது பற்றியும் பலவாறு எண்ணியுள்ளார். தம் எண்ணங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்கவும் முற்பட்டார்.

அரசியலில் முனைப்பாக ஈடுபடுவதற்கு முன் வ.உ.சி.யில் மனம் ஆன்மிகத்திலும் இலக்கியத்திலும் நோய்ந்திருந்தது. ஆன்மிகத் தேடல் அவருடைய பெருவிருப்பமாக இருந்ததை அந்நாளைய அவருடைய படைப்புகளிலிருந்து அறிய முடிகிறது. அந்தப் பருவத்தில் ‘விவேகபாநு’ என்ற பெயரில் ஓர் ஆன்மிக இதழில் தோற்றத்திற்கு அவர் பெரிதும் உழைத்திருக்கிறார். இவ்விதழைப் பற்றி வ.உ.சி.யே தம் சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார். இதுவே, இதழியல் துறையில் வ.உ.சி.யின் முதல் முயற்சியாகும். திருநெல்வேலி மாவட்டத்தில் ஆன்மிகம் சார்ந்த செய்திகளைப் பரப்புவதற்காக இதழ் ஒன்றை தொடங்க வேண்டும் எனறு வ.உ.சி.யும் அவருடைய நண்பர்களும் இணைந்து செய்த முயற்சியின் விளைவாக உருவானதுதான் விவேகபாநு என்னும் ஆன்மிகத் திங்கள் இதழ். இதன் முதல் இதழ் 1900.


தெய்வப் புலமைத்
திருவள்ளுவ நாயனார்
திருக்குறளும்,
தேசாபிமானி
வ. உ. சிதம்பரம்பிள்ளை
விருத்தியுரையும்.
முதற் பாகம்:
சிறப்புப்பாயிரத்துடன்
அறப்பால்.
1935.





ஸ்ரீமத்
வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள்
இயற்றிய
பாடற்றிரட்டு.
முதற் பாகம்.
பிள்ளையவர்கள்
சிறைக்குச் செல்லுதற்கு முன்
பாடிய
தனிப்பாடல்கள்.
இரண்டாம் பாகம்:
பிள்ளையவர்கள்
சிறையில் வசித்த காலத்தில்
பாடிய
தனிப்பாடல்கள்.
இந்தியா பிரிண்டிங் வொர்க்ஸ், சென்னை.
1915.

இதை அடுத்து, சுதேசிய முயற்சிகளில் முனைப்பாக இருந்த காலத்தில் மீண்டும் இதழ் தொடங்கும் எண்ணம் வ.உ.சி.மனத்தில் எழுந்தது. 1908இல் 'சுயராஜ்யம்' என்ற பெயரில் பரலி. சு.சண்முகசுந்தரம் பிள்ளையை ஆசிரியராகக் கொண்டு தூத்துக்குடியில் இதழ் ஒன்றைத் தொடங்கும் முயற்சியில் ஈடுபட்டார். விபின் சந்திரபாலர் விடுதலை அடையும் நாளில் அந்த இதழை வெளிக்கொணர விரும்பினார். இதழ் தொடங்க எண்ணி விபின் சந்திரபாலரின் விடுதலை அடையும் நாளில் அந்த இதழை வெளிக்கொணர விரும்பினார். இதழ் தொடங்க எண்ணிய நாள் மிகவும் நெருங்கி நின்றதால், உரியவரிடம் சொல்லி, கையொப்பம் (சந்தா) பெறுவது இயலாத ஒன்று என்பதால், இதழ் வேண்டுவோர், அவரவர் வீட்டின் முன் 'சுயராச்சியம்' என்னும் அந்த இதழின் பெயரைப் பெரியதாக எழுதி வைத்தால் எளிது என்று அறிவிக்கப்பட்டது. "முதல் இதழில் வெளிடுவதற்காக எழுதிய உணர்ச் சிமிக்க தலையங்கக் கட்டுரை இன்னும் என் நினைவில் இருக்கிறது. ஆனால், பத்திரிகை தொடங்கு முன்பே வ,உ.சி.மீது வழக்குத் தொடங்கிவிட்டதால் பத்திரிகை நின்றுவிட்டது" என்று குறித்துள்ளார் பரலி. சு.நெல்லையப்பர்.



சதிவழக்கில் கைது செய்யப்பட்டு விசாரணைக் கைதியாகப் பாளையங்கோட்டைச் சிறையில் இருந்தபோது வ.உ.சி., தாம் சிறை அதிகாரிகளுக்குத் தெரியாமல் வரவழைத்துப் பார்த்ததாகச் சில இதழ்களைக் குறிப்பிட்டுள்ளார்.

**"செறித்த பலவும் செப்பும் ஹிந்துவும்**
**வந்தே மாதர மாட்சி பெற்றவம்**
**சொந்தப் பேப்பரும் சுதேச மித்திரனும்**
**தினமும் வருத்தித் தெரியாது படித்தேம்"**

– இங்கு வ.உசி. குறிப்பிடும் 'எம் சொந்தப் பேப்பர்' என்பது எதைக் குறிக்கிறது என்பதை அறிய முடியவில்லை. வந்தே மாதரமாட்சி பெற்றதாக வ.உ.சி. குறிப்பிடும் அவ்விதழ், மேலே குறித்த 'சுயராச்சிய'மாக இருப்பதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன. அவ்விதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்க இருந்த பரலி, சு. சண்முகசுந்தரம் பிள்ளையின் தம்பியான பரலி.சு.நெல்லையப்பர் தாம் எழுதிய வ.உ.சி. சரித்திரத்தில் அவ்விதழ் வெளிவரவேயில்லை என்று கூறியுள்ளார். அவர் அந்தக் காலகட்டத்தில் (1908 – 1912) வ.உ.சி.யுடன் மிக நெருக்கமாக இருந்தவர்.

அத்துடன் 1908 மார்ச்சில்தான் சுயராச்சியம் என்னும் அந்த இதழைத் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. அதே மார்ச்சு மாதமே வ.உ.சி. கைது செய்யப் பெற்றுப் பாளையங்கோட்டைச் சிறையில் அடைக்கப்பட்டார். அந்தக் குறுகிய கால இடைவெளியில் – பரபரப்பான – அரசியல், குழப்பம் மிகுந்த நேரத்தில் அந்த இதழ் வெளிவந்திருக்க இயலுமா என்று எண்ணிப் பார்க்கும்போது வ.உ.சி. குறிக்கும் 'எம் சொந்தப் பேப்பர்' அதுவாக இராது என்ற முடிவிற்கே வர வேண்டியுள்ளது. அது 'இந்தியா' இதழாக இருக்கலாம்.

## இருபத்தேழு பாஷைகளில் பத்திரிகை

சிறையிலிருந்து விடுதலையான வ.உ.சி. தம்முடைய பழைய நண்பர்களைக் காண விரும்பிப் புதுவை சென்றார். அங்குப் பாரதியார், அரவிந்தர் முதலான நண்பர்களைக் கண்டு அளவளாவி மகிழ்ந்தார். அங்குத் தங்கியிருந்த காலத்தில் ஒருநாள் அவர் அரவிந்தருடன் பேசிக் கொண்டிருந்தபோது, இருபத்தேழு பாஷைகளில் பத்திரிகைகள் நடத்த வேண்டும் என்ற தம் விருப்பத்தைத் தெரிவித்தார். அதை அவர் வார்த்தைகளிலேயே அறிவது தக்கது:

“நமது அரசாட்சியை மீட்பதற்குரிய பல வழிகளைப் பற்றி மீண்டும் பேசினோம். வழக்கமாக இவ்வாறு நடந்து வந்தது. ஒருநாள் மாலையில் அரவிந்தர் மாளிகையில் உலக முழுவதிலும் நமது சுதந்திரக் கிளர்ச்சியைப் பரப்ப வேண்டுமென்பது குறித்துப் பேசிக் கொண்டிருந்தேன். இது சம்பந்தமாக அரவிந்தரிடம் நான் இருபத்தேழு பாஷைகளில் பத்திரிகைகள் நடத்தவேண்டும் என்றும் அதற்கான பணத்தை சுலபமாக பொதுஜனங்களிடமிருந்து பெறலாமென்றும் கூறி ஒரு திட்டமிட்டு அதை அவருக்கு விளக்கிக் கூறிக் கொண்டிருந்தேன்.

இந்தச் சமயத்தில் மாமாவும் ஸ்ரீநிவாஸாச்சாரியார் அங்கு வந்து சேர்ந்தனர். எனது திட்டத்தைக் கேட்டு மாமா ‘கலகலவென’ நகைத்தார். ‘பிள்ளைவாள், நாங்கள் ஒரு பத்திரிகை நடத்தவே திண்டாடும்போது இருபத்தேழு பாஷைகளில் பத்திரிகை நடத்துவது என்பது சாமான்யமா? அதற்கு எவ்வளவு ஆள் வேண்டும்? எவ்வளவு பணம் வேண்டும்? இதெல்லாம் நடக்கிற காரியமா, ஓய்?” எனக் கேட்டார்.

எனக்கு மாமா மீது கோபம் வந்துவிட்டது. “பாரதி! ஊரை ஆள ஒரு பத்திரிகை போதும். உலகத்தை ஆள எவ்வளவு பத்திரிகைகள் வேண்டும்?’ என்று கூறி என்னவோ சுடுசொற்கள் சிலவும் கூறிவிட்டேன். மாமாவின் மணிவாக்கு என்னமோ உண்மையாய்த்தான் ஆயிற்று. ஆனால் எனது பத்திரிகைத் திட்டந்தான் பொய்த்துப் போயிற்று.”

## பரோபகாரி

சிறையிலிருந்து விடுதலையான வ.உ.சி., திருநெல்வேலி மாவட்டத்திற்குள் நுழையக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருந்ததனால் சென்னையில் சிறிது காலம் வாழ்ந்தார். அப்போது, அவர் வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெறப் பல பணி முயற்சிகளில் ஈடுபட்டார். வாழ்க்கைக்காக வறுமையோடு போராடிக் கொண்டிருந்த அந்த அவலமான நாள்களிலும்கூட இதழ் நடத்த வேண்டும் என்ற எண்ணம் வ.உ.சி.க்கு இருந்தது. 1917 ஆம் ஆண்டு ‘பரோபகாரி’ என்ற பெயரில் தமிழ் நாளிதழ் ஒன்றைத் தொடங்கும் முயற்சியில் இறங்கினார். அரசு ஆணைக்குறிப்பில் உள்ள பின்வரும் செய்தி வ.உ.சி.யின் இதழியல் முயற்சியை நமக்குத் தெரிவிக்கின்றது.


Name of Newspaper Name, status of other
Place of Proposed publication particulars of the applicant
Paropakari V.O.Chidambaram Pillai
Tamil Daily Chintadripet Political agitator and exconvict

‘அரசியல் கிளர்ச்சியாளர்’, ‘பழைய கைதி’ என்றெல்லாம் வ.உ.சி.யை வருணித்த ஆங்கில ஆட்சி அவருக்கு நாளிதழ் வாய்ப்பை அளிக்காததில் வியப்பொன்றும் இல்லை.

வ.உ.சி. என்னும் விடுதலை இயக்கத் தலைவர், தம் வாழ்வின் பல கட்டங்களில் இதழ் நடத்தும் ஆர்வத்தோடு இருந்ததும் பெரும்பாலும் அந்த ஆர்வங்கள் செயல்வடிவம் பெறாமலே நின்றுவிட்டதும் இதுகாறும் கண்ட செய்திகளால் அறியப்படும் உண்மைகளாகும்.

150

# வ.உ.சி.யின் தமிழ் ஆளுமைத்திறன்



ரெங்கையா முருகன்

**வ.உ.சி. என்றதும் நினைவுக்கு வருவது கப்பலோட்டியதும், செக்கிழுத்ததும் என்ற இரு அடையாளங்களில் சுருக்கப்பட்டு விட்டார். வ.உ.சி. கவிராயர் பரம்பரையைச் சேர்ந்தவர். தமிழ் இலக்கியங்களில் ஆழங்கால் பட்டவர். தமிழில் பல துறைகளில் பதிப்பாசிரியராக, படைப்பிலக்கியவாதியாக, உரையாசிரியராக, மொழிபெயர்ப்பாசிரியராக, மேடைத் தமிழ் சொற்பொழிவாளராக பன்முகதளத்தில் முன்னோடியாக சிறந்து விளங்கியவர்.**

வ.உ.சி. காலத்தில் பொதுமக்கள் அறியாமை இருளில் மூழ்கிக் கிடந்த காலம். பொது சனங்களுக்கு எதனைக் குறித்தும் கவலைப்படாத அறிவு தெளிவற்றவர்களாக இருந்த காலச் சூழலில் வ.உ.சி. தனது வீர்யமிக்க மேடைப் பேச்சு கலாச்சாரம் மூலமாக பாமரத் தமிழில் சாமான்ய மக்களுக்கு அரசியல் உணர்வை ஏற்படுத்தி கிளர்ந்தெழச் செய்தவர். திண்ணையை தாண்டாத சோம்பேறி வீரர்களை தனது ஆற்றல் மிக்க சொற்பொழிவால் வீதிக்கு வரவழைத்து பாமர மக்களிடம் ''பொதுமக்கள் கருத்து'' முனைப்பை ஏற்படுத்தியவர். தூங்கு மூஞ்சி மாகாணமாக இருந்த சென்னை மாகாணத்தில் வெள்ளையர் எதிர்ப்புணர்ச்சி நிகழும் ஒரே இடமாக தூத்துக்குடியை மாற்றியவர் வ.உ.சி.

சுத்தானந்த பாரதியார் குறிப்பிடுவது போல சிதம்பரம் பிள்ளையின் பேச்சு, பாரதியின் பாட்டு, சுப்பிரமணிய ஐயரின் எழுத்து, சிவாவின் ஆவேசம் இந்த நான்கும் தமிழக அரசியல் உலகில் எழுச்சியை உண்டாக்கின. தம்முடைய பேச்சாற்றலால் தமிழுலகு புதியதொரு 'மேடைத் தமிழ்' என்னும் துறையை வளர்த்தெடுத்தவர் வ.உ.சி. ஆங்கிலேயர்கள் வ.உ.சி. தமிழில் பேசுவதை பெருங்குற்றமாக பாவித்தார்கள்.

1927ல் சேலம் மாவட்ட மூன்றாவது அரசியல் மாநாட்டிற்கு தலைமை தாங்கிய வ.உ.சி.யின் தலைமை உரைக்கு அவர் இட்ட பெயர் 'எனது பெருஞ்சொல்' என்பதாகும். இந்த 'பெருஞ்சொல்' என்ற சொல் விருதை சிவஞானயோகிகள் கையாண்ட சொல். சிவஞானயோகியால் ஆரம்பிக்கப்பட்ட



திருவிடர் கழகம் பற்றிய விவரக்குறிப்பில் 'பெருஞ்சொல்' என்னும் ஆட்சியை காணமுடிகிறது. அரிய பொருள்களைப் பற்றிப் பெருஞ்சொல் (பிரசங்கம்) இயற்றல் என்று 'பெருஞ்சொல்' என்பது 'பிரசங்கம்' என்பதற்கு மாற்றான தனித் தமிழ்ச்சொல்லாக பயன்படுத்தப்பட்டது.

'பிரசங்கம்' என்று புழங்கிய அந்நாள் சொல்லை தனித் தமிழ்ச்சொல்லாக பெருஞ்சொல் என்று மாற்றினார் சிவஞானயோகி. வ.உ.சி. கோவில்பட்டியில் வாழ்ந்த காலத்தில் சிவஞான யோகிகளோடு பழகியவர். அதன் காரணமாக முந்தைய காலங்களில் பிரசங்கம் என்ற சொல்லைப் பயன்படுத்திய வ.உ.சி. பிந்தைய காலங்களில் 'பெருஞ்சொல்' என்னும் புதிய சொல்லை அறிமுகப்படுத்தியவர் வ.உ.சி. இதன் மூலம் வட சொற்கள் கலவாது எழுதுவதில் ஆர்வம் கொண்ட வ.உ.சி. வாய்ப்பு அமையும் போதெல்லாம் தனித்தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தி வழக்கத்திற்குக் கொண்டு வரமுனைந்தார்.

வ.உ.சி.யின் சிறைவாழ்வில் உடலாலும், உள்ளத்தாலும் பெருஞ்சித்ரவதைக்கு உள்ளாக்கப்பட்டார். சிறை வாழ்வில் அவருக்கு ஆறுதலாக இருந்தது தமிழே. செக்கிழுத்த துயரத்தை மாற்றியது என் செந்தமிழன்றோ கைத்தோல் உரிய கடும்பணி புரிந்தபோது என் கண்ணீரை மாற்றியது கன்னித்தமிழன்றோ! தொல்காப்பியத்தைப் படித்துப் படித்துப் தொல்லை எல்லாம் மறந்தேன். இன்னிலையைக் கற்று என் இன்னல்களை எல்லாம் வென்றேன் என்று குறிப்பிடுமளவுக்கு சிறைவாழ்வில் கிடைத்த ஒரே ஆறுதல் தமிழ் என்கிறார் வ.உ.சி.

தமிழின் மீது தணியாத ஆர்வம் கொண்டிருந்த வ.உ.சி.க்கு இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பெற்று சிறைக்கோட்டத்திலே இருந்து எழுதியது சுயசரிதை. வ.உ.சி.யின் சுயசரிதையை ம.பொ.சி. அரசியல் ஆவணம் என்று குறிப்பிடுகிறார். வ.உ.சி.யின் சுயசரிதை அக்கால சமூக நிகழ்வுகளோடு அவரைப் பிணைத்துக் காட்டுகின்ற ஓர் அரிய இலக்கிய பெட்டகம் சுயசரிதை. இந்த சுயசரிதை இனிய எளிய தெளிந்த தமிழில் அகவற்பாவால் இயற்றப்பட்டது. ம.பொ.சி. சுயசரிதையை

குறிக்கும்போது, ‘‘வ.உ.சி.யின் சுயசரிதை என்ற நூல் அவரது சொந்த சரிதை மட்டுமன்று. திலகர் சகாப்தத்தின் முற்பாதியில் தமிழகத்தில் நடந்த விடுதலைப் போரின் வரலாறுமாகும்.’’

சுயசரிதையில் நல்ல இலக்கிய வளத்தோடு, தன்னுணர்வு, பெருமித உணர்வு, நகைச்சுவை, நையாண்டி, கேலி, குறும்பு பல்வேறு வகைப்பட்ட உணர்வுகளுடன் தளும்பி வழிகின்ற இலக்கிய படைப்பாகும்.

சிறை அதிகாரி ஒருவன் வந்து வ.உ.சி.யின் ஆடையை அகற்றச் சொல்லி சோதிக்கிறான். பிறகு சென்று விடுகிறான். இந்த நிகழ்வினை குறும்புப் பார்வையுடன் வ.உ.சி. விவரிக்கிறார்.

**“ஆடையை அவிழெனு அறைந்தனன்;**
**தடியரென் ஆடையை அவிழ்த்தனர்.**
**“அரைஞாண்” என்றனர்**
**“அரைஞாண்” எங்ஙனம் அங்குற்றதென்றான்.**
**“அரைஞாண்” என்றும் அங்குளதென்றேன்**
**சென்றான் அத்துடன்; சிரித்தோம் நாங்கள்**
நின்றான், பார்த்தான்; நினைந்தான்; போயினான்”

நின்றான், பார்த்தான், நினைந்தான், போயினான் என்னும் அடி சிலப்பதிகாரத்தில் ‘ஊர்சூழ்வரிக் காதை’யில் இளங்கோவடிகளை நினைவூட்டும் வகையில் வ.உ.சி. விளக்கியிருப்பார்.

சிறையில் வ.உ.சி.யின் காலில் விலங்கு பூட்டப்படுகிறது. துன்பம் நிறைந்த அந்த நிகழ்ச்சியைக் கூட பகடியுடன் வெளிப்படுத்தும் வரிகள் இதோ,

**“தந்தான் வலதுகால் தண்டைகள் எமக்கே**
**அரும்பொன் காலிடல் அபசார மாதலால்**
**இரும்பினை அணியுமென் றீந்ததைப் போன்றே”**

வ.உ.சி.க்கு சிறையில் அளிக்கப்பட்ட உடை குறித்து பெருமித உணர்வுடன் வெளிப்படுத்துகிறார்.

**“மரத்தின் பட்டையென வரையத்தக்க**
**உரத்த துணியில் உருப்படுத்தியநல்**
**கால்களில் லாத கைகளில் லாத**
**கால் சட்டை யொன்றும் கைச்சட்டை யொன்றும்**
**............**
**எம்பெயர் உயரவும் எம்முருத்தாழவும்**
**உடுத்தேம் அவற்றை உளங்கொடு”**

தாம் குறைந்த ஆடையை அணியும் நிலை ஏற்பட்டதே என்று தம்மைத் தாமே தாழ்வாகக் கருதாமல், ஆடையின் தரம்தான் குறைந்ததே தவிர அதை அணியப்போகும் நான் தரத்திலே உயர்ந்தவன்; நான் அணிவதால் இந்த ஆடை சிறப்பு பெறுகிறது என்ற ஊக்கமிகு வரிகளால் புதுப்பொலிவினை சுயசரிதையில் அளிக்கிறார்.

கொடூரமான சித்திரவதைகளைக்கூட நகைச்சுவை மொழியில் வெளிப்படுத்தும் உறுதிகொண்ட நெஞ்சினராக வ.உ.சி.யை காட்டும் நிகழ்ச்சிகள் பல சுயசரிதையில் இடம்பெறுகின்றன. சாணல் கிழி இயந்திரத்தில் வேலை செய்தபோது வ.உ.சி.யின் கைத்தோல் உரிந்து இரத்தம் வடிகிறது. அதைப் பார்த்தச் சிறை அதிகாரியின் நடத்தையை கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

**“திங்கட்கிழமை ஜெயிலர்என் கைத்தோல்**
**உரிந்ததைப் பார்த்தான் உடன்அவன் எண்ணெய்**
**ஆட்டும் செக்கினை மாட்டிற்குப் பதிலாப்**
**பகலெல்லாம் வெயிலில் நடந்து தள்ளிட**
**அனுப்பினன், அவனுடைய அன்புதான் என்னே!”**

மாட்டிற்கு பதிலாக மனிதன் செக்கிலே பூட்டப்பட்ட அந்தக் கொடுமையான நிகழ்வை இயல்பு நவிற்சி அணி என்னும் இலக்கணநயம் தோன்ற சுயசரிதையில் வெளிப்படுத்துகிறார்.

மிஞ்செல் என்னும் சிறை அதிகாரி வ.உ.சி.க்கு நேரம் வாய்க்கும்போதெல்லாம் பக்குவமாக நடந்து கொள் என்று அறிவுரை கூற, வ.உ.சி. ஒரு நாள் வெகுண்டு முட்டாள் இத்துடன் எனக்கு அறிவுரை கூறுவதைவிட்டு விடு என்று அறைகிறார்.

**“நீயோ புத்தி நிகழ்த்துகின்றவன்?**
**வாயை மூடடா மதியிலி. உனக்கும்**
**உன்னப் பனுக்கும் உன் சூப்பிரண்டெண்டு**
**உன்னையாள் கவர்னர் மன்னா தியர்க்கும்**
**புத்திகள் கூறும் பெற்றிமை யுடையேன்”**

இங்கு வ.உ.சி.யின் அடிபணியாத நெஞ்சுரம் வெளிப்படுகிறது. சிறை அதிகாரியை எதிர்த்து பேசினால் தொடர்ந்து பல தொல்லைகளுக்கு ஆளாவோம் என்றும் தெரிந்து கூட சிறை அதிகாரி மிஞ்செலிடம் உனக்கு, உன் அப்பனுக்கு, உன் அதிகாரி சூப்பிரெண்டு, அதற்கு மேல் உன்னை ஆள்கின்ற கவர்னர் உட்பட அனைவருக்கும் அரியபுத்திமதிகளைக் கூறும் அளவுக்கு நான் பெரியவன். இத்துடன் எனக்கு புத்திமதிகளைக் கூறுவதை விட்டுவிடு முட்டாள் என்று மன உறுதியுடன் வெடித்து தள்ளுகிறார்.

வ.உ.சி.யின் படைப்பிலக்கியங்களில் பாடல் திரட்டு மிக முக்கிய ஆவணம். பாடல் திரட்டில் 381 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. 350 வெண்பா, ஒரு தாலாட்டு, மூன்று விருத்தங்கள், பதினைந்து கட்டளை கலித்துறை, 443 அடிகள் கொண்ட பதினொன்று நிலை மண்டில ஆசிரியப்பா அடங்கியது பாடற்றிரட்டு. சிறைக்கு செல்வதற்கு முன்பு 97 பாடல்கள் முதல் பகுதியாகவும், 284 பாடல்கள் சிறையில் இருந்த காலத்தில் எழுதப்பட்டதாகவும் இரண்டு பகுதியாக அமைந்தது பாடற்றிரட்டு.

இரட்டை ஆயுட்கால தண்டனை, மனைவியை விட்டு பிரிதல், இளம் வயதுடைய இரண்டு பாலகர்களையும் விட்டுச் செல்லுதல் மிகச் சரியான காலத்தில் பொருளீட்ட வேண்டிய காலக்கட்டத்தில் சிறைக்குள் தள்ளுதல், கடமை உணர்வு மிக்க மகன் வயதான பெற்றோர்களை விட்டு பிரிதல், ஆங்கிலேயர்கள் சிறைக்குள்ளே தள்ளிவிட்டு இலகுவாக அவரது கனவுக் குழந்தையான சுதேசி கப்பல் கம்பெனியை முற்றிலும் நசுக்கி, சீரழித்தல், தன்னுடைய சுய பங்குதாரர்களையே வைத்து கப்பல் கம்பெனியை முடக்குதல், தம்பி மீனாட்சி சுந்தரம் மனம் பிறழ்ந்து போதல், இளம் மனைவி மீனாட்சி பிரிவியூ கவுன்சில் அப்பீலுக்காக வழக்கறிஞர்களை தேடி அலைதல், வழக்கறிஞர்களும் தண்ணீர் காட்டுதல், அடிமேல் அடி, உடலாலும், உள்ளத்தாலும் பல்வேறு மன உளைச்சல்களை கொடுத்தல் இவ்வளவு இடையூறுக்கிடையே வ.உ.சி.யின் நெஞ்சுரம் நம்மை வியக்க வைக்கிறது. அவரது பேராற்றல் வெளிப்படும் கவிதையில் எமனைக்கூட எட்டி உதைப்பேன் என்ற தொனியில் பாடும் துயர வரிகள் இதோ,


வள்ளியம்மை சரித்திரம்.


தொல்காப்பியம்
இளம்பூரணம்
பொருளதிகாரம்
U. V. S. IYER LIBRARY


சாந்திக்கு மார்க்கம்




**"என் மனமும் என்னுடம்பும் என்சுகமும் என்னறமும்**
**என்மனையும் என்மகவும் என்பொருளும் – என் மணமுங்**
**குன்றிடினும் யான்குன்றேன் கூற்றுவனே வந்திடினும்**
**வென்றிடுவேன் காலால் மிதித்து"**

எல்லாமே அழிந்தாலும் நான் அஞ்சமாட்டேன் மனங்குன்ற மாட்டேன் என்னும் கருத்தை வெளிப்படுத்தும் பாடல் அடிகள் நாட்டு நலனுக்காக வ.உ.சி. பட்ட பெருந்துன்பங்களின் பேருருவை காட்டும் அடிகளாய் திகழ்கின்றன.

சிறையில் வாடுகின்ற வேளையில் மக்கிப்போன கேழ்வரகு கூழை உண்ணும்போது தமது இளம்வயது மனைவி மீனாட்சியம்மாளின் நினைவு வருகிறது. அழகான இல்லம். அன்பான மனைவி மக்கள். பருக முக்கனிச்சாறு; தேன் கலந்த பால். இவற்றையெல்லாம் விட்டுவிட்டு சிறையில் மக்கிப்போன கேழ்வரகு கூழை குடிக்கும் நிலையினை படிக்கும்போது மனம் நெகிழ்கிறது.

**"முக்கனியின் சாறெடுத்து முந்திரிஏலம்வாதம்**
**அக்காரம் தேன்பாலோ டட்டுட்டக் – கக்குமென்னா**
**கேழ்வரகின் கூழுண்டல் கேடறியாய் நின்மலர்த்தாள்**
**வாழ்வதொக்கும் கற்காட்டில் வந்து"**

வ.உ.சி. தம் நண்பர் பா.சிவராமன் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதம் படிப்பவர் நெஞ்சை உருக்குவதாக அமைந்துள்ளது. வறுமை என்னும் கொடும்பேய் வ.உ.சி.யின் நாச்சொல்லை நலிய வைத்து – சந்தமில் வெண்பாக்களைப் பாட வைத்தது. கொடுத்து கொடுத்து சிவந்த கைகளைக் கொடு கொடு எனத் தாழ்ந்து நிற்கும் அவல நிலையை வெளிப்படுத்தும் இக்கவிதை கண்ணீரை வரவழைக்கிறது.

**"வந்தகவி ஞர்க்கெல்லாம் மாரியெனப் பல்பொருளும்**
**தந்த சிதம்பரமன் தாழ்ந்தின்று – சந்தமில்வெண்**
**பாச் சொல்லிப் பிச்சைக்குப் பாரெல்லாம் ஓடுகின்றான்**
**நாச் சொல்லும் தோலும் நலிந்து."**

இக்கவிதையில் படைப்பின் ஆளுமைத் தன்மையை பாராட்டுவதா இல்லை பார் போற்றும் உத்தமரின் நிலை எண்ணி இரங்குவதா படிப்பவர் நெஞ்சம் கலங்கத்தான் செய்கிறது.

சிறைக்கு போகும் முன்பு வ.உ.சி.யின் செம்மாந்த நிலைவேறு. சிறைக்குள் வந்த பிறகு இந்த உலகம் அவரை கண்டும் காணாத நிலையாக மாறி, பொருளாதாரம் இறங்கியவுடன் மதிப்பும் மரியாதையும் குறைந்த நிலையை அவலக்குரலாக, அதே வேளை சத்தியத்தை நம்புபவன் என்று அறைகிறார் இதோ,

**“எல்லாரும் கைவிட்டார் ஏந்திழையும் துன்புற்றாள்**
**வல்லாரும் வல்லுநரும் – செல்லா**
**திவன்பேச் சினியென்றெனை யிகழ்ந்தார்**
**என் மெய்த்தவத்தவன் பூமிநாதன் நடந்து”**

தன் நிலை இறங்கும்போது இந்த உலகம் எவ்வளவு கேலி செய்கிறது என்பதை வ.உ.சி.யின் பேச்சு இனி எடுபடாது என்று எல்லோரும் என்னை இகழ்கின்றனர் என்று புலம்பும் வெண்பாவாக கண்ணீரை வரவழைக்கிறார்.

அன்புக்குரிய மனைவி மக்களின் பிரிவால் நேர்ந்த சிறைத் தனிமை வ.உ.சி.யை வருத்துகிறது. அந்த வருத்தத்தை வெளிப்படுத்தும் பாடல்,

**“கூட்டினை விட்ட குரீஇஇக் குஞ்சேநீ**
**வீட்டினை விட்ட மிகையால் இக் காட்டினில்**
**துன்பமுறு கின்றேன் போல் துன்பமுறு கின்றனையோ**
**இன்பமுறும் சுற்றம் இழந்து”**

இன்பம் தரும் சுற்றத்தைப் பிரிந்து தான் வருந்துவதைப் போல இக்குருவியும் வருந்துகிறதோ என்று மனமுருகி பாடும் பாடலில் ஏக்கத்தை வெளிப்படுத்துகிறார்.


வடமொழியும் தமிழும் ஒப்புநோக்கி தமிழே உயர்ந்தது என்னும் கருத்தை வெளிப்படுத்தும் பாடல். இதில் திருக்குறள் நூலுக்கு ஈடாக வடமொழியில் நூல் உண்டோ என்று கேள்வி கேட்கும் தொனியில் வெளிப்படுத்தும் கவிதை.

**“ஆரியமே ஏற்றமெனும் அன்பருயர் வள்ளுவரின்**
**ஓரியலே கற்றாலும் ஓதாராங் – கீரடியில்**
**நாற்பொருளும் வள்ளுவர்போல் நன்குரைக்கும் நூல்ஒன்றைப்**
**கேற்பட நாம் கண்டதுண்டோ இன்று”**

மனைவி மீனாட்சியம்மாளுக்கு எழுதிய கவிதைகளில் அவர்களுக்கு புரியும்படியான வெகுசன வழக்காறு புராணக் கதைகளை உவமைப்படுத்தி சிறைக்குள் தன் நிலையை கூறும் வண்ணம் வெளிப்படுத்துகிறார். கிருஷ்ணன் கம்சனை வதம் செய்ய சிறைக்குள் புகுந்த மாதிரி சிறை அதிகாரிகளை வதம் செய்யவே நான் சிறைக்குள் சென்றிருக்கிறேன் என்று சிறை அதிகாரிகளை கம்சனாகவும், தன்னை கிருஷ்ணனாகவும் பாவித்து கவிதை வடித்துள்ளார்.


கஜேந்திர மோட்சம் என்னும் புராணக் கதையை தழுவி முதலை வாய்க்குள் அடைபடும் யானை இறைவனின் துணைக்கொண்டு தன் ஆன்மபலத்தால் விடுதலை அடையும். அதேபோல யானையை தனக்கு உவமைப்படுத்திக் கொண்டு யானைப் போன்று என்னுடைய ஆன்ம பலத்தால் முதலைப் போன்ற சிறைக்குள்ளிருந்து சீக்கிரம் வெளிவந்து விடுவேன் என்ற தொனியில் கவிதை படிக்கிறார் வ.உ.சி.

வ.உ.சி.க்கு விதிக்கப்பெற்ற இரட்டை ஆயுள் தண்டனை என்னும் கொடிய தீர்ப்பை தாங்கும் மனவலிமை தனது தம்பி மீனாட்சிசுந்தரத்திற்கு இல்லாமல் மனப் பிறழ்வு அடைகிறார். தன்னை மறந்தார். தன் நாமம் கெட்டார். அண்ணனுக்கு விதிக்கப்பெற்ற தண்டனை ஒன்றே நினைவானார். அறிவு திரிந்தார். தம்பியின் நிலை அறிந்த வ.உ.சி. அதிர்ந்தார். உள்ளம் கலங்கி தவித்த நிலையில் வெளிப்படும் கவிதை,










**"அண்ணன் பகைவர் அரணுள் அழிவ னெனும்**
**எண்ணம் உனதறிவை ஏய்த்ததோ கண்ணன்**
**பகைவர் அரண்புகுந்து பற்பலமுன் செய்த**
**வகையை மறந்தனையோ மற்று"**


பாடலில் பொதிந்துள்ள ஆழ்ந்த துயரம் நம்மை நெக்குருக வைக்கிறது. கண்களில் நீர் பெருகுகிறது. மீனாட்சிசுந்தரம் என்னும் அன்பே உருவான மனிதர் நம் மனதில் வ.உ.சி. கவிதை வரியாக நெடிதோங்கி நிற்கிறார்.

வ.உ.சி.யின் ''மெய்யறம்'' மாணவரியல், இல்வாழ்வியல், அரசியல், அந்தணவியல், மெய்யியல் ஐந்து இயல்களைக் கொண்டு ஒவ்வொரு இயலுக்கும் 25 அதிகாரங்கள் என்று மொத்தம் 125 அதிகாரங்களை வைப்பு முறையில் கச்சிதமாக கையாண்டிருப்பார். மனிதனாக பிறந்த ஒருவர் படிப்படியாக தன் அறிவு அனுபவ நிலையில் மாணவர், அரசர், அந்தணர் என உயர்ந்து இறுதியில் மெய்ந்நிலையை அடையலாம் என்பது வ.உ.சி.யின் நம்பிக்கையாகும்.

இல்வாழ்வியலில், ''உயிர்த்துணை கொள்ளல்'' என்னும் அதிகாரத்தில் 'துணையிழந்தாரை மணத்தல் புண்ணியம்' என்றும், ''உயிர்த்துணை யாளுதல்'' என்ற அதிகாரத்தில் பாலின சமத்துவம் குறித்து பின் வருமாறு, ''இருவரு ளறிவிற் பெரியவ ராள்க'', ''ஆண்பால் உயர்வெனல் வீண்பேச்சென்க'', ''துணை நன்காள்பவர் தொல்லுல காள்வார்'' என்றும் நாடு என்னும் அதிகாரத்தில் ''ஒரு மொழி வழங்குவ தொரு தனிநாடு'' மொழி வழி அமையும் நாடு குறித்த சிந்தனையை வெளிப்படுத்தியிருப்பார்.

நாடாள்வோர் நாட்டை நன்முறையில் ஆளவேண்டும் என்னும் கருத்து அரசியல் பகுதியில், ''அரசுயிர் கட்குச் சிரசென நிற்பது'' என்ற அடி மூலம் விளக்குவார். மெய்யறம் நூலினை பள்ளி மாணவர்கட்கு பாடப்புத்தகமாக வைக்கப்படுதல் நல்லது என்பார் சுப்பிரமணிய சிவம்.

வ.உ.சி. வீரியமிக்க அரசியல் சாதனைகளை மறக்கப்படும் நிலையில் அதிகம் அறியப்படாதவையான அவருடைய தமிழ்ப் பணிகளின் நிலையும் கேள்விக்குறியே. வ.உ.சி.யின் தமிழ்ப் பணிகளின் ஊடே மறைந்திருக்கும் அவருடைய தமிழ் ஆளுமையை தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம்பெறத் தக்கனவாய் முத்திரைகள் பதித்தவர். வ.உ.சி.யின் தமிழ் ஆளுமை வீச்சின் திறத்தை எண்ணும் வேளையில் தவிர்க்க இயலாமல் அவர் வாழ்ந்த காலத்தையும்


தொல்காப்பியம்
இளம்பூரணம்

பொருளதிகாரம்
மெய்ப்பாட்டியல், உவமையியல்,
செய்யுளியல், மரபியல்


பதிப்பாசிரியர்:
வ. உ. சிதம்பரம்பிள்ளை

1935


மனம் போல வாழ்வு

வ. உ. சிதம்பரம் பிள்ளை

பாரி நிலையம்
59.பிராட்வே·சென்னை-1.


திரு
பொய்கையார்
இன்னிலை

திரு
வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள்
விருத்தி யுரையுடன்

த. வேதியப் பிள்ளையால்
பதிப்பிக்கப் பெற்றது.
இரண்டாம் பதிப்பு.

அம்பாசமுத்திரம்,
அகஸ்தியர் அச்சுக்கூடம்.

நினைவில் கொள்ள வேண்டியுள்ளது. மேடைப் பேச்சு தமிழ் மூலம் சாமான்ய மக்களை ‘‘பொது மக்கள் கருத்து’’ என்ற ஒன்றை உருவாக்க முனைந்ததும், ஒவ்வொரு தனிமனிதனும் தன்னை நெறிப்படுத்திக் கொண்டால் அதன் வழி வாழ்வு நலம்பெறும். தனிமனித ஒழுக்க மேன்மை அவன் சார்ந்த குடும்பத்தையும் அவன் வாழும் நாட்டையும் வலிமை அடையச் செய்யும் என்று நம்பியவர்.

வ.உ.சி.யின் தமிழ் ஆளுமைத்திறன் மேடைத் தமிழ் வரலாற்றிலும், உரைநடை வரலாற்றிலும், தனித்தமிழ் சிந்தனை வரலாற்றிலும் வ.உ.சி. தம் தமிழ் முத்திரைகளைப் பதித்துள்ளார்.

**உதவிய நூல்கள்:**


**1. மா.ரா.அரசு, 2022,**
வ.உ.சிதம்பரனாரின் தமிழ்ப் பணிகள், சென்னை.
பேராசிரியர் மா.ரா.அரசு நினைவு அறக்கட்டளை.

**2. அ.சங்கரவள்ளிநாயகம், 2022,**
வ.உ.சி. வாழ்க்கை வரலாறும் இலக்கியப் பணிகளும்,
சென்னை. மலர் புக்ஸ்.


❖❖❖

# கப்பலோட்டிய கதை



**குருசாமி மயில்வாகனன்**

**1900களில் இந்திய அரசியலில் முழுக்கவும் புதிதாக உருவான ஓர் அரசியல் கொள்கை, “சுதேசியம்” ஆகும். இக்கொள்கையினைப் பின்பற்றியவர்கள் ஒன்று, உள்நாட்டுப் பொருட்களைஆதரிப்பது மட்டும் எனவும் மற்றொன்று உள்நாட்டுப் பொருட்களை ஆதரிப்பதோடு அன்னிய நாட்டுப் பொருட்களைப் புறக்கணிப்பதும் எனவும் இரண்டு போக்குகளில் இருந்தார்கள். இவர்கள் காங்கிரஸ் கட்சியில் முறையே பழைய கட்சி மற்றும் புதிய கட்சி எனத் தங்களைக் குறிப்பிட்டுக் கொண்டனர்.**

1872இல் ஒட்டப்பிடாரத்தில் பிறந்த வள்ளியப்பன் உலகநாதன் சிதம்பரம் பிள்ளை 1895ஆம் ஆண்டு முதல் ஒட்டப்பிடாரத்திலும் 1900ஆம் ஆண்டிலிருந்து தூத்துக்குடியிலும் ஒரு வழக்குரைஞராகச் செயல்பட்டு வந்தார். 1906ஆம் ஆண்டில் 34 வயதே நிரம்பிய அவரை சுதேசியம் எனும் கொள்கை ஈர்த்தது. நாட்டின்மீது பற்றுக் கொண்டிருந்த அவர் சுதேசியத்திற்கெனப் பணி செய்வது என முடிவெடுத்தார்.

தூத்துக்குடித் தொழில்வளர் சங்கம், தர்ம சங்கம், சுதேசப் பண்டகசாலை, தரும நெசவுச்சாலை போன்ற சுதேசியச் செயலூக்க அமைப்புகளை அவர் நிறுவினார். இதன் தொடர்ச்சியாகஅவர் தொடங்கியதுதான் சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி. இதுதவிர, சுதேசியப் பஞ்சாலை ஒன்றைத் தொடங்கவும் அவர் எண்ணங் கொண்டிருந்தார்.

தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்குச் சரக்குகளைக் கொண்டு செல்லும் தமிழக வியாபாரிகள் அப்போது செயல்பட்டுக் கொண்டிருந்த பிரிட்டிஷ் ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி (பி.எஸ்.என்.ஐ.கம்பெனி)யின் கப்பல்களையே பயணம் செல்வதற்கும் சரக்குகளைக் கொண்டு செல்வதற்கும் பயன்படுத்தி வந்தனர். இதன்மூலமாகக் கொள்ளை லாபம் அடித்துவந்த பி.எஸ்.என்.ஐ. கம்பெனியானது வர்த்தகர்களை மரியாதைக் குறைவாக நடத்தியோடு பல நேரங்களில் பயண நேரத்தை மாற்றியமைத்து அவர்களை நட்டமடையவும் வைத்தது.




தூத்துக்குடியிலிருந்த சி.வ.நல்லபெருமாள் பிள்ளை எனும் வணிகர் 1905ஆம் ஆண்டு பம்பாயிலிருந்து இரண்டு கப்பல்களை வாடகைக்கு எடுத்து வந்தார். ஆனால், பிரிட்டிஷ் அரசின் முழுமையான ஆதரவுடன் செயல்பட்டு வந்த பி.எஸ்.என்.ஐ. கம்பெனியானது சி.வ.கம்பெனியின் கப்பல் போக்குவரத்திற்குப் பல நெருக்கடிகளைக் கொடுத்து அக்கப்பல்களைத் திருப்பியழைத்துக் கொள்ள வைத்தது. தூத்துக்குடியின் பெரும் வியாபாரிகள் இதனால் பாதிக்கப்பட்டனர். அந்நேரம், ஹாஜி பக்கீர் முகம்மது சேட் எனும் மிகப்பெரும் வியாபாரியின் பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சரக்குகள் இலங்கையிலிருந்து கொண்டுவரப்பட முடியாமல் இலங்கைக் கடற்கரையிலேயே பாழாகிக் கொண்டிருந்தன.

இதற்கு ஒரு முடிவு கட்ட எண்ணிய தூத்துக்குடி வியாபாரிகள், சுதேசியக் கொள்கையைத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்ததோடு பிரிட்டிஷ் அரசிற்கும் போலீசிற்கும் எதிரான வழக்குகளைத் துணிச்சலாகக் கையாண்டு கொண்டிருந்த வ.உ. சிதம்பரத்தை அணுகினர். தனது சுதேசிய முயற்சிகளுக்கு இப்பிரச்சினையையும் பயன்படுத்திக் கொண்ட வ.உ.சிதம்பரம், சுதேசிக் கப்பல் விடுதல் எனும் திட்டத்தை அவர்களுக்கு முன்வைத்தார். வியாபார நெருக்கடியிலிருந்த அவ்வணிகர்கள் வ.உ.சிதம்பரத்தின் திட்டத்திற்கு இணங்குவதைத் தவிர வேறுவழியில்லை. உடனடியாக ஒரு கப்பலை வாடகைக்கு வரவழைத்தார் வ.உ.சிதம்பரம். ஆனால் அந்தக் கப்பல் உரிமையாளராக இருந்தவன் பிரிட்டிஷ் கம்பெனியின் சொற்படி சிலநாட்களிலேயே வாடகையை மிகக் கூடுதலாக உயர்த்தி நெருக்கடியினைக் கொடுத்தான். இதனால் மேலும் கலக்கமுற்ற வணிகர்களுக்குத் தைரியமூட்டிய வ.உ.சிதம்பரம் உடனடியாக 1906, அக்டோபர் 16ஆம் நாள் சுதேசிக் கப்பல் கம்பெனியைச் சட்டப்படிப் பதிவு செய்தார். தனது வக்கீல் தொழிலை உதறிவிட்டு முழுமூச்சாக இப்பணியில் இறங்கினார்.

மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவிய பாலவநத்தம் ஜமீந்தார் பாண்டித்துரையைச் சந்தித்து வ.உ. சிதம்பரம் தனது திட்டத்தை விளக்கினார், ஒரு தமிழறிஞராக மதுரைத்தமிழ்ச் சங்கக்


கூட்டத்தில் சிறப்பாக உரையாற்றிச் சென்றிருந்த வ.உ.சிதம்பரத்தின் மீதிருந்த நல்லெண்ணத்தால் பெருந்தொகை கொடுத்து பங்குகளை வாங்க ஒப்புக்கொண்டதோடு சுதேசிக் கப்பல் கம்பெனியின் தலைவராகவும் இருக்கச் சம்மதித்தார் வள்ளல் பாண்டித்துரை.


ஒரு பங்கு 25 ரூபாய் வீதம் 45,000 பங்குகளைக் கொண்ட கூட்டுறவுக் கம்பெனியாக உருவாக்கி, தமிழகம் மட்டுமல்லாது கல்கத்தா, ஆந்திரா, பம்பாய் இலங்கை மற்றும் பர்மாவிற்கும் பங்குகளைச் சேர்ப்பதற்கு முயற்சி செய்தார் வ.உ.சிதம்பரம். வணிகரல்லாத பொதுமக்களும் பங்குகளை வாங்கினர்.

1906 டிசம்பரில் கப்பல்களை வாங்கிவருவதற்காகப் பம்பாய்க்குப் புறப்பட்டார். அங்கு கப்பல் வாங்குதல், பண நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்தார் வ.உ.சிதம்பரம்.

இறுதியாக, சங்ககாலத்திலிருந்து கப்பல் போக்குவரத்தில் திறனுடனிருந்த தமிழகக் கடல் சார் உழைப்பையும் அறிவையும் பயன்படுத்திக் கொண்டு, சுரண்டிக் கொழுத்து இந்தியக் கடல்பரப்பினில் சர்வாதிகாரத்தனமாகச் செயல்பட்டு வந்த பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிக்கு எதிராக, ‘உன் அதிகாரத்தை ஒடுக்குவேன்’ எனச் சூளுரைத்து, 1907, மே 17ஆம் நாள் ஒரு கப்பலுடன் தூத்துக்குடிக் கடற்கரையில் வந்திறங்கினார் 34 வயதே நிரம்பியிருந்த இளைஞரான வ.உ.சிதம்பரம். சில நாட்களில் மற்றொரு கப்பலும் வந்து சேர்ந்தது. சுதேசிக் கப்பல்கள் வெற்றிகரமான தனது பயணத்தைத் தொடங்கின.

கப்பல் விட்டதைத் தொடர்ந்து தூத்துக்குடிக் கோரல் காட்டன் மில் எனும் பஞ்சாலைத் தொழிலாளர்களின் போராட்டத்தைக் கையிலெடுத்தார் வ.உ.சிதம்பரம். எப்படி இங்கிலாந்து கப்பல் முதலாளிகளினால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருந்த தமிழக வணிகர்கள் வ.உ.சிதம்பரத்திடம் வந்தார்களோ, அதேபோல இங்கிலாந்து ஆலை முதலாளியால் கொடூரமாகச்சுரண்டப்பட்டுக் கொண்டிருந்த தொழிலாளர்களும் வ.உ.சிதம்பரத்திடம் வந்தனர். வேலை நிறுத்தத்தினைத் தொடங்கினர். வேலையிழந்த தொழிலாளர்களுக்கு உணவும் மாற்றுவேலைகளுக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. தொழிலாளர்களுக்கான நிவாரண நிதிக்காகத் தனது சொந்தப் பணத்தை வழங்கியது மட்டுமல்லாது பொதுமக்களிடமும் நிதி கேட்டுச்சென்றார் வ.உ.சிதம்பரம். மக்கள் நிதி வழங்கியதோடு தொழிலாளர்களின் போராட்டத்திற்கு அதரவுமளித்தனர்.







கோவில்பட்டியில் வாழ்ந்த இடம்


ஒருபுறம் சுதேசிய உணர்ச்சியைத் தூண்டிக் கொண்டிருந்த வ.உ.சிதம்பரம் மற்றும் சுப்பிரமணிய சிவம் போன்றோரின் பேச்சு. இன்னொருபுறம் இங்கிலாந்தின் கப்பல் மற்றும் ஆலை முதலாளிகளின் அடிமடியில் கைவைக்கத் துணிந்த வ.உ.சிதம்பரத்தின் புயல்வேகச் செயல்பாடுகள்.

திருநெல்வேலி கலெக்டர் எல்.எம். விஞ்ச்சின் மிரட்டல்கள் எதுவும் பலனளிக்கவில்லை. அவனது மிரட்டல்களுக்கு வ.உ.சிதம்பரம் துளியும் அஞ்சவில்லை. இருவருக்கும் நடந்த வாக்குவாதத்தைக் கேள்விப்பட்ட பாரதி, வ.உ.சிதம்பரத்தின் தைரியத்தை மெச்சி அதை ஒரு சாகாவரம் பெற்ற கவிதையாக்கினான்.

தூத்துக்குடித் துணைக் கலெக்டர் வாலராலும் வ.உ.சியைத் தடுத்து நிறுத்த செய்ய முடியவில்லை. அதனால், பிரேக்கன் என்பவன் புதிய சப்–கலெக்டராக நியமிக்கப்பட்டான். அவனாலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. தூத்துக்குடி பொங்கியெழுந்து கொண்டிருந்தது. இந்தியத் தாயின் கடைக்கண் பார்வை கல்கத்தாவிலிருந்து சென்னை மாகாணத்திற்குச் சென்றுவிட்டது என இதைக் குறிப்பிட்டு எழுதினார் அரவிந்தர். இந்நிலையில்தான் பிரிட்டிஷ் அரசால் தூத்துக்குடிக்குப் புதிய சப்–கலெக்டராக உடனடியாக நியமிக்கப்பட்டான் ஆஷ்.

வெள்ளை நிற இனவெறியரான ஆஷ், தூத்துக்குடி மக்களிடையே ஓங்கியிருந்த சுதேசிய உணர்ச்சிகளை ஒடுக்கப் பலவழிகளில் முயன்றான். அதற்கென அவன் இறுதியாகத் தீட்டியதிட்டம்தான் வ.உ.சிதம்பரம் மற்றும் சுப்பிரமணிய சிவா ஆகியோரது கைது.

அரச விரோதமாகப் பேசியதற்காக 1908, மார்ச் 12ஆம் தேதியன்று பொய்வழக்கைப் புனைந்து இருவரையும் சிறையில் தள்ளினான் ஆஷ். தேசபக்தர்கள் கைது செய்யப்பட்டதற்கு எதிராக மறுநாள் திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் பொங்கியெழுந்த மக்கள் பிரிட்டிஷ் அரசுச் சொத்துக்களை அடித்து நொறுக்கினர், தீ வைத்துக் கொளுத்தினர். திருநெல்வேலிக்கிளர்ச்சி என அழைக்கப்படும் மக்கள் எழுச்சியானது அதற்கு முன்னரும் பின்னரும் தமிழக வரலாற்றில் நடைபெறாத ஒரு நிகழ்ச்சியாகும்.




**பாரதியாரின் 'இந்தியா' பத்திரிகையில் வெளியான கருத்துப்படம்**

அரசு அதிகாரிகளின் மூலமான மிரட்டல்கள், கட்டணச் சலுகை மோசடிகள், கடல் போக்குவரத்தின்போது தாக்குதல்கள், பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிக்கான அதிகப்படியான சலுகைகள் என சுதேசிக் கப்பல் கம்பெனிக்கு பி.எஸ்.என்.ஐ கம்பெனியால் கொடுக்கப்பட்ட நெருக்கடிகள் ஏராளம். இவையனைத்தையும் வ.உ.சிதம்பரம் மக்களின் ஆதரவுடன் முறியடித்துக்கொண்டிருந்தார்.

ஆனால், அவர் சிறைச் சென்றதும் மேலும் அதிகமாக்கப்பட்ட நெருக்கடிகளை எதிர்கொள்ள சுதேசிக் கப்பல் கம்பெனியில் ஆட்களில்லை. நாட்டுப்பற்றில்லாமல் வெறும் பணப்பற்றுடன் சுதேசிக் கப்பல் கம்பெனியின் பங்குதாரர்களாக இருந்த பெருவணிகர்கள் சிலர் பின்வாங்கத் தொடங்கினர். இதனால் கப்பல் கம்பெனி ஆட்டங்கண்டது. இறுதியில் கம்பெனி மூழ்கியது. ஆயிரக்கணக்கான மக்களின் சொத்தாக இருந்த சுதேசிக் கப்பல் கம்பெனியை மூழ்க வைக்க முழுக்காரணமாக இருந்தவன் சப்–கலெக்டரான ஆஷ்தான்.

கப்பலோட்டிய தமிழன் என்று தமிழக மக்களால் அன்புடனும் மரியாதையுடன் நினைவுகூரப்படுகின்ற வ.உ.சிதம்பரத்தின் கப்பலோட்டிய முயற்சிகள் மிகப்பெரும் சாதனையாகும்.

உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கும் வர்த்தகத்திற்கும் வ.உ.சிதம்பரத்தின் கப்பலோட்டிய முயற்சிகள் எப்போதும் பாடம் சொல்லித் தரக்கூடிய அனுபவங்களாகும். பன்னாட்டுக் கம்பெனிகளுடனான போட்டிகளைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலையிலுள்ள இந்தியத் தொழில் முனைவோர்கள் இந்த அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்வதற்குப் பல பாடங்கள் உள்ளன.

வ.உ. சிதம்பரத்தின் கப்பலோட்டிய முயற்சிகளை நாம் அறிந்து கொள்வதற்குப் பெரிதும் துணை நிற்பது மகாகவி சுப்பிரமணிய பாரதியின் கட்டுரைகள்தான். சென்னையில் அரசியல்ஆர்வமிக்க பத்திரிகையாளராகப் பணி செய்து கொண்டிருந்த பாரதியை தூத்துக்குடியில் எழுச்சிமிக்க அரசியல் பணிகள் செய்து கொண்டிருந்த வ.உ.சிதம்பரத்தின் செயல்பாடுகள் மேலும் தூண்டின. பாரதியின் அரசியல் ஆவேசத்திற்குக் காரணமே வ.உ.சிதம்பரம்தான் என்கிறார் பாரதியின் மனைவியான செல்லம்மா.

வ.உ. சிதம்பரத்தின் மீதான வழக்குகளில் தீர்ப்பு வழங்கிய பிரிட்டிஷ் நீதிபதிகள் வ.உ.சிதம்பரத்தின் மீது வைத்த குற்றச்சாட்டு முக்கியமானது. “இவர் இந்தியத் தொழிற்துறையினை மீட்டுருவாக்கம் செய்ய முயன்றார்” என அவர்கள் குற்றம் சுமத்தினார்கள். வ.உ.சிதம்பரத்தினுடைய செயல்பாடுகளின் ஆழமும் அகலமும் எவ்வளவு சிறப்பானவை என்பதற்கு இத்தீர்ப்பிலுள்ள வாசகங்களே சாட்சி.

தமிழ்நாடு, ஆந்திரா, கருநாடகா, கேரளா ஆகிய இப்போதைய மாநிலங்களை உள்ளடக்கிய அப்போதைய சென்னை மாகாணத்தில் தென்கிழக்குக் கடலோர நகரமான தூத்துக்குடியில் 1905இல் வ.உ.சிதம்பரம் எழுப்பிய சுதேசிக் குரல்தான் தென்னிந்தியாவில் பிரிட்டிஷ் அரசிற்கு எதிராக எழுப்பப்பட்ட முதல் விடுதலைக் குரலாகும்.

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றை எழுதும் எவரும் வ.உ.சிதம்பரத்தின் விடுதலைப் போராட்டச் செயல்பாடுகளைப் புறக்கணிக்க முடியாது. ஒருவேளை புறக்கணிக்கப்பட்டிருந்தால்அது முழுமையான இந்திய விடுதலைப் போராட்ட வரலாறாக அமையாது.

அதுபோல, இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமிழகத்தின் பங்கை எழுதும் எவரும் வ.உ.சிதம்பரத்தால் முதன்முதலாக நடத்தப்பட்ட சுதேசியப் போராட்டத்திலிருந்துதான் தொடங்க முடியும். ஒருவேளை அவ்வாறு தொடங்காமல் புறக்கணிக்கப்பட்டிருந்தால் அது இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமிழரின் பங்களிப்பைத் திட்டமிட்டுமறைக்கின்ற செயலாகவே கருத முடியும்.

வ.உ.சிதம்பரத்தின் நாட்டுப் பற்றும் சுதேசியச் செயல்பாடும் என்றென்றும் இந்திய குறிப்பாகத் தமிழக மக்களுக்குத் தேவைப்படக்கூடிய ஒரு பண்பாகவே இருக்கும்.


**கட்டுரையாளர் குறிப்பு:**

**குருசாமி மயில்வாகனன்**

சிவகங்கை மாவட்டம் பெரியகோட்டை கிராமத்தில் வசிக்கிறார்.
வ.உ.சி. ஆய்வு வட்டம், தமிழ்நாடு அமைப்பின் செயலாளராக இருக்கிறார்.
வ.உ.சி.யின் கப்பலோட்டிய முயற்சிகளை மட்டும் ஆவணங்களுடன் தொகுத்து “கப்பலோட்டிய கதை” எனும் நூலை எழுதியுள்ளார். வ.உ.சி. குறித்த இவரது இரண்டாவது நூல் “தோழர் வ.உ.சி.”


❖❖❖




# வ.உ.சி.யின் பெருஞ்சொல்



ஆ.அறிவழகன்

**‘எனது பெருஞ்சொல்’ என்ற தலைப்பில் 1927 நவம்பர் 5ஆம் தேதி நடைபெற்ற சேலம் ஜில்லா காங்கிரஸ் மாநாட்டில் தலைமைப் பொழிவாற்றினார் வ.உ. சிதம்பரம் பிள்ளை (18721936).**

திருக்குறள் வழியில் வாழ்ந்த வ.உ.சி. இந்தத் தலைமைப்பொழிவு முழுவதையும் குறளை அடிப்படையாக வைத்துத்தான் பேசியிருக்கிறார். இந்திய மக்கள், இராஜாங்கத்தார், தமிழர்கள் ஆகிய மூவருக்கும் என்ன தேவை என்பதை மிக அழுத்தமாகவும் விரிவாகவும் அப்பொழிவில் பதிவு செய்துள்ளார். ‘பெருஞ்சொல்’ என்பதற்குப் பொருத்தமாக அப்பேச்சு இன்றைக்கும் நமக்குப் பொருந்துவதாக உள்ளது.


‘இந்திய மக்களுக்கு இப்போது தேவை’ என்று அவர் பேசியதில் முக்கியமானவை சுய அரசாட்சி, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், பிராமணர்பிராமணரல்லாதார் ஆகியவை; ‘இராஜாங்கத்தாருக்கு’ என்று அவர் பேசியதில் முக்கியமானவை ஜனங்களில் வறுமையைப் போக்குதல், சில நீதிபதிகளின் கொடுஞ்செயல்களை சரிசெய்தல் ஆகியவை; ‘தமிழர்களுக்கு விரைவில் வேண்டியவை’ என்பதில் தமிழுக்கு என்று ஒரு பல்கலைக்கழகம், தமிழ்நாட்டு சீதோஷ்ண நிலைக்கும், தமிழர்களின் சரீர இயற்கைக்கும் பொருத்தமான வைத்தியம் தமிழ்ச் சித்தவைத்தியம் என்பதால் நகரங்களிலும் கிராமங்களிலும் சித்தவைத்திய சாலையை அமைத்தல், சித்தர் பாடல்களை எளிய உரையாக்கி எளியோரும் புரிந்துகொள்ளும் வண்ணம் வெளியிடுதல் ஆகியவையாகும்.

இக்கட்டுரையில் நாம் சுய அரசாட்சி, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஆகியவற்றை மட்டும் விரிவாகப் பார்ப்போம்.

## சுய அரசாட்சி

**“நல்லாண்மை யென்ப தொருவதற்குத் தான்பிறந்த**
**இல்லாண்மை யாக்கிக் கொளல்.”** (குறள் 1026)

அதாவது, ஒருவனுக்கு நல்ல ஆண்மை என்பது, தான் பிறந்த தேசத்தின் ஆள்கையைத் தன்னது ஆக்கிக் கொள்ளுதலே சுய அரசாட்சி என்று விளக்கும் வ.உ.சி., சுய



அரசாட்சி நான்கு வகைப்படும் அவற்றில் இக்காலத்தில் நமக்குத் தேவையான சுய அரசாட்சி எது என்பதையெல்லாம் விவரித்துவிட்டு, இப்படிப்பட்ட சுய அரசாட்சியைப் பெறுவதற்கு (1) ஒத்துழைத்தல் (Cooperation); (2) ஒத்துழையாமை (Non-Cooperation); (3) ஒத்துழைத்தலும் ஒத்துழையாமையும் (Responsive Cooperation) என மூன்று வழியிருப்பதாகச் சுட்டுகிறார்.

இந்த மூன்றில் எது நமக்கு தேவை என்பதை குறள் மூலமே நமக்கு விளக்குகிறார்.

**“இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்புஇடும்பை**
**தானேயும் சாலும் கரி.”** (குறள் 1060)

‘பிச்சை எடுப்பவன் கோபம் கொள்தல் கூடாது; அவனது வறுமையே அவன் நிலையைக் காட்டும்’ என்பதே இக்குறளின் பொருள். ‘ஒத்துழைத்தல்’ என்பது தமக்கு உரியவற்றைப் பிறர்தரினும் தராவிடினும், அது நமது விதியென்று கருதிப் பிறர்க்குப் பண்பு செய்யும் கிழவர் செயல் போன்றது என்கிறார் வ.உ.சி. இங்கு கிழவர் என்று யாரைச் சுட்டுகிறார் என்பதை ஒரு எடுத்துக்காட்டு மூலம் நாம் புரிந்துகொள்ளலாம். தாமாக உழைத்து வாழ முடியாத வயதானவர்கள் தங்கள் பிள்ளைகள் ஆதரவில் வாழ்ந்தால் தங்களது விருப்பு வெறுப்புகளை ஒதுக்கி வைக்க வேண்டியது வருமே அப்படிப்பட்டவர்களைத்தான் இங்கே வ.உ.சி. கிழவர்கள் என்கிறார். ‘ஒத்துழைத்தல்’ என்பது இந்தக் கிழவர்கள் செயல் போன்றது. இதனை நாம் சுய அரசாட்சி என்று சொல்லமாட்டோம்.

சரி அப்படியென்றால் இரண்டாம் வகையான ‘ஒத்துழையாமை’ என்பது என்ன?

**“வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றுஅது**
**வேண்டாமை வேண்ட வரும்.”** (குறள் 362)

என்ற குறளின் பின்னடியாகிய ‘வேண்டாமை வேண்ட வரும்’ என்பதை வ.உ.சி. ஒத்துழையாமைக்கான இலக்கணமாய்ச் சொல்கிறார். அதாவது உரிமை தராதவரோடு ஒத்துழைக்காமல் இருந்தால் உரிமை வந்துவிடும் என்கிற குழந்தை செயல் போன்றது இது என்கிறவர்.

எப்படி? திண்பண்டம் முழுவதும் தமக்குத் தரும் வரையில் அதன் ஒரு பகுதியை ஏற்காது தாய்தந்தையரோடு கோபித்துக் கொண்டிருக்கும் குழந்தையின் செயல் போன்றது இது.

‘ஒத்துழைத்தல்’ என்பது கிழவர் செயல்; ஒத்துழையாமை என்பது குழந்தை செயல் என்கிற வ.உ.சி. மூன்றாவதாகத் தாம் தேர்ந்தெடுக்கும் ‘ஒத்துழைத்தலும் ஒத்துழையாமையும்’ என்பதை என்னவென சொல்கிறார் தெரியுமா?

அது காளையர் செயல் போன்றது என்கிறார். தமக்குரியவற்றைத் தந்தபோது உவந்தும் தராதபோது வெகுண்டும் நிற்கும் காளையர் செயல் போன்றது இது. இதற்குப் பொருத்தமாக

**“தன்னெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்**
**தன்னெஞ்சே தன்னைச் சுடும்.”** (குறள் 293)

எனும் குறளை எடுத்துக்காட்டுகிறார். தமக்கு உரியவற்றைத் தந்த போது உவந்தும், தராதபோது வெகுண்டும் நிற்கும் காளையர் செயலே நமக்கு வேண்டும்; அப்போதுதான் நாம் ஆள்பவரிடமிருந்து நமக்கான சுய அரசாட்சியைப் பெறமுடியும் என வ.உ.சி. வலியுறுத்துகிறார்.

சுய அரசாட்சியைப் பெற ‘கிழவர்’ செயலும், ‘குழந்தை’ செயலும் வேண்டாமென்றும் அதற்கு ‘காளையர்’ செயலே தேவை என்றும் சொல்கிற வ.உ.சி.யின் கருத்து தற்காலத்திற்கும் மிகப் பொருத்தமாக இருப்பதை நாம் உணரமுடியும்.

விடுதலை பெற்று இந்தியக் குடியரசாகி பின் மொழிவாரி மாநிலங்களாகி, மத்தியில் குடியாட்சி, மாநிலத்தில் சார்ந்த குடியாட்சி என்ற நடைமுறையில், மாநிலங்கள் சுய உரிமையோடு செயல்பட முடிகிறதா? கலை, மொழி, கல்வி, பண்பாடு, இயற்கை வளம் இவற்றில் தனித்துவம் இருந்தாலும் மத்தியில் இருக்கும் குடியாட்சி அவற்றைப் பறித்துக்கொள்ளாமல் உள்ளனவா என்பது இன்று கேள்விக்குறிதான்.

‘ஒத்துழைத்தலும் ஒத்துழையாமையும்’ என்கிற ‘காளையர்’ செயல் வேண்டும் என்கிற வ.உ.சி., (அ) மதம் (ஆ) சாதி (இ) உடைமை ஆகியவற்றில் நாம் ஒற்றுமையாக இருந்தால் சுய அரசாட்சியை அடையலாம் என்கிறார்.


நம் தேசத்தார்களில் ஒவ்வொருவரும் தத்தம் மதக் கோட்பாடுகளும் ஜாதிக் கோட்பாடுகளும் பிறர் மதக் கோட்பாடுகளையும் ஜாதிக் கோட்பாடுகளையும் பாதிக்காதவாறு திருத்திக் கொள்ளுதல் வேண்டும். ஹிந்து மதமும் முகம்மதிய முரண்படுகிற கோட்பாடுகளில் முக்கியமானவை இரண்டு அவை: (1) முகம்மதியர் பக்ரீத் முதலிய பண்டிகைகளில் ஹிந்துக்கள் பார்த்து மனம் வருந்தும் படியாகப் பசுக்களைக் கொல்லுதல்; (2) பள்ளிவாசல்களில் தொழுது கொண்டிருக்கிற முகம்மதியருடைய மனம் கலையும்படியான விதத்தில் ஹிந்துக்களுடைய ஊர்கோலங்களை பள்ளிவாசல் வீதி வழியாகக் கொண்டு போதல். பூரண தேசாபிமானமுடைய இரு மதத் தலைவர்களும் ஒன்றுகூடிக் கொடுத்து வாங்கல் (Give and take) எனும் கொள்கையில் இம்முரண்பாடுகளைத் திருத்திக்கொள்ளுதல் நமது ஒற்றுமைக்கு முதல் வழி.

ஹிந்துக்களுள் ‘உயர்ந்த ஜாதியார்’ எனப்படுவோரும் ‘தாழ்ந்த ஜாதியார்’ எனப்படுவோரும் முரண்படுகிற கோட்பாடுகளில் முக்கியமானவை இரண்டு: (1) உயர்ந்த ஜாதியார் எனப்படுவோர் தம்மைப் பன்றி முதலிய அசுத்தப் பிராணிகள் நெருங்கும் அளவுகூடத் தாழ்ந்த ஜாதியார் எனப்படுவோரை நெருங்கவிடாமை; (2) தாழ்ந்த ஜாதியார் எனப்படுவோர் உயர்ந்த ஜாதியார் எனப்படுவோருடன் சமபந்தி போஜனம் செய்ய விரும்புதல். பூரண மனித அறிவையுடைய இவ்விருவகை ஜாதித்தலைவர் சிலர் ஒன்றுகூடிக் ‘கொடுத்து வாங்கல்’ எனும் கொள்கையை உபயோகப்படுத்தி இம்முரண்பாட்டுக் கோட்பாடுகளைத் திருத்திக்கொள்ளுதல் நமது ஒற்றுமைக்கு இரண்டாவது வழி. உயர்ந்த ஜாதியார்

**‘பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்’** (குறள் 972)
**தாழ்ந்த ஜாதியார் ‘மேலிருந்தும் மேலல்லார்’** (குறள் 973)

என்னும் முன்னோர் மொழியையும் உட்கொண்டு சமாதானம் ஆவதற்கு முயற்சிப்பார்களாக.

‘இந்தியர்களுக்கெல்லாம் பொது உடைமைகள் இன்னின்னவை என்றும், இந்தியன் ஒவ்வொருவனுக்கும் தனியுடைமைகள் இன்னின்னவை என்றும், நாம் எல்லோரும் அறிந்து கொள்ளுதல் வேண்டும். பொது உடைமைகளில் இந்தியர்கள் எல்லார்க்கும் சமவுரிமை உண்டு. தனியுடைமைகளில் அவற்றின் சொந்தக்காரருக்கு மாத்திரம் தனியுரிமை உண்டு’ என்று சொல்லும் வ.உ.சி. பொது, தனி உடைமைகள் எவையெவை என பட்டியலிட்டுள்ளார்.




பொது உடைமைகளாவன: கல்வி, ஒழுக்கம், கடவுள் வழிபாடு, ஆற்றுநீர், ஏரிநீர், பெரும்பாட்டை, பொதுக்கூட்டுறவு, காட்டில் வாழும் உயிர்கள், இராஜாங்க உத்தியோகங்கள்;

தனி உடைமைகளாவன: ஒருவனுடைய செல்வம், குளத்துநீர், கிணற்றுநீர், நடைபாதை, வீடு, வீட்டில் வாழும் உயிர்கள், சொந்த வேலைகள்.

பொது உடைமைகளில் யாவர்க்கும் சம உரிமையுண்டு ஆதலால் அவற்றை ஒருவன் அனுபவித்தலை மற்றொருவன் தடுக்கலாகாது. தனியுடைமைகளில் அவற்றின் சொந்தக்காரருக்கு மாத்திரம் தனியுரிமையுண்டாதலால், அவற்றை அவர் தவிர வேறொருவன் அனுபவிக்க முற்படலாகாது.

இவற்றை ஆதாரமாகக் கொண்டு இந்தியர்களுக்கு பொது உடைமைகள் இன்னின்னவை யென்றும், இந்தியன் ஒவ்வொருவனுக்கும் தனியுடைமைகள் இன்னின்னவையென்றும், நம் தேசத்துப் பல ஜாதித் தலைவர்களும் ஒன்றுகூடிப் பேசி ஆலோசனை செய்து வரையறுத்து முடிவு செய்தலே ஒற்றுமைக்கு மூன்றாவது வழியாகும்.

இந்தியர்களுக்குள் ஒற்றுமை உண்டாவதற்கு மதம், ஜாதி, உடைமைகள் ஆகியவை குறித்து அந்தந்த ஜாதிய, மதத் தலைவர்கள் ஆலோசனை செய்து ஒற்றுமையின்மைக்கு வழியில்லாமல் செய்யவேண்டும் என்கிற வ.உ.சி. உடைமைகள் குறித்துச் சொல்லும்போது, ‘ஓர் உடைமை பொதுவுடைமையா தனியுடைமையா என்று தீர்மானிப்பதற்குத் தக்க சான்று இல்லையாயின், அவ்வுடைமையைப் பொது உடைமை என்றே தீர்மானித்துவிடலாம். ஒற்றுமை நிமித்தமாகத் தனியுடைமைகளில் சிலவற்றைப் பொதுவுடைமைகளாக இந்தியர்களெல்லாம் அனுபவிக்கும்படி விட்டுவிடலாம்’ என்கிறார். இதன் மூலம் ஜாதி, மதப்பற்றில்லாத இந்திய மக்களுக்கிடையேயான ஒற்றுமை ஒன்றையே விரும்பிய தலைவராக நாம் வ.உ.சி.யைப் புரிந்துகொள்ள முடியும்.

## வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்

‘இராஜாங்க உத்தியோகங்களையும், சட்டசபை ஜில்லா நிருவாக சபை (District Board) முதலிய ஸ்தலஸ்தாபன உத்தியோகங்களையும் காங்கிரஸ் மகாசபை, அதன் கிளைச்சபை முதலிய பொதுஸ்தாபன உத்தியோகங்களையும் நம் தேசத்திலுள்ள ஒவ்வொரு ஜாதியாரும் அவரவர் ஜாதியாரின் எண்ணிக்கை விகிதப்படி பகிர்ந்து பற்றிக் கொள்ளுதலே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்’ என்கிறார் வ.உ.சி.

ஆனால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டாம் என்று சொல்வோர், (1) இதனால் ஜாதி வேற்றுமையும், அதுபற்றிய உயர்வும் தாழ்வும் நிலைத்துவிடும்; (2) சில உத்தியோகங்களுக்கு தகுதி இல்லாதவரை நியமிக்கும் நிலை ஏற்படும்; (3) நாட்டில் உள்ள ஜாதிகள் அதிகம், ஆனால்



வ.உ.சிதம்பரனார் அவர்கள் சீர்திருத்த முறையில் திருமணம் நடத்தி வைத்து தம்பதியினருடன் உள்ள படம்

அரசு உத்தியோகங்களோ சில, அதனால் அவற்றைப் பலருக்கு பங்கீடு செய்ய முடியாது என்பன போன்ற காரணங்களைச் சொல்லிவந்தனர். இவற்றை வ.உ.சி. மறுக்கிறார்.

இம்மூன்று காரணங்களும் யுக்திக்கும் அனுபவத்திற்கும் பொருந்தாதவை. இப்பொழுது நமது தேசத்திலுள்ள ஜாதி வேற்றுமைகள் எப்பொழுது ஒழியும்? பிறப்பை ஆதாரமாகக் கொண்டு தற்காலம் நமது தேசத்தில் நிலவும் அநீதியான ஜாதி வேற்றுமைகளும், அந்த ஜாதிகளில் ஒன்று உயர்வு மற்றொன்று தாழ்வு என்னும் அநீதியான கோட்பாடும் ஒருகால் ஒழியக்கூடும். அவை ஒழிந்த பின்னர் நல்லொழுக்கம், தவம், கல்வி, தொழில், செல்வம் முதலியவற்றில் ஒன்றை, அல்லது சிலவற்றை ஆதாரமாகக் கொண்டு ஜாதி வேற்றுமைகள் உண்டாகாவா? நல்ல ஒழுக்கம், தவம், கல்வி, செல்வம், நற்தொழில் முதலிய நல்லவற்றை உடையோர் மேலான ஜாதியார் என்றும் தீய ஒழுக்கம், தவமின்மை, கல்வியின்மை, செல்வமின்மை, தீத்தொழில் முதலியவற்றை உடையோர் கீழான ஜாதியார் என்றும் கருதப்படமாட்டாரா?

என்கிற வ.உ.சி.யின் வரிகளை இப்போது உள்ள நடைமுறையோடு ஒத்துப்பார்த்தால், ஜாதி வேற்றுமை மட்டுமேதான் மேலோர், கீழோர் என்கிற பாகுபாட்டை நமக்குள் ஏற்படுத்துகிறதா? ஒழுக்கத்தில், கல்வியில், செல்வத்தில் நாம் ஏற்றத்தாழ்வைக் கொண்டிருக்கவில்லையா? அதுமட்டுமல்லாது அவர், ‘வேற்றுமைகளுள் ஒற்றுமை (Unity in Variety) காண்டலன்றோ அறிவு? வேற்றுமை இல்லையெனில், ஒற்றுமையென்பதொன்றுண்டோ?’ என்கிறார். உண்மைதானே! பல்வேறு பிரிவினரும் ஒரு கருத்தில் உடன்பட்டால் தானே அதனை நாம் ஒற்றுமை என்று சொல்ல முடியும்!

‘உயர்வு, தாழ்வு இல்லாத ஒரே ஜாதியாருள்ளும், ஒரே குடும்பத்தினருள்ளும் கூட பகைமை இருக்கிறதே’ என்றும், ‘இருவேறு ஜாதியார் சிலர் ஒற்றுமைப்பட்டு நண்பர்களாக வாழ்கின்றனரே’ என்றும் குறிப்பிடும் வ.உ.சி., இதனால் நம் தேசத்தில் நிலவும் ஒற்றுமை மற்றும் பகைமை முதலியவற்றிற்கு ஜாதி வேற்றுமை மட்டுமே காரணமில்லை என்பது ‘உள்ளங்கை நெல்லிக்கனி’ என்கிறார். மேலும் இந்த ‘ஒற்றுமையின்மைக்குக் காரணம் வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் கொடுக்கப்படாமையே’ என்றும் அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறார் அவர்.

வகுப்புவாரித் தொகுதிகள் ஏற்படுத்துவதனால் ஜாதி வேற்றுமைகள் வளரப்போவதில்லை. அவை வளர்ந்தாலும் அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ஒவ்வொரு இந்தியனும் ஒவ்வொரு ஜாதியாயிருந்தாலும் கூட, அதனால் நம் தேசத்திற்குக் கேடு ஒன்றும் உண்டாகப் போவதில்லை. நாம் வேண்டுவதெல்லாம் ஒற்றுமையொன்றே.

ஜாதி பற்றிய புரிதல் இல்லாதவர்களால் வ.உ.சி.யின் மேலுள்ள வரிகளை விளங்கிக்கொள்ள முடியாது. இந்தியா விடுதலை பெற்று 75 ஆண்டுகள் ஆகின்றபோதும் 'ஜாதியை ஒழிப்போம்' என்று நாம் வாய்வார்த்தையாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோமேயொழிய அதை நடைமுறையில் இன்னும் அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பது கண்கூடு. ஒவ்வொரு தேர்தலிலும் வேட்பாளர் எந்த ஜாதியைச் சேர்ந்தவர் என்பதை ஆராயாமல் எந்த ஒரு கட்சியும் அவரை வேட்பாளராக நிறுத்துவதில்லை என்கிற ஒன்றே இதற்கு நல்ல உதாரணமாகும்.

வகுப்புவாரிப் பிரநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு அந்தந்த வகுப்பிலுள்ள 21 வயதுக்கு மேற்பட்ட ஆண்பாலரையும், பெண்பாலரையும் வாக்காளர்களாக ஏற்படுத்துவதற்கு வேண்டுவன செய்யும்படிக்கும் தேசாபிமானச் சகோதரர்களையெல்லாம் பிராத்தித்து கேட்டுக்கொள்கிறேன்.

என்கிற வ.உ.சி.யின் வரிகள் பாலின வேறுபாடு, சமூக நீதி, ஜாதி, மத வேற்றுமையிலும் ஒற்றுமை ஆகியவற்றை ஒருங்கே வலியுறுத்துபவை என்பதை நாம் மறுக்க முடியாது.

காங்கிரஸின் கொள்கையாலும், திலகரின் அரசியலாலும் கவரப்பட்டு காங்கிரஸில் சேர்ந்த வ.உ.சி., பின்னர் காங்கிரஸ் தமது கொள்கையை மாற்றிக்கொண்டபோது தாம் விலகினாரே தவிர அவருடைய கொள்கைப் பிடிப்பிலிருந்து தளரவில்லை. மீண்டும் காங்கிரஸ் பழைய நிலைக்கு வந்தபின், காங்கிரஸில் சேர்ந்து அங்கிருந்தபடியே சுய அரசாட்சிக்கும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கும் தம் இறுதி வாழ்நாள் வரை போராடினார் என்பதை நாம் இங்கு நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

சுதேசியம், கப்பல் கம்பெனி, தொழிலாளர் நலன் ஆகியவற்றை உள்ளடக்கிய வ.உ.சி.யின் அரசியல் உச்ச நிலையை 1906 முதல் 1908 வரை என்றே வரலாற்றாய்வாளர்கள் கணக்கிடுகிறார்கள். அதற்கு முன்பும் (1901–1905), சிறையிலிருந்து விடுதலையாகி வெளிவந்த 1912ஆம் ஆண்டுக்குப் பின்பும்கூட ஏழைகள் மீதான அவரின் அக்கறை, ஜாதி, மதப் பாகுபாடற்ற சமூக ஒற்றுமைக்கான பங்களிப்பு, அரசியல் கொள்கைப் பிடிப்பு ஆகியவற்றை நாம் முழுமையாக இன்னும் ஆய்வுசெய்யவில்லை. அப்படி ஆய்வு செய்தால்,

**"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு."** (குறள் 467)

என்ற குறளுக்கு எடுத்துக்காட்டாய் வ.உ.சி. வாழ்ந்தார் என்பது நாம் சொல்லித் தெரியவேண்டிய அவசியமிருக்காது.

**கட்டுரையாளர் குறிப்பு:**

**ஆ.அறிவழகன்,**
சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தின் பதிப்புத்துறையில்
உதவியாளராகப் பணியாற்றி வருகிறார். 'விதையாய் நீ விருட்சமாய் நான்' (கவிதை),
'வெள்ளந்தி மனிதர்கள்' (சிறுகதை) ஆகிய நூல்களை எழுதியுள்ள இவர்,
'இந்தியப் பொருளாதாரம்: வரலாறு காட்டும் வழிகள்' (மால்கம் ஆதிசேசய்யா கட்டுரைகள்);
'தமிழ்ப் பெரியார் வ.உ.சி.' (கட்டுரைகள்); 'ஆராலும் என்னை அமட்ட ஒண்ணாது'
(கட்டுரைகள்) ஆகிய நூல்களைத் தொகுத்துள்ளார்.

❖❖❖

# சுயமரியாதைச் சுடரொளி வ.உ.சி.



ப.திருமாவேலன்

வ.உ.சிதம்பரனார் அவர்களின் அரசியல் விடுதலைப் பணிகள் பேசப்பட்ட அளவுக்கு அவரது சமூக விடுதலைப் பணிகள் பேசப்படவில்லை. அவரது 1906–1912 வரையிலான வாழ்க்கை அதிகம் பேசப்பட்டதே தவிர, அவரது 1920–1936 ஆகிய ஆண்டு கால வாழ்க்கை பேசப்படவில்லை. இன்னும் சொன்னால், இறுதிக்கால வ.உ.சி.யின் அரசியல் வாழ்க்கை மறைக்கவும் பட்டது.


வ.உ.சி.யின் இறுதிக்கால அரசியல் என்பது சுயமரியாதை இயக்க அரசியலாக இருந்தது என்கிற உண்மையைப் பேசுகிறது இக்கட்டுரை.

### காங்கிரஸுக்குள் சுயமரியாதை: [1916–1917]

அப்போது காங்கிரசு கட்சிக்குள் ‘சென்னை மாகாணச் சங்கம்’ என்ற அமைப்பு உதயமானது. நீதிக்கட்சி எனப்படும் தென்னிந்திய நல உரிமைச் சங்கமானது பார்ப்பனரல்லாதார் நலனுக்காக பேசத் தொடங்கிய (1916–1917) காலம் அது. இது காங்கிரஸ் கட்சிக்குள் நெருக்கடியை ஏற்படுத்துகிறது. காங்கிரஸுக்குள் இருக்கும் பார்ப்பனரல்லாத தலைவர்கள் இணைந்து – ஒரு அமைப்பைத் தொடங்குகிறார்கள். அதற்கு ‘சென்னை மாகாண சங்கம்’ என்று பெயர். இதில் முக்கியப் பங்கு வகித்தவர் வ.உ.சி. அவருடன் இணைந்து திரு.வி.க., பெரியார், டாக்டர் வரதராஜலு ஆகியோர் இயங்கினார்கள்.

‘நீதிக்கட்சி’யின் வளர்ச்சியானது காங்கிரஸ் தலைவர்களான இவர்களுக்குள் சிந்தனை மாற்றத்தை உருவாக்கியது. ‘அனைவரும் இந்தியர்’ என்ற எண்ணத்தோடு இருக்க வேண்டுமே தவிர, ஆரியர் – திராவிடர் என பிரிந்து வகுப்புவாதம் பேசுதல் கூடாது என்று ஒரு கூட்டத்தில் தான் பேசியதாக திரு.வி.க. எழுதுகிறார். (வாழ்க்கைக் குறிப்புகள் பக்கம் 197)

‘எனது பேச்சு காங்கிரஸ் பிராமணரல்லாதாரை ஊக்கமுறச் செய்தது. தனக்கென ஒரு தனிச் சங்கங் காணத் தூண்டியது. தனிச்சங்கம் காணும் முயற்சி தி.வி.கோபாலசாமி முதலியாரால் துவங்கப்பட்டது’ என்கிறார் திரு.வி.க.



இது தொடர்பாக கோகலே அரங்கில் நடந்த இரண்டு கூட்டங்களையும் நீதிக்கட்சி ஆட்கள் உள்ளே புகுந்து கலைத்தார்கள் என்றும் எழுதுகிறார். இவர்களால் உருவாக்கப்பட்ட 'சென்னை மாகாண சங்கத்தின் தலைவர் கேசவப்பிள்ளை. கோவிந்த தாஸ், சல்லா குருசாமி செட்டியார், பெரியார், நாகை பக்கிரிசாமி, சீர்காழி சிதம்பரநாதர், தஞ்சை ஸ்ரீநிவாசன், ஜார்ஜ் ஜோசப் ஆகியோர் அதில் முக்கிய பங்கு வகித்ததாகச் சொல்கிறார்.

### உள்ளே நடக்கும் உள்குத்துகள் [1917-1918]:

அக்காலத்தில் நடந்ததை பெரியார் விரிவாக எழுதி இருக்கிறார்.

திரு.வி.க., டாக்டர் வரதராஜலு, பெரியார் ஆகிய மூவரும் சென்னை மாகாண சங்கத்தில் ஒன்று சேர்வதையும் காங்கிரஸ் தலைவர்கள் சிலர் விரும்பவில்லை. அதனால் செய்யப்பட்ட சூழ்ச்சிகளை பெரியார் குறிப்பிடுகிறார். 'ஈ.வே.ராவுக்குத் தோன்றியது.' என்று தலைப்பில் பெரியார் எழுதியதை 'தந்தை பெரியாரே எழுதிய சுயசரிதை' என்ற தலைப்பில் திராவிடர் கழகம் வெளியிட்டுள்ளது.

22.12.1917 அன்று சென்னை மாகாண சங்கத்தின் முதல் மாநாடு நடந்தது. இதில் வ.உ.சி. கலந்து கொள்கிறார், இந்த மாநாட்டுக்கு நான்கு செயலாளர்கள் இருந்ததாகவும் முக்கிய செயலாளர் இராஜாஜி என்றும், விஜயராகவாச்சாரியார் தலைவர் என்றும் கஸ்தூரி ரங்க அய்யங்காரும், வ.உ.சி.யும் துணைத் தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் பெரியார் எழுதுகிறார். பெரியார் (தமிழ்நாடு), பிரகாசம் (ஆந்திரம்), கேசவமேனன் (கேரளம்) என மாகாணப் பிரதிநிதிகளாகத் தேர்வு செய்யப்பட்டார்கள்.

தலைவராக விஜயராகவாச்சாரியார் தேர்வு செய்யப்படுகிறார். துணைத் தலைவராக கஸ்தூரி ரங்க அய்யங்காரை இராஜாஜி முன்மொழிகிறார். உடனே வ.உ.சிதம்பரனார் பெயரை பெரியார் முன்மொழிகிறார். 'இரண்டு உபதலைவர்கள் இருக்க வேண்டும்' என்று தான் சொன்னதாக பெரியார்

எழுதுகிறார். வ.உ.சி. பெயரை முன்மொழிந்ததை தண்டபாணி பிள்ளை ஆதரித்திருக்கிறார். கஸ்தூரி ரங்க அய்யங்கார் எதிர்த்துள்ளார். இராஜாஜிக்கும் இது பிடிக்கவில்லை. முடிவே எடுக்காமல் கூட்டத்தை மாலைக்கு ஒத்தி வைத்துள்ளார்கள்.

கூட்டம் முடிந்ததும் பெரியார், இராஜாஜி, திரு.வி.க., டாக்டர் வரதராஜலு ஆகிய நால்வரும் ஒரே காரில் செல்கிறார்கள். கூட்டத்தில் நடந்ததைச் சுட்டிக்காட்டிய இராஜாஜி, ‘இன்றைய நடவடிக்கை ஜஸ்டிஸ் கட்சியாரே மேலானவர்கள் என்று கருதும்படி ஆகிவிட்டதே’ என்று சொல்லி இருக்கிறார். ‘தலைவர் விஜயராகவாச்சாரியார், உப தலைவர் கஸ்தூரி ரங்க அய்யங்கார். தாங்கள் தலைமைக் காரியதரிசி. இப்படி இருக்கும் போது ஒரு தமிழர் உபதலைவர்களில் ஒருவராகக் கூட இருக்க தங்களுக்கு இஷ்டமில்லை என்பதாக மக்கள் நினைக்கும்படியாக ஏற்பட்டதால் தான் சிலர் அப்படிக் கிளர்ச்சி செய்தார்களே ஒழிய மற்றபடி வேறு காரணம் ஒன்றுமில்லை’ என்று பெரியார் பதில் தந்துள்ளார்.

உபதலைவர் ஒருவர் இருந்தால் போதும் என்ற கருத்துக்காக வோட்டெடுப்பு நடப்பதாக பெரியாருக்கு தகவல் கிடைத்தது. அவர் 50 ரூபாயை எடுத்துக் கொடுத்து உறுப்பினர் கட்டணம் செலுத்தி 100 பேரை அழைத்து வர தண்டபாணி பிள்ளையிடம் சொல்லி இருக்கிறார். அவர்களும் மாநாட்டுக்குள் வந்துவிட்டார்கள். வோட்டெடுப்பு விட்டால் தோற்றுவிடுவோம் என்று நினைத்த இராஜாஜி, நான்கு உபதலைவர்களை நியமிக்கலாம் என்று சொல்லி இருக்கிறார். இதனை பெரியார் ஏற்றாலும் திரு.வி.க.வும் வரதராஜலுவும் ஏற்கவில்லை. இறுதியாக கஸ்தூரி ரங்க அய்யங்காரும், வ.உ.சி.யும் மட்டும் உபதலைவர்கள் ஆக்கப்பட்டார்கள் என்று எழுதுகிறார் பெரியார்.

வ.உ.சி., யை உபதலைவராக ஆக்குவதற்கு காங்கிரஸூக்குள் நடந்த வகுப்பு மோதல் காட்சிகள் இவை.

### நிராகரிக்கப்பட்ட வ.உ.சி.தீர்மானம் [1919-1920] :

சென்னை மாகாண சங்கத்தின் இரண்டாவது மாநாடு ஈரோட்டில் 1919 அக்டோபர் 11, 12 நாட்களில் நடந்துள்ளது. அப்போதுதான் பெரியாருடன் நெருக்கமான நட்பு ஏற்பட்டதாகவும், வ.உ.சி. இம்மாநாட்டில் கலந்து கொண்டதாகவும், உங்கள் பேச்சு அதிக தொல்லையை உங்களுக்குத் தரும் என்று அவர் சொன்னதாகவும் திரு.வி.க. எழுதுகிறார். (வாழ்க்கை குறிப்புகள் 200) இதன்மூலமாக ‘சென்னை மாகாண சங்கத்துடனும்’, பிராணமனரல்லாதார் நலனிலும் வ.உ.சி.க்கு இருந்த அக்கறையை அறியலாம்.

சென்னை மாகாண சங்கத்தின் இரண்டாம் ஆண்டு விழா (1919) ஈரோட்டில் நடந்துள்ளது. அதன் தீர்மானத்தை வடிவமைத்ததில் வ.உ.சி. முன்னின்றதாக பிற்காலத்தில் பெரியார் பேசி இருக்கிறார். (குடிஅரசு 20.12.1925) அந்த வகையில் சுயமரியாதை இயக்கத்தின் தொடக்க ஊக்கியாக இருந்தவர் வ.உ.சி.அவர்கள்.

1920 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் நடந்த 26 ஆவது சென்னை மாநில அரசியல் மாநாட்டில், வகுப்புவாரி உரிமைத் தீர்மானத்தை வ.உ.சி. அவர்கள் கொண்டு வந்தார்கள். 25.6.1920 ‘இந்து’ நாளிதழை ஆதாரம் காட்டுகிறார் பெ.சு.மணி. (வ.உ.சிதம்பரம் பிள்ளை - என்.சம்பத், பெ.சு.மணி, பக்கம் 224)

அரசு வேலை வாய்ப்புகளில் பிராமணர் பிராமணரல்லாதாருக்குரிய கொள்கையை வற்புறுத்தி பின் வரும் தீர்மானத்தை வ.உ.சி. கொண்டுவந்ததாக அவர் சொல்கிறார்.

“இந்த மாநிலத்தில் நிலவும் தற்பொழுதைய நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, அரசு பொது வேலைகளிலும், கௌரவ உத்தியோகங்களிலும் பிராமண - பிராமணரல்லாத சமூகங்களுக்கு போதுமான பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்” என்பது அத்தீர்மானம்.

அப்போதுதான் காங்கிரஸிலிருந்த பார்ப்பனரல்லாத தலைவர்கள் அனைவரும் வஞ்சகமாக ஏமாற்றப்பட்டார்கள்.



**மேலே நிற்பவர்கள் இடமிருந்து வலமாக:** 1. சோமசுந்தர பாரதியார் 2. சத்தியமூர்த்தி 3. குருசாமி முதலியார் 4. வேதநாயகம்பிள்ளை,
**நாற்காலியில் அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்து வலமாக:** 1. வரதராஜுலு நாயுடு 2. வ.உ.சிதம்பரனார் 3.பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்,
**கீழே அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்து வலமாக:** 1. முத்துசாமி ஆசாரி 2. சீனிவாச அய்யங்கார் 3. கர்மவீரர் காமராஜர்

பெரியார் தலைமையில் அந்த மாநாட்டுப் பந்தலில் பார்ப்பனரல்லாதார் கூட்டம் ஒன்று நடந்துள்ளது. வகுப்புரிமை தீர்மானத்தை இம்மாநாட்டில் நிறைவேற்ற வேண்டும் என்று அதில் கலந்து கொண்ட பலரும் வலியுறுத்தினார்கள். இதில் மிக முக்கியமானவர்கள் நாவலர் சோமசுந்தரபாரதி, வ.உ.சி., தண்டபாணி (பிள்ளை) உள்ளிட்டவர்கள். மாநாட்டுத் தீர்மானங்களை வடிவமைக்கும் கமிட்டிக்கு விஷயாலோசனைக் கமிட்டி என்று பெயர்.

அக்கூட்டத்தில் இத்தீர்மானத்தை பெரியார் முன்மொழிகிறார். வ.உ.சி.யும் தண்டபாணியும் வழிமொழிகிறார்கள்.

அப்போது என்ன நடந்தது என்பதை இதோ 'குடிஅரசு' சொல்கிறது:

"காலஞ்சென்ற திரு. எஸ்.கஸ்தூரி ரெங்கய்யங்கார் எழுந்து வீதாசாரம் (Percentage) என்கிற வார்த்தைக்குப் பதிலாக 'போதுமான' என்னும் அர்த்தத்தைக் கொடுக்கத் தகுந்த (Adequately) 'அடிகுவேட்லி' என்கிற பதத்தைப் போட்டுக் கொள்ளும்படி ஒரு திருத்தப் பிரேரணை கொண்டு வந்தார்.

இந்த ‘அடிகுவேட்லி’ என்ற பதத்திற்கு என்ன பொருள் என்று திரு. ராமசாமி நாயக்கர் அம்மாநாட்டுக்கு அக்ரா சனாதிபதியாக இருந்த திரு. சீனிவாசய்யங்கார் அவர்களைக் கேட்க, அவர் இரண்டும் ஒரே அர்த்தந்தான்; ஆனால், பர்சன்டேஜ் என்பதைவிட அடிகுவேட்லி என்பது நல்ல வார்த்தையென்று சொல்லி தீர்மானத்தை நிறைவேற்றி விட்டார்.

இது சமயம் திரு. ராஜகோபாலாச்சாரியார் முதலியோர்களும் அக்கூட்டத்தில் ஆஜராகித் தானிருந்தார்கள். அதோடு ராஜாங்கக் கல்வித்துறைகளில் சமஸ்கிருதக் கல்விப் பயிற்சிக்கு உள்ள யோக்கியதையும் செய்முறையும் தமிழ் கல்விக்கும் இருக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் திரு. ராமசாமி நாயக்கரால் பிரேரேபிக்கப்பட்டு திரு. வி.ஓ.சிதம்பரம் பிள்ளையால் ஆமோதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

ஆனால், விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டம் முடிந்ததும் வெளியில் வந்து திரு. ஈ.வெ.ராமசாமி நாயக்கர் சில ஆங்கிலம் படித்தவர்களைக் கண்டு ‘அடிகுவேட்லி’ என்பதற்கும் ‘பர்சென்டேஜ்’ என்பதற்கும் என்ன வித்தியாசம் என்று கேட்டபோது அவர்கள், அடிகுவேட்லி என்பது இருபொருள் கொண்டதென்றும், அதாவது யோக்கியதைக்குத் தகுந்த என்கிற பொருள்கூட கொள்ளலாமென்றும், பர்சன்டேஜ் என்கிற வார்த்தைதான் மிகத் தெளிவானது என்றும் சொன்னார்கள்.

பிறகு மாநாட்டில் இத்தீர்மானம் வரும்போது ‘பர்சன்டேஜ்’ என்கிற வார்த்தையையே போட்டுக்கொள்ள வேண்டும் என்று திரு. நாயக்கரும், திரு. தண்டபாணி பிள்ளையும் அக்ராசனர் திரு. சீனிவாசய்யங்காரிடம் சொன்னார்கள். அவரும் அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக்கொண்டார்.

கடைசியாக மாநாட்டில் இது தவிர மற்ற தீர்மானங்கள் முடிந்தவுடன் அக்ராசனாதிபதி எழுந்து திடீரென்று தமது முடிவுரையை ஆரம்பித்து விட்டார். திரு. தண்டபாணிப் பிள்ளை தன்னுடைய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ தீர்மானம் என்ன ஆயிற்றென்று அக்ராசனரை கூட்டத்தில் கேட்டார்.

அக்ராசனர் திரு. சீனிவாசய்யங்கார், அது பொது நன்மைக்கு விரோதமான தீர்மானமானதால் அவற்றை ஒழுங்குத் தவறானதென்று தீர்மானித்து விட்டதாகச் சொல்லிவிட்டார். உடனே திரு. தண்டபாணிப்பிள்ளை எழுந்து, விஷயாலோசனைக் கமிட்டியில் நிறைவேற்றப்பட்டதன் தீர்மானம் இங்கு எப்படி ஒழுங்குத்தவறு என்று கேட்டார். அப்போது, அங்கிருந்த பிராமணர்கள் திரு. பிள்ளையை உட்காரும்படி கூச்சல்போட்டு அடக்கி விட்டார்கள்.

கடைசியாக முடிவுரையில் திரு. அய்யங்கார், காஞ்சி மாநாட்டில் திரு. முதலியாரைக் கொண்டு சமாதானம் சொல்லச் சொன்னதுபோல் வருத்தப்படுவதாகப் பொய் வேஷம் போட்டு மறைத்து விட்டார் என்று பிற்காலத்தில் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி உள்ளது ‘குடிஅரசு’ (06.12.1925).

வகுப்புவாரி உரிமை எனப்படும் சமூகநீதி நெறிமுறைகளில் வ.உ.சி.க்கு இருந்த அழுத்தமானவற்றை இதன் மூலம் அறியலாம்.

### சுயமரியாதைக்கு ஒளியூட்டிய ஞானசூரியன் (1927-1928):

பெரியாரின் வாழ்வில் பெரும் மாறுதலை ஏற்படுத்திய நூல், ‘ஞானசூரியன்’. இதனை எழுதியவர் சுவாமி தயானந்தசரஸ்வதி. இந்நூலை முதலில் வெளியிட்டவர் கானாடுகாத்தான் வை.சு.சண்முகம். இந்நூலைப் பெரியாருக்கு கொடுத்தவரும் அவரே. இதனை 1928 ஆண்டு மறுபதிப்பு செய்து பெரியார் வெளியிட்டார். இந்நூலுக்கு மூன்று பேரிடம் சிறப்புரை பெற்றுள்ளார் பெரியார். வ.உ.சி., மறைமலையடிகள், கா.சுப்பிரமணியனார் ஆகியோரே அந்த மூவர். இந்தச் சிறப்புரையை 07.10.1927 அன்று கோயிற்பட்டியில் இருந்து எழுதியதாக வ.உ.சி. குறிப்பிட்டுள்ளார். சுயமரியாதை இயக்கக் கொள்கைகள், பார்ப்பனர் எதிர்ப்பில் மட்டுமல்ல, எத்தகைய சீர்திருத்தச் சைவராகவும் வ.உ.சி. இருந்துள்ளார் என்பதை இதன் சிறப்புரை மூலமாக அறியலாம்.

“பிராமணப் புரோகிதர்களும் பூசாரிகளும் பிராமணரல்லாதாருடைய பொருள்களைக் கவருவதற்குத் தொன்றுதொட்டுச் செய்து வரும் சூழ்ச்சிகளையும், மோசங்களையும், கொலைகளையும் எடுத்துக்கூறிப் பிராமணரல்லாதவர்கள் இன்னும் பிராமணப் புரோகிதர்களையும்




**உட்கார்ந்திருக்கும் வரிசையில்: தந்தை பெரியார், பெரியவர் வ.உ.சி.**
**தொழிற்சங்க தீரர் சிதம்பரம் என்.தண்டபாணி பிள்ளை மற்றும் பலர்.**
**நன்றி: போட்டோ உதவி: திருமதி.சித்ரா செல்வம் அவர்கள். (சிதம்பரம் தண்டபாணி பிள்ளை பேத்தி, அர்கான்சாஸ், அமெரிக்கா)**

பூசாரிகளையும் விரும்புகிறார்களா என ஞானசூரியன் வினவுகிறான். இந்து சமயம் என்பதன் பொய்களையும் புரட்டுகளையும் ஆபாசங்களையும் அச்சமயப் பெயரால் செய்யப்படும் சடங்குகளின் வாயிலாகவும் பிராமணரல்லாதாரின் பொருள்கள் கொள்ளையிடப் படுவதையும் பிராமணரல்லாதார் தாழ்த்தப்படுவதையும் அக்கொள்ளைகளின்றும் தாழ்வினின்றும் பிராமண ரல்லாதார் தப்புவதற்குரிய அவசியத்தையும் வழிகளையும் ஞானசூரியன் நன்கு விளக்குகின்றான்'' என்று அதில் குறிப்பிட்டுள்ளார் வ.உ.சி.

''வடமொழி யாகங்களிற் சிலவற்றைத் தமவெனக் கொண்டு பிறப்பால் சாதிவேற்றுமைகள் கற்பித்தும் சிவாலயங்களிற்சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து வணங்கியும் வருகின்ற சைவர்களும் 'ஞானசூரியன்' கிரணங்களினின்று தப்பவில்லை. தாம் மதிக்கப் படுவதற்குரிய ஒரு ஜாதியார் என்று சொல்லிக் கொள்ள விரும்புவா ராயின் அச்சைவர்வடமொழி ஆகமங்களைத் தமவெனக் கொள்ளும் தவற்றை ஒழித்தலும் சிவாலயங்கள் சிலவற்றில் காணப்படும் சிவலிங்க உருவினை மாற்றலும் இன்றியமையாதவை'' என்று எழுதியுள்ளதன் மூலம் வ.உ.சி.யின் தீவிரத்தன்மையை அறியலாம். **(ஞானசூரியன் பக்கம் 8)**

15.03.1928 அன்று காரைக்குடியில் சிவஞான யோகிகள் தலைமையில் வ.உ.சி. ஆற்றிய உரையில், பிராமணர் பிராமணரல்லாதார் சண்டைக்குக் காரணம் உத்தியோகமென்றே கூறலாம் என்று பேசி உள்ளார். ஆதிதிராவிடர் கல்வி குறித்தும், பெண்களைச் சமைக்கும் இயந்திரமாக்கிவிட்டார்கள் என்றும் பெண்களுக்குக் கல்வி வேண்டும் என்றும் கணவனின் எச்சில் இலையில் மனைவி சாப்பிடக்கூடாது என்றும் உரிமைகள் பெற பெண்கள் போராட வேண்டும் என்றும் பேசி இருக்கிறார். **(திராவிடன் இதழில் அது வெளியாகி உள்ளது, இந்திய வரலாற்றில் வ.உ.சி. பக்கம் 365–369)**

தொல்காப்பியத்தில் இளம்பூரணர் உரையை 1928 ஆம் ஆண்டு பதிப்பித்தார் வ.உ.சி. அதில் ஆரிய இடைச்செறுகள் உள்ளதாக எழுதுகிறார். “இவ்வகைத் தனிச்சிறப்பு பொருந்திய இத்தமிழ் இலக்கணத்துள்ளும் ஆரியமொழிகள் சிலவற்றையும் ஆரியர் பழக்க வழக்கங்கள் சிலவற்றையும் ஆரியர் கொள்கைகள் சிலவற்றையும் இந்நூலின் கண் நுழைத்திருத்தலை ஆங்காங்கு காணலாம்” என்று எழுதுகிறார் வ.உ.சி.

### பெரியாரின் சாட்சியம் (1927)

வ.உ.சி.யைப் பார்த்து அரசியலுக்கு வந்தவர் தான் பெரியார். இதனை கோவில்பட்டியில் நடந்த கூட்டத்தில் வெளிப்படையாகவே பெரியார் சொல்லி இருக்கிறார். அவருக்கு முன் பேசிய வ.உ.சி. அவரை மிகப்பெருமையாக பேசியதைச் சுட்டிக் காட்டி பெரியார் பேசுகிறார்:


விடுதலை

நீண்ட காமை, அடிமை முறை இன்றும் உளது

25 வருட சுதந்திர ஆட்சி பற்றி செய்தி நிறுவனத்தின் சர்வே

தந்தை பெரியாருக்கு வ.உ.சி.யின் கடிதம்

V. O. CHIDAMBARAM PILLAI

“நமது நண்பரும் அரசியல் தலைவருமான திருவாளர் வி.ஓ.சிதம்பரம் பிள்ளை அவர்கள் என்னைப் பற்றிச் சொல்லியவைகள் யாவும் என்னிடம் உள்ள அன்பினாலல்லாது அவ்வளவும் உண்மை என்று தாங்கள் நம்பிவிடக் கூடாது என்று தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். என்னை அவர் தலைவர் என்று சொன்னதற்கு ஆக நான் மிகுதியும் வெட்கப்படுகிறேன்.

அவர் வங்காளப் பிரிவினையின் போது தமிழ்நாட்டில் சிறப்பாக இந்த ஜில்லாவில் அரும்பெரும் தலைவராயிருந்து நடத்திய கிளர்ச்சியின் போது நான் உல்லாசத்துடன் விடலைப் புருஷனாய் விளையாடிக் கொண்டிருந்தேன். அவரையும் அவர் போன்றோரையும் கண்டே பொதுத் தொண்டில் இறங்கினேன்” என்று பேசியவர் பெரியார். (குடிஅரசு 26.06.1927).

### கொந்தளித்த கோவை (1927)

1927 ஜூலை 2 ஆம் நாளன்று கோவையில் நடைபெற்ற பிராமணரல்லாதார் மாநாட்டில் வ.உ.சி. கலந்து கொண்டார். வ.உ.சி., திரு,வி.க. ஆகிய தலைவர்கள் இம்மாநாட்டுக்கு வரக்கூடும் என்று ‘குடிஅரசு’ (10.06.1927) எழுதியது.

வ.உ.சி. பேசியது குறித்து பெ.சு.மணி தனது நூலில் சுட்டிக் காட்டி இருக்கிறார். 1927 ஜூலை டிசம்பர் “இந்தியன் காலாண்டு ரிஜிஸ்டர்” (Indian Quarterly Register) எனும் வெளியீட்டில் வ.உ.சி.யின் பேச்சு ஆங்கிலத்தில் பின்வருமாறு வெளிவந்துள்ளது என்கிறார் அவர்.

“காங்கிரசின் அமைப்பாளர்கள், பிராமணரல்லாதவர்கள். ஆனால் இப்பொழுது அதிகாரம் பிராமணர்களிடம் உள்ளது. இப்பொழுது எடுக்கப்படும் நடவடிக்கை அந்த அதிகாரத்தை மீட்டுக் கொள்வதற்காகத்தான். சுய ஆட்சிக்காகப் பாடுபடும் பிராமணரல்லாத சிறந்த தேசபக்தர்கள் காங்கிரசில் உள்ளனர். இந்தச் சிறந்த பிராமணரல்லாதவர்களுடன், நீதிக்கட்சியின் பிராமணரல்லாதவர்கள் இணைந்து சுய

ஆட்சிக்கு பாடுபட்டால், வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கருத்தில் இருந்து காங்கிரஸ் விலகி நிற்காது. இந்தியாவில் பல்வேறு வகுப்புகளும், சமூகங்களும் இருக்கின்றவரையில் அவர்கள் அனைவரும் காங்கிரசில் கண்டிப்பாக சேரவேண்டும்.'' (என்.சம்பத், பெ.சு.மணி நூல், பக்கம் 225) என்று வ.உ.சி. பேசி இருக்கிறார். இதுதான் மறையும் வரையில் வ.உ.சி.யின் கருத்தாக அமைந்திருந்தது.

### சினம் கொண்ட சேலம் (1927):

1927ஆம் ஆண்டு சேலத்தில் நடந்த காங்கிரஸ் கட்சியின் மூன்றாவது அரசியல் மாநாட்டில் (05.11.1927) அவர் ஆற்றிய உரை என்பது வ.உ.சியின் முழு முகத்தைக் காட்டும் உரையாகும். அந்தக் காலக்கட்டத்தில் தன் மீது என்னமாதிரியான விமர்சனங்கள் எல்லாம் வைக்கப்படுகின்றன என்பதை வ.உ.சி.பட்டியலிடுகிறார்.

★ தேசாபிமானமும் என்பால் உளதோ – என்று சிலர் ஐயப்படுகிறார்கள்.

★ ராஜாங்கத்தாரிடம் கைக்கூலி பெற்றுக்கொண்டு தேசத்துரோகம் செய்து கொண்டிருக்கிறான் சிதம்பரம் பிள்ளை என்று பத்திரிக்கை அதிபர் ஒருவர் சொல்லி இருக்கிறார்.

★ பிராமண அபிமானி – என்று பிராமணரல்லாத சிறுவர்கள் சிலர் சொல்கிறார்கள்.

★ வஞ்சக சொரூபி என்று பிராமணர்களாலும் தான் அநியாயமாகப் பழிக்கப்படுவதாக அந்த உரையில் சொல்கிறார்.

“இந்த மாநாட்டில் குழுமியிருப்போரில் பெரும்பாலும் பிராமணரல்லாதார் தாம். யானும் ஒரு பிராமணரல்லாதான். இந்த ஜில்லா சிறந்த ஓர் தமிழ்நாடு. யானும் ஒரு சிறந்த தமிழன்'' – என்ற தனது அடையாளத்தைச் சொல்கிறார். தமிழன் – பிராமணரல்லாதான் என்று தன்னை அறிமுகம் செய்துகொள்கிறார். ஜாதியால் வேளாளன் ஆனாலும் அனைவரையும் சமமாகக் கருதுவதால் ஜாதியார்களால் விமர்சிக்கப்படுவன் என்றும் சொல்லிக் கொள்கிறார்.

சுய அரசாட்சி இந்தியாவில் உருவாக வேண்டும் என்று சொல்லும் அவர், பல ஜாதி,மதத்தலைவர்கள் ஒன்று பட்டு ரத்தம் சிந்தினால் தான் அதனைப் பெற முடியும் என்கிறார். இந்து – முஸ்லீம் மதக் கோட்பாடுகளுக்குள் இருக்கும் வேற்றுமையைக் களைய வேண்டும் என்றும், உயர்ந்த ஜாதி – தாழ்ந்த ஜாதி பாகுபாடு என்ற எதுவும் இல்லை என்றும் சொல்கிறார். மத,ஜாதிகளில் இருக்கும் இதனைக் களைந்தபிறகு தான் போராட முடியும் என்கிறார். சுய அரசாட்சி உருவாகிவிட்டால், மக்களுக்குள் இருக்கும் வேறுபாடு தானாக நீங்கிவிடும் என்று சிலர் சொல்லியதை அவர் ஏற்கவில்லை. பொதுவானவை அனைத்தும் அனைவர்க்கும் பொதுவானவை என்று சொன்னார்.

இது நீதிக்கட்சி ஆட்சி அமைந்திருந்த காலம் என்பதால் வகுப்புவாரி உரிமை தொடர்பாக வ.உ.சி.விரிவாக பேசுகிறார். ‘வகுப்புவாரி உரிமையானது நாட்டில் உள்ள ஒற்றுமையின்மையையும் பகைமையையும் குறைக்கவல்லது’ என்கிறார் வ.உ.சி. ‘நமது தேசத்தில் நிலவும் பிறப்பை ஆதாரமாகக் கொண்ட அநியாயமான ஜாதி வேற்றுமைகளையும் உயர்வு தாழ்வுகளையும் கடுமையாக நான் எதிர்க்கிறேன்’ என்றார்.

நம் நாட்டு மக்களிடம் ஒற்றுமை ஏற்படாமல் போனதற்குக் காரணம் அரசு பணிகளிலும் சட்டசபைகளிலும் பொது நிறுவனங்களிலும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வழங்கப்படாதது தான் என்றும், வகுப்புவாரி உரிமை வழங்குவதே உண்மைத் தேசாபிமானி ஒவ்வொருவரது கடமையாகும் என்றார்.

இதே உரையில் தான் பிராமணர், பிராமணரல்லாதார் குறித்தும் விரிவாக பேசினார். பிராமணரல்லாதார் யார் என்பதற்கு வ.உ.சி. கொடுத்த அடைமொழிகள் அழுத்தமானவை.

‘பிராமணரல்லாதார்’ என்னும்போது முகமதியர்கள், இந்தியக் கிறிஸ்தவர்கள், தாழ்த்தப்பட்ட ஹிந்துக்கள், தாழ்த்துக்கின்ற ஹிந்துக்கள் என்னும் நான்கு வகுப்பினர்களையும் குறிக்கின்றேன் – என்பது வ.உ.சி.யின் வரையறையாகும். பிராமணர் – பிராமணரல்லாதார் வேற்றுமையை



தனது உறவினருடன் வ.உ.சி.

உருவாக்கியவர்கள் ஆங்கில ஆட்சியாளர்கள் என்று அப்போதும் சிலர் சொல்லி இருக்கிறாரகள். இதனையும் மறுத்து வ.உ.சி.பேசி இருக்கிறார். ‘இது முழுமையான பொய்’ என்கிறார் வ.உ.சி. பிரிட்டிஷார் ஆளாத சுதேச மன்னர்கள் ஆட்சியில் பிராமணர் அல்லாதார் வேறுபாடு இல்லையா என்றும் கேட்கிறார் அவர். இந்த வேற்றுமைக்கு உண்மையான காரணம் என்ன என்பது குறித்தும், அதற்கான தீர்வு குறித்தும் விரிவாக பேசுகிறார். (வ.உ.சி.யின் சேலம் மாநாட்டு உரையை முழுமையாக வாசிக்க வ.உ.சி. பன்னூல் திரட்டு பக்கம் 199–236, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்விக்கழகம்) சுயமரியாதைச் சுடரொளியாகவே காட்சி தருகிறார் வ.உ.சி.

### கண்ணீர் வரவைக்கும் காட்சிகள் [1928]:

“ஈ.வெ.ரா.விடத்தில் உள்ள சிறப்புக் குணம் என்னவென்றால் மனதில் படும் உண்மைகளை ஒளிக்காமல் சொல்லும் ஒரு உத்தமக் குணம் தான். அவரை எனக்கு இருபது ஆண்டுகளாகத் தெரியும். அவரும் நானும் ஒரே இயக்கத்தில் சேர்ந்து வேலை செய்து வந்தோம். அந்த இயக்கத்தில் அயோக்கியர்கள் சிலர் வந்து புகுந்த பிற்பாடு நானும் அவரும் விலகிவிட்டோம். பிறகு அவர் ஆரம்பித்து நடத்தப்பெறும் சுயமரியாதை இயக்கத்தைப் பார்த்து இது எல்லா இயக்கத்திலும் நல்ல இயக்கமாயிருப்பதால் என்னால் ஆன உதவியை அவ்வியத்திற்கு செய்து வருகிறேன். அவரைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்வதாக இருந்தால் தமிழ்நாட்டில் எல்லாத் தலைவர்களைவிட பெரிய தியாகி என்றுதான் சொல்ல வேண்டும். ஆகையினால் அவருடைய திருஉருவப் படத்தை ஒவ்வொருவரும் வைத்து காலை, மாலை பகல் முதலிய வேளைகளில் வணங்கவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்” (நாகப்பட்டினத்தில் பெரியார் படத்தை திறந்து வைத்துப் பேசியது – குடிஅரசு 10.06.1928) என்று சொன்னவர் பெருந்தமிழர் – பேரறிஞர் – தியாகிகளுக்கெல்லாம் பெரிய தியாகியான வ.உ.சிதம்பரனார்.

அதே விழாவில் பெரியார் படத்தை நோக்கி விழுந்து வணங்கினார் வ.உ.சி. “இப்படி நீங்கள் பேசலாமா? இப்படி எனது படத்தை விழுந்து வணங்கலாமா?” என்று கேட்டிருக்கிறார் பெரியார். “அதில் என்ன தவறு?” என்று திருப்பிக் கேட்டுள்ளார் வ.உ.சி.

1928 நிகழ்வை பிற்காலத்தில் (1948) பெரியார் விவரித்துள்ளார். 07.11.1948 அன்று சேத்துப்பட்டு வ.உ.சி. இளைஞர் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற இலவச வாசகசாலை நூல் நிலையத்திறப்பு விழாவில் தந்தை பெரியாரும், அண்ணாவும் கலந்துகொண்டனர். பெரியார் பேசும் போது, ஒரு சமயம் அவர் செய்த முக்கியக் காரியத்தை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். நாகப்பட்டினம் தேசபக்த சமாஜத்தில் எனது படத்தைத் திறந்து வைக்குமாறு வ.உ.சி. அவர்களை அழைத்திருந்தார்கள். படத்தைத் திறந்து வைத்த போது தேங்காய் பழம் உடைத்து விழுந்து கும்பிட்டார்.

இது தோழர் தண்டபாணி (பிள்ளை) அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அன்று அவருடன் இருந்திருக்கிறார். தண்டபாணி அவர்களும் விழுந்து கும்பிட்டார். இந்தச் செய்தி அறிந்த எனக்கு மிகக்கஷ்டமாகி விட்டது. பிறகு அவரையே நேரில் சந்தித்து இந்த அக்கிரமத்தை அய்யா அவர்கள் செய்யலாமா என்று கேட்டேன். அப்போது அவர் என்ன சொன்னார். தெரியுமோ? ‘நீங்கள் ஒன்றும் கவலைப்படவேண்டாம். இப்படிச் செய்தால் தான் பார்ப்பனர்கள் என்னை நாஸ்திகன் என்று

தூற்ற மாட்டார்கள். தோழராகிய ராமசாமியின் படத்துக்கே இப்படி விழுந்து கும்பிடும் பொழுது நாஸ்திகனாக இருப்பானா என்று கலங்குவர்' என்று பட்டென்று பதில் கூறினார். அவ்வளவு பார்ப்பனிய எதிரியாக இருந்து வந்தவர் நம் வ.உ.சி. அவர்கள் என்று புகழாரம் சூட்டினார் பெரியார். (உலகத் தலைவர் பெரியார், பாகம் 2, கி.வீரமணி, பக்கம் 327)

### சுயமரியாதை சூடு குறையாத

### இறுதிக் காலம் (1935-36)

1935 ஆம் ஆண்டு இரண்டு முக்கியமான இலக்கியக் கொடைகளை வ.உ.சி. அளித்துள்ளார். ஒன்று திருக்குறள் – மணக்குடவர் உரையை பதிப்பித்தது. இரண்டாவது சிவஞானபோதத்துக்கு உரை எழுதியது ஆகும்.

திருக்குறளில் நான்காவது அதிகாரம் தான் அறன் வலியுறுத்தல். முதல் மூன்று அதிகாரங்கள் கடவுள்வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை ஆகியவை ஆகும். இந்த மூன்று அதிகாரமும் வள்ளுவர் எழுதியது அல்ல, உரையாசிரியர்கள் சிலர் எழுதிச் சேர்த்தது என்பது வ.உ.சி. அவர்களின் கருத்து. சிறப்புப் பாயிரமாக அவர்கள் எழுதியதை வள்ளுவர் எழுதியதாக பிற்காலத்தில் சேர்த்து விட்டார்கள் என்றும் மொத்தமே 130 அதிகாரங்கள் தானே தவிர 133 அதிகாரங்கள் அல்ல என்றும் வ.உ.சி. சொல்கிறார். ஆதி என்ற புலைச்சிக்கும் பகவன் என்ற அந்தணருக்கும் பிறந்தவர் வள்ளுவர் என்பது கட்டுக்கதை என்கிறார் வ.உ.சி.

வ.உ.சி.யின் சிவஞானபோதம் உரை 1935 ஆம் ஆண்டு வெளியானது. அவர் மறைவுக்கு முந்தைய ஆண்டு இது.

ஏனைய உரைகளில் காணப்படும் பல்வேறு மதக்கோட்பாடுகள் இந்த உரையில் இருக்காது என்று சொல்லும் வ.உ.சி., அனைத்து மதங்களும் ஒரே இறைவனைப் பற்றியே பேசுகின்றன என்கிறார். மத,ஜாதி உள்ளிட்ட மற்ற அனைத்து வேற்றுமைகளையும் பேசுபவர்கள் தேசத்துக்கு தீங்கிழைப்பவர்கள் என்றும் சொல்கிறார்.

அரசியல் மேடைகளில் மட்டுமல்ல இலக்கிய உரைகளிலும் தனது சிந்தனைகளை முழுமையாக பதிவு செய்துள்ளார் வ.உ.சி.

1936 நவம்பர் 18ஆம் நாள் வ.உ.சி. அவர்கள் காலமாகிறார். அதே ஆண்டு மே 3ஆம் நாள் அன்று திருச்சியில் பார்ப்பனரல்லாதார் மாநாடு நடக்கிறது. அது தொடர்பாக அனைவருக்கும் ஒரு வேண்டுகோள் கடிதம் அனுப்புகிறார் வ.உ.சி.

நமது சென்னை மாகாணத்தில் – அதிலும் முக்கியமாக தமிழ்நாட்டில் என்று அந்தக் கடிதத்தைத் தொடங்குகிறார். அதாவது 1936ஆம் ஆண்டே 'தமிழ்நாடு' என்று சொல்லத் தொடங்கிவிட்டார் அவர். பார்ப்பனரின் ஆதிக்கத்துக்கு உட்பட்டு பார்ப்பனரல்லாதார் பின்னிலைக்கு சென்று கொண்டிருக்கிறார்கள் என்றும், பார்ப்பனருடைய ஆதிக்கத்தை உதறித் தள்ளிவிட்டுப் பார்ப்பனரல்லாதார்கள் முன்னிலைக்குச் செல்லத் தொடங்கும் நன்னாளின் வரவை நான் மிகுந்த ஆவலுடன் எதிர் நோக்கி இருக்கிறேன் என்றும், அதற்கு அனைத்துக் கட்சியிலும் இருக்கும் பார்ப்பனரல்லாதார் அனைவரும் ஒன்று சேர வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கிறார் வ.உ.சி.

இதைச் செய்தால் உங்களை தேசத்துரோகிகள் என்பார்கள் என்கிறார் வ.உ.சி. அதைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். பார்ப்பனரல்லாச் சகோதரர்களே! சாதி வேற்றுமை, மத வேற்றுமை, கட்சி வேற்றுமை, கோட்பாடு வேற்றுமை முதலியவற்றையெல்லாம் விடுத்து நீங்களெல்லாம் ஒன்று சேர்ந்து பார்ப்பனரல்லாதார்கள் சமூகத்தை முன்னிலைக்கும் தன்னிலைக்கும் கொண்டு வருவீர்களாக. உங்கள் அன்புள்ள வ.உ.சிதம்பரம் பிள்ளை என்பதுதான் வ.உ.சி. விடுத்த வெளிப்படையான குரல். இதுதான் கப்பலோட்டிய தமிழனின் இறுதிக் குரல். (குடிஅரசு 17.05.1936)

இந்த அறிக்கை குறித்து வ.உ.சி.க்கு பெரியார் ஒரு கடிதம் எழுதி இருக்கிறார் என்பதை அறிய முடிகிறது. அதற்கு வ.உ.சி. ஒரு பதிலைப் பெரியாருக்கு எழுதுகிறார். மே மாதம் 11ஆம்

நாள் பெரியாருக்கு ஒரு கடிதம் எழுதுகிறார் வ.உ.சி. அக்கடிதம் இதுதான்:



கடவுள் துணை. ஈரோடு குடிஅரசு ஆசிரியர் ஸ்ரீமான் ஈ.வெ. இராமசுவாமி நாயக்கரவர்களுக்கு. தோழரவர்களே. காஞ் சிபுரம் தமிழர் மகாநாட்டுக்கு ஈ.வெ.ரா. வேண்டுகோளையும் தாங்கள் 10.05.1936இல் எனக்கு எழுதியனுப்பிய கடிதத்தையும் படித்தேன்.

சர்வக சாதிப் பார்ப்பனரல்லாதார்களும் ஒன்று கூடுவதற்குத் தாங்கள் சொல்வதே சரியான உபாயம். அவ்வாறு சர்வக சாதிப் பார்ப்பனரல்லாதார்களின் மகாநாடு ஒன்று காஞ் சிபுரத்தில் வருகிற ஜூன் மாதத்தில் நடக்கப் போகும் தமிழர் மகாநாட்டுப் பந்தலிலேயே கூட்டுவிக்கும்படியாக நமது நண்பர் திரு.வி.கலியாணசுந்தர முதலியாரவர்களுக்கு நான் இதனுடன் ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன். அவர்கள் பதிலை எதிர்பார்ப்போம். கடவுள் துணை, தங்களன்புள்ள வ.உ.சிதம்பரம் பிள்ளை என்கிறது அந்தக் கடிதம்.

மரணிப்பதற்கு ஆறுமாதத்துக்கு முன் எழுதிய கடிதம் இது. அனைத்துக் கட்சியிலும் இருக்கும் பார்ப்பனரல்லாதாரை ஒன்று சேர்த்து பார்ப்பனரல்லாதாரை முன்னிலைக்கும் தன்னிலைக்கும் கொண்டு வர வேண்டும் என்பதுதான் அவரின் இறுதி விருப்பமாக அமைந்து இருந்தது.இது தொடர்பாக மேலும் அதிகச் செய்திகளைத் தேட வேண்டும்.

### நாட்டுப்பற்றுடன் இனப்பற்று!

1936 நவம்பர் 18 வ.உ.சி. அவர்கள் காலமாகிவிட்டார்கள். ‘சிதம்பரம் சிதைவு’ என்று பெரியார் ‘குடிஅரசு’ இதழில் தலையங்கம் தீட்டினார். ‘சூத்திரப்பிள்ளை’க்கு உரிய மரியாதை கிடைக்கவில்லையே என்று வருந்தினார் பெரியார்.

தமிழரசுக் கழக மாநாட்டில் (09.11.1948) வ.உ.சி.படத்தைத் திறந்து வைத்து திரு.வி.க. பேசும் போது சில கருத்துகளை ஆணித்தரமாகச் சொல்லி இருக்கிறார். “நான் காங்கிரசில் இருந்து தொண்டு செய்தவன். பரந்த நோக்குடன் காங்கிரசில் பாடுபட்டு உழைத்த ஈ.வெ.ராமசாமியும் விலகினார். வ.உ.சிதம்பரனாரும் வெளியேறினார். ஏன்? உரிமை, உரிமை,உரிமை மறுக்கப்பட்டது.

வ.உ.சி. அவர்கள் சைவர். வடநாட்டுச் சைவத்தை பின்பற்றுகின்ற சில மடத்தார் போற்றுகின்ற சைவமல்ல. ஜாதி, சமய சழக்குகள் தென்னாட்டு சைவத்தில் இல்லை. எவ்வுயிரிடத்தும் அன்பாயிரு, எல்லோரும் ஓர் குலம் என்பதே வ.உ.சி.யின் கொள்கை. தென்னாட்டு மகாஜனசபை, உண்மையாக வடநாட்டு காங்கிரசை எதிர்ப்பதற்காக ஏற்பட்டது. ஆனால் அது இன்றைக்கு அக்கொள்கைக்கு முரண்பட்டிருக்கிறது.

வ.உ.சி.க்கு காந்தியத்தில் நம்பிக்கை இல்லை. அவர் கதர் கட்டமாட்டார். கதரில் நம்பிக்கை யில்லை என்று பச்சையாகச் சொல்வார். அவர் அறவாள் வைத்திருப்பார். அதுதான் அறிவு நிறைந்த திருக்குறள் வாள்” (விடுதலை 03.09.1972 மீள்பதிவு) என்கிறார் திரு.வி.க. உண்மை வ.உ.சி.யை உணர வைக்கும் உரை இது.

நாடு விடுதலை அடைந்த பிறகு வ.உ.சி.யின் தியாகத்துக்கு உரிய மதிப்பும்,மரியாதையும் தரப்படவில்லை என்பதைக் கண்டு கொதித்து 'விடுதலை' ஏடு தலையங்கம் தீட்டியது. (20.11.1947) வ.உ.சி.யை 'வகுப்பு துவேஷி' என்று ஒரு தேசபக்தர் சொல்லி இருக்கிறார். அதனைக் கண்டித்து எழுதப்பட்டது இத்தலையங்கம்.

'நாட்டுப் பற்றுடன் இனப்பற்றும் இருக்க முடியும் என்பதற்கு வ.உ.சி. ஓர் எடுத்துக்காட்டு' என்கிறது இத்தலையங்கம். இறுதியாக, "இந்நாளில் வ.உ.சி. இருந்தால் நம் கட்சியில் தான் இருப்பார் என்று கூறுவது மட்டுமல்ல, தலைமை வகித்து நடத்துவார். ஆரியம் இந்நாள் கப்பலேறியிருக்கும், அவர் கப்பலோட்டியாதலால்! திராவிடர் கழகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் ஒவ்வொரு வ.உ.சி.யாகவே இருந்து புரட்சி செய்து மாள்வதையே பெரும் பேறாகக் கொள்வர்" என்று முடிகிறது.

29.11.1947 அன்று திருப்பத்தூரில் வ.உ.சி. நினைவுநாள் கூட்டம் நடந்துள்ளது. 'வ.உ.சிதம்பரனாரும் திராவிடர் கழகமும்' என்ற தலைப்பில் பெரியார் பேசி இருக்கிறார். ஆனால் அந்த உரை கிடைக்கவில்லை. அந்த உரை கிடைத்திருந்தால் மேலும் பல செய்திகளை நாம் உறுதி செய்து சொல்லி இருக்க முடியும்.

தூத்துக்குடியில் திராவிடர் கழக 18ஆவது மாகாண மாநாடு 1948 ஆம் ஆண்டு மே 9ஆம் நாள் நடந்தது. இதில் வ.உ.சி. படத்தை குத்தூசி குருசாமி திறந்து வைத்துள்ளார். 1948 நவம்பர் 7 அன்று சென்னை சேத்துப்பட்டில் வ.உ.சி. இளைஞர் கழகத்தின் இலவச வாசகசாலை நூல்நிலையத் திறப்புவிழாவில் பெரியாரும் அண்ணாவும் கலந்து கொண்டனர்.

அப்போது பேசிய பெரியார், "இந்த நாட்டின் விடுதலைக்காக குடும்பத்தோடு நாசமடைந்தவர் ஒருவர் உண்டென்றால் அவர் வ.உ.சிதம்பரனார் அவர்களேயாகும். வங்காளத்தில் ஏற்பட்ட சுதேசி உணர்ச்சி இயக்கம் காரணமாக நம் நாட்டிலும் துணி கொளுத்தப்பட்டது. ஆனால் நமது வ.உ.சி. அவர்கள் இது மட்டும் போதாது என்று வெள்ளையர்களின் கப்பலுக்கு எதிராக கப்பலையும் கட்டி தூத்துக்குடிக்கும், கொழும்புக்கும் பிரயாணக் கப்பலாக ஏற்பாடு செய்தார்.

அந்தக் காலத்தில் நான் நன்றாக வாழ்ந்திருந்தவன் தான். வ.உ.சி.யின் இந்த முயற்சிக்காக எங்கள் ஊரிலேயே ரூபாய் 35 ஆயிரம் வசூல் செய்து கொடுத்தோம். அதில் எங்கள் பணம் 5 ஆயிரம், முஸ்லீம் நண்பர்களுடையது அய்ந்து ஆயிரம். மற்றவர்களும் ஆயிரம் ஐய்நூறு என்பது போன்று உதவி செய்து அவரது முயற்சிக்கு பலந்தேடினோம்.

1927ஆம் ஆண்டிலேயே சேலத்திலே நடைபெற்ற ஜஸ்டிஸ் மாநாட்டிற்குத் தலைமையும் வகித்திருக்கிறார். அதற்குப் பிறகு பல ஆண்டுகள் நம்முடனிருந்து வந்தார். எனினும் தேசியத்தைப் பற்றிப் பேச மறக்கமாட்டார். **(உலகத் தலைவர் பெரியார், பாகம் 2, கி.வீரமணி, பக்கம் 327)** என்றார் பெரியார்.

இதுதான் உண்மை. 1920 முதல் 1936 தனது வாழ்வின் இறுதிவரை சுயமரியாதை இயக்கத்துடன், தந்தை பெரியாருடன் சமூகவிடுதலை உணர்வுடன் தொடர்பில் இருந்தார் வ.உ.சிதம்பரனார், நாட்டுவிடுதலை உணர்வுடனேயே!


பாரதி தரிசனம்
(பாரதியாரின் "இந்தியா" பத்திரிகைக் கட்டுரைகள்)
மே-டிசம்பர்-1906
NCBH
1


வ.உ.சி.யும்
பாரதியும்

# ஆவணங்கள்

**வ. உ.சி. குறித்து பாரதி எழுதியவற்றைத் தொகுத்து - 'வ.உ.சி.யும் பாரதியும்' என்ற நூலாக வெளியிட்டுள்ளார் ஆய்வாளர் - பேராசிரியர் ஆ.இரா.வேங்கடாசலபதி. அதில் உள்ளவையே இந்த ஆவணங்கள்!**

## 1. ஸ்ரீமான் சிதம்பரம் பிள்ளை

இம் மஹானது கேஸ் இன்னும் இழுத்துக்கொண்டே போகிறது. இவர் மேலுள்ள முதலாவது ராஜதுரோகக் கேஸில் பிராஸிக்யூஷன் தரப்பு விசாரணை முடிந்து போய்விட்டது. இரண்டாம் ராஜ துரோகக் கேஸ் (ஸ்ரீ சுப்பிரமணிய சிவன் ராஜதுரோகக் குற்றம் செய்ததாகவும் அதற்கு ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை உடந்தையாக இருந்ததாகவும் கற்பிக்கப்பட்டிருக்கும் கேஸ்) விசாரணை இந்த வாரத்திலே தொடங்கியிருக்கிறார்கள். இது நிற்க,

'கர்ம வீரர்' என்றும், பிரதம ஆரிய புருஷர்' என்றும், உயர்ந்த பரித்தியாகி என்றும் அரவிந்த கோஷ் முதலிய பெரியோர்களாலே பாராட்டப்பட்ட ஸ்ரீமான் சிதம்பரம் பிள்ளையின் பெருந்தன்மையையும், தேசப்பற்றையும் உத்தேசித்து நமது தமிழ் நாட்டோர் அவர் விஷயத்தில் எம்மட்டுச் சிரத்தை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்களோ, அம்மட்டு சிரத்தை பாராட்டமாலிருப்பது தவறென்பதாகவே நினைக்கிறோம். ஸ்ரீசிதம்பரம் பிள்ளை யார் பொருட்டு இரவு பகலாக உழைத்தாரோ அவர்கள் கூடப் பயத்தினாலோ அல்லது சோம்பரினாலோ மூச்சுக் காட்டாமல் பின் வாங்கி நிற்கிறார்கள். சுதேசிய ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனிக்கு ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையே பிதாவென்று கூறுதல் தகும். க்ஷ கம்பெனியார் இப்போது இன்னும் பலமான அபிவிருத்திகள் செய்வதற்குரிய பிரயத்தனங்களை நடத்தி வருகிறார்களென்று கேட்டுச் சந்தோஷிக்கிறோம். ஆனால், இவர்கள் சிதம்பரம் பிள்ளைக்குத் தக்கவாறு நன்றிக் கடமை செலுத்தாவிட்டால் இவர்களுடைய முயற்சிகளின் மீது தருமதேவதைக்குச் சினம் பிறக்கும். "என்பிலதனை வெயில் போலக் காயுமே, அன்பிலதனை அறம்."

மேற்படி கம்பெனிப் பங்காளிகளில் ஒவ்வொருவரும் தலைக்கு 4 அணா வீதம் போட்டால் எவ்வளவோ பெரிய நிதி சேர்க்கலாம். இவ்விஷயம் அவசியம் நடத்தித் தீர்வதற்குரியது. கம்பெனியின் அனுகூலத்துக்கும் க்ஷேமத்துக்கும் இது இன்றியமையாததாயிருக்கும். இதில் கம்பெனியின் பெருத்த பங்காளி எவரேனும் இந்த விஷயத்தில் முற்பட்டு நின்று பாடுபடுவார்களென்று நம்புகிறோம்.

**(இந்தியா, ஏப்ரல் 25, 1906, தலையங்கம்)**

## 2. திருநெல்வேலிக்குச் சென்றிருக்கும் நமது பிரதிநிதியின் அறிக்கை

திருநெல்வேலிக்கு இவ்வாரத்திலே நமது ஆபீஸிலிருந்து ஒரு ஸ்பெஷல் கமிஷனர் சென்றிருக்கிறார். அவர் அனுப்பியிருக்கும் அறிக்கை பின்வருமாறு:

நான் ஞாயிற்றுக்கிழமை (26ம் தேதி) மாலை திருநெல்வேலிக்கு வந்து சேர்ந்தேன். வந்தவுடனே திருநெல்வேலியில் சுடப்பட்டு இறந்த சுதேசிகளின் பெயர்களை விசாரித்தேன். இங்குள்ள வக்கீல்களும் மற்றப் பெரிய மனிதர்களும் இதுவரை இவ்விஷயத்தைப் பற்றி விசாரணை செய்யாமலிருப்பது வெகு ஆச்சரியமாயிருக்கின்றது. அது சாமான்யமான விசாரணைக்குத் தகுதியற்ற விஷயமென்று நினைத்து விட்டார்கள் போலும்! நான் விசாரித்ததில் இதுவரை ஒரே ஒரு மனிதனுடைய பெயர் மட்டிலும் தெரிந்திருக்கிறது. இவன் பெயர் ஆறுமுகம் பிள்ளை. இவன் வண்ணாரப்பேட்டை ஸ்பெஷல் ஸெட்டில்மெண்ட்

ஆபிஸில் சேவக வேலை பார்த்து வந்தானாம். இவன் நல்ல சாது என்றும் இவனிடத்தில் கலக சுபவாமே கிடையாதென்றும்சொல்லுகிறார்கள். இவனைச் சுட்டுக் கொலை செய்ததைப் பற்றி என்னிடம் பேசியவர் மிகவும் பரிதாபம் பாராட்டினார். இன்னும் மற்ற மூன்று பெயர்களையும் அவர்களுடைய குடும்ப விருத்தாந்தங்களையும் தீர விசாரணை புரிந்த பின் எழுதுகிறேன்.

## பொதுஜன பீதி

பொதுஜனங்கள் நடுக்கத்தில் இருப்பார்களென்று நான் சென்னையில் வைத்து நம்பியிருந்தேன். ‘‘பெரிய மனிதர்கள்’’ என்று சொல்லிக்கொள்ளும் சிலரைத் தவிர மற்ற ஸாமானிய ஜனங்கள் அதிக அச்சநிலையில் இருக்கவில்லை. கலகம் நடந்து அதிகாரிகளின் பராக்கிரமச் செய்கைகளெல்லாம் நடந்து முடிந்த காலத்தில் பீதி அதிகப்பட்டிருந்ததாகவே தெரிகிறது. இரண்டு மூன்று தினங்களுக்குத் தெருக்களிலே மனிதர்களின் நடமாட்டமில்லாமல் ஊர் ‘‘மரணபுரம்’’ போல் இருந்ததாம். ஆனால், அந்த பீதி இப்பொழுது தெளிந்து போய்விட்டது. ஜனங்கள் வழக்கம் போலவே தமது காரியாதிகளில் பிரவேசித்து நடத்தி வருகிறார்கள். தெருக்களிலே போலீஸ் கோஷங்களைக் காணவில்லை. பாளையங்கோட்டையிலிருக்கும் போலீஸார் மட்டும் அங்கங்கே இடையிடையில் சுற்றி வருவதாகத் தெரிகிறது.

## தேசாபிமானிகளைச் சந்தித்தேன்!

திங்கட்கிழமை காலை பாளையங்கோட்டை ஜெயிலுக்குப போய்ச் சேர்ந்தேன். அங்குள்ள அதிகாரிகளின் அனுமதியின் பேரில் உள்ளே சென்று ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை, ஸ்ரீ சுப்பிரமணிய சிவன் இருவரையும் கண்டு பேசினேன். ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையை முன்பு நான் தூத்துக்குடியிலே அவருடைய அரிய பிரசங்கங்களை ஆயிரக்கணக்கான ஜனங்கள் கேட்டுப் புகழ்ச்சி கூறிக் கொண்டிருந்த காலத்தில் பார்த்தபோது அவருடைய முகம் எவ்வளவு பிரசன்னமாகவும் தேஜஸுடனும் விளங்கியதோ அதே மாதிரியிலேயே இப்பொழுதும் இருக்கக் கண்டேன். உடனே எனக்கு,

**‘‘மெய்த்திருப்பத மேவென்ற போழ்தினும்**
**இத்திருத்துறந் தேகென்ற காலையும்**
**சித்திரத் தினலர்ந்த செந்தாமரை**
**யொத்திருக்கு முகத்தினை யுன்னுவான்.’’**

என்ற கம்பராமாயணப் பாட்டு ஞாபகத்திற்கு வந்தது. அதிகாரிகள் இவர் தலைமீது செக்ஷன் கணக்கான கேஸ்களைக் கொண்டு சுமத்தியிருக்கயிலே அதிபாதகமான குற்றவாளிகளுடன் சேர்ந்து அடையுண்டவராக இருக்கவும், இவருக்கு விரோதமாக இதுவரை சொல்லப்பட்டிருக்கும் சாக்ஷிகள் வெகு பலமாகவும், இவருக்கு பயத்தை விளைவிக்கக் கூடியனவாகவும் இருக்கவும், இவர் சிறிதேனும் முகவாட்டமில்லாமலும் சோர்வில்லாமலும் வீர மூர்த்தியாக விளங்கிய அற்புதத்தை என்னால் வருணிக்க முடியாது.

ஸ்ரீ சிவனும் சந்தோஷமாகவேதான் இருந்தார். ஆனால் அவர் தாடி மீசைகள் எடுத்துவிட்டபடியால் முகம் சிறிது மாறுபாடாகத் தெரிந்தது. ஸ்ரீமான் பிள்ளையும் சிவனும் தங்களுடைய சொந்தக் காரியங்களைப் பற்றி மட்டிலுமே என்னோடு வார்த்தையாடாமல் உலகப் பொது விஷயங்களைப் பற்றி வெகு உல்லாசமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். இதனிடையே ஸ்ரீகுருநாத அய்யரும் வந்து சேர்ந்தார். இவர் என்னைக் கண்டவுடனே, ‘‘வந்தே மாதரம்’’ என்று முழங்கிய தொனி சிறைக்கூடம் முழுதிலும் கேட்டிருக்கும். மேலும் இவர் இந்த க்ஷத்திரிய நடையும் க்ஷத்திரியப் பார்வையும் எப்படிப் பெற்றாரென்பது எனக்குத் தெரியவில்லை. இது நிற்க, ஸ்ரீ குருநாத அய்யர் கலகத்தன்று காலை ஒன்பது மணி இரயிலுக்குத் திருநெல்வேலியிலிருந்து ஏதோ அவசர வேலையாகத் தூத்துக்குடிக்குப்

போய்விட்டாரென்று கலகச் சமயத்தில் அவர் இங்கிருக்கவேயில்லை யென்றும் போலீஸார் அவரை அநீதியாக அடைந்துவிட்டார்களென்றும் ஊர்க்காரர்கள் பேசிக் கொள்ளுகிறார்கள்.

**இந்தியா, மே 6, 1908.**

## 3. தேசபக்தர் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை

தேச பக்தரான ஸ்ரீயுத சிதம்பரம் பிள்ளை ராஜத்துரோக ஜாதித்துவேஷக் குற்றங்கள் சாட்டப்பட்டு ஆறு வருடம் தீபாந்தரசிக்ஷை விதிக்கப் பெற்றிருக்கிறார்.

தற்சமயம் சிறைப்படுத்தியிருக்கும் கோயம்புத்தூர் ஜெயில் அதிகாரி அவரைக் கைகால் விலங்கிட்டுக் கேவலம் மிருகம் போல் எண்ணெய் ஆட்டும் செக்கிழுக்கும்படி செய்திருக்கிறாராம்! நடு வெயிலில் தீப்பறக்கும் செக்கிழுத்துக் கஷ்டமடைகிறாராம்! அந்தோ! இக்கொடிய துன்பத்தை நினைக்கும்போதே நெஞ்சுருகுகிறதே! இங்கெழுதும்போதே கை நடுங்குகிறதே!!! இக்கொடுந் துன்பத்தைச் சகிக்கும் தேசபக்தர் பாடு எங்ஙனமோ கடவுளேயறிவர். கைதிகட்கு எத்தனையோ விதமான வேலைகளிருக்க இத்தேசபக்தருக்கு நாற்கால் மிருகங்களும் துன்புறக்கூடிய எண்ணெய் யந்திரம் சுழற்றும் வேலையா கொடுக்க வேண்டும்! அவர் கைகால்கட்கு விலங்கிடுவதேனோ? இத்தகைய கொடிய சிக்ஷைகள் இத்தேச பக்தருக்குச் செய்ய வேண்டுமென்றுப்பட்டது அச்சிறைச்சாலை அதிபரின் புத்தி கூர்மை போலும்! இராஜத் துரோக ஜாதித்துவேஷக் குற்றங்கள் செய்ததாகக் கருதுகின்றபடியால் தன்னையும் (வெள்ளையரானபடியால்) துவேஷித்ததாகக் கருதித் தருணம் வாய்ந்ததென்று இவ்விதமான மிருகங்களும் துன்புறக்கூடிய கடின வேலையை இத்தேச பக்தருக்கிட்டுப் பழிக்கும் பழி வாங்குகிறார் போலும்! இவண் சிறைச்சாலை அதிபர் சத்த வீரரே!! இச்சிறைச்சாலை அதிபர்க்கு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் வீங்குக!

**இந்தியா, நவம்பர் 28, 1908.**

## 4. ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை

கோயமுத்தூர் ஜெயிலிலே சில வாரங்களில் முன்பு நடந்த கலகத்தின் சம்பந்தமாக ஜில்லா ஜட்ஜின் கோர்ட்டிலே ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை 'டிபன்ஸ்' தரப்பில் சாக்ஷியம் சொல்லியிருக்கிறார். அதனை முழுமையும் மொழி பெயர்த்து மற்றொரு பக்கத்திலே பிரசுரம் செய்திருக்கிறோம். அதை நேயர்கள் மிகவும் ஆவலுடன் படிப்பார்களென்பதில் சந்தேகமில்லை. ஸ்ரீமான் சிதம்பரம் பிள்ளை தாம் இத்தனை பெரிய கஷ்ட தசையிலிருக்கும்போதுகூட உலகத்தார் படும் கஷ்டங்களைப் பார்த்து நெஞ்சிரங்குதலாகிய அவருடைய இயற்கை எப்போதுமிருந்தது போலவே, சிறிதேனும் அளவு குறையாமலிருக்கிறது. கோயமுத்தூர்ச் சிறைச்சாலையில் நிலைமையைப் போலவேதான், பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள மற்றெல்லாச் சிறைச்சாலைகளிலும் இருக்கக்கூடுமென்று நாம் ஊஹிப்பது தவறாக மாட்டாது. அந்தச் சாக்ஷியத்திலே சொல்லப்பட்டிருக்கும் விவரங்களைப் படிக்கும்போது ஒவ்வொரு உண்மையான பாரதவாஸியினுடைய நெஞ்சமே கொதிப்படையத் தக்கதாயிருக்கிறது. இது நிற்க.

இனி ஜெயில் வார்டர் ஒருவன் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையைச் சிறிது அவமதிப்பாக நடத்த ஆரம்பித்து பொழுது, அவனுக்கு அவர் கொடுத்த எச்சரிக்கையும், கோர்ட்டிலே சர்க்கார் வக்கீல் சொல்லிய சில அதிகப்பிரசங்கித்தனமான வார்த்தைகளுக்குப் பிள்ளையவர்கள் கொடுத்த மறுமொழியும் "அரைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது, உருக்கினுஞ் செம்பொன் தன்சுடர் குன்றாது" என்ற பெரியோர் வசனங்களுக்குத் தக்க திருஷ்டாந்தமாகின்றன. ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை கைதியாயிருக்கும்போதுகூட,

அவர் கொண்டிருக்கும் மன நிலைமையுடன், நம் போலிகளின் மனநிலையை ஒப்பிட்டு நோக்குமிடத்து நமக்குப் பின்வரும் தாயுமானவர் பாடல் நினைப்பிற்கு வருகின்றது.

**"கலங்காத நெஞ்சுடைய ஞானதீரர்**
**கடவுளுனைக் காணவே காயமாதி**
**புலங்கானார், நானொறுனவன் ஞானம்பேசிப்**
**பொய்க்கூடு காத்ததென்ன புதுமை கண்டாய்!."**

**இந்தியா, டிசம்பர் 12, 1908.**

## 5. ஸ்ரீமான் வ.உ.சிதம்பரம் பிள்ளையும் கோயமுத்தூர் ஜெயிலும்

**"விந்தைத் திலக ரரவிந்தரொடு பாலர்பதி**
**சிந்தைச் சிதம்பரமாஞ் செம்மலுமே – வந்திலரேல்**
**ஆதரமா மன்னை வளநாடெங் கேவந்தே**
**மாதரமா மந்திர மெங்கே"**

ஸ்ரீமான் சிதம்பரம் பிள்ளையவர்களைக் கோயமுத்தூர் ஜெயிலுக்குக் கொண்டு வரப்பட்டு இப்போது சுமார் ஒரு வருஷமாகிறது. அதன்பின் அந்த ஜெயிலில் சில குழப்பங்கள் நடந்தன. சில கைதிகள் தங்களை ஜெயில் அதிகாரியான ஜெயிலர் சரியாக நடத்தவில்லை என்ற குறையினால் அவரை அடித்து மண்டையை யுடைத்து விட்டார்கள். ஆனால், அவர் தெய்வ சங்கற்பத்தால் மாண்டு போகாமல் தப்பிப் பிழைத்துக் கொண்டார். இக்கலகத்தில் ஜெயிலிலிருந்து தப்பியோடப் பிரயத்தனப்பட்டார்கள் என்று ஜெயில் சூப்பரிண்டெண்டு இரண்டு கைதிகளைச் சுட்டுவிட்டார். சுட்டதோடு நில்லாமல் தப்பியோட, எத்தனப்பட்டதாக 34 கைதிகளின் மீது கேசு கொண்டுவரப்பட்டு அவர்க்கு 3 ஆண்டு 4 ஆண்டு தண்டனை பெற்றார்கள். ஜெயிலரைக் கொலை செய்ய முயற்சித்ததாக 3 கைதிகளின் மேல் கேசு கொண்டு வரப்பட்டு செஷன் கோர்ட்டாரால் அவர்கள் 10 வருஷம் தண்டனையடைந்தார்கள். இந்தக் கேசில்தான் நமது ஸ்ரீபிள்ளையவர்கள் க்ஷ கைதிகளின் பக்ஷம் டிபன்சு சாட்சியாக வந்து சாட்சி சொன்னார். கைதிகளை மேற்படி ஜெயிலில் மிகவும் கொடூரமாகவும் மிருகங்களொப்பந்தமாகவும் நடத்தப்படுகிறதென்றும் அவர்களுடைய சாப்பாடு மிகவும் ஊழல் என்றும் உண்ணத்தகாதபடி கல்லும் மண்ணும் கலந்துள்ளதென்றும் அவர்களிடம் அதிகமான வேலை வாங்கப்படுகிறதென்றும் அவர்களுக்கு இளைப்பாற ஓய்வு கொடுப்பதிலும் மற்றும் ஸ்நானம், தூக்கம் முதலிய சவுகரியங்களைக் கவனிப்பதிலும் ஜெயிலதிகாரிகள் மிகவும் அசிரத்தையாயிருக்கிறார்கள் என்றும் இவற்றை முறையிட்டால் ஜெயிலர் காதில் போட்டுக் கொள்கிறதேயில்லையென்றும் இதனால்தான் மனம் வருந்தி, கைதிகள் இவ்வாறு ஜெயிலரை அடித்திருக்கக் கூடுமென்று தான் நினைக்க வேண்டியிருக்கிறதென்றும் ஸ்ரீ பிள்ளையவர்கள் மிக உறுதியாகச் சாட்சி சொன்னார். இவ்வாறு குறைகளை எடுத்துக் கூறினதுடன் இவைகளைக் கவனித்து நிவர்த்தி செய்யாதவரையில் நாளடைவில் கொலை முதலிய பிரமாதங்களும் நடத்தக்கூடும் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் சொன்னார்.

ஸ்ரீ பிள்ளையவர்கள் நாம் கீழ் படிந்து நடக்க வேண்டிய ஜெயில் அதிகாரிகள் கோபத்தையும் சுய நன்மையையம் சிறிதும் கவனியாதபடி அனாதைக் கைதிகளுக்கு ஒரு நன்மையுண்டாக வேண்டுமென்ற ஒரே எண்ணங் கொண்டு தைரியமாயும் பகிரங்கமாகவும் கோர்ட்டு முன் சாட்சி சொன்னார். அடிபட்ட ஜெயிலரோ காயம் ஆறும்வரை சில காலம் ராஜாவிலிருந்து இப்போது மறுபடியும் வேலைக்கு வந்து பல மாதங்களாகிறது. சரியாகவோ தப்பாகவோ ஒருமுறை பலமான விரோதம் உண்டாய்விட்ட பின்னும் அந்த ஜெயிலரை அந்த ஜெயிலிலேயே அதிகாரத்தில் அமர்த்தி அக்கைதிகளை அவருடைய அதிகாரத்தின் கீழ் ஒப்புவித்திருப்பது எவ்வளவு ஒழுங்கோ அதை நேயர்கள் அறிந்துகொள்ளலாம்.

ஆனால், ஸ்ரீ பிள்ளையவர்களுக்கு அதுவே பற்பல சங்கடங்களுக்கும் காரணமாயிற்று என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. சமீபத்தில் ஸ்ரீமான் எதிராஜ் சுரேந்திரநாத ஆரியா சென்னை ஜெயில் இம்சை பொறுக்க முடியாமல் தற்கொலை செய்ய பிரயத்தனப்பட்டதாக தண்டனையடைந்த விஷயம் நேயர்களுக்கு ஓர்...க்கத்திலிருக்கக் கூடியதே. அதுபோலவே ஸ்ரீ பிள்ளையவர்களும் பல இம்சைகளுக்குள்ளாயிருப்பார் என்பது சகஜமே. மானிட சுபாவத்தின் தன்மையறிந்த எவரும் அவர்களின் மீது குறை சொல்ல மாட்டார்கள். அற்ப புழுவுமன்றோ தன்னை மிதித்தவர் மீது பாய்கின்றது. ஸ்ரீ பிள்ளையவர்கள் பல நாள் தனிச்சிறையிடப் பெற்றார்களாம். யாரோ ஒரு வார்டர் (Warder) ஜெயிலுக்குள் தின்பண்டங்களும் கடிதங்களும் கொண்டு போனதாக ஜெயில் ஆக்ட்படி 4 ஆண்டு கடுஞ்சிறை விதிக்கப் பெற்றான். தன் விரோதிகள் சிலர் அந்த சாமான்களை தாமே வைத்து கேசு உண்டு பண்ணினார்கள் என்று அவன் சொல்லுகிறான். ஆனால், அவன் நமது பிள்ளையவர்களுக்காகத்தான் அவற்றைக் கொண்டு சென்றான் என்று அதிகாரிகள் சொல்கிறார்கள்.

நிற்க; சில வாரங்களின் முன் ஸ்ரீ பிள்ளையவர்களின் தந்தையாரும் ஆப்த நண்பராகிய ஸ்ரீ வள்ளிநாயக சுவாமியும் அவர்களைப் போய்ப் பார்த்துப் பேசினார்கள். அவர்கள் சுமார் 6 ஆண்டுக்கு முன் மேலே சொல்லியபடி செஷன் கேசு சாட்சியாக வந்தபோது இருந்ததைவிட மிகவும் இளைப்பாயும் உடல் வெளுத்துப் போயும் இருந்தார்கள். சில நாள் வியாதியாக ஆஸ்பத்திரி சிகிச்சையிலிருந்து அப்போதுதான் வெளியேறியிருந்தார். ஆயினும் பத்திய சாப்பாடுதான் கொடுக்கப்பட்டு வந்தது. அவருடைய நிறையே ஆறிலொரு பங்கு குறைந்து விட்டதாம். அவரை முதலில் பிடித்தபோது 130 பவுன் நிறை இருந்தாரென்றும் இப்போது சுமார் 110 பவுன்கள்தான் உள்ளார் என்றும் தெரிய வருகிறது.

ஆக்டிங் சுபரிண்டெண்டாகிய டாக்டர் துரையோ நமது ஸ்ரீ பிள்ளையவர்கள் நோயென்று பாசாங்கு செய்கிறாரென்றும் அவரால் ஜெயிலில் அதிக தொந்திரவு உண்டாகிறதென்றும் இருந்த போதிலும் அவரை ஜெயில் விதிகளின்படி மற்ற கைதிகளொப்பந்தமே நடத்தாமல் விசேஷ விதியாக மிகுந்த பக்ஷமாக நடத்தப்படுகிறது என்றும் அவர் விரும்பியபடி பால், காபி முதலான எல்லாம் அவர் நேராயிருந்தபோது கொடுக்கப்படுகிறதென்றும் அவரடைய நிறை (Weigh6) குறைந்தது உண்மையே என்ற போதிலும் அது ஜெயில் அமுலின் காரணமாகக் குறைந்ததல்லவென்றும் கோயமுத்தூர் ஜெயிலுக்குக் கொண்டு வரப்பட்டபோது அவர் தேகத்தில் கொஞ்சம் கொழுப்பு (Fat) அதிகமேறியிருந்தது என்றும் அது மட்டில் இப்போது குறைவுப்பட்டதே தவிர மற்றபடி நிறைகுறைந்ததால் அவர் தேகத்துக்குக் கெடுதி ஒன்றுமில்லை என்றும் சொன்னார். உண்மைதான். நம் சுதேச நேயர்களின் கொழுப்பைக் குறைப்பதற்குத்தானே அவர்களைச் சிறைப்படுத்துகிறார்கள் என்பதை நன்றாக அறிந்துதான் டாக்டர் துரை இப்படிச் சொன்னார் போலும்.

ஆனால், அதன் பின் சில காலத்துக்கு ஸ்ரீ பிள்ளையவர்களுக்கு அரிசிச் சாப்பாடே கொடுத்து வரும்படி துரை உத்திரவு செய்தார் என்றும் கேள்விப்படுகிறோம். நமது ஸ்ரீ பிள்ளையவர்கள் போன்ற லோகோபாரிகள் ஜெயிலில் அடைபட நேர்ந்ததே பெருந்துக்கம். அதிலும் அவர்கள் அங்கே தம் இரத்தம் சுண்ட தேகம் வருந்தும்படி வேலை செய்வித்து அதனால் வரும் தொழில் லாபத்தினாலேதான் நமது காருண்ய ராஜாங்கத்தாரின் பொக்கிஷம் நிரம்ப வேண்டியிருக்கிறது போலும்.

நம்மையாளும் ஆங்கிலேயரின் சொந்த தேசமாய இங்கிலாந்தில் எப்படி நடக்கிறது? அபிப்பிராய பேதத்துக்காக இவ்விதம் சிறை செய்யப்படுவோர்க்கு ராஜாங்கக் கைதிகள் என்று பேர். அவர்களை எல்லாம் ஒரு கட்டிடத்தின் எல்லைக்குள்ளாக வெளியேற விடாமல் நமது சிவில் கைதிகளைப் போல் வைத்திருப்பதல்லாமல் அவர்களுக்கு வேறு யாதொருவிதமான நிர்ப்பந்தமுங் கிடையாது. அவர்கள் தம் வீட்டையும் ஜனங்களையும் விட்டுப் பிரிந்திருப்பது ஒன்றுதான் குறை. மற்றபடி எல்லாச் சவுகரியங்களையும்

அனுபவிக்கலாம். ஆனால், அவ்வாங்கிலேயரே நம் நோக்கத்தில் மட்டும் இவ்விதம் ராஜாங்கக் கைதிகளுக்கும் கொலை, கொள்ளை கைதிகளுக்கும் வித்தியாசமில்லாதபடி சட்டமுண்டாக்கியிருக்கிறார்கள். அபிப்பிராய பேதம் கொண்ட எதிரியைத் தன் தேக பலத்தின் உதவியினாலே அடக்க முயல்வது யாருக்கும் இயற்கையான சுபாவ குணமேயானாலும் அது பெருந்தன்மைக்கும் நாகரீகத்துக்கும் லக்ஷணமாகமாட்டாது.

நமது ஸ்ரீ பிள்ளையவர்கள் நம் தந்தையாரும் ஆப்தரும் தம்மைக் கண்டவுடன் சுதேசக் கப்பல் கம்பெனி விஷயமாக முதலில் விசாரித்தார்களாம். அதன்பின் தன் கேசில் பிரிவி கவுன்சில் (Privy Council) அப்பீல் விஷயமும் வேறு சில அந்தரங்க விஷயமும் அவர்களிடம் பேசிச் சில ஏற்பாடுகள் செய்யும்படி சொல்லியிருக்கிறார்கள். நமது பிள்ளையவர்கள் நம் அப்பீல் மதராஸ் ஐகோர்ட்டில் விசாரணையிலிருந்த காலத்தில் கோயமுத்தூர் ஜெயிலில் விசாரணைக் கைதியாக நடத்தப்பட்டு (Under trial Prisoner) வந்தார். அக்காலத்தில் அவர் (As a Man Thinketh) என்ற ஆங்கில நூலைத் தமிழில் மொழி பெயர்த்தார். அது 'மனம் போல் வாழ்வு' என்ற பெயருடன் அவருடைய ஆப்தர் ஸ்ரீ வள்ளிநாயக சுவாமிகளால் பிரசுரிக்கப்பட்டு சீக்கிரம் வெளிவரும் என்று நம்பப்படுகிறது.

நமது பிள்ளையவர்கள் கேசில் ப்ரீவி கௌன்சீல் அப்பீல் பொருளும் இல்லாக் குறையாலேயே தாமதமாகியிருக்கிறதென்று கேட்க நமது மனம் வருந்துகிறது. நம்முள் தனவான்களானாலும் சரி ஏழைகளானாலும் சரி ஒன்று போலவே நாகரீகம் என்ற பேரிட்டு எத்தனை விதமான வீண் செலவுகளும் அநாவசியமான விஷயங்களும் நம் நாட்டில் செய்கின்றார்கள். அச்செலவுகளில் ஆயிரத்திலொரு பங்கு குறைத்து இத்தகைய பொது நன்மையான வழிகளில் செலவிட்டால் நமது நாட்டுக்கே பேருதவியாகுமல்லவா? சுயநலத்தைச் சிறிது ஒதுக்கிவிட்டுப் பொதுநலம் என்ற புண்ணியத்தைச் சிறிதாவது ஒவ்வொருவரும் இயன்றவளவு கைக்கொள்ளும்படி நமது பாரதமாதா தன் புத்திர புத்திரிகளுக்கெல்லம் சீக்கிரம் திருவருள் செய்வாளாக!

**(இந்தியா, செப்டம்பர் 11, 1909)**

## 6. வ.உ.சி. மீதான வழக்கும் பாரதியின் சாட்சியமும்

**[இரகசிய போலீசு அறிக்கைகளிலிருந்து திரட்டியவை]**

**531** (a) C.I.D.

An Inspector of this department writes from Tinnevelly -C. subramanya Bharati Bridge on 27-th April 1908 arrived here last evening from Madras by the Mail train with his wife. It is said that he is a native of Tinnevelly. His movements will be watched.

C. (b) The same inspector writes on 28-th April Subramanya Bharati Attended the court to-day along with the vakils conducting defence of V.O. Chidambaram Pillai and Subramanya Siva. When I spoke to him in the evening he gave me understand that he would stay here for a few days and that he was a native of village in Tinnevelly district.

670 Madras 22-5-1908

G. Subramanya Aiyar and C. Subramanya Bharati are summoned to attend Tinnevelly Sedition Case as witness in connection with trial of Siva at ensuing session on 12-th June 1908.

763 (a) Madras City 10-6-1908

C. Subramanya Bharati and Ethiraj Arya left Madras for Mandapam by the boat mail of the 9th en route to Tinnevelly. Both have been summoned to give evidence

before Tinnevelly Sessions Court in connection with the trial of Chidambaram Pillai and Subramanya Siva.

(b) C.I.D.

Bharati Proceeded to Tinnevelly from Madras on 11th.

797 C.I.D.

It appears that C.S. Bharati and Arya did not proceed to Mandapam as stated in para 763 (a). An inspector of this department reports that they broke their journey at Tanjore on the morning of 10-th and delivered lectures at a meeting there. Another inspector reports that they arrived in Tinnevelly on the evening of 11-th along with K. Venkataramana Rao. All the three were originally summoned to give evidence as defence witnesses in the Tinnevelly sedition cases. But it seems that their evidence has since been dispensed with.

Madras Secret Police Abstracts of Intelligence 1908.

**பேராசிரியர் ஆ.இரா.வேங்கடாசலபதியின் குறிப்பு:**

வ.உ.சி.யின் அரசியல் இயக்கச் செயல்பாடுகளிலும், அவரது சுதேசிக் கப்பல் கம்பெனி முயற்சிகளிலும் மிகுந்த அக்கறை காட்டி வந்த பாரதி, வ.உ.சி.யின் மீது அன்றைய வெள்ளை அரசாங்கத்தால் தொடுக்கப்பட்ட வழக்கிலும் கூர்ந்த கவனம் செலுத்தி வந்தார் என்பதைக் கண்டோம். அவ்வழக்கு தொடர்பாகப் பாரதியும், வ.உ.சி.க்கு ஆதரவாகச் சாட்சி வழங்கவிருந்தார் என்பதும், இறுதியில் அவ்வாறு சாட்சியம் வழங்க இயலாமல் போய்விட்டது என்பதும் இரகசிய போலீசு அறிக்கைகளிலிருந்து திரட்டப்பட்ட மேற்காணும் பகுதிகளிலிருந்து புலப்படுகின்றன.)




**ஆய்வாளர் செ.திவான் கண்டுபிடித்த ஆவணம் இது**

தூத்துக்குடியிலிருக்கும் மகாஸ்ரீ அசெ.சு.கந்தசுவாமி ரெட்டியார் அவர்களுக்கு தூத்துக்குடி யிலிருக்கும் வ.உ.சிதம்பரம் பிள்ளை எழுதிக் கொடுத்த உயில் சாசன நிருபம்:

அன்பார்ந்த ஐயா, நமஸ்காரம். எனக்கும் எனது குடும்பத்தாருக்கும் கடவுளையும் தங்களையொத்த உண்மை தேசாபிமானிகள் சிலரையும் தவிர இவ்வுலகத்தில் வேறு தஞ்சம் ஒருவரிருக்கிறதாக எனக்குத் தெரியவில்லை. நான், இனிமேல் அதிக காலம் ஜீவித்திருப்பேனென்று திடமாக நினைக்க வழி இல்லை. எனது குடும்ப நிலைமையையும் தாங்கள் முன்னின்று என் குடும்பத்திற்கு செய்ய வேண்டிய காரியங்களையும் இதன் கீழே தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாங்கள் கீழ்வரும் சாஷ்டாங்கமாக காரியங்களைச் செய்து முடித்துக் கொடுத்து என் குடும்பத்தை காப்பாற்றியருளும்படியாக தங்களை நமஸ்கரித்து கேட்டுக் கொள்கிறேன்.

எனது சொத்துக்கள் எனக்கும் என் மூத்த மகன் ஆறுமுகம் பிள்ளைக்கும் பாகவிஸ்திரமாகி பல வருஷங்களாகின்றன. அந்த தஸ்தாவேஜு என் மனைவி யிடமிருக்கின்றது.

பம்பாய் எம்பயர் ஆஃப் இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனியில் ரூபாய் ஆயிரத்துக்கும், ஓரியண்டல் லைவ் அஷ்யூரன்ஸ் கம்பெனியில் ரூபாய் ஆயிரத்துக்கும் எனது ஆயுளை இன்ஸ்யூரன்ஸ் செய்திருக்கிறேன். ஒவ்வொரு கம்பெனியிலும் ரூபாய் ஐநூறுக்கு மேல் எனக்கு இலாபம் (Profits) கிடைக்கக் கூடும். ஆனால், நான் ஒவ்வொரு கம்பெனியிலும் ரூபாய் ஐநூறு கடன் வாங்கி இருக்கிறேன். கடனுக்கும் இலாபத்திற்கும் அனேகமாக சரியாய் போகும். இரண்டு கம்பெனிகளுக்கும் கடைசி பிரிமியமும் (Premium) வட்டியும் கட்டப்படவில்லை. அது கட்டப்பட வேண்டும். ஷை இரண்டு இன்ஸ்யூரன்ஸ் தொகையையும் பல வருஷங்களுக்கு முன்னே / என் மனைவி பேருக்கு டிரேன்ஸ்பர் செய்து வைத்திருக்கிறேன்.

இரண்டு இன்ஸ்யூரன்ஸ் தொகைகள் தவிர என் பாகத்தில் ஒட்டப்பிடாரத்து எனது பெரிய புஞ்சையில் இரண்டு சங்கிலி நிலமும் பதினாறு மரக்கால் நஞ்சையும் அதன் பக்கத்தில் கிணற்றுத் தோட்டம் என்ற ஒரு நிலமும் இருக்கின்றன. இது தவிர ஒட்டப்பிடாரத்தில் கீழ்க்காட்டில் 1 3/4 சங்கிலி கரிசல் புஞ்சை ஒன்று 3/4 சங்கிலி கரிசல் புஞ்சை ஒன்றும், இருக்கின்றன. என் மக்களால் அவ்வளவு தூரத்திலுள்ள அந்த இரண்டு புஞ்சைகளையும் பயிர் செய்து கொள்ள முடியாது. அவற்றை ரூபாய் ஐநூறுக்கு தங்கள் பேருக்கு கிரயம் செய்து கொடுத்துவிட வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

ஒட்டப்பிடாரத்தில் ஒரு பழைய காரைக்கட்டு மட்டப்பா வீடு ஒன்று இருக்கிறது. அதன் மச்சுக் கட்டைகளெல்லாம் இற்றுப்போய் ஆபத்தான நிலைமையில் இருக்கின்றன. ஷைமச்சைப் பிரித்தெடுத்து சுவர்களை இன்னும் மூன்றடி உயர்த்தி தேக்கு மரக்கட்டை போட்டும், மேல் பக்கமுள்ள இரண்டு சன்னல்களுக்கு நேராக கீழ் பக்கம் இரண்டு சன்னல்கள் வைத்தும், அரை வீட்டை எடுத்து விட்டும் தாங்கள் புதுப்பித்து கொடுக்க வேண்டும். அப்படி செய்த பின் அவ்வீட்டில் என் மனைவி மக்கள் குடியிருந்து வரலாம். ஆத்தூர் பிரமு அம்மாள் ரூபாய் எழுநூற்றைம்பதுக்கு என் மனைவி பேருக்கு ஒரு அடமான தஸ்தாவேஜ் எழுதிக் கொடுத்திருக்கிறாள். அடமான சொத்துக்கள் தங்களுக்கு முந்திய அடமானம். அடமான சொத்துக்கள் சுமார் ரூபாய் இரண்டாயிரத்துக்கு விலை போகும். என் மனைவி அடமான தஸ்தாவேஜை தங்கள் பேருக்கு மேடோபர் வாங்கிக் கொள்க. அதற்கு வசூலாகும் தொகையையும் மேலே கண்ட என் புஞ்சைக்கிரயம் ரூபாய் ஐநூறும் அவசியமானால் என் மைத்துனன்மார் குடும்பத்திலிருந்து என் குடும்பத்திற்கு கிடைக்கக்கூடிய ரூபாய் 1500ம் நான் தங்களிடம் பற்றி வருகிற தொகைக்கு ஈடு செய்து கொள்க.

இப்பொழுதும் ரூபாய் இருநூறு விலை போகக் கூடிய சட்டப் புஸ்தகங்கள் என்னிடமிருக்கின்றன. அவற்றை விற்க வேண்டும்.

## எனது கடன்கள்

தூத்துக்குடி நேஷனல் பேங்க் ஆஃப் இந்தியா லிமிடெட்டுக்கு ஐந்து மாத வீட்டு வாடகை ரூபாய் (135)

தூத்துக்குடி சரோஜினி ஸ்டோர்ஸ் ஜவுளி பாக்கி சுமார் ரூபாய் (30).

வன்னியஞ்செட்டியார் எண்ணெய்க் கடைக்கு சுமார் ரூபாய் (30) சில்லரைக் கடன் ரூபாய் (60).

இன்ஸ்பெக்டர் பிள்ளைக்கு ரூ.20, சோமநாத்துக்கு ரூபாய் 14 வேதவல்லிக்கு ரூபாய் 50. ஆக மொத்தம் ரூபாய் (86).

என் தம்பி மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கு சாப்பாடு கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இப்போது செய்ய வேண்டிய அவசரக் காரியம் ருது வாயிருக்கிற என் மக்களிருவரில் மூத்தவளாகிய சௌபாக்கிய ஆனந்தவல்லி அம்மாளுக்கு விரைவில் கல்யாணம் செய்து வைக்க வேண்டும். சரியான மாப்பிள்ளை கிடையாததால் தாமதம். இப்போது சுமார் ரூபாய் ஐநூறுக்கு அவளிடத்தில் நகைகள் இருக்கின்றன. இன்னும் ரூபாய் ஐநூறுக்கு அவளுக்கு நகைபோட வேண்டும். கல்யாணப் பந்தல் செலவு ஒரு வருஷத்து சீர் சீராட்டு செய்யவும் வேண்டும். அவற்றிற்கு ஒரு கம்பெனி இன்ஸ்யூரன்ஸ் பணம் 1000மும் சரியாய் போகும்.

சௌபாக்கியவதி மரகதவல்லி அம்மாள் கலியாணத்தை இன்னும் இரண்டு வருஷம் கழித்து நடாத்த வைக்கலாம். அவளுக்கும் அவளிடமிருக்கிற நகைகளை சேர்த்து ரூபாய் ஆயிரத்துக்கு நகை போட வேண்டும். ஒரு வருஷத்து சீர் சீராட்டும் செய்ய வேண்டும். அவற்றிற்கு மற்றொரு கம்பெனியின் இன்ஸ்யூரன்ஸ் பணம் ரூபாய் 1000மும் சரியாய் போகும்.

என் குடும்பத்திற்கு வரக்கூடிய தொகைகள் எல்லாம் தாங்களே வாங்கி வைத்திருந்து கோவாப்பிரேட்டிவ் சொஸைட்டியில் கொடுக்கிற கரண்ட் டிபாஸிட் வட்டி போட்டு கொடுத்து வர வேண்டும். இந்த நிலைமையில் என் மனைவி மக்களுடைய அன்னவஸ்திர கல்விச் செலவுகளுக்கு யாதொரு ஐவேசுமில்லை. அதற்கு ஒரு நிதியுண்டு பண்ண நான் முயலுகிறேன். என் நிலங்களில் நஞ்சை தவிர பெரிய புஞ்சை சங்கிலி இரண்டும் தோட்டமும் என் தங்கை அன்னவஸ்திரத்திற்காக விடப்பட்டுள்ளன.

## திருச்செந்தூர் மைத்துனன்மார் காரியம்

வீரபாண்டியன் பட்டணம் பூபாலராயன் இடமிருந்து ரொக்கமே வாங்க வேண்டும். சொத்து ஒன்றும் வாங்கக் கூடாது. திருச்செந்தூர் உண்டியல் கடை சரசிணை ஐயர் ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு மாத்திரம் பெற்றுக் கொள்ளச் சம்மதித்தால் அவரிடமிருந்து என் மைத்துனன்மார் அடமானத்தை விடுதலை செய்து தஸ்தாவேஜ் எழுதி ரிஜிஸ்டர் செய்து வாங்க வேண்டும். அவர் ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறுக்கு சம்மதிக்காவிட்டால் அவர் நம்பர் போட்டுக் கொள்ளும்படி விட்டுவிடவேண்டும். என் மைத்துனன்மார் சகோதரியாகிய சௌபாக்கியவதி ஆறுமுகத்தம்மாளுக்கு நகைப் பாவத்து வகைக்கு கொடுக்க வேண்டிய ரூபாய் ஐந்நூறு அவள் இஷ்டப்படி ரொக்கமாகவோ, நகையாகவோ கொடுத்து ரசீது வாங்கிக் கொள்ள வேண்டியது.

என் மைத்துனன்மார்கள் பெரும் செலவாளிகளாய் இருக்கிற படியால் பாக்கித் தொகையில் யானையப்ப பிள்ளை சத்திரத்துப் பக்கத்தில் மரக்கால் ஒன்றுக்கு ரூபாய் நூறு விலைக்கு நல்ல நஞ்சை கிடைக்கக் கூடியதாக இருக்கிறது. அதில் மூன்று கோட்டை விரப்பாடு தங்கள் பேருக்கு கிரயத்திற்கு வாங்கி அவற்றையும் பாக்கி தொகையையும் என் மைத்துனன் மூவரும் மூன்று பங்கு வைத்து தங்கள் மனைவி மக்களுடன் அவர்கள் யாதொரு வில்லங்கத்திற்கும் உள்படுத்தாமல் அனுபவித்துக் கொள்ளும் படிக்கும் அவர்கள் மக்கள் மெஷார் (மேஜர்) அடைந்த பின் அவர்கள் சர்வ சுதந்திர பாத்தியமாக அனுபவித்துக் கொள்ளும்படி தாங்கள் அவர்களுக்கு நன்கொடை தஸ்தாவேஜ் எழுதி ரிஜிஸ்தர் செய்துக் கொடுக்க வேண்டும்.

என் பெரிய மைத்துனன் சுப்பிரமணிய பிள்ளை ஒருக்கால் கலியாணம் செய்து கொள்ள விரும்பவில்லையானால் அவன் பாகச் சொத்துக்களை அவனுடைய சகோதரர் இருவர்களுக்கும் சமமாகப் பகிர்ந்து நன்கொடை தஸ்தாவேஜில் எழுதி வைக்க வேண்டும். ஆனால், எனது பெரிய மைத்துனன் தனது வீட்டை வில்லங்கம் செய்யாத காலம் வரையில் அவன் அன்னவஸ்திர செலவிற்கு அவன் பாகச் சொத்துக்களிலிருந்து மற்றைய இருவரும்

நபர் ஒன்றுக்கு ரூபாய் ஐந்து வீதம் ரூபாய் பத்து மாதம்தோறும் கொடுத்துவிட வேண்டும்.

திருச்செந்தூர் வீடுகளில் தெற்கு வீடு சுப்பிரமணியத்துக்கும் வடக்கு வீடு வெங்கிடாசலத்திற்கும் சேர வேண்டும். வடக்கு வீட்டிற்கு எதிரேயுள்ள காலிமனைதான் மைனர் குஞ்சரத்திற்கு சேரக்கூடியதாக இருக்கிறது. வடக்கு வீட்டையும் தெற்கு வீட்டையும் கிரயம் போட்டு தெற்கு வீட்டிற்கு போகும் கிரயத்தில் அதிகப்படும் தொகையை வெங்கிடாசலத்திற்கும் சுப்பிரமணியன் சொத்துக்களிலிருந்து கொடுக்க வேண்டும். குஞ்சரம் வீடு கட்டுவதற்கு ரூபாய் இவ்வளவு என்று இப்பொழுதே தீர்மானித்து மற்றைய இருவரும் அவருக்கு செலுத்திவிட வேண்டும்.

19 பனை புஞ்சையையும் சமமாக பங்கிட்டு மூன்று பேருக்கும் கொடுத்துவிட வேண்டியது. மைனர் குஞ்சரத்திற்கு கார்டியனாக வெங்கிடாசலத்தையும் ஷெயார் அத்தான் சண்முகம் பிள்ளையும் நியமித்து அவனுடைய வரவு செலவுகளுக்கு சரியான கணக்கு வைத்திருந்து அவன் மெஷாரடைந்தபின் சொத்தையும் கணக்கையும் அவனிடம் ஒப்புக்கும்படியாக நன்கொடை தஸ்தாவேஜில் எழுத வேண்டும்.

பூபாலராயரிடமிருந்து தொகை பூராவும் வசூலாகியிட்டால் அவருக்கு தாங்களும், நான்...(இந்த இடத்தில் ஒரு சிதிலமடைந்துள்ளது) ரூபாய் 1500ம் நான் என் குடும்பத்திற்கு சென்ற பத்து வருஷமாக பாடுபட்டு வந்ததற்கு பிரதிபிரயோஜனமாக என் குடும்பத்தாருக்கு கொடுக்க வேண்டும். பூபாலராயரிடமிருந்து வரவு வந்திருக்கிற தொகைக்கும் பற்றா யிருக்கிற தொகைக்கும் பேரேட்டுபடி ஒரு நகல் தடம் செய்வித்து கூடிய விரைவில் எனக்கு கொடுக்கும்படி உத்தரவு செய்க.

இதன் பிரதி ஒன்று என் மனைவியிடமும் மற்றொன்று என் மைத்துனன் வெங்கிடாசலமிடமும் கொடுக்கப்பட்டுள்ளன.

எல்லாம் வல்ல இறைவன் அருளால் மேற்கண்ட காரியங்கள் எல்லாம் தாங்கள் இனிது செய்து முடித்த அருள்புரிக.

**வ.உ.சிதம்பரம் பிள்ளை, தூத்துக்குடி 26-10-36**

(ஆய்வாளர் செ. திவான் குறிப்பு: என் கரங்களில் வ.உ.சி.யின் உயில் கிடைத்ததும், அதனை வாசித்து முடித்தபோது கண்களிலிருந்து கண்ணீர் பெருகி ஓடியது. அன்றிரவு முழுவதும் தூங்கவில்லை. வ.உ.சி. தனது உயில் எழுதிய 23 நாட்களுக்குள் இயற்கை எய்தினார். இதனை எனக்கு அளித்தவர் வ.உ.சி.யின் புதல்வர் பண்பாளர் வாலேஸ்வரன் அவர்கள்)

***

**பாரதியின் இந்தியா பத்திரிக்கை கட்டுரைகளைத் தொகுத்து 'பாரதி தரிசனம்' என்ற நூலாக வெளியிட்டுள்ளார் ஆய்வாளர் இளசை மணியன். அதில் தூத்துக்குடி கப்பல் கம்பெனி குறித்த நான்கு செய்திகள் இடம்பெற்றுள்ளன]**

1. தூத்துக்குடியிலே மிஸ்டர் வாலரின் கூற்றுக்கள் ... 21.7.1906
2. தூத்துக்குடியிலே சுதேசியம் ..11.8.1906
3. தூத்துக்குடியிலே சுதேசியம் .. 25.8.1906
4. ஓர் புதிய சுதேசிய புகைக்கப்பல் கம்பெனி... 1.9.1906

7. தூத்துக்குடியிலே மிஸ்டர் வாலரின் கூற்றுக்கள்

பராபவ வருஷம் ஆனி மாதம் 6ஆம் தேதி ஜூன் மாதம் 21ஆம் தேதி 1906

"தூத்துக்குடியிலே புல்லரின் முறைகள்" என்ற தலைப்பிட்டு முன்னொரு முறை தூத்துக்குடியில் வாலர் என்ற ஆங்கிலேய அஸிஸ்டெண்ட் மாஜிஸ்ட்ரேட்டின் நியாய விரோதமான செய்கைகளைப் பற்றி பேசிக் கொண்டிருந்தோம் இப்பொழுது, மறுபடியும் அவருடைய தப்புச் செய்கைகளின் ஜாப்தாவொன்று தூத்துக்குடி நிருபர் ஒருவர் சென்னை தினசரி பத்திரிகைகளுக்கு அனுப்பியிருக்கிறார். அவர் எழுதியிருக்கும் கருத்து பின்வருமாறு:

பி.ஐ.எஸ்.என். (வெள்ளை) கம்பெனியாருக்குப் போட்டியாக ஏற்பட்டிருக்கும் சி.வ. கம்பெனியாரை இவர் பலவாறாக இம்சிக்க நிச்சயம் புரிந்துவிட்டாரென்று தெரிகிறது. வெள்ளைக் கம்பெனியார் சுதேசிய கம்பெனியின் படகின்மேல் தமது படகை வேண்டுமென்று மோத விட்டார்களென்பதாக சி.வ. கம்பெனியார் சப் மாஜிஸ்ட்ரேட் முன்பு பிராது கொண்டு வந்தார்கள், அதன் பேரில் மிஸ்டர் வாலர் மேற்படி பிராதை தமக்கு நேராக அனுப்பி விடும்படி சப்மாஜிஸ்ட்ரேட்டிற்கு உத்திரவு அனுப்பியிருக்கிறார். இது சாதாரண நடவடிக்கை முறைமைக்கு முற்றிலும் விரோதமானது. மேலும், அந்தப் பிராது இவரிடம் விசாரணைக்கு வந்து 2 வாரங்களுக்கு மேலாகிவிட்டது. இவர் இதுவரை ஒன்றும் செய்யாமல் சும்மா இருந்து வருகிறார். இத்தோடு நிற்கவில்லை. சி.வ. கம்பெனியாளர் பிராது விஷயமாக விசாரணைகள் நடத்தும்படி ஜில்லா போலீஸ் தலைவரிடமிருந்து உத்திரவு பெற்றிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டரை மிஸ்டர் வாலர் அழைத்து "நீர் இந்த விஷயத்தில் யாதொன்றும் செய்ய வேண்டியதில்லை. எல்லாம் நானே நடத்திக் கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டார். ஷாலைன் ஏஜன்ஸிக்காக துறைமுகத்தில் வேலை செய்துகொண்டிருந்த அண்ணாகுட்டி சாயுபென்ற ஆளை இவர் நேரிலே அழைத்து இனிமேல் துறைமுகத்திற்கேனும், ரயில்வே ஸ்டேஷனுக்கேனும் போகக் கூடாதென்று உத்திரவு செய்துவிட்டார். மிஸ்டர் வாலர் மற்றொரு விளையாட்டு விளையாடி இருக்கிறார். அதாவது, போலீஸ் ஸ்டேஷன் ஆபீஸராகிய குருநாத அய்யர் என்பவரைத் தருவித்து "நீர் சுதேசிய முயற்சியிலே அனுதாபங் கொண்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். உம்மை தூத்துக்குடியிலிருந்து அப்புறப்படுத்துவதற்குண்டான ஏற்பாடு செய்கிறேன் போம்" என்று பயமுறுத்தியனுப்பினார். இவர் இப்படி செய்த சிலதினங்களுக்கெல்லாம் ஸ்டேஷன் ஆபீஸரே குலசேகர பட்டணத்திற்குப் போய்விட வேண்டுமென்று உத்திரவு வந்துவிட்டது. இனி மிஸ்டர் வாலர் என்னென்ன அற்புதங்கள் செய்யப் போகிறார் என அறிவோம். மிஸ்டர் வாலருடன் இதுவரை ஒரே வீட்டில் குடியிருந்தவராகிய (BISN) கம்பெனி ஏஜெண்ட் மிஸ்டர் காம்பெல் என்பவர் இப்போது வேறொரு வீட்டில் குடியிருக்கப் போய்விட்டாராம். சமாசாரத்தை நாம் மனவருத்தத்துடன் வாசித்தோம். தூத்துக்குடியிலே மிஸ்டர் வாலர் மேற்கண்டவாறெல்லாம் செய்து வருவது வாஸ்தவமானால், இதை கவர்ன்மெண்டார்

உடனே விசாரணை செய்து தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். விசாரணை செய்து தக்க ஏற்பாடுகள் செய்ய மறந்து விடுவார்களானால், பெரிய விபத்துக்கள் நேரிடக்கூடும்.

ஒரு வீட்டில், ஒரு பக்கம் மட்டிலும் எறிந்தால் அதை அணைத்துவிடுதல் சிறிது சௌகர்யமாயிருக்கலாம். அப்படியில்லாமல், எல்லா பக்கங்களும் தீப்பட்டு எரியத் தொடங்குமானால், எந்தப் பக்கத்தைத்தான் அணைக்க முடியும். இங்கே தண்ணீர் ஊற்றிக் கொண்டிருக்கும்போதே மற்றப் பக்கங்கள் வெந்து தணிந்துவிடும். அது போலவே எமர்ஸன் வகையறாக்கள் கீழ் பெங்காளத்தில் விளையாடும் விளையாட்டை மிஸ்டர் வாலர் தூத்துக்குடியில் விளையாட விட்டுவிட்டு கவர்ன்மெண்டார் சும்மாயிருந்து விடுவார்களானால், நாட்டிலே குழப்பம் மிகுந்து போய்விடும். சென்னை கவர்னர் உடனே இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

**(இந்தியா 21.07.1906)**

## 8 தூத்துக்குடியிலே சுதேசியம்

தூத்துக்குடியிலே சுதேசிய முயற்சி அமைந்து வருகின்றது. இந்த வாரம் செவ்வாய்க் கிழமையன்று பெங்காளத்தின் முன்மாதிரியை அனுசரித்து அவ்வூரிலே நிகழ்ச்சி பெற்ற பொதுக்கூட்டத்தில் ஜனங்கள் அளவிறந்த உற்சாகம் காட்டினமையறிந்து மகிழ்கின்றோம். நமது நகர வாசியாகிய ஸ்ரீ ஜி.சுப்பிரமணிய அய்யர் அச்சபையிலே தலைமை வகித்தார். ஸ்ரீ ஜி.சுப்பிரமணிய அய்யர் செய்த உபந்நியாசத்தில் தூத்துக்குடி வாசிகள் தமது முயற்சியின் பேரில் ஒரு ஸ்டீமர் சர்வீஸ் ஏற்பாடு செய்திருப்பதை ஸ்லாகித்துப் பேசினார். சிலர் ஐரொப்பிய உத்தியோகஸ்தர்கள் சுதேசிய முயற்சிக்கு விரோதமாயிருப்பது எதிர்பார்க்கக்கூடிய விஷயமே யாயினும், இந்தியர்களில் சிலர் அதேவிதமாக நடந்து கொள்வது வருந்தத்தக்கதாயிருக்கிறதென்றார். தூத்துக்குடியில் சுதேசிய சம்பந்தமாக நடக்கும் விஷயங்களை "பிற பத்திரிக்கைக் குறிப்புகள்" என்னும் தலைப்பில் காணலாம். சுதேசிய சம்பந்தமாக ஸ்ரீ ஜி.சுப்பிரமணிய அய்யர் எடுத்துவரும் முயற்சிக்கு நாம் அனைவரும் மிகவும் கடமைப்பட்டிக்கின்றோம்.

**(இந்தியா 11.08.1906)**

## 9. தூத்துக்குடியிலே சுதேசியம்

தூத்துக்குடியிலே சுதேசியத்திற்குப் புதிது புதிதாக விரோதிகள் கிளம்பிக்கொண்டே இருக்கிறார்கள். யார் யார் என்ன செய்தபோதிலும் சிறிதேனும் சலிப்பில்லாமலும் சுதேசியக் கொடியைச் சற்றேனும் தாழ்த்தாமலும், மன்றாடி வருகின்றனர். நம்மவர்களின் நடை மிகுந்த திருப்தியடையத் தக்கதாய் இருக்கின்றது.

ஷாலைன் ஸ்டீமர்களின் முதலாளியான எஸ்ஸாஜி டாஜ்பாயி என்ற பம்பாய் வர்த்தகர் சி.வ. (சுதேசிய) கம்பெனியாருடன் ஒப்பந்தம் செய்துகொண்டு சுதேசியக் கம்பெனியாருக்கு சில கப்பல்கள் கொடுத்திருக்கிறார்களென்பதை நேயர்கள் அறிவார்கள். அந்தக் கப்பல்கள் லாபம் பெறுவதைத் தடுக்க வேண்டுமென்ற விஷயத்தில் பி.ஐ.எஸ்.என். (வெள்ளை) கம்பெனியாரும், மிஸ்டர் வாலர் என்ற தூத்துக்குடி மாஜிஸ்டிரேட்டும், வேறு பல ஜனத் துரோகிகளும் எத்தனை முறை பாடுபட்டார்களென்பதையும் பலமுறை பேசி யிருக்கிறோம். இப்போது எஸ்ஸாஜி டாஜ்பாய் என்ற பம்பாய் வர்த்தகரே நம்மவர்களுக்கு விரோதமாகத் திரும்பிவிட்டாரென்று கேள்விப்பட்டு மிகுந்த ஆச்சர்யமடைகிறோம். இந்த பம்பாய் வர்த்தகருக்கு ஒப்பந்தத்திலிருந்து விஷேசமான லாபம் கிடைத்திருக்கிறது. மேலும் இவர் ஒப்பந்தப்படி செப்டம்பர் மாதம் 30ஆம் தேதிவரை கப்பல் விட்டுவைக்க கடமைப்பட்டிருக்கிறார்.

### ஒரு சந்தேகம்

பி.ஐ.எஸ்.என். கம்பெனியார் பக்கம் சேர்ந்துகொண்டு அவர்களுடைய தூண்டுதலின் பெயரில் எஸ்ஸாஜி டாஜ்பாய் இங்ஙனம் செய்திருக்கலாமென்று தோன்றுகிறது. இந்த சந்தேகத்தின் பேரில் ஹிந்து வர்த்தகர்களுக்கு பி.ஐ.எஸ்.என். கம்பெனியார் மீது மிகுந்த கோபம் உண்டாயிருக்கிறது. அவர்கள் பி.ஐ. கம்பெனிக் கப்பல்களில் இனி சரக்கு ஏற்றவே கூடாதென்று நிச்சயித்து விட்டார்கள்.

ஏஷியாடிக் லையன் என்ற கம்பெனியாரின் ஸ்டீமர் ஒன்று தூத்துக்குடி துறைமுகத்திற்கு வந்தது. கம்பெனி ஏஜெண்டுகள் வர்த்தகர்களிடம் தமது கப்பலில் சரக்கேற்றும்படிக் கேட்டுக் கொண்டார்கள். அதன்பேரில் வர்த்தகர்கள் மூட்டைகள் தயார் செய்து அதைத் துறைமுகத்திற்கு கொண்டு போனார்கள்.

இதற்கப்பால் கம்பெனி ஏஜெண்டுகள் அன்னியருடைய துர்போதனையைக் கேட்டுக்கொண்டு கப்பலிலே சரக்கேற்ற முடியாதென்று கூறினர். இதன் பேரில் வர்த்தகர்களுக்குள்ளே மிகுந்த கலக்க மேற்பட்டுவிட்டது. அதன்பின், அந்த கம்பெனி ஏஜெண்டுகள் கல்கத்தாவிலுள்ள ஹெட்டாபீசுக்குத் தந்தியடித்துக் கேட்டதில் சரக்கேற்றிக் கொள்ளலாமென்று அங்கிருந்து மறுமொழி கிடைத்தது.

### மிஸ்டர் எஸ்ஸாஜி டாஜ்பாயின் மீது நஷ் ஈட்டிற்குப் பிராது.

“நோட்டீஸ் கண்ட ஆறு மணி நேரத்திற்குள் நீர் மறுபடியும் கப்பல் ஒப்புவிக்காத பட்சத்தில் உமது பேரில் நஷ்டயீட்டின் பொருட்டு பெரும் தொகைக்கு பிராது கொண்டு வரப்படும்” என்பதாக சி.வ. கம்பெனியார் மிஸ்டர் எஸ்ஸாஜி டாஜ்பாய்க்கு நோட்டீஸ் பிறப்பித்திருக்கிறார்கள். சுதேசிய ஸ்டீமர் ஓட்டுவதற்குள்ள வேறு பல ஏற்பாடுகள் செய்து வரப்படுகின்றன.

**(இந்தியா 25.08.1906)**

## 10. ஓர் புதிய சுதேசிய புகைக் கப்பல் கம்பெனி

தூத்துக்குடியிலே சுதேசிய முயற்சியை மேற்கொண்டு நடத்திவரும் நம்மவர்கள் இப்போது சுதேசிய ஸ்டீமர் கம்பெனி (Swatheshi Steamer Navigation Company) என ஒன்று ஸ்தாபிக்க கருதியிருப்பதாக முன்னமே அறிவித்திருக்கிறோம். இப்போது அந்தக் கம்பெனியின் ஆரம்ப பிரயத்தனங்கள் தொடங்கி விட்டன. அதன் கொள்முதல் ரூபாய் 5,00,000. இவ் ஐந்து லட்சம் ரூபாயும் பங்கொன்று 25 ரூ வீதம் 20,000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இந்தக் கம்பெனியில் பங்குகள் எடுத்துக் கொள்வோர்களெல்லாம் இந்தியர்களாவது, இலங்கைத் தீவினராவது, பர்மா தேசத்தவராவது அல்லது ஜப்பானியராவது இருத்தல் வேண்டும். கம்பெனியின் நடவடிக்கைகளைப் பார்த்து வரும் பொருட்டு மேஸர்ன் ஏ.ஆர்.ஹாஜி பகீர் மகமத் செயிட் அன்டு சன்ஸ் கம்பெனியார் காரியதரிசிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனரபில் குருசாமி ஐயரவர்கள், எம்.கிருஷ்ணன் நாயவர்கள், பாரீஸ்டர் பால் பீடர் பிள்ளையவர்கள், வி.ஓ.சி. சிதம்பரம் பிள்ளையவர்கள் என்போர் லீகல் அட்வைசர்கள். (Legal Advisers) நேஷனல் பாங்க் ஆப் இந்தியா (National Bank of India) இக்கம்பெனியாரது பாங்கர்கள். கம்பெனியானது ரிஜிஸ்தர் இருப்பிடம் தூத்துக்குடியில் கிரேட் காட்டன் ரோடில் இருக்கிறது.

தூத்துக்குடிக்கும், கொழும்புக்கும் வியாபாரத்தையும் பிரயாணத்தையும் இலகுப்படுத்துவதும், போக்குவரத்தை சரஸமாக்கிவிடுவதுமே இந்தக் கம்பெனியாரது முக்கிய நோக்கம். கம்பெனியாரின் மெம்பர்கள் அதாவது பங்காளிகள் கம்பெனியின் நன்மையைக்கருதி தம்மால் இயன்றதை செய்ய வேண்டிய தவசியம். தாம் போகும்போது கம்பெனியாரின் கப்பலிலேயே பிரயாணம் செய்ய வேண்டும். இவ்விதமாய் பங்காளிகள்

ஒருங்கே சேர்ந்து தமது கம்பெனியின் நன்மையைத் தேட முயற்சி செய்ய வேண்டுமென்பது மிக்க நன்மை பயக்கக் கூடியதே. கம்பெனியில், ஜப்பானியர் பங்கெடுத்துக் கொள்வதில் நமக்கு மிகுந்த உபயோகமிருக்கின்றது. பங்கெடுத்துக் கொள்வது மாத்திரமல்லாமல் அவர்கள் நம்மவர்களில் சிலருக்கு கப்பல் வேலைகளைக் கற்பிப்பார்கள். கம்பெனியானது பங்குகளில் 8000 பங்குகள் ஹாஜி மகமத் பஷீர் ஷெயிட் அண்டு சன்ஸ் எடுத்துக் கொண்டதாகத் தெரிய வருகிறது. பாக்கியிருக்கும் பங்குகளில் டைரக்டர்கள் 2000 பங்குகள் எடுத்துக்கொண்டால் பாக்கி 10,000 பங்குகள் தானிருக்கின்றன. இவற்றில் நம்மவர்களில் அனேகர் பங்குகள் எடுத்துக் கொள்வார்களென்பதில் சந்தேகமில்லை. இதனை வற்புறுத்திய தேசாபிமானிகள் சிறிதேனும் புறங்காட்டாமல் தைரியத்துடன் முன்சென்று தம் காரியத்தை செய்து முடிப்பார்களென்று நம்புகின்றோம்.

**(இந்தியா 01.09.1906)**

## 11. வ.உ.சி. அவர்களின் வேண்டுகோள்!

**சுதேசாபிமான சீலர்களே!**

நமது சுதேசத் தாயானவள் பூர்வகாலந் தொடங்கி விலையுயர்ந்த நவரத்தினங்களையும், தங்கம் முதலிய லோகங்களையும் சகல விளைபொருட்களையும், கைத்தொழில்களையும், வியாபாரங்களையும் உடையவளாய், மற்ற தேசங்களினும் மேன்மையும் செல்வமும் மிக்க நிறைந்து, நீடித்த காலம் வாழ்ந்திருந்து பின்னர் அந்நிய நாட்டார் பிரவேசித்த காரணத்தால், சகல கைத்தொழில்களையும் வியாபாரங்களையும் இழந்து மிக்க வறுமையுற்றுப் பசியால் வருந்தி இறந்து கஷ்டப்படுவதைக் கண்ணுற்ற சர்வ இரக்ஷகராகிய கடவுளானவர் சென்ற 1905ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 7 முதல் நம் சுதேசத்தாயின் மீது கருணை கூர்ந்து சுதேசக் கிளர்ச்சியை உண்டாக்கி நாம் நீடித்த நாளாக இழந்திருந்த ஒற்றுமையையும் ஊக்கத்தையும் கைத்தொழில்களையும் வியாபாரங்களையும் நம்மைக் கைக்கொள்ளும்படி செய்து நன்மை புரிந்து வருகின்றதை நாமெல்லோரும் அறிந்திருக்கின்றோம்.

நம் சுதேசம் க்ஷேமத்தையடைந்து முன்னாளின் மேலான நிலைமைக்கு வருவதற்கு சகல தொழில்களிலும் வியாபாரங்களிலும் மிக்க லாபத்தைக் கொடுப்பதான கப்பல்கள் நடத்தும் தொழிலை நாம் கைக்கொள்வதே முக்கிய சாதனமாகும். தூத்துக்குடிக்கும் கொழும்புவுக்கும் கப்பல்கள் நடத்துவதற்கு இரண்டு ஸ்டீமர்களும் இரண்டு ஸ்டீம் லாஞ்சுகளும் போதுமானவை; அவைகளை நாம் சொந்தமாக வாங்கி வேலை நடத்துவதற்கு ஐந்து லட்ச ரூபாய் மூலதனம் போதுமானது.

அவ்வைந்து லட்ச ரூபாய் மூலதனத்துடன் கப்பல் நடாத்துந் தொழிலில் சகல செலவும் நீக்கி வருஷம் 1க்கு 10 லட்ச லாபம் கிடைக்கத்தக்கதாக இருக்கிறது. இவ்வளவு பெரிய ரூபா இலாபத்தைக் கொடுக்கத்தக்க தொழிலாவது வியாபாரமாவது வேறு கிடையாது. இத்தகைய தொழிலைச் சென்ற பல வருஷங்களாக அந்நிய நாட்டார்கள் கைப்பற்றிக் கொண்டு அதிற்கிடைக்கும் லாபத்தில் ஒரு சிறிதேனும் நம்மையடைய விடாமற் செய்து நம் தேசத்தையும் முக்கியமாக நம் தென்னாட்டையும் மிக்க வறுமைக்குள்படுத்தி விட்டார்கள்.

சகோதரர்களே! இரண்டு ஸ்டீமர்களும் இரண்டு லாஞ்சுகளும் வாங்கி வேலை நடத்துவதற்கு வேண்டுமைந்து லட்ச ரூபாய் நம்மிடமில்லையா? நமக்குக் கப்பல்கள் நடாத்துந் திறமையில்லையா? நம் முன்னோர் கப்பல்கள் நடாத்துவதில் மற்ற நாட்டாருக்குப் பின்னடைந்து நின்றவரா? கப்பல்களில் ஏற்றுமதி, இறக்குமதியா குஞ்சரக்குகள் நம்முடையவையன்றி வேறுண்டா? கப்பல்களில் பிரயாணமாகும் பிரயாணிகளில் ஏகதேசம் ஒன்று இரண்டு தவிர மற்றவர்கள் நம்மையன்றி வேறுளரா? ஒரு விதத்திலும் குறைவில்லாத நாம் தூத்துக்குடிக்கும் கொழும்புவுக்கும் மாத்திரம் அன்று; ஆசியா, ஐரோப்பா முதலிய பல கண்டங்களிலுமுள்ள துறைமுகங்களுக்கெல்லாம் கப்பல்கள் நடாத்தும் செல்வமும் திறமையும் பூண்டுள்ளோம்.

நமது சுதேசத்தை அந்நிய நாட்டார் கைப்பற்றிக் கொண்டதற் கேதுவாயிருந்ததும் நம் சுதேசத்துப் பொருள்களையெல்லாம் அந்நிய நாட்டார் கொண்டு போவதற்கேதுவாயிருந்ததும் நமக்கு மிக்க லாபத்தைத் தரக்கூடிய கைத்தொழிலில் வியாபாரங்களையெல்லாம் அந்நிய நாடுகளுக்குக் கொண்டு போவதற்கேதுவாயிருந்ததும் அந்நிய நாட்டார் நம் தேசத்தின் மீது பிரவேசித்து நாம் நீடித்த நாளாகக் கைக்கொண்டிருந்த கப்பல் தொழிலை நம்மிடமிருந்து கைப்பற்றிக் கொண்டதொன்றே யாதலால் நாம் அதி சீக்கிரமாகவும் அத்தியாவசியமாகவும் கைக்கொள்ளத் தக்கதும் கைக்கொள்ள வேண்டுவதுமான தொழில் கப்பல்கள் நடாத்துவதேயாமென்பது நம்மெல்லோருக்கும் பரிஷ்காரமாகத் தெரிந்ததே.

நமது சுதேசம் மற்ற தேசங்களைப் பார்க்கிலும் மேலான நிலைமைக்கு வருவதற்கு நாம் இவ்வுலகின் கண்ணுள்ள துறைமுகங்களுக்கெல்லாம் நமது சுதேசக் கப்பல்கள் போக்குவரவாயிருக்கும்படி செய்ய வேண்டியதவசியமாயிருக்கின்றது.

ஆனாலும் நாம் பல வருஷங்களாக இழந்துவிட்ட தொழில்களையெல்லாம் ஒவ்வொன்றாக மெள்ள மெள்ளக் கைக்கொள்ள வேண்டுமேயன்றி எல்லாவற்றையும் ஒருங்கே ஒரே காலத்தில் கைக்கொள்ள முடியாது. அதனால் தற்சமயம் தூத்துக்குடிக்கும் கொழும்புவுக்கும் மற்றும் முக்கியமான துறைமுகங்களுக்கும் கப்பல்கள் நடாத்தி நாம் லாபமடையும் பொருட்டுத் தூத்துக்குடியில் (10,00,000) பத்து லட்சம் ரூபா மூலதனத்துடன் சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி ஸ்தாபிக்கப் பெற்று மாங்குசீட்டன் என்னும் ஸ்டீமரை வாடகைக்கமர்த்தி அது நடைபெற்று வருகின்றது; சொந்த ஸ்டீமர்கள் சமீப காலத்தில் வந்துவிடும். இதில் ஏழைகள் முதல் பெரும் பணக்காரர் வரையுள்ள சகல சுதேச சகோதரர்களும் பங்காளிகளாகச் சேர்ந்து லாபம் அடையும் பொருட்டுப் பங்கு 1க்கு ரூபாய் 25 வீதம் 40,000 பங்குகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆகையால், ஒவ்வொரு சுதேசாபிமானியும் இக்கம்பெனியில் பங்காளியாகி லாபத்தையடைந்து நமது சுதேசத்தை மேன்மையான நிலைமைக்குக் கொண்டு வரும்படி பிரார்த்திக்கிறேன்.

(விவேகபாநு, நவம்பர்–1909)

## 12. அன்றைய மாவட்ட கலெக்டர் விஞ்ச் வெளியிட்ட அறிக்கை:

"AN OPEN LETTER"

To

**L. M. Wynch, Esq., B. A., C. I. E., I. C. S.,**
Collector and District Magistrate, Tinnevelly.

Sir,

It is with feelings of grave disappointment and humiliation that I feel called upon to write this short epistle to you with the hope that you will see the error of your ways and restore peace and confidence in the district committed to your care.

2. You have won golden opinions from the people while you were discharging the duties of Private Secretary at the Government House; your tack and sympathy were much appreciated; you never said an unkind word to those who solicited your suffranges or patronage. But alas all this has changed under the Swadeshi breeze of Tinnevelly; your lot seems to have been cast with evil advisers. If a popular celebration were held in honour of the release of Babu Bipin Chandra Pal, it passes my comprehension as to why you should be a party to the official conspiracy to detain the three popular leaders of the Extremists in Tinnevelly on the day of celebration by instituting criminal proceedings under the security

chapter of the Criminal Procedure Code? Have you forgotten the lessons of history that State prosecution of any kind will be looked upon by the people as State persecution? Are you so short sighted as not to see that by launching criminal proceedings as you have done, you are enlisting the active sympathy of the nation on behalf of the accused, and enable them to pose as martyrs to the cause of nationalism?

3. Assuming that it was an error of judgment on your part in having instituted the proceedings against Mr. V.O. Chidambaram Pillai and two others, it passes one's understanding why you refused to accept sureties when they were offered while the whole object of the prosecution is to get sureties from them. Does not your perverse refusal show your malice to see them in jail by hook or crook? You ought to have known by the exercise of due care and caution that bail in such cases is a matter of right, not a matter of discretion or grace.

You have been found deplorably wanting in ordinary prudence by illegally refusing to release them on bail. When the leading citizens of Tinnevelly were nervous about the imposition of the punitive police and requested you to receive them in a deputation to hear their grievances, you foolishly refused to receive the deputation. If you had the tact to see how much you would have allayed the public irritation and soreness of temper, and removed all apprehensions in the people on the subject of punitive police, you would have been the last person to refuse ordinary courtesy to your fellow-citizens in the district. Possibly you have regarded them as your Asiatic subjects, not as fellow citizens.

4. How much you have fallen in the public estimation now! You have refused to let them on bail; but the Chief Justice, Sir Arnold White, and Boddam, J., felt bound to order their release. You refused to receive a deputation but the Governor has consented to receive a deputation from the people. I regard it as a direct vote of censure on your conduct. As a public servant your credit and prestige have gone. I strongly advise you to resign your appointment, or ask for transfer or long leave. Your order to shoot has not enhanced your reputation as a humane raler. Tinnevelly has been the grave of the reputations of many civilians; and you are the last mariner who has been wrecked on the rocky coast of Tinnevelly. To add to the misfortunes, you have apparently sanctioned the prosecution of the most prominent Swadeshi preacher and lawyer and five others under the ill fated security chapter, and afforded additional stimuli to the unrest in your district. Though I am inclined to congratulate you on your having converted Tinne velly into a district of Eastern Bengal, I tremble to consider what disastrous consequences it will have on the policy of Government.

5. It is possible that some public spirited citizens might arrange for the institution of civil suits for damages against you for having shot or given orders to shoot when there was no legal necessity for the same. You should not be under the delusion that you can seek refuge under section 7 of the Indian Penal Code. Such acts must have been done in good faith, ie, due care and caution. The Act XVIII of 1890 (Judicial Officers Protection Act) states no doubt that no suit can be brought against any Judge or Magistrate when acting judicially in a matter within his jurisdiction for any error or mistake in doing or committing an act. But if a Judicial Officer does arfy act beyond the limit of his authority, causing injury to another he will be liable. English Courts have awarded damages in many cases.

"An improper remand or refusal of bail would not seem to be a judicial act, but would be actionable, at least on . proof of malice. If a magistrate grants a warrant without information,

upon a supposed charge of a heinous offence, he was held liable. So where he commits a person for re-examination for an unreasonable time. A Magistrate can be compelled to pay damages if he detains a known person to answer a charge not yet made against him; and he will be equally guilty of an assault and false imprisonment and responsible for damages if he tries to force a party who has appeared to answer a complaint, to agree to an arrangement, by threatening that he will otherwise convict him, and giving him into the custody of the police. I give these instances not only for your benefit but for the benefit of the erring magistrates of your district.

6. No useful purpose could be served by any European Officer parading in the spirit of Homeric heroes in the public streets with a revolver in one hand and a riding whip in the other. A great founder of a religion is said to have founded his religion, with the sword in one hand and the Koran in the other. Pax Britannica cannot be maintained with riding whips and revolvers. A contented and happy British India can be woven with the silken bonds of love and sympathy, never by maxim

guns and smokeless powder. ? Trusting that you will be pleased to indulge in a mental review of your own position and accept my suggestion of resignation or transfer and leave.

I beg to remain," 1. Sir,

Your candid critic, "The Duke of Tinnevelly Bridge"

The Liberal 22-3-1908

(MNNR 1908)

(வ.உ.சி.யும் திருநெல்வேலி எழுச்சியும் – ஆ.இரா.வேங்கடசலபதி)

## 13. சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி (லிமிட்டெட்), தூத்துக்குடி

1. இந்தக் கம்பெனியானது 1882ம் ஷரத்து "இந்தியன் கம்பெனி ஆக்டு'ப்படி 1906 அக்டோபர் மீ 16 தேதியில் செய்யப்பெற்றது.

2. ரிஜிஸ்டர் இந்தக் கம்பெனிக்கு மூலதனம் ரூ.10,00,000. இம் மூலதனம் பங்கு 1க்கு ரூ.2500 வீதம் 40,000 பங்குகளாக இந்தியா, இலங்கை முதலிய ஆசியாக் கண்டத்துத் தேசத்தார்களிடமிருந்து சேர்க்கப்படும். மூலதனம் வேண்டும்போது அதிகரிக்கப்படும். பங்காளிகள் அவரவர்கள் பங்குத் தொகை மட்டில் உத்தரவாதிகள்.

3. இக்கம்பெனியின் உத்தியோகஸ்தர்கள்:

### அக்கிராசனர்

ஸ்ரீமான். பொ.பாண்டித்துரைச்சாமித் தேவர் அவர்கள், பாலவநத்தம் ஜமீன்தார், இராமநாதபுரம், மதுரை.

### டயரெக்டர்கள்

1. மகாள ஸ்ரீ பி.வெங்கிட்டராமாநுஜலு நாயுடுகாரு, பேங்கர், தூத்துக்குடி
2. சி.விஜயராகவாச்சாரியாரவர்கள் பி.ஏ., வக்கீல், சேலம்
3. ஏ.சுந்தர சாஸ்திரியாரவர்கள், பி.ஏ.பி.யல்., திருநெல்வேலி பாலம்
4. என்.ஏ.வி.சோமசுந்தரம் பிள்ளையவர்கள், பி.ஏ.பி.எல்., வண்ணார்பேட்டை, திருநெல்வேலி பாலம்
5. எம்.டீ. தேவதாஸ் பிள்ளையவர்கள். பி.ஏ.பி.எல்., பாளையங்கோட்டை
6. டி.எஸ்.சுப்பிரமணிய பிள்ளையவர்கள், சேர்மேன், சிவ தேவஸ்தானம் கமிட்டி, திருநெல்வேலி

7. மகாஊஸ்ரீ சி.சு.வ.கிருஷ்ண பிள்ளையவர்கள், வியாபாரம், தூத்துக்குடி.
8. அ.மு.ம. அருணாசலம் பிள்ளையவர்கள், வியாபாரம், தூத்துக்குடி.
9. அண்ணாசாமி ஐயரவர்கள், பிளீடர், தூத்துக்குடி
10. சி.த.ஆ.ஆறுமுகம் பிள்ளையவர்கள், வியாபாரம், தூத்துக்குடி
11. அ.சு.வே. வேலாயுதம் பிள்ளையவர்கள், வியாபாரம், தூத்துக்குடி
12. வ.அ.ஆ.ஆதிநாராயணஞ் செட்டியாரவர்கள், வியாபாரம், தூத்துக்குடி
13. வ.அ.வெ.சு. வெங்கிடாசலஞ் செட்டியாரவர்கள், வியாபாரம், தூத்துக்குடி
14. ந.சு.தெய்வநாயகம் பிள்ளையவர்கள், வியாபாரம், தூத்துக்குடி
15. ஏ.சி.வ.திருச்சிற்றம்பலம் செட்டியாரவர்கள், வியாபாரம், தூத்துக்குடி
16. ஏ.வி.ஆர்.ஏ. அடைக்கப்பச் செட்டியாரவர்கள், வியாபாரம், கொழும்பு
17. ஏ.எம்.சைய்யத் இப்ராகிம் அவர்கள், வியாபாரம், கொழும்பு
18. கி.சோலைமலைத் தேவரவர்கள், வியாபாரம், வைத்தீஸ்வரன்கோயில்
19. திரு. நாராயண பிள்ளையவர்கள், கைவிழாஞ்சேரி, சீர்காழி
20. K.சிதம்பரநாத முதலியாரவர்கள், கைவிழாஞ்சேரி, சீர்காழி
21. M.T.K.முத்துசாமி செட்டியாரவர்கள், சீர்காழி
22. டி.எஸ்.குப்புசாமி பிள்ளையவர்கள் தாடாளன் கோவில், சீர்காழி
23. D.அனுமந்த செட்டியாரவர்கள், சோமவார்பேட்டை, குடகு
24. எஸ். இராமசாமி பிள்ளையவர்கள், கன்னப்பாடி (ரூவன்வாலா)
2.5 A.அசனுசைன் இராவுத்தரவர்கள், திண்டுக்கல்
26. சீனி அசனுசை இராவுத்தரவர்கள்,இராமனாதபுரம்
27. A.சோமசுந்தரம் அவர்கள், எம்.ஏ., கூடலூர்
28. W. ஸ்ரீநிவாச அய்யங்காரவர்கள், சென்னபட்டனம்
29. அண்ணான் திருமலை அய்யரவர்கள்,சேலம்
30. பிட்டா இராமசாமி அய்யரவர்கள், சேலம்
31. A.அருணாசலம் செட்டியாரவர்கள், சேலம்

### செக்ரெட்டேரிகள்

எஸ்.டி.கிருஷ்ண அய்யங்காரவர்கள், பி.ஏ.பி.எல்., தூத்துக்குடி, கௌரவ காரியதரிசி
வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்கள், தூத்துக்குடி, துணைக்காரியதரிசி.

### ஆடிட்டர்கள்

பி.கே.இராமய்யரவர்கள், பி.ஏ.பி.எல். கௌரவ ஆடிட்டர், திருநெல்வேலி பாலம்.

4. கம்பேனியின் ரிஜிஸ்டரான ஆபீஸ் தற்காலம் தூத்துக்குடி பீச்சு ரோடு 4ம் நிர் கட்டிடத்தில் அமைக்கப் பெற்றுள்ளது.

5. இக்கம்பேனி ஏற்படுத்தியதின் முக்கிய நோக்கங்கள்:

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் மற்றும் சுதேசிய ஸ்டீமர்கள் நடைபெறாத துறைமுகங்கட்கும் பிராயாணத்தையும் வியாபாரத்தையும் சௌகரியப்படுத்தவும் சகாயப் படுத்தவும் தக்க ஸ்டீமர்கள் நடைபெறும்படி செய்தல், இந்தியர்களையும் இலங்கையர்களையும் மற்றும் ஆசியா கண்டத்து ஜாதியார்களையும் கப்பல் நடாத்தும் தொழிலில் பழக்குவித்து அதன்மூலம் வரும் லாபத்தையடையும்படி செய்து, இந்தியர்களுக்கும் இலங்கையர்களுக்கும் மற்றும் ஆசியா கண்டத்து ஜாதியார்களுக்கும் கப்பல் நடாத்துந் தொழிலையும் கப்பல் நிர்மாணஞ்செய்யும் தொழிலையுஞ் செய்து காட்டிக் கற்பித்தல், இந்திய இலங்கை

மாணவர்க்கும் மற்றும் ஆசியாக் கண்டத்து மாணவர்க்கும் கப்பலோட்டுந்தொழிலையும் கப்பல் நிர்மாணஞ் செய்யும் தொழிலையும் சாஸ்திர சம்பந்தமாகக் கற்பிக்கும் கலாசாலைகள் ஏற்படுத்தல், கப்பல் நடாத்துந்தொழிலிலும் வியாபார முறையிலும் இந்தியர்கள் இலங்கையர்கள் முதலிய ஆசியாக் கண்டவாசிகளுக்குள் ஐக்கிய பாவனையையுண்டுபண்ணி ஒற்றுமையாக உழைக்கச் செய்தல், பற்பல வியாபார ஸ்தலங்களிலுள்ள வியாபாரங்கட்கடுத்த கொள்வன கொடுப்பன தெரிந்து கொள்வதற்காக இந்தியா இலங்கை முதலிய ஆசியா கண்ட தேசத்தவர்களை ஏஜெண்டுகளாக நியமித்தல், ஸ்டீமர்கள், ஸ்டீம் லாஞ்சுகள், படகுகள் முதலியன நிர்மாணஞ் செய்வதற்கும் அவைகளைச் செப்பனிடுவதற்கும் சுத்தப்படுத்துவதற்கும், துறைகளேற்படுத்தல்; கம்பெனியார் தீர்மானிக்கும் சுதேசியக் கைத் தொழில்களையும் வியாபாரங்களையும் நடத்துதல் முதலியனவாம்.

6. தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் மற்றும் இந்திய துறைமுகங்கட்கும் பிரயாணமும் வியாபாரமும் அபிவிர்த்தியான நிலைமையிலிருப்பதால் கம்பெனியின் செலவும் ரிசர்வ் பண்டுக்கு வைத்துக் கொள்ளும் தொகையும் நீக்கி பெரியதோர் ஈவு கிடைக்குமாறு கணக்கிடப்பட்டிருக்கிறது.

7. 100 பங்கு எடுக்கிற பங்காளிகள் டயரெக்டர்களாவதற்கு பாத்தியதையுடையவர்கள்; ஆனால் டயரெக்டர்கள் வருஷத்துக்கொரு தடவை பங்காளிகளின் மீட்டிங்கில் தெரிந்தெடுக்கப்படுவார்கள். ஆர்டினேரி மீட்டிங்கில் தெரிந்தெடுக்கப்படுவார்கள்.

8 எடுக்கப்படும் பங்குகளின் மொத்தத் தொகையில் ஐந்திலொரு பங்குத்தொகை முன் பணமாகச் செலுத்தப்பட வேண்டும். பாக்கிப் பங்குத் தொகை கம்பேனியார் வேண்டுங் காலங்களில் செலுத்தப்பட வேண்டும்.

9 கம்பேனியின் நன்மைக்காகவும், லாபத்துக்காகவும் பங்காளிகள், கம்பேனியின் ஸ்டீமர்களிலேயே பிரயாணமும், ஏற்றுமதி, இறக்குமதியும் செய்யவேண்டும்.

10 கம்பேனியின் பங்குகளை மற்ற சொத்துக்களைப் போல் அடமானம் கிரயஞ் செய்யலாம்; ஆனால் பணம் ஒரு பங்காளிக்கும் கம்பேனியிலிருந்து வாபஸ் கொடுக்கப்பட மாட்டாது.

11 கம்பேனிக்குக் கிடைக்கும் லாபத்தொகையில் கம்பேனிக்கு ரிசர்வ் பண்டாக வைத்துக் கொண்டது போக மீதத் தொகையைப் பங்காளிகளுக்கு அவர்கள் பங்கு வீதாசாரப்படி பகுந்து கொடுக்கப்படும்.

12 கம்பேனியின் விதிகளடங்கிய புத்தகமும், மிமோ ரண்டமும் அப்ளிக்கேஷன் பாரங்களும் தூத்துக்குடி கம்பேனி ஆபீசிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். விதிகளடங்கிய புத்தகம் மிமோரண்டம் இவைகளின் கிரயம் ரூ.080

13 சகல மணியாடர்களும் கரஸ்பாண்டன்ஸ்களும், அப்ளிக்கேஷன்களும் தூத்துக்குடி யிலிருக்கும் கம்பேனியில் செக்ரட்டேரி அல்லது அசிஸ்டெண்டு செக்ரட்டேரியர்களுக்கு அனுப்பவேண்டும்.

14 சுமார் 25,000 பங்குகள் வரை இதுவரை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இன்னும் அப்ளிக்கேஷன் விரைவாக வந்து கொண்டேயிருக்கின்றன. தேசாபிமானமுள்ள இந்தியா, இலங்கை முதலிய ஆசியா கண்டத்துத் தேச கனவான்கள் கம்பேனியில் அதிகப் பங்குகள் எடுத்துதவிபுரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**எஸ்.டி.கிருஷ்ணய்யங்கார், கௌரவ காரியதரிசி, தூத்துக்குடி, 24–09–1907.**

**(வ.உ.சி. முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி, பேராசிரியர் நா.வானமாமலை நூல்)**

★★★

# தொகுப்புக்கு அடிப்படையான ஆதார நூல்கள்

**வ.உ.சி.யை தங்களது ஆய்வுகள், படைப்புகளின் மூலமாக தமிழ்ச் சமூகத்தில் உயிர்ப்போடு வைத்திருக்கும் ஆளுமைகள், ஆய்வாளர்கள், எழுத்தாளர்களுக்கு நமது நன்றிகள்! கீழ்க்கண்ட நூல்களை அடிப்படையாகக் கொண்டு இந்த மலர் தயாரிக்கப்பட்டுள்ளது.**


* பரலி.சு.நெல்லையப்பர் - வ.உ.சிதம்பரம் பிள்ளை சரித்திரம்
* ம.பொ.சிவஞானம் - கப்பலோட்டிய தமிழன்
* நாமக்கல் கவிஞர் - நான் கண்ட வ.உ.சி.
* வீ.அரசு - வ.உ.சி. பன்னூல் திரட்டு
* என்.சம்பத், பெ.சு.மணி - வ.உ.சிதம்பரம் பிள்ளை
* நா.வானமாமலை - வ.உ.சி. முற்போக்கு இயக்கத்தின் முன்னோடி
* ஆ.சிவசுப்பிரமணியன் - வ.உ.சி.யும் முதல் தொழிலாளர் வேலை நிறுத்தமும்
* ஆ.சிவசுப்பிரமணியன் - வ.உ.சி. ஓர் அறிமுகம்
* முல்லை முத்தையா - கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார்
* இளசை மணியன் - பாரதி தரிசனம் - இந்தியா இதழ் கட்டுரைகள்
* ஆ.இரா.வேங்கடாசலபதி - வ.உ.சி.யும் திருநெல்வேலி எழுச்சியும்
* ஆ.இரா.வேங்கடாசலபதி - வ.உ.சி.யும் பாரதியும்
* ஆ.இரா.வேங்கடாசலபதி - திலக மகரிஷி - வ.உ.சி.
* செ.திவான் - வ.உ.சி. பாடல்கள்
* செ.திவான் - வ.உ.சி.யின் உயில்
* முனைவர் அ.சங்கரவள்ளி நாயகம் - வ.உ.சி.வாழ்க்கை வரலாறும் இலக்கியப் பணிகளும்
* மா.ரா.அரசு - வ.உ.சிதம்பரனாரின் தமிழ்ப்பணிகள்
* ப.முத்துகுமாரசாமி - இந்திய வரலாற்றில் வ.உ.சி. [தொகுப்பு]
* என்.திரவியம் - இந்திய விடுதலைப் போரில் வ.உ.சி.
* குருசாமி மயில்வாகனன் - கப்பலோட்டிய கதை
* ஆ.அறிவழகன் - ஆராலும் என்னை அம்மட்ட ஒண்ணாது [தொகுப்பு]



# வ.உ.சி. 150
## பிறந்த ஆண்டு சிறப்பு மலர்


ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்:

முனைவர் **வீ.ப.ஜெயசீலன்**, இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால்
அரசு துணைச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

தொகுப்பு உதவி:

ப.திருமாவேலன்,
பொ.தங்கபாண்டியன்,
டி.அருள் எழிலன்


வடிவமைப்பு:

இரா.தமிழரசு

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
**தமிழரசு அலுவலகம்:**
எண்: 5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை – 600 113
**தொலைபேசி :** 22542221 / 22542224
**மின்னஞ்சல்:** ddpub.tamilarasu@tn.gov.in
**இணையதளம்:** www.tndipr.gov.in

**தமிழரசு**

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு



வெள்ளையருக்கு எதிராகக் கப்பல் விட்டவர் வ.உ.சிதம்பரனார் அவர்கள். சுதேசி என்பது ஏட்டளவில் மட்டுமல்ல, நம்முடைய சிந்தனையாக, செயலாக மாற வேண்டும் என்று நினைத்தவர் வ.உசி. அவர்கள்.

அரசியல் விடுதலை மட்டும் போதாது பொருளாதார விடுதலையும் வேண்டும் என்று நினைத்தவர். அனைத்து விதத்திலும் தன்னிறைவு பெற்ற நாடாக நாம் மாற வேண்டும் என்று வ.உ.சி. அவர்கள் கனவு கண்டார்கள்.

அத்தகைய கனவைக் கொண்ட அரசாக நமது அரசு செயல்பட்டு வருகிறது. 'எல்லார்க்கும் எல்லாம் என்ற திசை நோக்கிச் செல்லட்டும் இந்த வையம்' என்பதைப் போன்ற பொற்காலத்தை உருவாக்க உறுதி கொண்டுள்ளது இந்த அரசு.

தமிழரசு
செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு